# உள்ளே வராதே!



திடுக்கிடும் மர்மம் !

.... திக் .... திக் .... திகில் நாவல் !



~ கலைவாணி தங்கவேலு

# பொருளடக்கம்

அத்தியாயம் 1
அத்தியாயம் 2
அத்தியாயம் 3
அத்தியாயம் 4
அத்தியாயம் 5
அத்தியாயம் 6
அத்தியாயம் 7
அத்தியாயம் 8
அத்தியாயம் 9
அத்தியாயம் 10
அத்தியாயம் 11
அத்தியாயம் 12
அத்தியாயம் 13
அத்தியாயம் 14
அத்தியாயம் 15
அத்தியாயம் 16
அத்தியாயம் 17
அத்தியாயம் 18
அத்தியாயம் 19
அத்தியாயம் 20
அத்தியாயம் 21
அத்தியாயம் 22
அத்தியாயம் 23
அத்தியாயம் 24
அத்தியாயம் 25
அத்தியாயம் 26
அத்தியாயம் 27
அத்தியாயம் 28

# அத்தியாயம் 1

காலை தன் வழக்கமான பணிகளை முடித்து விட்டு பிரபு தன் வீட்டின் ஒரு பகுதியில் உள்ள தன் அலுவலக அறைக்குள் வந்தான்.

ஊதுவத்தி வாசனை அறையெங்கும் கமகமத்தது. பிள்ளையார் படத்துக்கு மல்லிகை சரம் போடப்பட்டு அந்த வாசனையும் சேர்ந்து மேலும் நறுமணமாயிருந்தது.

அவனைப் பார்த்ததும் நிலா தன் இருக்கையிலிருந்து எழுந்து தன் இரு கைகளையும் கூப்பி ‘வணக்கம் சார்!’ என்று கூறி புன்னகைத்தாள்.

நீண்ட முகம், கூர்மையான நாசி, நேர்த்தியான புருவம், மாநிறமான நிறம், உயரமான உருவம், முடி பின்னப்படாமல் ப்ரி ஹேர்ஸ்டைல் சுடிதார் போட்டிருந்தவள். தன் வக்கீல் படிப்பை முடித்துக்கொண்டு
இளவயது என்றாலும் தன் தொழிலில் மற்ற வக்கீல்களுக்கெல்லாம் சிம்ம சொப்பனமாக
விளங்கும் பிரபுவிடம் ஜூனியராக இரண்டு வருடங்களாக பணிபுரிந்து வருகிறாள்.

பிரபு எள் என்றால் இவள் எண்ணெயாக இருப்பாள் வேலையில்.

தன் ஜூனியர் என்றாலும் தன் சக தோழிபோல் பழகுவான் பிரபு. ஆனால் வேலை என்று வந்துவிட்டால் பசி தூக்கம் மறந்துவிடும் இருவருக்கும்.

உள்ளே நுழைந்த பிரபு தலைகுளித்த கூந்தல் காற்றில் பறந்தபடி தேவதை போல்
நின்றிருந்த நிலாவைப் பார்த்ததும்,

"வாவ் .... இரவில் வரவேண்டிய நிலா பகலில் வந்து விட்டதே...' என்று கூறியபடி அவள் கூறிய வணக்கத்திற்கு பதில் கூறிய பிரபு,

"நிலா! உங்களுக்கு எத்தனை முறை சொல்வேன்...கால் மீ பிரபு. இந்த சார் மோர் எல்லாம் வேண்டாம், புரியுதா...?" என்றவனிடம்,

"என்ன இருந்தாலும் நீங்க என்னோட பாஸ் இல்லையா..?" என்று நிலா கூற,

"என்ன பெரிய மனுசனா நினைச்சிடாதம்மா... நான் இன்னும் கல்யாணமாகாத பேச்சிலர் பாய்..."

"ஓகே .... இனிமே ஐ கால் யூ பிரபு" என்று நிலா கூற,

"தட்ஸ் ரைட்" என்று கூறிவிட்டு இருக்கையில் அமர்ந்தான் பிரபு.

"ஓகே ... அடுத்தவாரம் ஹியரிங் வர்ற புராஜக்ட் 243 ரெடி பண்ணிட்டியா....?

"ரெடி பிரபு...! அப்புறம் புராஜக்ட் 187 வாய்தா வாங்கணும்....!"

அப்போது சீனு என்கிற ஆபிஸ் பாய் உள்ளே வந்து "குட்மார்னிங் சார்...! என்றான்.

அவனைப் பார்த்ததும் பிரபு, "வெரி குட்மார்னிங் சீனு ! எத்தனை அப்பாயிண்ட்மென்ட்" என்று கேட்க,

"பத்து இருக்கு சார்...!" என்றதும்,

"சரி...வரச்சொல்...." என்றான் பிரபு.

மாலை ஐந்தாகிவிட்டது. உடம்பை சோம்பல் முறித்துக்கொண்ட பிரபு சீனு கொண்டுவந்த காப்பியை சுவைத்துக் கொண்டே நிலாவைக் கவனித்தான், அவள் காப்பி குடிக்கும் அழகை ரசித்தபடி.

அவனை ஓரக்கண்ணால் பார்த்தாள் நிலா.

அவள் தன்னை கவனிக்கிறாள் என்பதை புரிந்துக்கொண்ட பிரபு,

"நிலா...போனவாரம் பொண்ணுபாக்க வந்தாங்களே .... என்னாச்சு...?" என்று
கேட்டான்.

"ப்ச்...பிடிக்கலை...."

"ஏன்...?"

"தெரியலை..."

"ஆமா....நீ ஏன் என்னை பார்ட்னராக்கிக்க கூடாது...?"

பட்டென்று கேட்ட கேள்வியில் திடுக்கிட்டாள் நிலா....!

அப்போது உள்ளே நுழைந்த சீனு "சார்...! ஒரு லேடி வந்திருக்காங்க. உங்களைப் பாக்கணுமாம்...." என்றான்.
"வேற அப்பாயிண்ட்மெண்ட் இருக்கா....?"
"இல்ல சார்...."

"அப்ப வரச்சொல்"

உள்ளே வந்த பெண்மணியைப் பார்த்ததும் ஒருகணம் திடுக்கிட்டான் பிரபு !

# அத்தியாயம் 2

திடுக்கிட்டு எழுந்த பிரபு தன் எதிரே நிற்பவரை கண்கொட்டாமல் பார்க்க,
"வணக்கம் பிரபு சார்...!"என்றுதன் இரு கரங்களையும் கூப்பி எதிரே நின்றிருந்த
சுமார் முப்பது வயதிருக்கும் பெண்மணி கூற,

"வணக்கம்.." என்று பிரபு கூறினான்.
"உட்காரலாமா...?" என்று அந்தப் பெண்மணி கேட்க,

“ப்ளீஸ்...டேக் யுவர் சீட்..." என்று தன் எதிரே இருந்த நாற்காலியைக் காட்டி அமரச் சொன்னான் பிரபு.

ஹைஹீல்ஸ் போடாமலே உயரமான உருவம். களையான முகம். நல்ல கலர்.
நெற்றித்திலகம் வட்டமாக பளிச்சென்று இருந்தது.

அவர் உடுத்தியிருந்த ஆடை விலை உயர்ந்ததாக இருந்தது.கழுத்திலும் கையிலும் தங்கநகைகள் மின்னின.பார்ப்பதற்கு அந்தகால நடிகை சரோஜாதேவி போல இருந்தார்.

அந்த பெண்மணி ஒரு நிமிடம் என்று கூறிவிட்டு வெளியே சென்றவர், ஒரு ஐந்து வயது குழந்தையை அழைத்துவந்தார்.

குழந்தையையும் அந்த பெண்மணியையும் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த பிரபு அவர்கள் தனக்கு நன்கு அறிமுகமானவர்கள் போல இருப்பதாக நினைத்தான். ஆனால் யாராக இருக்கும் என்பது நினைவுக்கு வரவில்லை. தலைக்குள் ஏதோ குடைவது போல இருக்க, தன் தலையை இருகைகளால் பிடித்தான்.

"என் பெயர் மாதங்கி....இவள் என் மகள் இந்து. நாங்கள் உங்க உதவி கேட்க இங்கு வந்திருக்கிறோம்" என்று கூற,

நார்மலுக்கு வந்துவிட்ட பிரபு "கூறுங்கள் என்ன உதவி நான் செய்யனும்" என்றுகேட்க

"நான் ஜமீன் பரம்பரையை சேர்ந்தவள்,
என் பூர்வீக இல்லம் சேத்துப்பட்டு பொன்ராயன் மங்கலத்தில் உள்ளது.
அந்த வீட்டில் இப்போது நாங்கள் யாரும் இல்லை. எனது உறவினர் ஒருவர் தங்கியிருக்கிறார். இப்போது வீடு எங்களுக்கு தேவைப்படுகிறது. ஆனால் அவர் வெளியேற மறுக்கிறார்."

“மேலும் அந்த மாளிகை அவருக்கே சொந்தம் என வாதிடுகிறார். இதை தட்டிக்கேட்கப் போன எனது கணவர் திரும்பி வரவேயில்லை....

உள்ளூர் காவல்நிலையத்தில் புகார் அளித்தும் அவர்கள் இந்த புகாரை பதிவு செய்ய மறுக்கிறார்கள். நீங்கள் தான் இந்த பிரச்சினைக்கு தீரவு காணவேண்டும்" என்றுகூற,

"மேடம்....நீங்க சொன்ன விஷயம் ஏதோ **எனக்கு** வித்தியாசமா தோணுது. உங்கள் கணவர் காணாம போயி எவ்வளவு நாள் ஆச்சு? என்று பிரபு கேட்க,

" ஒருவருஷம் ஆகுது.."

"எந்த ஊர் போலீஸ் ஸ்டேசன்ல புகார் குடுத்தீங்க..."

"எங்க ஊர்லதான்"

"நிச்சயமா அவங்க அப்படி செய்ய மாட்டாங்க...சரி. ..நான் அவங்ககிட்ட
பேசுறேன்...."

"கண்டிப்பா அவங்க ஆக்ஷன் எடுக்கமாட்டாங்க....ஏன்னா அந்த உறவுக்காரர் அவங்களுக்கு வேண்டப்பட்டவர். அதுவுமில்லாம அந்த ஊர்ல பெரிய ரவுடி...." என்றதும்,

"அந்த ஸ்டேசன் எஸ்.ஐ எனக்குத் தெரிந்தவர்... நீங்க கவலைப்படாம போய்வாங்க...நான் பாத்துக்கிறேன்" என்று பிரபு கூற,

"ரொம்ப நன்றி...இந்து...மாமாவுக்கு பை சொல்லு..." என்று அந்தப்பெண்மணி கூற,

"பை அங்கிள்...!"என்று அந்த குழந்தை கூறியது.
ஏனோ அந்தக் குழந்தையை வாரி
அணைத்துக்கொள்ளவேண்டும் போல் இருந்தது பிரபுவுக்கு.

அவள் வெளியேறும் சமயம் ஜானி உள்ளே
வந்துகொண்டிருந்தான்.
அவள் வெளியேறியதும் பிரபு வாசலையே
வெறித்துப்பார்த்துக்கொண்டிருந்தான்.

அப்போது நிலா அவன் தோளைத்தொட்டு "பிரபு...பிரபு.." என்றழைக்க,

திடுக்கிட்டவனாய் நிலா தன் அருகில் நிற்பதைப்பார்த்ததும், லேசான புன்னகை செய்தான்.

"பிரபு...ஆர் யூ ஆல்ரைட்...? அந்த லேடி வந்ததிலேயிருந்து உங்க முகமே சரியில்லை....ஏதோ நெர்வஸா இருந்தது போலவே

இருந்தீங்க...உங்களுக்கு தெரிஞ்சவங்களா..." என்று நிலா கேட்க,

“நோ...நோ...ஆனா அவங்களைப்பார்த்தா
ஏதோ ரொம்ப நெருக்கமானவங்க போல இருந்துச்சி...எனக்கு ரொம்ப பெமிலியர் பேஸ் போலவே இருந்துச்சி.." என்று பிரபு கூற,

"ஓஹோ....அதனாலத்தான் அவங்க வந்தவுடனே எழுந்துநின்னீங்களா....?" என்றுகேட்க

"ஏன் எழுந்தேன் என்றே எனக்கு புரியல...." என்று பிரபு கூற

"இந்தாங்க...தண்ணிய குடிங்க...." என்று வாட்டர் பாட்டிலை நீட்ட
அதை வாங்கி மடமடவென்று குடித்தான்.

அப்போது உள்ளே வந்த ஜானி "ஹாய் எவ்ரிபடி...! என்று கூறிக்கொண்டே மேசையின் விளிம்பில் அமர்ந்தான். பிரபுவின் முகமாறுதலை கவனித்த ஜானி

"எனிதிங்க் ராங்....?” என்று நிலாவைப்பார்த்து கேட்டான்.

பிரபு ஜானியிடம் "நீ உள்ளே வரும்போது ஒரு லேடியும் குழந்தையும் வெளியே போனாங்களே....அவங்களை சீனுவ விட்டு கூப்பிடச்சொல்லு....போன் நம்பர வாங்க மறந்துட்டேன்....." என்று கூற

"என்ன பாஸ் சொல்றீங்க....? நான் வரும்போது யாருமே வெளியே போகலியே...." என்று கூற,

"என்ன சொல்ற...?போய் சீனுவ கூப்பிடு" என்று கூற
சீனு உள்ளே வந்தான்.

"சீனு.....உள் ஒரு லேடிய கொஞ்சநேரத்துக்கு முந்தி அனுப்பினேயே....அந்த அம்மா இப்பத்தான் வெளிய போனாங்க...அவங்களை கூப்பிடு"

"சார் நா எந்த லேடியையும் அனுப்பலியே ....அப்பாயிண்ட்மெண்ட் உள்ளவங்க மட்டும்தானே அனுப்பினேன்...." என்றதும்

பிரபுவும் நிலாவும் திடுக்கிட்டார்கள்!

# அத்தியாயம் 3

"சார்....அப்பாயிண்ட்மெண்ட் இல்லாதவங்க யாரையுமே நான் அனுப்பலையே....." என்று

சீனு கூறியதைக்கேட்ட நிலாவும் பிரபுவும் அதிர்ந்தனர்.

"என்ன சீனு விளையாடுறியா...? நீதானே கொஞ்ச நேரத்துக்கு முந்தி ஒரு லேடி உங்களைப் பாக்க வந்திருக்காங்க...அனுப்பட்டுமான்னு வந்துகேட்ட, நானும் அனுப்புன்னு சொன்னேனே.....மறந்துட்டியா....இல்ல தூங்கிட்டியா....?"

"சார்.....அஞ்சு மணிக்கு நீங்க லாயர் பிரபாகரன் சார்கிட்ட கொடுத்துடுன்னு கவர் ஒன்னு கொடுத்தீங்களே....அத கொடுத்துட்டு இப்பத்தான் வந்தேன்.... ஜானி சார் கூட நான் வர்றதைப் பார்த்தாரு"

"ஓ...ஆமால்ல....மறந்துட்டேன்...ஆனா நிலா உனக்கு ஏதும் புரியுதா....?"
"எப்படி ஒரே நேரத்துல சீனு இங்கயும் இருப்பான்....எனக்கு ஒரே குழப்பமா இருக்கு..."

"ஆமாம்...எனக்கும் அதேதான். ஆமா நீ ஏன் போகும்போது சொல்லிட்டு போகல...?'

"இல்ல சார்.....நான் சொல்லாம்னு தான் வந்தேன் ஆனா நீங்க ரெண்டு பேரும் ஏதோ பர்சனலா பேசுறமாதிரி தெரிஞ்சுது....அதான் உங்கள டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்னு போயிட்டேன்...."

"சொல்லாம போனதுக்கு இது காரணமா....? வரவர உனக்கு குளிர் விட்டுப் போச்சு....."

"என்ன பாஸ் நடக்குது இங்கே...? எனக்கு ஒன்னுமே புரியல....."

அத அப்புறம் சொல்றேன்...நீ போன வேல என்னவாச்சு....?"

"நா போனா முடிக்காம வருவேனா...? அந்த சேனா பார்த்திபன் பெரிய்ய ஆளுதான் பாஸ்...! அவன் உங்ககிட்ட சொன்னது எல்லாமே பொய். அந்த அம்மாவும் அவனுடைய வொய்ப்பே இல்ல....இல்லீகல் ரிலேசன்ஷிப்.
அந்த நிலம் ராஜாமணிக்குத்தான் சொந்தம்.
அதனாலதான் இந்த பெண்மணியை வச்சு ராஜாமணியை கைப்பாவையா ஆக்கிகிட்டு நிலத்த எழுதி வாங்கிகிட்டான்.
அது அவரோட வொய்ப்புக்கு தெரியவர
பிரச்ன ஆரம்பமாயிருக்கு.
இதனால அவரும் மனசு மாறி நிலத்த திருப்பிக் கேட்க,

வெளியில கூட்டிக்கிட்டு போயி ராஜாமணியை ஆளுங்கள வச்சு போட்டுத்தள்ளிட்டான்.
போலீசு இவர புடிக்க போகுதுன்னு தெரிஞ்சதும் நம்மகிட்ட வந்து அவரோட சொத்த ராஜாமணி தன்னோட வொய்ப்போட சேர்ந்து அபகரிக்க பிளான் போட்டு அதுக்காக தன்னை கூலியாட்கள் மூலம் கொலை பண்ணவந்ததாகவும் தற்காத்துக் கொள்ளவே ராஜாமணியை தாக்கியதாகவும் அது காரணமா உயிர் போயிட்டதாகவும் சொல்லி நாம அவருக்கு வாதாடணும்னு வந்திருக்காப்ல... இப்ப என்ன சொல்றீங்க பாஸ்...?"

"ஃபேக் ஸ்டேட்மெண்ட்டா இருந்தா நாம அந்த கேச எடுக்கறது இல்லன்னு உனக்கு தெரியாதா...? ரிஜெக்ட் பண்ணிடு..."
"இந்தாங்க...அந்த பைல்..." என்று பிரபுவிடம் குடுக்க, அதை வாங்கிப் பிரித்துப்பார்த்த பிரபு,

"குட்...! இந்தா நிலா...இத 302 பைல்ல வச்சிடு" என்று கொடுத்தான்.
"சரி...இன்னிக்கு என்ன புரோக்கிராம்...வெளிய ஏங்காவது போகலாமா.....?" என்று ஜானியைப் பார்த்துக் கேட்க,

"ஏன்...அவருக்கா புரோக்கிராமுக்கு பஞ்சம்" நிலா கேட்க,

"பாஸ்....நா வந்தப்ப பிரச்ன ஒண்ணு போய்கிட்டு இருந்தே என்ன...?" என்று ஜானி நினைவுப்படுத்திக் கேட்க,

நடந்த நிகழ்வுகளை நிலா விவரிக்க

ஆச்சரியமானான் ஜானி...."பாஸ்.... இதுல ஏதோ அமானுஷ்யமான வேல மாதிரி தெரியல ?....'

"ஆமாம் ஜானி...அவங்களப் பார்த்ததும் பிரபுவோட முகமே சரியில்ல...எனக்கே பயமா போச்சு...."

"ச்சு....அதெல்லாம் ஒண்ணுமில்ல....ஏதோ மர்மம் இருக்குது....கண்டுபிடிச்சிடலாம்....!"

"அப்புறம் நிலா...! என்னவாச்சு உன்னோட மாப்பிள்ளை பார்க்கும் படலம். நா வேணா அப்ளிகேசன் போடட்டா ....?" ஜானி நிலாவின் மேசையில் கையையூன்றி கண்சிமிட்டியபடி கேட்க,

"ஏன் டினா என்னவானாள்...?" என்று நிலா கேட்க,

"நேத்திக்கி அவ காபிஷாப்புக்கு கூப்பிட்டா.....நா போகல...அதனால ஒரே சண்டை ....அதனால அவள பிரேக்கப் பண்ணிடலாம்னு இருக்கேன்..."

"நேத்திக்கி ஏன் போகல....? நாம தான் எவ்வளவு வேலயா இருந்தாலும் ஏழு மணிக்கு டாண்ணூ கிளம்பிடுவோமே..." நிலா கேள்வி கேட்க,

"நா அவளப்பாக்கத்தான் போனேன். பஸ்ஸ்டாப்புல கீதா நின்னுகிட்டு இருந்தாலா...மனசு கேக்கல...அவளை டிராப் பண்ண போயி அப்படியே காபி ஷாப்புக்கு போயிட்டேன்...

"அங்கதானே டினாவும் இருந்தா...?"

"என்ன நிலா நீ....! அங்க போவேனா...வேற காபிஷாப்...."

"சரி அப்புறம் என்ன நடந்தது....?"

"அவளை அவ வீட்டுக்குப்பக்கமா இறக்கிவிட்டுட்டு இங்க வந்தா அவளைக்காணோம்...சரி போன் பண்ணி சாரி கேக்கலாம்னு போட்டா உன் சாரிய நீயே வச்சுக்க...அப்பிடீன்னு போனக்கட் பண்ணிட் டா... அவளுக்குமட்டுந்தான் கோவம் வருமா... நானும் இன்னிக்கி முழுக்க போனே போடல..."

'ஆமாம் அது யாரு கீதா புதுசா இருக்கு...?" பிரபு கேட்க,

"யாருக்குத்தெரியும்....பஸ்ஸ்டாண்டுல தனியா பாவமா நின்னுக்கிட்டிருந்தா...சரி ஒரு பொண்ணுக்கு ஹெல்ப்

பண்ணலாமேன்னு போனேன்...

“ஹேய்...! உன்னயத்திருத்தவே முடியாது..."
என்று பிரபு சிரிக்க,

"என்ன நிலா கேட்டதுக்கு பதிலே காணும்.."

"இல்ல ஜானி...! இனிமே மாப்ள பாக்கும் படலம் கிடையாது..."

"ஏன்? சாமியாராப்போறியா...பாத்தும்மா...நாட்டுல சாமியாரா இருந்தாலும் பொண்ணுண்ணா விடறது இல்ல....!"

"அதில்ல ஜானி.....சிக்கியாச்சு மாப்ள...." என்று
கூறிக்கொண்டே பிரபுவைப்பார்க்க,

"இஸிட்....!யாரு அந்த அதிர்ஷ்டசாலி .....நானா...?"

"உனக்கு ஒருத்தி பத்தலையாக்கும்....டினா உன்ன டிவோர்ஸ் பண்ணிடப்போறா பாரு..."

"அப்ப யாருதான்னு சொல்லு. மனசு படபடன்னுது...."

"வேற யாரா இருக்கும்னு உன்னால ஊகிக்க முடியலையா...?"
என்று கண்களால் பிரபுவைப் பார்க்க,"

"அப்படியா ... முடிவு பண்ணியாச்சா.....தி கிரேட் சக்ஸஸ்...!"
என்று பிரபு நிலாவைப்பார்த்துக்கேட்க,"

"ம்ம்..." என்று நிலாகூற,

“ அப்படிப்போகுதா கதை....வெரிகுட்...பாஸ். நீங்க பெரிய ஆளுதான்...கங்கிராட்ஸ் போத் ஆப் யூ..."என்று பிரபுவின் கையைப்பற்றி குலுக்க,இருவரும் ஒருவரையொருவர் பார்த்து சிரிக்க

"என்ன பாஸ்....ட்ரீட் கிடையாதா.....?"

"கண்டிப்பா உண்டு. என்ன நிலா எங்க போகலாம்னு சொல்லு...?'

"பார்ரா....இப்பவே உத்தரவ எதிர்பாக்கிறத...பாத்து பாஸ்...அப்புறம் நீங்க நினைச்சாலும் வெளிய வரமுடியாது...." என்று ஜானி பிரபுவை கலாய்க்க,

"அதெல்லாம் அப்புறம் பாத்துக்கலாம்..என்ன நிலா பதிலக்காணோம்..." என்று பிரபு நிலாவைக் கேட்க,

"ஐயையோ...! நேரத்துக்கு வீட்டுக்கு போகலண்ணா...அவ்வளவுதான்.....எங்கப்பா என்னை பிரிச்சி மேஞ்சிடுவார். நா வரலேப்பா....நீங்க போயிக்கீங்க..." என்று கூறிவிட்டு தன் பேக்கை எடுத்துக்கொண்டு ஜானிக்கு பை சொல்லிவிட்டு பிரபுவுக்கு கண்களால் விடைபெற்றாள்.

"என்ன பாஸ் இப்பிடி உப்பு உறப்பு இல்லாத பார்ட்டியா இருக்கு...பாவம் பாஸ் நீங்க...!" என்று ஜானி வெறுப்பேத்த

“எல்லாம் போகப்போக சரியாயிடும்...கிளம்பலாமா..." என்று கூறிவிட்டு மேசையின் மேல் இருந்த பேப்பர்களை ஒழுங்குப்படுத்தினான்.

அப்போது மடிக்கப்பட்ட ஒரு காகிதம் இருப்பதைக்கண்டான் பிரபு.
அதை எடுத்து பிரித்துப்பார்க்க,

**அதில்**

**" மாதமானது மதம் பிடித்திருக்கிறது,**
**மதில் மேல் மையம் கொண்டவள் காத்திருக்கிறாள் "**
**என்று** இரத்தக்கறையில் எழுதப்பட்டிருந்து.

# அத்தியாயம் 4

பிரபு அக்கடிதத்தை எடுத்துப் படிப்பதைப் பார்த்த ஜானி " என்ன பாஸ் ....! லவ் லெட்டரா ... நேர்ல சொல்ல வெக்கப்பட்டு லெட்டரா எழுதி வச்சுட்டாளா .... நிலா ...." என்று கேட்க ,
குழப்பமாக கடிதத்தை ஜானியிடம் நீட்டினான் பிரபு .

" என்ன பாஸ் .... பர்சனல் லெட்டர எங்கிட்ட குடுக்கிறீங்க .... எனக்கு வெக்கமா இருக்கு ... வேண்டாம் பாஸ் ...." என்று நேரம் காலம் தெரியாமல் ஜானி கலாய்க்க ,

" இடியட் ...! இதை முதல்ல வாங்கிப்படி ..." என்று கடுமையாக கூற ,

வாங்கிப் படித்த ஜானி " என்ன பாஸ் ... ஏதோ கொட்டேஷன் போல இருக்கு ....! என்றான் .

" அது எதனால எழுதி இருக்குன்னு பாரு ...' என்று பிரபு கூற ,

மீண்டும் அதைப் பார்த்தவன் " ரெட் இங்க்ல எழுதி இருக்கு .... இல்ல .... ஐயோ ... இரத்தத்தால எழுதி இருக்கு ...' என்று பயத்துடன் ஜானி கூற ,

" ஆமாம் .... இரத்தம்தான் ...” என்று பிரபு கூற மீண்டும் அக்கடிதத்தை வாங்கிப் படித்தான் .

“ இதுல இருக்கிற வார்த்தைக்கு என்ன அர்த்தமாயிருக்கும் ...?" ஜானியிடம் வினவ ,

" நான் எப்பவும் லேட் பங்ஷன்தான் .... என்னய போயி கேக்கிறீங்களே ..... ஆமாம் பாஸ் ... இத இங்க வச்சிட்டுப் போனவங்க யாரா இருக்கும் ...?" என்று பிரபுவை எதிர் கேள்வி கேட்டான் ஜானி .

" இன்னிக்கி நிறையப் பேரு வந்துட்டுப் போனாங்க .... யாருன்னு தெரியும் ....?" பிரபு கூறவும் ,

திடீரென்று ஜானி ' பாஸ் .... ஐ காட் ஐடியா ....!' என்று கூவ ,

என்ன என்பது போல பிரபு பார்க்க

" சிசிடிவி கேமரால பாத்தா ..."

" சரி .... அந்த புட்டேஜ எடு .... பாக்கலாம் " என்று பிரபு கூற ,

கேமராவில் பதிவான படங்கள் எதுவும் திருப்தியாயில்லை .....

" பாஸ் ... ஒன்னு கவனிச்சீங்களா .... ஒரு லேடி வந்ததா சொன்னீங்களே ... அது பதிவாகவேயில்லை ...."

" ஆமாம் .... சம்திங் ராங் ...."
" கண்டிப்பா இது ஏதோ ஆவி சமாச்சாரம் போல் தெரியுது பாஸ் ... அதனால தானா யார் கண்ணுக்கும்தெரியல ...."

" ஏன் ... நானும் நிலாவும் பார்த்தது ...."

" அங்கதான் இருக்கு விஷயம் .... அந்த ஆவிங்க உங்ககிட்ட உதவி கேட்டு தானே வந்துருக்கு .... சும்மா சொல்லக்கூடாது பாஸ் .... தமிழ்நாட்டுல தான் கலக்குறீங்கன்னு பாத்தா .... ஆவி உலகத்துல கூட உங்களுக்கு கேசு கிடைக்குது ..." பிரபுவை ஜானி கலாய்க்க ,
"
ஏய் ....! உதை வாங்கப்போற .... சீரியசான விஷயமா இருக்கு .... அதுக்கு வழி தேடாம
கிண்டலா ...." அடிப்பதுபோல் கையை ஓங்க

" பாஸ் ... இந்த மரமண்டைக்கு ஸ்லோவாதான் வேல செய்யத் தெரியும் .... இப்ப முதல்ல வயிற்றுப்பசியை சரி செய்வோம் ... பிறகு நிதானமா யோசிக்கலாம் ... சரிதானே பாஸ் ....!" வயிற்றைத்தட்டி ஜானி பேசுவதை

ரசித்த பிரபு " சரி வா போகலாம் ..." என்று கூறிவிட்டு சீனுவிடம் அலுவலகத்தை பூட்டச் சொல்லிவிட்டு இருவரும் புறப்பட்டனர் .

இரவு மாடியில் பால்கனியில் சோபாவில் சாய்ந்து அமர்ந்தபடி தீவிர யோசனையில் ஆழ்ந்து இருந்த பிரபு தன் அருகில் அவனுடைய அம்மா பால் தம்ளருடன் தன் அருகில் வந்தமர்ந்ததை கவனிக்கவில்லை .

" என்னப்பா .... யோசனை ...." என்று கேட்டபடி பால் தம்ளரை நீட்ட
அதைப் பெற்றுக்கொண்ட பிரபு .

" ஒன்னுமில்லம்மா ..... சும்மாதான் ...." என்று கூற ,

" ஏப்பா ... காலையில நான் சொன்னேனே அதுக்கு பதிலே சொல்லலியே ....?" என்று கேட்க

" என்னம்மா கேட்டீங்க ..... அந்த நிலம் விஷயந்தானே ....?"
' பாழாப்போச்சு ..... இப்ப நிலம் வாங்கறதுதான் ரொம்ப முக்கியம் .... ஜட்ஜ் பரமேஸ்வரன் பொண்ணு ஜாதகம் வந்திருக்கே . அதுக்கு என்ன பதில் ...?"

" ஓ .... பொண்ணு பாக்கறதப்பத்தி சொன்னீங்கல்ல .... மறந்துப்போச்சு .... இப்ப எனக்கு கல்யாணம் வேண்டாம் ... இன்னும் ரெண்டு வருசம் போகட்டும் ...."

" சரிதான் .... வேதாளம் பழையபடி முருங்கமரம் ஏறுதா ....? உனக்கு என்ன இப்பதான் இருபது வயசுன்னு நினப்பா ....
முப்பது முடியுது ... இன்னமும் தள்ளிப் போட்டுகிட்டே இருந்தா கிழவி கூட உனக்கு கிடைக்கமாட்டா ....!'

" அம்மா .... கூல் .... கூல் . கோவப்படாதீங்க .... உங்க கவலை எனக்கு பொண்ணு கிடைக்காதுன்னுதானே .... அந்த கவலை இனிமே உங்களுக்கு வேண்டாம் .... பொண்ணு ரெடியா இருக்கு ...." என்று பிரபு கூறியதும் ,

" என்னப்பா சொல்ற ...... பொண்ணு ரெடியா ....? யாருப்பா அது .... லவ்வா ... அத முதல்லேயே சொல்லியிருந்தா .... தரகனுக்கு குடுத்த காசுலேயே கல்யாணத்தயே முடிச்சிருக்கலாம் .

" அம்மா ..... முதல்லயே எப்படி சொல்றது . இன்னிக்கிதானே கன்பார்ம் ஆச்சு ..."

" அப்படியா .... யாருப்பா அந்த பொண்ணு .... சீக்கிரம் சொல்லு ..." பரபரத்தார் அம்மா ....

“ அம்மாடியோவ் ....! என்னைவிட உங்களுக்கு தான் அதிக எக்சைடீடிங் ..... சொல்றேன் ... சொல்றேன் நம்ம ஆபிசுல இருக்காங்களே என்னுடைய ஜுனியர் நிலா ..... அவங்கதான் ..."

" அப்படியா .... நிலாவா ..... ரொம்ப சந்தோசம் . ரொம்ப தங்கமான பொண்ணு ..... நம்ம குடும்பத்துக்கு ஏத்த பொண்ணுதான் .... ஆனா .... அவங்க குலம் கோத்திரம் வேறயாச்சே ....." என்று இழுப்பதை பார்த்த பிரபு

" என்னம்மா ... நீங்களுமா ....? மனசு ஒத்துப்போன பிறகு குலமாவது .... கோத்திரமாவது ...."

" எனக்கு ஒன்னும் பிரச்சினை இல்லப்பா .... எப்படியோ நீ குடும்பஸ்தனா ஆனா எனக்கு போதும் . ஆனா அவங்க வீட்டுல ஒத்துக்கனும் இல்ல ..."

" இப்பத்தானே பிள்ளையார் சுழி போட்டுருக்கு .... பாக்கலாம் ...." என்று பிரபு கூற ,

“ எப்படியோப்பா .... உனக்கு நல்லது நடந்தா சரி . உங்கப்பா போனபிறகு நா இன்னும் இருக்கேன்னா அதுக்கு நீதான் காரணம் . உனக்கு ஒரு கால்கட்டு போட்டுட்டேனா என் கடமை முடிஞ்சிடுச்சின்னு நிம்மதியா உங்கப்பா கூட போய் சேர்ந்திடுவேன் .....!" கண்களில் துளிர்த்த நீரை முந்தானையால் துடைத்துக்கொண்டார் .
'

அம்மா ....! உங்ககிட்ட எத்தனைமுறை சொல்லியிருக்கிறேன் இந்த மாதிரி பேசக்கூடாதுன்னு ... என்ன வயசாயிடுச்சி உங்களுக்கு மேல போறதுக்கு .... உங்க பேரன் பேத்திகளை தூக்கி நீங்க கொஞ்ச வேணாடாமா .....?" பிரபு தன் தாயை கோபமாக திட்ட

" அதுக்காகத்தானே நானும் ஆசைப்படறேன் . உனக்கு தொழிலைத்தவிர வேற சிந்தனையே கிடையாது . சரி எப்படியோ ... ஒரு நல்ல சேதி சொன்ன ... அது போதும் எனக்கு ...." என்று கூறிக்கொண்டே தம்ளரை எடுத்துக்கொண்டு கிளம்பினார் .
அவர் கிளம்ப பிரபு ஏதோ நினைத்தவனாய்

" அம்மா உங்ககிட்ட ஒரு விசயம் கேக்கணும் ...."
என்றதும் ,

" என்னப்பா ... என்ன கேக்கணும் ..... சொல்லு ....!"
என்றவராய் மீண்டும் சோபாவில் அமர்ந்தார் .

" இந்த உலகத்துல ஆவி .... பிசாசு ... இதெல்லாம் இருக்கா .... உங்களுக்கு அந்த நம்பிக்கை இருக்கா ....?"
என்றுபிரபு கேட்க ,

அவர்கள் இருவருக்கும் பின்னால் இருந்த உருவம் அதைக்கேட்டு புன்முறுவல் பூத்தது .

# அத்தியாயம் 5

ஆவி ..... பிசாசு இருக்கா .... உங்களுக்கு நம்பிக்கை இருக்கா என்று பிரபு கேட்டதும் ,

" என்னப்பா .... திடீர்னு இது மாதிரி கேள்வி ....? ஏதாச்சும் ஆராய்ச்சி பண்றியா ....?" என்று அம்மா கேட்க ,

" இல்லம்மா .... இது என் நண்பன் ஒருவன் கேட்ட கேள்வி . எனக்கு இதிலெல்லாம்
நம்பிக்கை கிடையாது . இருந்தாலும் உங்ககிட்ட கேட்டுப்பாக்கலாம்னு தான் ...." பிரபு பதிலளிக்க ,

" உனக்கு கடவுள் பக்தி கிடையாது . அதனால எதையுமே நீ சந்தேகமாத்தான் பார்ப்பே .... பாசிட்டிவ் இருந்தால் கண்டிப்பாக
நெகட்டிவ் இருக்கும் .
இருட்டு - வெளிச்சம் , பகல் - இரவு , நன்மை - தீமை போலவே கடவுள் என்று ஒருவர் இருந்தால் கண்டிப்பா ஆவி , பிசாசு
என்பதும் இருக்கும் ...."

" இருக்கும் என்றால் நிச்சயமா உங்களால சொல்ல முடியாது அப்படித்தானே ....!"

" ஆமாம்பா .... நா எப்பிடி நிச்சயமா கூற முடியும் ....?. எல்லோரும் சொல்றதால நாமளும் அத உறுதிபடுத்த முடியாது இல்லியா .... சரி இப்ப எதுக்கு இந்த டாபிக் .... ரொம்ப நேரமாச்சு .... படுக்கலாம் " என்று கூறிவிட்டு எழுந்திருக்க , பின்னால் நின்று கொண்டிருந்தவரைப் பார்த்து

" என்ன ... எப்ப வந்தீங்க .... சைலண்டா வந்து நிக்கிறீங்க ....?" என்று பிரபுவின் தாயார் அங்கு நின்றிருப்பவரைப் பார்த்துக் கேட்க ,
அதுவரை யோசனையில் இருந்த பிரபு
பின்னால் திரும்பி பார்க்க அங்கே அவனது சித்தப்பா பரந்தாமன் நின்று கொண்டிருந்தார் .

" என்ன சித்தப்பா ....! எங்க போயிட்டீங்க ....? ரெண்டு மூணு நாளா ஆளையே பாக்க முடியல .....?

என்று பிரபு கேட்க ,

" நா வந்தது கூட தெரியாம அம்மாவும் புள்ளையும் சீரியஸா டிஸ்கஸ் பண்ணிக்கிட்டு இருந்தீங்க .... அதனால தான் சைலண்டா வந்து நின்னுக்கிட்டு இருந்தேன் .... ஆங் ... என்ன கேட்ட .... எங்க போயிருந்தேன்னுதானே .... நாகர்கோவில்ல என்னோட நண்பனுடைய பையன் கல்யாணம் . அதுக்குதான் போயிருந்தேன் ...."

" ஏம்மா .... என்னய கல்யாணம் பண்ணச்சொல்லி வற்புறுத்திரீங்களே ....
ஏன் சித்தப்பாவைமட்டும் அவர் இஷ்டத்துக்கு விட்டுட்டீங்க ....?"
" நாங்க கல்யாணப்பேச்ச ஆரம்பிச்சாலே ....
ஆறு மாசத்துக்கு ஆப்சண்டா ஆயிடுவாறு .... சொல்லி சொல்லி அலுத்துப் போச்சு .... சரி தலையெழுத்துப்படி நடக்கட்டும்னு விட்டுட்டோம் .... சரி ... கீழ வாங்க ... படுக்கணும் ... நேரமாச்சு ..." என்று கூறியபடி கீழே இறங்கினார் .

காரை ஜானி ஓட்டிக்கொண்டிருக்க அருகே பிரபு அமர்ந்தவாறு செல்லை வைத்துக் கொண்டு பார்த்துக் கொண்டிருந்தான் .
கார் சேத்துப்பட்டு பொன்றாயன் மங்கலத்தை நோக்கி சென்று கொண்டிருந்தது . ஞாயிறு விடுமுறை என்பதால் இருவரும் அலுவலகம் விடுமுறை .

" பாஸ் ... அந்த லேடியைத்தேடித் தானே போறோம் ..." என்று கேட்க ,

" அந்த ஊர் ஸ்டேசனுக்குப் போயி அவங்க சொன்ன விஷயம் உண்மையா என்று விசாரிக்கப் போறோம் ...."

" வாங்க .... வாங்க பிரபு .... ஜானி ....! எங்க இந்த பக்கம் ...? இந்த ஜோனலுக்கெல்லாம் வரமாட்டீங்களே .... அதிசயமா . இருக்கு ...." என்று வரவேற்றார் பொன்றாயன் மங்கல ஸ்டேசன் எஸ் . பி . சற்குணம் .

" வணக்கம் சற்குணம் ....! எப்பிடி இருக்கீங்க ....?" என்று பிரபு கேட்க ,

" போலீஸ்காரன் நல்லா இருக்கேன் என்று சொன்னால் கண்டிப்பா அது பொய்தான் ... இல்லையா ஜானி " என்று கூறிக்கொண்டே இருவரின் கையைப்பற்றி குலுக்கினார் .
" அப்புறம் .... வேலை இல்லாம நீங்க வரமாட்டீங்களே ....?" என்று கூறிக்கொண்டே டீயை கொண்டுவரச் சொல்லிவிட்டு தானும் அமர்ந்தார் .
" சொல்லுங்க பிரபு .... என்ன செய்யனும் நான் " சற்குணம் கூற

" சார் ... நீங்க கற்பூரம் . சட்டுனு புரிஞ்சிக்கிட்டீங்க ...." ஜானி கூற ,

" இல்லன்னா ... இந்த உத்தியோகத்துல தாக்கு புடிக்க முடியுமா .... ஜானி " என்று சற்குணம் கூறவும்

" சற்குணம் ...! உங்க ஏரியாவுல ஜமீன் மாளிகை ஏதாச்சும் இருக்கா ...?" என்று பிரபு கேட்க ,

" ஜமீன் மாளிகையா ....? இருக்கிற மாதிரி தெரியலையே ...." கொஞ்சம் யோசித்த சற்குணம் " ஆனா ... பாழடைஞ்ச மாளிகை ஒண்ணு இருக்கு , ஏன் கேக்குறீங்க ....?"
கேள்வியாய் கேட்க ,

" பாழடைஞ்ச மாளிகையா .... இல்லை .... வேற இருக்கும் .... யோசிச்சி சொல்லுங்க ...!" பிரபு
தொடர ,

" கொஞ்சம் இருங்க ...." என்று கூறிவிட்டு " கனிமுத்து .... இங்க வாங்க ..." என்று கூப்பிட
ஹெட்கான்ஸ்டபிள் கனிமுத்து அருகில் வந்து " சார் ...!" என்று வந்து நிற்க ,
" கனிமுத்து ... நம்ப ஏரியாவுல ஜமீன் மாளிகை இருக்கா ...?"
" அப்பிடி எதுவும் இல்லை .... ஆனா பாழடைஞ்ச மாளிகை ஒண்ணு இருக்கு . அதை ' மாதப்பன் கோட்டை ' ன்னு சொல்லுவாங்க ..."
" பிரபு .... இந்த கோட்டை மட்டுந்தான் பழங்கால மாளிகை . அதுவும் சேதமடைஞ்சு கிடக்கு . மக்கள்

நடமாட்டம் இல்லாததால முள்காடு முளைச்சுக் கிடக்கு . ஆமா எதுக்கு இதப்பத்தி கேக்குறீங்க ...? எனிதிங்க் ராங் ...?"
என்றுசற்குணம் கேட்க ,

" நத்திங் சீரியஸ் ....! என்னோட நண்பர் ஒருவர் அந்த பங்களா வாங்குற முயற்சியில் இருக்கார் . அதப்பத்தி டீடெய்ல்ஸ் வேணும்னு எங்கிட்ட கேட்டுக்கிட்டார் . அதனாலதான் ."
" எனக்குத் தெரிந்தவரை அந்த பங்களாவுக்கு உரியவர் என்று யாரும் இருப்பதாக தெரியவில்லை . மே பி வெளியூர்ல இருக்கிறாங்களோ ... என்னவோ ..."

" ஒகே சற்குணம் ....! எதுக்கும் அந்த பங்களாவ பாத்துட்டுப் போறோம் ...."
" உங்களுக்குத் துணையா கான்ஸ்டபிளை அனுப்பட்டுமா ...?"
" நோ ... தேங்க்ஸ் ...! ஆன் தி வே பாத்துட்டுப் போறோம் .... பை ... சற்குணம் ...!" என்று கூறிவிட்டு இருவரும் கிளம்பினார்கள் .

வெளியே வந்ததும் ஜானி " ஏன் பாஸ் ... அந்த லேடி ஸ்டேசனுக்கு வந்து கம்ப்ளெயிண்ட் குடுத்ததாக கூறினார்களே .... அதைக் கேட்டிருக்கலாம் அல்லவா ...?"
" எனக்கே இது எப்படிப்பட்ட கேசு என்று புரியவில்லை . அவங்களையும் நாம குழப்ப வேண்டாம்னு தான் சொல்லலை . சரி ... வண்டியை எடு .... அந்த இடத்துக்குப் போவோம் ..." என்று பிரபு கூறவும் ஜானி காரை ஸ்டார்ட் செய்தான் .

" பாஸ் ... கண்டிப்பா அங்க போகத்தான் வேணுமா ... நல்லா யோசிச்சி சொல்லுங்க ..." ஜானியின் கேள்வியில் ,
" அடப்பாவி ... நீயா ... இப்பிடி பேசுறது . அசால்ட்டா பெரிய பெரியகிரிமினல்ஸ் கூட எல்லாம் போராடி வந்துருக்கே .... நீயா இப்பிடி .....?" பிரபு கலாய்க்க ,

" பாஸ் .... மனுசனுங்கன்னா தைரியமா போராடலாம் .... இது வேற மாதிரி இல்ல தோணுது "

" மண்ணாங்கட்டி ..... நாம வக்கீல் .... எதையும் தீரவிசாரிக்காம இதுதான் என்று பாயிண்ட் பண்ணக்கூடாது . கிளம்பு ... மழை வர மாதிரி தோணுது ...'

ஊருக்கு ஒதுக்குப்புறமாய் காடுகள் போல் வளர்ந்து கிடக்கும் மரங்கள் . மரங்களினூடே செல்லும் வழியாக கார் மெல்ல சென்று கொண்டிருந்தது .
தூறல் மெல்ல போட்டுக்கொண்டிருக்க பகல் நேரமானாலும் மேகமிருட்டும் மரங்களின் அடர்த்தியும் சேர்ந்து வழி இருட்டாக இருந்தது . வைப்ரேட்டர் மெல்ல நீரினை தள்ளிக்  கொண்டிருக்க , ஜானி மெல்ல கார் ஓட்டிக் கொண்டிருந்தான் .
திடீரென்று மின்னல் கீற்று வெளிப்பட , காருக்கு முன்னால் முண்டாசு கட்டிய மனிதன் ஒருவன் தலையில் விறகு சுமந்தபடி செல்வது தெரிந்தது .

அவனைப் பார்த்ததும் ஜானி " பாஸ் ... அந்த ஆளை நிறுத்தி விசாரிக்கலாம் .... இந்த ஏரியா ஆள் போலத் தெரியுது ...." என்று கூற ,
பிரபு தலையாட்டவே கார் அந்த மனிதனருகே மெல்ல சென்று நின்றது .

கார் தன்னருகே வந்து நிற்பதை பார்த்ததும் அந்த மனிதன் நிற்கவே ,
ஜானி காரின் கதவைத் திறந்து " ஐயா ... நீங்கள் இந்த ஊர்க்காரரா ...?" என்று கேட்க
" ஆமாம் ... எதுக்கு கேக்குறீங்க ...?"

" இங்க ஜமீன் மாளிகை இருக்காமே .... எவ்வளவு தூரத்துல இருக்கு தெரியுமுங்களா ...?"
" அந்த கோட்டை பங்களாவா .... இதோ நீங்க போற வழியிலேயிருந்து மூணு கல் தொலைவுல இருக்கு . ஆமா ... எதுக்கு அந்த பங்களாவ பாக்க போறீங்க ...."

" நாங்க பழங்கால அரணமனைகள் , வீடுகள் , மாளிகைகள் எல்லாம் ஆராய்ச்சிப் பண்ற படிப்பு படிக்கிறோம் . இந்த ஊர்லயும் பங்களா ஒண்ணு

இருக்கிறதா கேள்விப்பட்டோம் . அதை பார்க்கணும்னுதான் கேக்குறோம் ...."

" ஐயா ... சொல்றேன்னு தப்பா நினைச்சிக்காதீங்க .... அந்த இடம் ஒரு மாதிரிங்க .... அங்கெல்லாம் நீங்க தனியா போகவேணாம் . தாய்க்கு புள்ளையா பத்திரமா ஊர்போய் சேருங்க ... அதான் உங்களுக்கு நல்லது ...." என்று கூறிவிட்டு நடையைக்கட்டினான் .

" ஐயா ... ஐயா ... கொஞ்சம் நில்லுங்க . ஏன் அந்தப் பக்கம் போகக்கூடாதுன்னு சொல்றீங்க .... காரணத்த தெரிஞ்சுக்கலாமா ...? ஜானி கேட்க ,

" என்ன தம்பி ...! இதெல்லாம் பட்டவர்த்தனமாவா சொல்லுவாங்க ... அங்க போனவங்க யாரும் திரும்பி வந்ததா சரித்திரமே இல்லை . எங்க ஊர்லயும் உன்னப் போல இளவட்ட பசங்க சொன்னப்பேச்சக் கேக்காம போயி காணாப்பொணமா போயிட்டாங்க .... எல்லாம் பேய் பிசாசுங்க செய்யிற வேலதான் . நல்லத்தனமா போய் சேருங்க .... மழை அதிகமா வருது . நா வீட்டுக்குப் போகணும் ..." அதற்கு மேல் தனக்கு அங்கு வேலையில்லை என்பதுபோல் நடையைக் கட்டினான் அம்மனிதன் .

" என்ன பாஸ் ... என்ன பண்றது ...?" என்று ஜானி வினவ
" சரி ... திரும்பலாம் . மழை வேறபலமா வர்ற மாதிரி தெரியுது " என்று பிரபு கூற

காரை ரிவெர்ஸில் எடுத்தான் ஜானி .
ஆனால் காரை எடுக்கமுடியாமல் ஏதோ தடுக்கவே

" என்ன பாஸ் ... காரும் ஜகா வாங்குது ....."
" இறங்கி பாரு ... கல் ஏதாச்சும் இருக்கப்போகுது ..."
மழையில் நனைந்துகொண்டே கீழே இறங்கி காரின் பின்னால் சென்ற ஜானி
" பா .... ஆஸ் ....." என்று அலறினான் .

# அத்தியாயம் 6

ஜானியின் அலறல் சத்தம் கேட்டு பிரபு காரை விட்டு இறங்கி பின்னால் ஓடி வந்தான் .

அங்கே அவன் கண்ட காட்சி மனதை உறைய வைத்தது . சற்று முன்னர் தங்களிடம் பேசிய முண்டாசு கட்டிய மனிதன் இரத்த வெள்ளத்தில் பிணமாக கிடந்தான் .

இருவரும் பிரமை பிடித்து நிற்க ஜானி திகிலுடன் " பாஸ் ...! எப்ப இந்த ஆளு பின்புறம் வந்தான் . நம்மிடம் பேசிவிட்டு முன்புறமாகத்தானே சென்றான் ..... அன்பிலீவபுள் ...." என்று சொல்லிக்கொண்டே சாலையின் ஓரம் கிடந்த ஒரு பாறாங்கல் மேலே அமர்ந்தான் .

பிரபுவும் தன் நெற்றியைத் தேய்த்தவாறு சிந்தனையில் ஆழ்ந்தான் . பின்பு இறந்து கிடந்த உடல் அருகே குனிந்து உற்றுப்பார்த்தான் .

" பாஸ் .... இறந்துட்டானா ..... பாருங்க ....." சற்று படபடப்புடன் பேசிய ஜானியை சைகையால் தன் அருகே வருமாறு அழைத்தான் பிரபு .

அருகில் வந்த ஜானியிடம் காதில் ஏதோ காதில் கிசுகிசுத்தான் பிரபு .

" இஸிட் ... நெசமாவா ...!" என்று ஆச்சரியத்தோடு வினவினான் ஜானி .

" யெஸ் .... சரி நீ போய் கார்ல கேமராவை எடுத்துவா ...."

காரிலிருந்து காமிராவை எடுத்து வந்த ஜானி பல கோணங்களில் அந்த பிணத்தை படம் பிடித்தான் .

" பாஸ் .... அடுத்து என்ன ?" என்று ஜானி கேட்க ,

" சற்குணத்துக்கு போன் போட்டு வரச்சொல்லு ...." என்றான் பிரபு .

போன் சிக்னல் கிடைக்காம போகவே " பாஸ் ... இங்க சிக்னல் கிடைக்கல .... என்ன செயாயிறது ....

" சரி ... நான் டிரை பண்ணி பார்க்கறேன் ..." என்று பிரபு போன் போட முயல அவனுக்கும் சிக்னல் கிடைக்கவில்லை .

" ஒண்ணு செய் ..... அந்த மேடு ஏறி அங்க ஒரு பாறை இருக்கு பாரு .... அங்கே ஏறி டிரை பண்ணி பாரு ...." பிரபு கூறியதும் ,

மேட்டுப்பகுதியை ஒரே தாவில் ஏறிய ஜானி அங்கிருந்த பாறை மேல் மெல்ல ஏறினான் .

சிக்னல் கிடைக்கவே சற்குணத்திற்கு விஷயத்தைக் கூற , உடனே ஆம்புலன்ஸிடன் வருவதாக தகவல் கிடைத்தது .

கீழே இறங்கிய ஜானி விவரத்தைக் கூற காற்றுடன் மழை பலமாகவே இருவரும் காரைத் திறந்து உட்கார்ந்தனர் .

" பாஸ் ... மணி நாலுதான் ஆகுது . ஆனாலும் மணி ஆறு போல இருக்கு பாருங்க ...." என்றான் .

பிரபுவும் வாட்ச்சைப் பார்த்துவிட்டு ஜானியிடம் " உனக்கு பசிக்குதா ....?" என்று கேட்க ,

" பசிச்சுது .... ஆனா இப்ப இல்ல . நம்மை சுத்தி என்ன நடக்குதுன்னே புரியலை ...." தலையை லேசாக பிடித்தவாறு ஜானி காலை நன்றாக நீட்டி சீட்டில் நன்கு சாய்ந்து அமர்ந்தான் .

" என்ன ... பயந்துட்டியா ....?" பிரபு கேட்க ,

" பயமா ... எனக்கா .... நெவர் . ஆனா இது என்னவாக இருக்கும்னு ஒரு கியூரியாசிட்டி மனசுல ஓடிட்டே இருக்கு .... அதான் ..."

" சரி பாத்துக்கலாம் .... ஜீப் சத்தம் கேட்குது . வந்துட்டாங்கன்னு நினைக்கிறேன் ...." என்று பிரபு கூறவும் ,
முன்னால் ஜீப்பும் பின்னால் ஆம்புலன்ஸும் அவர்களுக்கு பின்னால் சத்தத்துடன் வந்து நின்றது .

ரெயின்கோட்டில் சற்குணமும் இரண்டு கான்ஸ்டிபிளும் இறங்கிவர , காரின் கதவை திறந்து இருவரும் கீழே இறங்கினர் .

" என்ன பிரபு .... எனி பிராப்ளம் ....? ஜானி சொல்றபோது எனக்கு எதுவும் சரியா கேட்கல .... ஏதோ விபரீதம்னு மட்டும் புரிஞ்சுது . நீங்க ஏதோ ஆபத்துல இருப்பீங்கன்னு மட்டும் புரிஞ்சுது . ஏதோ ஆக்ஸிடண்ட் ஆம்புலன்ஸ் வேணும்னு ஜானி கூறினாரே .... யாரு ... எங்க இருக்கு பாடி ....?" என்று சற்குணம் சற்று படபடப்பாக
பேச ,

" உங்க ஜீப் லைட்டை போட்டு வெளிச்சத்தைக் காட்டுங்க ... எங்க காருக்கு கீழே தான் இருக்கு ..." பிரபு கூற

டிரைவர் ஜீப்பை ஆன் செய்தார் .

அனைவரும் கீழே குனிந்து பார்க்க ஆச்சரியம் காத்திருந்தது அவர்களுக்கு .

கீழே எந்த உருவமும் காணவில்லை . இரத்தக்கறையும் இல்லை .

" என்ன பிரபு ..... எதுவும் இல்லையே ...." சற்குணம் கேட்க ,

" என்ன ... மாய மந்திரம் போல் இருக்கு .... நாம கார்லதானே இருந்தோம் . யாராவது வந்து எடுத்திருந்தா நமக்கு தெரியாம போகாதே .... சே ...!" என்று கையை பிசைந்து கொண்டான் ஜானி .

பிரபு காரிலிருந்து காமிராவை எடுத்து வந்து தான் எடுத்த போட்டோவை சற்குணத்திடம் காட்ட , அதைப்பார்த்த சற்குணம்

" யெஸ் .... யூ ஆர் கரெக்ட் .... யாரோ பாடியை ரிமூவ் பண்ணியிருக்காங்க .... எனக்கு ஆரம்பத்துலேயிருந்து இந்த காட்டுவழியும் அதைச் சுற்றியுள்ள இடங்களும் சந்தேக லிஸ்டில தான் இருந்தது . அதற்கேற்றாப்போல இப்ப இது நடந்துருக்கு . சரி பிரபு .... இந்த மழையில இந்த பகுதிய சர்ச் பண்ண

முடியாது . நீங்க கிளம்புங்க .. நாளைக்கு பகல் நேரத்துல இங்க வந்து ஒரு ரவண்டு போயி பாக்கிறோம் . எப்பிடிப்பட்ட கில்லாடியா இருந்தாலும் என்னைக்காவது ஒருநாள் போலீஸ்காரன்கிட்டே மாட்டாம இருக்க முடியாது . ஒகே ... வி வில் சீ யூ அனதர் டே ...!"
எனாறு கூறவும் , இருவரும் அங்கிருந்து கிளம்பினார்கள் .
மறுநாள் அலுவலகம் வந்த பிரபு நிலா இன்னும் அலுவலகம் வராததைக் கண்டு
சீனுவைக் கூப்பிட்டு கேட்க , தெரியலீங்க சார் .... மேடம் போன் எதுவும் பண்ணல .... டிராபிக்கில மாட்டிக்கிட்டாங்களோ ... என்னவோ ...?" என்று கூறினான் .

தன் சேரில் அமர்ந்து சிறிது நேரம் கண்மூடி யோசனையுடன் இருந்தான் . மீண்டும் சீனுவை அழைத்து அப்பாயிண்ட்மெண்ட் இருக்குதா என்று கேட்க ,

" நீங்கதான் திங்கள் மதியம் ரெண்டு மணியிலிருந்து அப்பாயிண்ட்மெண்ட் கொடுன்னு சொன்னீங்களே ...." என்று கூறவும்

" ஆமாம் .... மறந்துட்டேன் ....! சரி நீ போர்த் கபோர்டுல 506, 377 பைல்களை எடுத்து கொடுத்துட்டு , டீ பிளாஸ்க்கை கொண்டுவா " என்று கூற ,

பிரபு சொன்ன வேலைகளை முடித்துவிட்டு
டீ கப்பில் டீயை ஊற்றி பிரபுவிடம் கொடுத்தான் சீனு .

நிலா எப்போதும் சரியா பத்து மணிக்கெல்லாம் தன்னுடைய கேபினுள் இருப்பாள் .

அன்று எந்தந்த பைல்களுக்கு நோட் எழுத வேண்டுமோ எழுதி பிரபுவின் டேபிளில் வைத்துவிடுவாள் . கஸ்டமர்களுக்கு அனுப்பவேண்டிய லீகல் பார்மாலிட்டீஸ்
அனுப்ப தயாராகிவிடுவாள் .

பிரபு வந்தவுடன் அவன் கொடுக்கும் ஸ்டேட்மெண்டுகளை டிக்டேட் எடுத்துக்கொண்டு கம்யூட்டரில் பதிவு செய்து விடுவாள் .

அவன் மேலோட்டமாக கொடுக்கும் இன்ஸ்களை டீடெய்லாக கோட் நம்பருடன் பதிவு செய்து விடுவாள் .

ஜானி ஐகோர்ட்டுக்கும் பீல்டுலயும் பிரபு கொடுக்கும் அசைய்ன்மெண்டுகளை முடிப்பான் .

இருவரும் அவனுக்கு இரு கைகளைபோல . அவர்கள் ஒத்துழைப்பு கொடுப்பதினால் தான் இன்று அவன் ஒரு சக்ஸஸ்புல் லீடீங் லாயராக இருக்கிறான் .

ஜானிக்கு பிரபுமேல் அளவுகடந்த மரியாதை . பிரபுவின் ஒவ்வொரு அணுகுமுறையும் ஜானிக்கு பிரமை ஏற்படுத்தும் . தன் பாஸ் ஒரு கேஸில் ஆஜரானால் அது கண்டிப்பாக ஜெயம் என்று நினைப்பான் .

அப்படித்தான் பிரபுவும் தான் எடுக்க வேண்டிய பிராதுகள் உண்மையானதாக இருக்க வேண்டும் என்று நினைப்பான் .

ஏழ்மை நிலையிலிருப்பவர்களின் நியாயமான காரணங்களுக்கு பீஸ் வாங்காமல் இலவசமாகவே வாதாடி வெற்றி பெற்றுத் தருவான் .

அதனால் அவனுக்கு நல்ல பெயர் மக்களிடத்திலும் , வக்கீல்களின் சுற்றத்திலும் உண்டு .

அவனை கண்காணிக்கும் இளவட்ட நாயகிகளிடம் அவன் ஒரு ஹீரோ . ஜானி அடிக்கடி பிரபுவை கலாய்ப்பான் .

இருந்தாலும் அவன் மனதில் யாராலும் இடம் பிடிக்க முடியவில்லை . நிலாவுக்கு அவன் மேல் மரியாதை உண்டு . அவன் தனக்கு எட்டாக்கனி என்பதால் அந்த நினைப்பே அவளுக்கு வருவதில்லை .

நிலாவின் இந்த ஆட்டிட்டியூட்டே பிரபுவை அவள் பக்கம் ஈர்த்தது .

நிலா இல்லாதபோது தான் தான் அவளை அதிகம் மிஸ் பண்ணுவது புரிந்தது . வேலையில் கவனம் செல்லவே

இல்லை .

“ ஏன் இத்தனை நாளும் இல்லாத பரிதவிப்பு தன்னிடம் . அவளும் எத்தனையோ முறை விடுப்பு எடுத்திருக்கிறாள் . அப்போதெல்லாம் தோன்றாத வெறுமை இப்பொழுது மட்டும் ஏற்படக்காரணம் ..... அவளிடம் தன் காதலை வெளிப்படுத்தியதால் இருக்குமோ ...?'

அவனுக்கு எந்த வேலை செய்வது என்றே சற்று நேரம் புரியவில்லை .

சரி அவளுக்கு போன் செய்து பார்க்கலாம் என்று போன் போட சுவிட்ச்ஆப் என்று பதில் வந்தது .

கோர்ட்டிலிருந்து ஜானி பேச அவனுக்கு தேவையான தகவல்களை கோப்புகளை பார்த்து பிரபு கூறிவிட்டு , தன்னுடைய வேலையில் ஆழ்ந்து விட்டான் .

சோம்பலுடன்  கையை நீட்டி முறித்தவாறு மணியைப் பாராத்தான் . மணி ஒன்று .

“ இந்த ராட்சசிக்கு என்ன வந்தது . போன் கூட போட முடியாத அளவுக்கு . இங்க ஒருத்தன் கண் பூத்து காத்துக்கிடப்பானே ....
என்ற நினப்பு இருக்குதா .... ஜடம் ... ஜடம் ... என்னடா .... காதலிக்கிறோமே அவங்கிட்ட சின்ன சின்ன ரொமான்ஸ் .... ஏக்கப்பார்வை ... ஹீம் .... இந்த காலத்து பொண்ணு மாதிரியா இருக்கா ... சரியான சாம்பாரு ....' மனதுக்குள் அவளை திட்டியபடி நேற்று எடுத்த போட்டோவை பார்க்கலாம் என்று காமிராவை எடுத்தான் .

அப்போது சீனு உளாளே நுழைந்து " சார் ... சாப்பாடு போயி எடுத்து வரட்டா ...?" என்று கேட்க ,

" சரி .... போயிட்டு சீக்கிரமா வா .... அம்மா அந்த வேல சொன்னாங்க .... இந்த வேல சொன்னாங்கன்னு லேட் பண்ணக்கூடாது " என்று பிரபு கூற

" சரிங்க சார் ... சீக்கிரமா வந்துடறேன் .... என்று கூறிவிட்டு சீனு கிளம்பும்போது

" வேண்டாம் சீனு .....! இன்னிக்கு சாருக்குநா சாப்பாடு கொண்டு வந்திருக்கேன் ..... இந்தா இந்த கேரியரை அம்மாவுக்கு கொடுத்திடு ....." என்று பிரபுவின் அம்மாவிற்காக ஒரு டிபன் கேரியரை சீனுவிடம் கொடுத்துவிட்டு ஒரு சிறிய டிபன் பாக்சை " இந்தா இது உனக்கு ...” என்று கொடுத்தாள் நிலா .....

*அவளைப்பார்த்ததும்*  முகம் பரவசமானாலும் ஒரு நொடியில் மறைத்துக்கொண்டு வேலையில் கவனமாக இருப்பதுபோல் பாவனை செய்தான் பிரபு .

" பிரபு ..... குட்ஆப்டர்னூன் ..." என்று கூறிக்கொண்டே தன் இருக்கை மேசையில் பைகளை  வைத்தபடி பிரபுவைக் கவனித்தாள் நிலா .

தான் விஷ் பண்ணினால் மறுநொடியில் விஷ் பண்ணும் பிரபு , அன்று சைலண்டாக இருப்பதைப் பார்த்ததும் “ என்னபிரபு இன்று கோவமாக இருக்கிறாரோ .... நாம போன் பண்ணி பர்மிசன் கேட்காததால இருக்குமோ ....?' என்றெண்ணியவளாய்

பிரபுவின் எதிரில் இருந்த சேரில் அமர்ந்தாள் . " ஸாரி பிரபு ...! போன் பண்ணி உங்ககிட்ட பர்மிசன் கேட்க முடியல .... ஐயாம் வெரி ஸாரி ....!" என்று கூற ,

அவளை ஏறெடுத்துப் பார்த்த பிரபு " ஏன் ... அவ்வளவு பிசியா நீங்க ...." என்று வெடுக்கென்று கேட்டான் .

" அப்படி இல்ல ... போன்ல சார்ஜ் இல்ல .... கரெண்டு வேற காலை ஆறு மணிக்கே போயிடுத்து . நா வர்ர வரைக்கும் வரவே இல்ல ...
உங்ககிட்ட சொல்லாம பர்மிசன் எடுத்தது தப்புதான் . வீட்ல என் தாத்தாவுக்கு திதி . ஆனா நா ஆபிஸ் கிளம்பிட்டேன் . அம்மாதான் சண்டை போட்டாங்க ... கூடமாட நா ஒத்தாசையா இல்லன்னு ... சரி ... மதியம் வந்துடலாம்னுதான் ...." என்று இழுத்தவளை

" என்னடா .... இங்க ஒருத்தன் நமக்காக ஏங்கி கிடப்பானே ..... லீவுன்னா  பர்சனலா பேசக்கூடாதுன்னு கண்டிசன் . சரி வெளியில சந்திக்கலாம் என்றால் அதுக்கும் 144. இன்னிக்கி நா மூட் அவுட்ல இருந்தேன் .

சரி உன்னப் பாத்தா குறையும்னு நினைச்சேன் . ஆனா நீ ஆடி அசைஞ்சு வர்ர ... உன்னோட முக தரிசனத்தைப் பார்க்க
காத்துக்கிடக்கிற நிலமை எனக்கு ..." பிரபுவின் ஆதங்க வெளிப்பாட்டைபா பார்த்து ,

வெட்கமடைந்த நிலா " பிரபு ....! நீங்க இப்பிடியெல்லாம் பேசுவீங்களா .... ஒண்ணுமே பேசத்தெரியாத ஸாரி .... காதல் வசனம் பேசத் தெரியாதவர்னு
நினைச்சிருந்தேன் .... ஆனா பிச்சி உதறீங்க ...." என்று கூறி சிரிக்கவும் ,

அவள் சிரிப்பில் கலந்து கொண்ட பிரபு " ஆமா .... என்ன இன்னிக்கி எனக்கும் **சாப்பாடு ..."**

" இன்னிக்கி வீட்டுல ஸ்பெஷல் சாப்பாடு . உங்கள விட்டுட்டு என்னால சாப்பிட முடியல ... அதனால நானும் ஆபிசிலேயே சாப்பிட்டுக்கிறேன்னு சொல்லிட்டு ரெண்டு பேருக்கும் சேர்த்து எடுத்து வந்தேன் .... கையை கழுவிக்கிட்டு வாங்க ... சாப்பிடலாம் ..." என்று நிலா கூறி விட்டு வாழை இலையை டேபிளில் பரப்பினாள் .

அதே நேரம் உள்ளே நுழைந்த ஜானி " என்ன இலையில சாப்பாடு ....? பாஸ் .... அம்மா ஸ்பெஷலா என்ன சமைச்சிக் கொடுத்தாங்க .... வீட்ல விசேஷமா ....?"

" வாங்க ஜானி ...! சாப்பாடு நான் கொண்டு வந்தது . நீங்களும் வாங்க .... சேர்ந்து சாப்பிடலாம் ...." நிலா அழைப்பு விடுக்க

" நைஸ் ... தேங்க்யூ ..! ஆனா நா ஒருத்தருக்கு வாக்கு கொடுத்திருக்கேன் அவங்களோட சாப்பிடுவதாக ... அதனால நீங்க ரெண்டு பேரும் சாப்பிடுங்க ...." ஜானி கூற ,

" யாருகிட்ட ஜானி ...? எக்குதப்பா வாக்கு குடுத்துடாத ..." கையை துடைத்தவாறு பிரபு வந்து உட்கார ,

" நா யாருக்கு வாக்கு குடுக்க முடியும் .. அதான் ஒரு சுருக்கு கயிரு மாட்டிக்கிட்டு இருக்கேன்ல ...."

" ஓஹோ .... டினாவை சொல்றியா ....?
அவளுக்கெல்லாம் நீ பயப்படற ஆளா ....!" பிரபு
கலாய்க்க ,

" பாஸ் .... நாட்டுக்கு ராசாவானாலும் வீட்டுக்கு கூஜா
தான் . இது எனக்கு மட்டுமா ...? நாளைக்கி
உங்களுக்கும் இந்த நிலமைதான் ...." நிலாவை
பார்த்துக் கொண்டே ஜானி சொல்ல ,

" ஜானி .... ஓவரா கலாய்க்காதீங்க .... அடுத்த நிமிடம்
எப்படி நிலமை மாறும்னு யாருக்கும் தெரியாது . நா
மட்டும் இதுல விதி விலக்கா என்ன . ...?" நிலா உணவை
பரிமாறிக்கொண்டே புன்சிரிப்புடன் கூற ,

" ஓ ..... அம்மாவுக்கு அப்பிடியெல்லாம் ஒரு எண்ணம்
இருக்கா .... அது இந்த ஆளுகிட்ட செல்லாது . நம்ம வீட்ல
எப்பவும் சிதம்பர ஆட்சிதான் ...." பிரபுவும்
வேண்டுமென்றே நிலாவை வம்புக்கு இழுக்க ,

" என்ன ... என்ன ... அப்ப நா உங்களுக்கு அடிபணிஞ்சி
நடக்கணுமா .... அதெல்லாம் முடியாது ... ஈக்குவல்
அண்டர்ஸ்டாண்டிங் இல்லன்னா உடனே
டிவோர்ஸ்தான் .... புரிஞ்சுதா ..." நிலா பிரபுவை மடக்க ,

" நிலா ... டிவோர்ஸுக்கு வேற யார்கிட்டேயும்
போயிடாதீங்க .... எங்கிட்டேயே வந்திடுங்க .... ஈசியா
நா உங்களுக்கு வாங்கி கொடுத்து பிரிச்சி
விட்டுடறேன் ...." ஜானி கலகலவென்று சிரிக்க ,

" ஏண்டா .... உனக்கு இந்த கொல வெறி ....! அடின்னு
கூப்பிடறதுக்கு பொண்டாட்டி இல்ல .... அதுக்குள்ளே
புள்ள எத்தனை .... குட்டி எத்தனைன்னு
கணக்கெடுத்தானாம் ஒரு கேனயன் .
இப்பதாண்டா .... நாங்க பிள்ளையார் சுழியே
போட்டிருக்கோம் ... எங்கள விட்டுடு ..."
கெஞ்சுவதுபோல் பிரபு ஜானியை பார்த்து கும்பிடு
போட

மூவரும் கலகலவென்று நகைத்தனர் .

அப்போது மேசையின் மேலிருந்த நிலாவின் கைப்பை
திடீரென்று தீப்பற்றி எரியத் தொடங்கியது .

# அத்தியாயம் 7

தன் கைப்பை திடீரென்று எரிவதைப் பார்த்த நிலா ' ஐயோ ...!' என்று அலற ,

பிரபுவும் ஜானியும் பதறியபடி வாட்டர்கேனுடன் அருகே ஓடினர் . ஜானி நீரை எரிகின்ற கைப்பைமேல் ஊற்ற நிலாவும் இன்னும் நீரை எடுத்து வந்து ஊற்ற நெருப்பு அணைந்து புகைய ஆரம்பித்தது .

நிலா அப்பையை எடுக்க சட்டென்று பிரபு தட்டிவிட்டு , " உனக்கென்ன அவசரம் . நெருப்பில் இளகி இருக்கும் . தொட்டால் கையில் ஒட்டி கை சதையே வெந்துவிடும் .? கொஞ்சநேரம் இரு . ஆறட்டும் ...." என்று சொல்ல

" இல்ல ... அதுல ஏடிஎம் கார்டு பான் கார்டு ஐடி பாஸ்புக் எல்லாமே இருக்கு .... எரிஞ்சுடுச்சான்னு பாக்கணும்
கேஷ் வேற இருக்கு ..."

" சரி .... நானே எடுக்கிறேன் ... ஒன்னும் ஆகியிருக்காது . கவலப்படாதே ....!" என்று
கூறிவிட்டு கர்சிப்பை வைத்து பேக்கின் ஜிப்பைத் திறந்து அதில் இருக்கும் பொருட்களை கீழே கொட்டினான் பிரபு .

" நல்லவேளை .... எதுவும் பாழாகல ... உடனே பாத்துட்டு அணைச்சிட்டோம்ல ... எல்லாம் சரியா இருக்கா பாரு நிலா ...." என்று ஜானி கூற

நிலா ஒவ்வொன்றாக தனியே எடுத்து வைத்தாள் .

கன்னத்தில் கை வைத்தபடி உட்கார்ந்திருந்த நிலாவைப்பார்த்து
" என்ன .... பயந்துட்டியா ...." பிரபு கேட்க ,

" இல்ல .... இது எப்படி நடந்துருக்கும் .... எனக்கு குழப்பமா இருக்கு ...." நிலா நடுக்கம் குறையாதவளாக கேட்க ,

தீப்பெட்டி கற்பூரம் மாதிரி எளிதில் தீப்பிடிக்கிற பொருள் ஏதும் கொண்டுவந்தியா ...." ஜானி கேட்க

" அப்பிடியெல்லாம் எதுவும் எடுத்து வரல ...."

" ஜானி அந்த பேக்கை எடு ...." பிரபு கூற

ஜானி எடுத்துத்தர அதை வாங்கிய பிரபு அப்பிடியும் இப்பிடியும் திருப்பி திருப்பி பார்த்தான் . பின்பு அதை மூக்கினருகே எடுத்து மோர்ந்துப் பார்த்தான் ....

" என்ன பாஸ் .... கெரசின் வாடை வருதான்னு பாக்கிறீங்களா ...." ஜானி கேட்க ,

" இல்லை .... இதப்பாரு ...." என்று பேக்கை நீட்டினான் .

ஜானி அதை வாங்கிப் பார்க்க அதன் மேல் வெண்மை படலம் ஒன்று படிந்திருப்பதைப் பார்த்து

" பாஸ் ... இது பாஸ்பரஸ் போலத் தெரியுது ..."

" ஆமாம் .... பாஸ்பரஸ் பொடியை தூவி இருக்காங்க .... நிலா பேக் எப்பவும் உங்கிட்டத்தானே இருக்கும் ...."

" ஆமாம் பிரபு ..."

" வீட்டுக்கு இன்னிக்கி தெரியாதவங்க யாராவது வந்தாங்களா ....?

" இல்ல .... எங்க ரிலேசன்ஸ் மட்டுந்தான் வந்தாங்க ....."

' இப்ப வரும்போது வண்டிய எங்கியாவது நிறுத்தினியா ....?"

" ம் ... ம் ... இல்லியே .... எங்கியும் நிறுத்தலயே ..." திடீரென்று ஞாபகம் வந்தவளாய்

" ஆமாம் .... நா வரும்போது ஒரு சைக்கிள்காரன் குறுக்கே வந்துட்டான் .... சடன் பிரேக் போட்டு நின்னேன் ... ஆனா இறங்கலியே ...."

" ம் .. ம் ... அப்பத்தான் யாரோ இதை போட்டிருக்காங்க ...." பிரபு கூறவும்

ஜானி " எனக்கு நல்லா புரிஞ்சுடுத்து ... அந்த சைக்கிள் மோதல் கூட திட்டத்தின் ஒரு பகுதியாத்தான் இருக்கும் ....'

" சரியா சொன்ன ஜானி ....!

நிலா நீ நிக்கும்போது பின்னால யாராவது பக்கத்தில் வந்த மாதிரி தெரிஞ்சுதா ....?"

" எனக்கு அப்பிடி எதுவும் தெரியலையே ..."

" நீதான் சைக்கிள்காரன் மேல கான்சன்ட்ரேட் பண்ணிக்கிட்டு இருந்திருப்பியே ... அப்புறம் எப்பிடி பின்னால நடக்கறது தெரியும் .."

' அப்பிடி பார்த்தா பேக முன்னாலதானே தொங்க விட்டிருந்தேன் .... எனக்கு தெரியாம எப்படி பண்ண முடியும் .... ஜானி ....'

அப்போது பிரபு குறுக்கிட்டு " இல்ல ... இது பக்கா பிளான் . அந்த சைக்கிள்காரன் மோதும்போது நீ தடுமாறி இருப்பே ... அப்ப அவன் விழாம இருக்க உன் வண்டியை பிடிச்சிருப்பான் ... சரியா ...?"

" யெஸ் ... அவன் பாலன்ஸ் பண்ண முடியாம என் வண்டியை புடிச்சான் . அப்ப வண்டியும் லேசா சாய நா கால  கீழே ஊணிட்டேன் ...."

" அப்ப நா கெஸ் பண்ணிணது கரெக்ட் ...." பிரபுவின் பேச்சைக் கேட்ட நிலா

' அப்ப என்னை யாரோ பாலோ பண்றாங்களா ...?" பயத்துடன் கேட்க ,

" மே பி .... ஆனா இது உனக்கான டாஸ்க் இல்ல ... எங்கள பிலேம் பண்ண யாரோ செய்யிற பிளே ...." பிரபு அவளை ஆறுதல் படுத்த ,

" பாஸ் .... ஏதோ ஒரு கூட்டம் நம்மள ஸ்மெல் பண்ணிக்கிட்டே இருக்கு . ஆனா மாட்டாமலா போகும் . எங்ககிட்ட விளையாட்டா ...?"
ஜானி காலரை தூக்கி விட்டு கெத்தாக பேச

" நாம பாக்காதா ... விடு ஜானி ... சீக்கிரம் அதுக்கும் விடை கிடைச்சிடும் . சரி நீ போய் சாப்பிட்டு வா . டினா லேட்டுன்னு கோவிச்சிக்கப் போறா ..."
" சரி .. நாளைக்கி அமிர்தம் கேஸ் பைனல் இல்ல ... கிளையண்ட்ஸிக்கு சொல்லிட்டியா ....?"

" சொல்லியாச்சு பாஸ் .... கரெக்ட் டைம்முக்கு வந்துடுவாங்க .....
பாஸ் மறந்தே போச்சு .... அன்னிக்கி ஒரு கொட்டேசன் வந்துதே .... அதுக்கு அர்த்தம் கண்டுபிடிச்சிட்டீங்களா ....?"

" ஆமாம் பிரபு .... என்ன அர்த்தம் அதுக்கு .....?" நிலாவும் ஆர்வத்துடன் கேட்க ,

" நானும் உங்களப்போலத்தான் .... எனக்கு மட்டும் எப்படித் தெரியும் .... எனக்கு தெரிஞ்ச சிவனடியார்கிட்ட குடுத்திருக்கேன் .... சொல்றேன்னு சொல்லியிருக்கார் .... பார்க்கலாம் ..."

அப்புறம் பாஸ் .... உங்க மேட்டரை அம்மாகிட்ட சொல்லிட்டீங்களா .... கிரீன் சிக்னல் கிடைச்சிடுச்சா ..." ஆர்வமுடன் ஜானி கேட்க ,

" இல்ல .... அதுக்குள்ள என்ன அவசரம் . மெல்ல சொல்லிக்கலாம் ...."

" என்ன நிலா .... நீங்க எப்படி ....'

" என்ன ஜானி .... எங்கப்பாவைப்பத்தி தெரியாதா உங்களுக்கு ..... ரொம்ப டென்சன் பார்ட்டி . அதுவுமில்லாம பயங்கர ஆர்தடாக்ஸ் . அம்மா கூட பரவாயில்லை . எப்பிடியாச்சும் சமாளிக்கலாம் . எப்பிடி சொல்றதுன்னே தெரியலை .... கொஞ்ச நாள் போகட்டும் .... தானா தெரிஞ்சா அதுக்குப்பிறகு பார்த்துக்கலாம் ...."

" அதுவும் சரிதான் . ரெண்டு பேரும் கொஞ்சநாள் ப்ரியா இருங்க . அப்புறமா பார்த்துக்கலாம் .."

" அனுபவம் பேசுது .... அப்பிடித்தானே ஜானி ...!"

" சரியா சொன்னீங்க நிலா ....! காதலிக்கும்போது இருக்கும் அன்பு இப்ப எங்கன்னு தேட வேண்டியதா இருக்கு ...."

" அதெல்லாம் நாம பாக்குற கண்ணோட்டத்துலதான் இருக்கு . நீங்க டினாவை காதலோடு கவனிச்சா அவளும் பதில் ரியாக்ட் பண்ணுவா ..... நீங்கதான் வேல வேலன்னு அவளை கண்டுக்கிறதேயில்லை .."

" சரியாப்போச்சு .... உங்ககிட்ட கம்ப்ளெயிண்ட் வந்துடுச்சா .... அதெல்லாம் சரியாயிடும் .... நாங்க ரெண்டு பேரும் சின்னப்புள்ளங்க மாதிரி . அப்பப்ப இப்பிடித்தான் சண்டை போட்டுக்குவோம் ... த்ரில் இருந்தாதான் லைப் நல்லா இருக்கும் .... நா சொல்றது சரிதானே பாஸ் ....!"

" எனக்கு எப்படி தெரியும் ... நா இன்னும் பேச்சுலர் .... பாக்கலாம் ... எங்களுக்கு கெமிஸ்ட்ரி எப்பிடி வொர்க்அவுட் ஆகுதுன்னு ...."

" சரி பாஸ் ....! நீங்க சொன்ன வேலையை முடிச்சிட்டு போன் பண்றேன் ...." என்று கூறிவிட்டு ஜானி கிளம்ப

நிலாவும் பிரபுவும் உணவருந்த தொடங்கினர் .

இரவு ஒன்பது மணியளவில் ஜானி போன் பண்ண என்னவென்று பிரபு கேட்க ,

நிலாவை இடித்த இடத்து சிக்னல்ல இருக்கும் புட்டேஜை தான் வாங்கி விட்டதாகவும் இப்போது கொண்டு வருவதாகவும் கூறினான் .

ஜானி வந்தவுடன் பிரபு தன்னுடைய ரூமுக்கு அழைத்துச் சென்றான் .

லேப்டாப்பை எடுத்து போட்டு பார்க்க நிலா வண்டியில் வருவதும் சைக்கிள் ஒன்று வேகமாக குறுக்கே வர நிலா தடுமாறி விழுவதும் அப்போது சைக்கிள் மனிதன் தன்னுடைய கையில் இருந்த ஏதோ ஒன்றை தடுமாறி வண்டியை பிடிப்பது போல் முன்னால் இருந்த பேக்கின் மீது தடவுவதும்
பின்பு எழுந்து செல்வதும் நிலாவும் மீண்டும் வண்டியை கிளப்புவதும் இருந்தது .

அந்த மனிதனின் முகத்தை ஜூம் பண்ணி  பார்க்க இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர் .

" பாஸ் .... இவன் சேனா பார்த்திபனோட கையாள் .... உங்களுக்கு தெரியுதா ....?"
என்று ஜானி சொல்ல

**"** எனக்கும் பார்த்த மாதிரிதான் இருக்கு ..... ஸ்யூரா உனக்கு தெரியுமா .... அவன்தான் இவன்னு ....."

" டெபனட்லி .... ஏன்னா எங்கிட்ட இவன்தான் ரொம்ப வேகமா பேசினான் . "

" சரி .... நாளை நாம சற்குணத்த பாத்துட்டு நெக்ஸ்ட் தயாவை பாத்துட்டு வரலாம் ...."

" ஓ கே .... அப்ப இயர்லி மார்னிங் சிக்ஸ் ஓ கிளாக் வந்துடறேன் . நீங்க ரெடியா இருங்க ...."

காலை ஒன்பது மணியளவில் சேத்துப்பட்டு பொன்றாயன் மங்கலம் அடைந்தனர் .

சற்குணம் வர சிறிது தாமதமானது . வந்தவுடன் இருவருக்கும் வணக்கம் கூறிவிட்டு தன் இருக்கையில் அமர்ந்தார் .

" பிரபு ... . அந்த பங்களா கொஞ்சம் கிரிடிகலான பிளேஸ் மாதிரிதான் இருக்கு .
நாங்க சர்ச் பண்ணும்போது யாருமே அங்க இல்லை .
ஆனா நடமாட்டம் இருக்கிற மாதிரி
எனக்கு தோணுது .

நாங்க அங்க வரப்போறத ஸமெல் பண்ணி இருக்கிறாங்க ... மே பி அங்க ஏதோ இல்லீகல் ப்ராசஸ் நடக்குது . வேர் தே ஆர் வுட் கோயிங் அவுட்சைட் ."

" எக்ஸாட்லி ...! தப்ப பண்றவங்க என்னிக்குமே ஜெயிச்சிக்கிட்டே இருக்கமுடியாது . பலநாள் திருடன் ஒருநாள் அகப்பட்டுத்தானே தீரணும் ...." பிரபு சற்குணத்திற்கு பதிலளிக்க

" இந்த சஸ்பெக்ட் கேசை லாக்கப்புலருந்து கூட்டிக்கிட்டு வாங்க ...." சற்குணம் ஆர்டர் பண்ண

கனி அழைத்து வந்த ஆளைப் பார்த்ததும் இருவரும் திடுக்கிட்டு எழுந்தனர் .

# அத்தியாயம் 8

லாக்கப்பிலிருந்து அழைத்து வரப்பட்ட அந்த மனிதனைப் பார்த்ததும் பிரபுவும் ஜானியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர் .

பிரபு ஜானியிடம் கண்களால் பேச , புரிந்தது என்பதற்கு அடையாளமாய் தலையை ஆட்டினான் ஜானி .

" பிரபு ...! நீங்க இறந்தவனோட போட்டோவைக் காட்டினீங்களே ... அவன்தானே இவன் ...?" சற்குணம் இவர்களைப் பார்த்துக் கேட்க ,

" ஐயயோ ... என்ன சொன்னீங்க ....! நா இறந்து போயிட்டேனா ... இப்பிடி பட்ட பகல்ல குத்துக் கல்லாட்டம் உங்க முன்னால நிக்கும்போதே இப்பிடி சொல்றீங்களே .... இது நியாயமா ..?" லாக்கப்பிலிருந்து வெளியே வந்தவன் அலறினான் .

" ஏய் .. என்னசத்தம் அதிகமா வருது . இது போலீஸ் ஸ்டேசன் தெரியுமுல்ல . நீ உயிரோடு இல்லாம ஆவியை புடிச்சிட்டு வந்தோம்னா சொன்னோம் . வாயை மூடிக்கிட்டு நில்லு . வாயத்துறந்தே கையக் கால முறிச்சிடுவேன் ." சற்குணம் அதட்டலில் அவன் அமைதியாக கையைக் கட்டிக் கொண்டு நின்றான் .

" சற்குணம் .... இந்த ஆளை எங்கே புடிச்சீங்க ...?" பிரபு கேட்க ,

" நேத்து அந்த பங்களா இருக்குற காட்டுப் பக்கம் சர்ச் பண்ணினோம் . இவன் அந்த பங்களா பக்கமா சுத்திக்கிட்டு இருந்தான் .
டவுட் வந்ததாலே அவனை கொண்டு வந்தோம் . இப்ப சொல்லுங்க ... செத்தவன் எப்படி உயிரோடு வந்தான் ...?"

" கண்டிப்பா இந்த ஆள்தான் . ஏன்னா ... நாங்க இவரை நிறுத்திதான் வழி கேட்டோம் . கொஞ்ச நேரத்துல பின்னாடி பொணமா கிடக்கிறான் . இப்ப இங்க இருக்கிறான் . அதுதான் எனக்குப் புரியவில்லை ."

" பாஸ் ....! ஆனா அந்த ஆளுக்கு ஒரு கால் கட்டைக்கால் மாதிரி இருந்துதே ..."

" ஆமாம் ... நா அத மறந்தே போனேன் . சற்குணம் அந்த அப்ஸ்கான்டட் பாடிக்கு கால் ஒண்ணு கட்டைக்கால் ..."

" ஐயா .... நா உங்ககிட்ட ஒண்ணு சொல்லலாமா ...?" சற்குணத்தைப் பார்த்து அம்மனிதன் பணிவாக கேட்க

" என்ன .... நான் அவனில்லை என்று சொல்லப் போறியா ... சொல்லு ..."

" ஆமாங்கய்யா .... கண்டிப்பா அது நானில்லை . ஏன்னா .... என்தம்பிக்குத்தான் கட்டைக்கால் . நாங்க இரட்டைப்பிறவிங்க .
என்னைப்போலவே என் தம்பியும் இருப்பான் . என் பெயர் ராமன் . தம்பி பேரு லட்சுமணன் .
ஆனா ... ஒரு ஆக்ஸிடென்டுல அவனுக்கு ஒரு கால் போயிடுச்சி . அதுலேருந்து அவனுக்கு கட்டைக்கால்தான்தான் .
ரெண்டு வருசத்துக்கு முந்தி
காணாம போயிட்டாங்க . நாங்களும் எங்கெல்லாமோ தேடினோம் . ஆனா கிடைக்கவேயில்லீங்க ... இப்ப நீங்க சொல்றவன் அவனாதான் இருக்கணும் .
ஐயோ தம்பி ...! உன்னை நான் இப்பிடியா பாக்கணும் ....!" என்று அழ ஆரம்பிக்க

" ஏய் ... வாய மூடு . இல்லன்னா ஒரே மிதி . தெரியுமில்ல போலீஸ்காரன் மிதி எப்பிடி இருக்கும்னு ..."

அப்போது ஜானி ஒரு துண்டு பேப்பரை சற்குணம் கையில் திணிக்க ,

கேள்விக்குறியோடு அவனைப் பார்த்து விட்டு அந்த பேப்பரை படித்தார் சற்குணம் .

அதில் ' அவனை விடுவித்து விடுங்கள் . மற்றதை பிறகு பேசிக் கொள்ளலாம் ' என்று இருந்தது .

சற்குணம் பிரபுவைப் பார்க்க , பிரபுவும் தலையாட்ட ,

இன்னும் அழுது கொண்டிருந்த அவனைப் பார்த்து " ஒகே ...! ஏய் இங்கப்பாரு . முதல்ல
அழுகையை நிறுத்து . உன் பேர் ஊரு எல்லாத்தையும்

எழுதி கையெழுத்துப் போட்டுட்டு போ .
எப்ப வேணுண்ணாலும் கூப்பிடுவோம் . புரியுதா ...
அப்புறம் அந்த பங்களா பக்கம் மறுபடியும் உன்ன
பார்த்தேன் அவ்வளவுதான் ..." சற்குணம் கூற ,

" சரிங்கய்யா ...! நீங்க சொல்றபடியே நடந்துக்கிறேன் .
ஒரு விண்ணப்பம் ... சீக்கிரமா என் தம்பி பாடியை
கண்டுபிடிச்சி குடுத்துடுங்க . அவனுக்கு பொண்டாட்டி
புள்ளக்குட்டி யாரும் கிடையாது நான்தான் அவனுக்கு
எல்லாம் மத்த காரியம் பாக்கணும் ..."

" சரி .. போ ... பாடி கிடச்சா இன்பார்ம் பண்றோம் ...
கனி இந்த ஆளுக்கிட்ட கையெழுத்து வாங்கிகிட்டு
அனுப்புங்க ..."

அவன் சென்றதும் இருவரையும் பார்த்து " என்ன
விசயம் ... ஏன் அவன அனுப்பச் சொன்னீங்க ...?'
சற்குணம் கேட்க ,

" யாரையாவது அனுப்பி அவனை பாலோ பண்ணச்
சொல்லுங்க ... அவனுடைய நடவடிக்கையை அப்டேட்
பண்ணச் சொல்லுங்க ...." பிரபு கூறியதும்

' அப்படியா சரி .... வெற்றி ...! இங்க வாங்க . இப்ப
போனவனை பாலோ பண்ணுங்க . அவனுடைய
நடவடிக்கையில்
ஏதாச்சும் சந்தேகம் இருந்தால் உடனே இன்பார்ம்
பண்ணுங்க " என்று சொல்லியதும் ,

" ஓகே சார் ...!" என்று கூறிவிட்டு வெற்றி என்கிற
கான்ஸ்டபிள் வெளியே செல்ல ,

" இப்ப சொல்லுங்க ... என்ன விசயம் ...?"

" நாங்க இப்ப சொன்னேமே செத்தவனுக்கு
கட்டக்காலுன்னு . .. அது பொய் . ஏன்னா ... அது
மனுசனே இல்லை . இப்ப போனானே அவன மாதிரியே
உள்ள மெழுகு பொம்மை ."

பிரபு கூறியதைக் கேட்டதும் அதிர்ச்சியடைந்த
சற்குணம்
" என்ன ...!" என்று நாற்காலியை விட்டு எழுந்து விட்டார் .

மீண்டும் " என்ன சொன்னீங்க .... மெழுகு பொம்மையா ... அன்பிலீவுபுள் ! ரொம்ப குழப்புதே உங்க பதில் ...." படபடப்புடன் பேச ,

" ஆமாம் சற்குணம் ...! நாங்க கூட அன்னிக்கி அப்படித்தான் குழம்பி போனோம் . அத அன்னிக்கே உங்ககிட்ட சொல்லியிருக்கலாம் . ஆனா கண்டிப்பா இந்த ஆளு வெளியே வருவான்னு நம்பினோம் . நீங்க கண்டிப்பா அவனை புடிப்பீங்கன்னும் தெரியும் . அவனை வெச்சித்தான் இதுக்கெல்லாம் விடை கண்டுபிடிக்கணும்னு நினைச்சோம் . சோ ஐஅம் சாரி ..! உங்ககிட்ட மறைச்சதுக்கு ..." பிரபு கூறியதைக் கேட்ட சற்குணம்

**" இட்ஸ்** ஒகே ...! அப்ப இதுல பெரிய பேக்கிரவுண்ட் இருக்குன்னு சொல்றீங்க ...?"

" யெஸ் ... நாங்க அந்த பங்களாவை பாக்ககூடாதுன்னு யாரோ நினைக்கிறாங்க ..."

" கண்டிப்பா அதுதான் . பை த பை நீங்க ரெணாடு பேரும் கேர்புல்லா இருங்க ... நா இதை டீல் பண்ணீக்கிறேன் ..."

" நா அந்த பங்களாவை பாக்கணுமே .... எப்ப பாக்கலாம் ...?"

" கொஞ்ச நாள் போகட்டும் . இந்த கேசு எப்பிடி எப்படி முடியுதுன்னு பார்க்கலாம் ... ஏன்னா ... நீங்க சொன்னமாதிரி இதுல ஏதோ ஒரு கிரைம் இருக்கு . அதனால பல பிரச்சினைகள் ஏற்படலாம் ... அதனால சொல்றேன் "

" ஆமாம் . நீங்க சொல்றதும் சரிதான் . சரி ... அப்ப நாங்க கிளம்புறோம் ... கோர்ட்டுக்கு போகணும் .." இருவரும் சற்குணத்திடம் விடை பெற்று சென்றனர் .

பிரபுவும் ஜானியும் தங்கள் ஏரியா காவல் நிலையத்தில் அமர்ந்திருந்தனர் .

சிறிது நேரத்தில் எஸ் . பி . சிரீதரன் உள்ளே நுழைய பிரபுவை கண்டதும் " நண்பா ... எப்படா வந்தே ..? போன் பண்ணியிருந்தா சீக்கிரம் வந்துருப்பேனே ..."

என்று கூறிக்கொண்டே
கட்டிப் பிடித்தார் எஸ் . பி .

" ஜஸ்ட் ஆப் அன் அவர் தான் ஆச்சு . அபிசியலா உன்னைப் பாக்கணும் . அதான் இங்கே வந்தோம் ." பிரபு கூற ,

அப்பொழுதுதான் ஜானியைக் கவனித்தவர் " ஹாய் ஜானி ...! ஹௌ ஆர் யூ அண்ட் டினா ..?" என்று கேட்டபடி கை குலுக்க

" ஒகே ... வீ ஆர் பைன் . தென் ஹௌ ஆர் யூ .... அண்ட் யுவர் வொர்க்ஸ் ...?" ஜானியும் கை குலுக்கியபடி கூற ,

" பைன் ...!, ஆல்வேஸ் அஸ் யூஸ்வல் .
என்ன பிரபு ... அபிசியலா இருந்தாலும் நீ போன் பண்ணி இருந்தா வீட்டுக்கே வந்திருப்பேனே ... எனி திங் ஸ்பெசல் ...?'

" யெஸ் ... " என்று கூறிய பிரபு நிலாவின் பேக் எரிந்த சம்பவமும் அதற்கு தாங்கள் எடுத்த நடவடிக்கைகளையும் கூறி விட்டு புட்டேஜ் கேசட்டை சீரியிடம் கொடுக்க

அதை வாங்கி லேப்டாப்பில் போட்டு பார்த்தவர் ' பிரபு ... அந்த சேனா உள்ளே இருந்தும் அடங்க மாட்டேங்குறான் . இவன் சேனாவோட ஆளுதானே .... அவனை புடிச்சி மிதிமிதின்னு மிதிக்கிறதுல எல்லா உண்மையையும் கக்கப் போறான் .
*அதுக்கப்புறந்தான்* இருக்கு அந்த லேனாவுக்கு .
சரி நிலா நல்லாயிருக்காங்க இல்ல ..."

" அவங்கதான் ரொம்ப பயந்துட்டாங்க ... அப்புறம் சமாதானப்படுத்தி ஆறுதல் சொன்னதாலே அமைதியானங்க ..." ஜானி பதில் கூறவும்

" பிரபல லீடிங் கிரிமினல் லாயர் வொய்பா ஆகப்போறவங்க இதுக்கெல்லாம் பயந்தா சரிப்படுமா ...? என்ன ஜானி நா சொல்றது ..."

' எக்ஸாட்லி ..! ஆமா இந்த விசயம் உங்க காதுக்கும் வந்தாச்சா ...?'

ஜானி கேட்ட கேள்வியில் இருவரும் சிரித்து விட்டனர் .

" என்னப்பா ... இப்பிடி கேக்குறே ... நாங்க ரெண்டு பேரும் எல்கேஜி லேயிருந்து ஒண்ணா படிச்சி அவரவர் லைன்ல ஒண்ணா வேலைக்கி வந்தவங்க .
எங்க ரெண்டு பேருகிட்டயும் எந்த ஒளிவு மறைவும் இருக்காது  தெரியுமா ...?"
அப்புறம் ஜானி ...! உன்னோட ப்ளேபாய் லெவல் எப்பிடி இருக்கு .... ஸ்மூத்தா போகுதா ...?"

" போங்க சார் ... நீங்ககூட என் பாஸ் மாதிரியே கலாய்க்கிறீங்க ..." வெட்கத்துடன் ஜானி பேச ,

" என்ன ஜானி ... சிரீ ரொம்ப கலாய்க்கிறானா .. அவன் உன்னை மட்டுமல்ல ... என்னையும் அப்படித்தான் கலாய்ப்பான் .
" இட்ஸ் ஒகே பாஸ் ... உங்க பிரண்டு எனக்கும் பிரண்டு தான் . அப்ப அந்த விசயம் சொல்லீட்டீங்களா ...?"

" இல்லை ... இப்ப வேணாம் . பாத்துக்கலாம் ."

" என்ன பாத்துக்கலாம் ... என்ன பிரபு ..?"

" நத்திங் ... ஒரு கேசு சம்பந்தமா பேசினோம் ... சரிப்பா ... நாங்க கிளம்புறோம் ..."

" ஏய் ...! என்னப்பா ... அதுக்குள்ள கிளம்புற .
ஒன் அவர் இரு . நானும் வரேன் . அம்மாவைப் பார்த்து நாளாச்சு .."

" இல்ல சிரீ ... வேல இருக்கு . நீ உன் வேலையை முடிச்சிட்டு வா ... அப்புறம் வராம மட்டும் இருந்துடாதே .. அம்மா ரொம்ப கோவிச்சிப்பாங்க ..."

இருவரும் பேசிக்கொண்டே காரில் ஏற
காரில் சீட்டின் மேல் ஒரு கவர் இருந்தது .
அதைப் பார்த்த இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர் .

ஜானி அதை எடுக்க

" ஏய் ... அதை வெறும் கையால எடுக்காதே ... சயனைட் ஏதும் தடவி இருக்கப் போகுது ."

ஜானி அதை தனது கர்சீப்பால் எடுத்து பிரித்தான் .
அதில் ...

# அத்தியாயம் 9

ஜானி அந்தக் கவரை கர்சீப்பால் எடுத்து மெல்ல பிரித்தான் .

அதில் ,

**'உயிரோடு கலந்தவள்**
**உணர்வோடு இருக்கிறாள்**
**காயமின்றி கடிதில்**
**கனலோடு கலக்க வா....'**

படித்தவன் நெற்றியை சுருக்கியவாறு பிரபுவிடம் கொடுத்தான் . பிரபுவும் அதைப்படித்து விட்டு சிறிது நேரம் மௌனமானான் .

காரை ஓட்டிக்கொண்டே ஜானி " பாஸ் ... நாம காரை பூட்டிட்டு தானே போனோம் . காருக்குள்ளே இந்த கவர் எப்படி வந்திருக்கும் .... புரியாத புதிரா இருக்குதே ...?" என்றவனிடம் ,

" காருக்குள்ளே கடிதம் போடறது ஒண்ணும் பெரிய விஷயமல்ல . எல்லாம் டெக்னாலஜி இம்ருவ்தான் . என்னவானாலும் செய்ய முடியும் . இப்ப அதல்ல பிரச்னை . இது இரண்டாவது கடிதம் . இது என்ன சொல்ல வருதுன்னு தான் என் யோசனை ."

" நா ஒண்ணு சொல்லட்டுமா பாஸ் ...! அன்னிக்கி அந்த லேடி வந்துட்டு போனதிலிருந்துதான் இப்பிடியெல்லாம் நடக்குது . அந்த லேடிதான் உங்ககிட்ட ஏதோ மெசேஜ் சொல்லிட்டு இருக்காங்க .... தூய தமிழ்ல விடுகதை போல இருக்குது . அர்த்தம் தெரிஞ்சா ஷெல்ப் பண்ணலாம் ..."

" ம் ... ம் .. அப்படித்தான் என் மனசும் சொல்லுது . ஏதோ ஒரு விஷயம் நம்மால *செய்ய* முடியும்னு அவங்க நினைக்கிறாங்க
போல . அடுத்த வாரம் சித்தரை போயி பாத்துட்டு வரலாம் .
அப்புறம் இந்த லெட்டரைப் பத்தி நிலாவுக்கு தெரிய வேணாம் . வீணா அவ டென்சன் ஆக வேண்டாம் ..."
இந்த வாரம் மூணு கேசு ஹியரிங் வருது . நிறைய வேலை இருக்கு . முதல்ல வேலையை கவனிப்போம் . "

" பாஸ் ... எனக்கொன்னு தோணுது . நாளைக்கே நாம ஏன் அவரப் போயி பார்க்க கூடாது ....?"

" நாளைக்கு ஈவினிங் அம்மாவை செக்கப்புக்கு கூட்டிக்கிட்டு போகணும் .
இந்த வார சண்டே போயிட்டு வந்திடலாம் ...
அ ... அப்புறம் நீ ஒரு முக்கியமான வேலை ஒண்ணு செய்யனும் ...'

" என்ன பாஸ் ... நா வேணா அம்மாவை டாக்டர்கிட்ட கூட்டிக்கிட்டு போகட்டா ...?"

" வேணாம் ... அம்மாவுக்கு கோவம் வந்துடும் .
அவங்களை கவனிக்ககூட எனக்கு நேரமில்லையான்னு வருத்தப்படுவாங்க .
அத நா பாத்துக்கிறேன் .
நீ உடனே ஒரு ஜூனியரை அப்பாயிண்ட்மென்ட் பண்ண ஏற்பாடு பண்ணு ..."

" ஏன் பாஸ் ... வேற இடத்துல பிராஞ்ச் ஓப்பன் பண்ணப் போறோமா ...?"

" ஆமா ... இங்க வர்ற கேசுங்களையே கவனிக்க முடியலை ... இப்ப நடந்துக்கிட்டு இருக்கிற நிகழ்வுகளைப் பார்த்தால் நமக்கு பாதுகாப்பு அதிகப்படுத்தனும்னு தோணுது .
நாம அலுவலகத்தில் இல்லாத நேரத்தில் நிலாவுக்கு

பாதுகாப்பு அவசியம் . அதனாலத்தான் சொல்கிறேன் .... அப்புறம் ஜீனியர் ஜென்ட்ஸ்ஸா இருக்கட்டும் ...',

" அதுவும் சரிதான் . ரெண்டு லேடீஸ்னா சமாளிக்க முடியாது ...."

" சே .... நீ வேறய்யா ...! பாதுகாப்புக்குன்னு சொல்றேன் ... நீ என்னன்னா லேடி ஜுனியரைப்பத்தி சொல்றே ...? ஜென்ட்ஸ்தான் வேணும் ."

" ஒகே ... டன் ...! அடுத்தவாரத்துக்குள் இன்னொரு ஜுனியர் நம்ம ஆபிசில ."

ஞாயிறு அன்று விடாப்பிடியாக நிலாவும் இவர்களுடன் கிளம்பிவிட்டாள் .

நடுமலை அடிவாரத்தில் சித்தர் பரமனடியார் குகை ஒன்றில் அமர்ந்திருக்க
மூவரும் அவர் எதிரே அமர்ந்திருந்தனர் .

அவர் கையில் இவர்கள் கொடுத்திருந்த
இரு கடிதங்களும் இருந்தன .

மூவரையும் ஒருமுறை பார்த்த சித்தர் பேச்சைத் தொடங்குமுன்பு " சர்வம் சிவமயம் ..!" எனக் கூறிவிட்டு , நிலாவைப் பார்த்து " இவர்கள் யார் ... உனக்கு உறவா ...?" எனக் கேட்டார் .

நிலாவைப் பார்த்து " இவர் என் மனைவியாகப் போகிறவர் ... இவர் என் நண்பர் ..." என்று ஜானியை அறிமுகப் படுத்த ,

" அப்ப இவரை கொஞ்சம் வெளியில இருக்கச் சொல்லுங்க ..." என்று அவர் கூறியதும் ,

கண்களால் அவளைப் போகச் சொன்ன பிரபுவிடம் மாட்டேன் என்று தலையாட்டினாள் நிலா .

" ப்ளீஸ் ..." என்று உதட்டசைவில் பிரபு கூற சம்மதமின்றி வெளியே சென்றாள் நிலா .

" சிவார்ப்பணம் ...! தம்பி உங்களோட குழப்பம் நியாயமானதுதான் . இது ஆண்டவனின் விளையாட்டு . இதை மாற்ற யாரால் முடியும் .
இதற்கு விடை அந்த பங்களாவில்தான் இருக்கு .
உங்களின் பிரிய ஆத்மா ஒன்று
ஏதோ ஒரு தேவைக்காக உங்களைத் தேடுகிறது ..
ஆனால் உன்னை உன் நிலையிலேயே
வைத்திருக்கவும் விரும்புகிறது .
அந்த ஆத்மாவின் நிழல் உம்மைத் தொடரும் வரை
எந்த எதிரிகளாலும் உமக்கு ஆபத்து வராது ...'

" சுவாமி .... இதனால பெரிய பிரச்சினை ஏதும் வருமா ..." ஜானி கேட்க ,

" எல்லாம் அந்த பரமன் சித்தம் . நடப்பவை நல்லதாகவே நடக்கட்டும் ..."

" இப்ப நான் என்ன செய்யனும் சுவாமி ..."

" நீங்க உங்க வேலையை பாருங்க ... அதது தானா நடக்கும் .... நீங்க போயிட்டு வாங்க ."

வெளியே வந்தவர்களிடம் நிலா விவரம் கேட்க ,

" பயப்படும்படி ஒன்றுமில்லை . இது வேண்டாதவர்களின் செயல் என்று கூறினார் ... " என்று கூற

தான் நம்பவில்லை என்பதற்கு அடையாளமாக உதட்டை பிதுக்கினாள் .

அந்த வாரம் படு பிசியாக நகர்ந்தது அவர்களுக்கு . மூணு கேசும் முடிவுக்கு வரும் நிலையில் இருந்தது .

புதிய ஜூனியர் **வந்தியத்தேவன்** படு சுறுசுறுப்பாக வேலைப் பார்த்துக் கொண்டிருந்தான் .

இண்டர்வியூவில் பலர் கலந்து கொள்ள அதில் படு சுறுசுறுப்பாக இருந்த இளைஞனை இவர்கள் மூவருக்கும் *பிடித்துப்போக* ,

அதற்கேற்றாற்போல் அவன் பெயர் வந்தியத்தேவன் எனக் கூற ,
பிரபுவுக்கு மிகவும் பிடித்துப்போனது அவனை .
உடனே அவனையே அப்பாயிண்ட்மென்ட் பண்ணிவிட்டார்கள் .

இவர்கள் அலுவலகத்தில் இல்லாத நேரத்தில் தேவையின்றி யாரையும் உள்ளே அனுமதிப்பதில்லை .
வெளியே இருக்கும் சிட்டவுட்டில் சேரை போட்டு உட்கார்ந்திடுவான் .

வெள்ளியன்று மூன்று கேசுமே இவர்கள் பக்கம் வெற்றியைக் கொடுக்க ,
அந்த ஞாயிறு அதை கொண்டாட நால்வரும் வெளியே சென்றார்கள் .

கடற்கரையோரம் மிகவும் அமைதியான இடத்தில் உள்ள உணவகம் ஒன்றில் அமர்ந்திருந்தார்கள் .

நிலாவும் பிரபுவும் ஒருவரையொருவர் கைகோர்த்தபடி அருகருகே அமர்ந்திருக்க
மற்ற இருவரும் எதிரே அமர்ந்திருந்தனர் .

ஜானி இவர்கள் இருவரையும் கலாய்த்துக் கொண்டிருக்க , நிலா வெட்கப்பட பிரபு அதை ரசித்துக் கொண்டிருந்தான் .

அவர்கள் அமர்ந்திருக்கும் நேரெதிரே மூலை ஓரமாக ஒரு உருவம் இவர்களையே பார்த்துக் கொண்டிருந்தது .

இவர்களின் சுவாரசியமான பேச்சில் எதிரே இருந்த உருவம் தன் பாக்கெட்டிலிருந்து
துப்பாக்கியை எடுத்தது .

திடீரென்று பிரபுவின் தோளே யாரோ தொடுவது போலத் தோன்றவே திரும்பி பார்த்த பிரபு யாரையும் தன் அருகே காணததால் மீண்டும் அவர்களின் பேச்சில் கலந்து கொள்ள ,

அந்த உருவம் மெல்ல துப்பாக்கியின் டிரிக்கரை பிரபுவை நோக்கி நீட்டியது .

அந்த நேரம் பார்த்து பிரபுவின் நண்பரொருவர் வந்து பேச ,

கர்சீப்பால் தன் கையிலிருந்த துப்பாக்கியை மறைத்தது அவ்வுருவம் .

அதற்குள் அவர்கள் சாப்பிட்டு முடித்து சிரித்துக் கொண்டே வெளியேறினர் .

அவர்களைப் பின் தொடர்ந்த உருவம் சுடுவதற்கு தயாராய் துப்பாக்கியை கையில் பிடித்தபடி நடக்க ,
காரை அவர்கள் நெருங்கினர் . சரியான சமயம் இதுதான் என்று பிரபுவை நோக்கி சுட ,

திடீரென்று யாரோ பின்னால் இருந்து தள்ளுவதைப் போலிருக்கவே பிரபு தடுமாறி கீழே விழ , குண்டு காரைத் துளைத்து கீழே விழ ,

வீல் என்று அலறி பிரபுவை ஓடித் தூக்கினாள் நிலா .

சட்டென்று நடந்துவிட்ட நிகழ்வால் நிலைகுலைந்த பிரபு ஜானியைக் கண்களால் கவனிக்க ,

ஜானி பின்னால் ஓடிச்சென்று சுட்டவன் யாராயிருக்கும் என்று தேட ,
வந்தியத்தேவனும் வேறொரு பக்கம் ஓடிச்சென்று தேட ,
சத்தம் கேட்டு உணவகத்திலிருந்து பலரும் ஓடிவந்தார்கள் .

ஓரமாக பிரபு அமர்ந்திருக்க நிலா அருகில் அழுதுகொண்டிருந்தாள் .

ஜானியும் வந்தியத்தேவனும் திரும்பி வந்து பிரபுவின் அருகில் அமர்ந்து அவன் கைகளைப் பற்றிக் கொண்டார்கள் .

" கேப்டன் .... அடி ஏதும் பட்டுருக்கா ...?"
வந்தியத்தேவன் பரிவுடன் கேட்க ,

" எப்படி பாஸ் நாம கவனிக்காம விட்டோம் ...
நீங்க மட்டும் கீழே விழாம இருந்திருந்தா ... ஐயோ ....
நினைக்கவே நடுக்கமா இருக்கு .." ஜானி
கண்கலங்கியபடி கூற ,

திடீரென்று நினைவு வந்தவனாக " ஆமாம் பாஸ் .....
எப்படி கீழே விழுந்தீங்க ... கீழே கல்லு எதுவும்
இல்லியே ...."

" எனக்கும் புரியலை ஜானி ... யாரோ திடீர்னு என்னை
புடிச்சித்தள்ளன மாதிரி இருந்தது .
அது மட்டும் நடக்காம இருந்திருந்தா
என்னவாயிருக்கும் ....?"

" கண்டிப்பா இது மிராக்கிள் தான் . நம்மள பாலோ
பண்ற தெய்வம் தான் இப்ப காப்பாத்தி இருக்கு ..."
ஜானி கூறுவதைக் கேட்ட நிலா ,

" என்ன ஜானி .... யாரு நம்மள பாலோ பண்றாங்க ...
நடக்கறதல்லாம் பார்த்தா எனக்கு பயமாயிருக்கு ...."
மீண்டும் அழ ஆரம்பித்தாள் நிலா .

அதற்குள் போலீஸ் வந்துவிடவே அவர்களின் பேச்சு
தடைப்பட்டது .

சிரீ பிரபுவைப் பார்த்தவுடன் படபடப்புடன்
" என்ன பிரபு .... விஷயத்தைக் கேட்டவுடன்
நிலைகுலைந்து போய்விட்டேன் . ஏதோ ஒரு ஆபத்து
உன்னை தொடர்ந்துகிட்டே இருக்கு ... ராஸ்கல்ஸ் ...
கையில மட்டும் கிடைச்சான் மர்கைய்யாதான் .
யாருகிட்ட விளையாடுறான் ... பிரபு ... ஆர் யூ ஆல்ரைட்
...?" டென்சனுடன் எஸ் பி விசாரிக்க ,

" ஒண்ணும் இல்லடா ... ஐஅம் ஆல்ரைட் ... கொஞ்சம்
நெர்வஸா ஆயிட்டேன் . அவ்வளவுதான் ..."

" சரி நீங்க கிளம்புங்க . .. பர்தர் ஆக்ஸன் நா பாத்துக்கிறேன் ... ஜானி ... உங்களுக்கு துணையா கான்ஸ்டபிளை அனுப்புறேன் ...
வீட்டுக்கு போனதும் போன் பண்ணுங்க ..." என்று கூறிவிட்டு தன் பணியை செய்ய ஆரம்பித்து விட்டார் சிரீ .

" நீ ஒண்ணும் வொரீ பண்ணிக்காத சிரீ . என்னை பாதுகாக்க எனக்கு வேண்டியவங்க இருக்காங்க ... அவங்க இருக்கிறவரைக்கும் எனக்கு எந்த ஆபத்தும் வராது ...." தன்னை காப்பாற்றிய தெய்வத்தை நினைத்து பிரபு கூற ,

ஜானிக்கும் அது விளங்கியதால் பிரபுவின் கையோடு கைசேர்த்து அழுத்தினான் .

இதைக் கேட்டுக்கொண்டிருந்த உருவம் புன்சிரிப்புடன் அவர்களின் காரில் அமர்ந்து கொண்டிருந்தது .

# அத்தியாயம் 10

காரில் நால்வரும் சென்று கொண்டிருந்தனர் .

ஜானி காரை ஓட்டிக்கொண்டிருக்க வந்தியத்தேவன் முன்புறச் சீட்டில் அமர்ந்துக் கொண்டிருந்தான் .

பிரபுவும் நிலாவும் பின்புறச் சீட்டில் அருகருகே அமர்ந்திருந்தனர் . நிலா பிரபுவின் கையோடு தன் கையை பிணைத்திருந்தாள் .

தன் தலையை அவன் தோளின் மீது சாய்த்து கண்களில் நீர் வழிய தன் கர்சீப்பை எடுத்து கண்களை அடிக்கடி துடைத்துக்கொண்டிருந்தாள் .

அவள் அழுவதைக் கவனித்த
பிரபு
" நிலா ...! அதான் எனக்கு ஒன்னும் ஆகலியே ... இன்னமும் அதையே நினைச்சி அழுதுகிட்டு இருந்தா எனக்கு கஷ்டமா இருக்காதா ...? ப்ளீஸ் .... சொன்னா கேளு ..."

" நிலா ... அழாதீங்க ... பாஸிக்கு எந்த ஆபத்தும் கிட்ட நெருங்க முடியாது . அதான் நாலு பில்லர் போல நாம அவரு பக்கத்திலே இருக்கிறோமே ... டோண்ட் ஒர்ரி . இனிமே இது போல நடக்காம இருக்க நாம உறுதியா இருப்போம் ..."

" நிலா ... நீங்க அழுதுகிட்டே இருந்தா கேப்டன் கஷ்டப்படுவாறு . தயவு செய்து அமைதியா இருங்க ..." வந்தியத்தேவனும் தன் பங்குக்கு ஆறுதல் கூற ,

" சரி ... இனிமே நா அழல . நீங்க இருக்கும்போது எனக்கென்ன கவலை .
ஆனா ... பிரபு அம்மாவுக்கு தெரிஞ்சிருக்குமா ...?" கவலையுடன் நிலா கேட்க ,

" மே பி ... இருந்தாலும் அம்மா உன்ன மாதிரி கிடையாது . அழுமூஞ்சித்தனமா இருக்கமாட்டாங்க . ஷி இஸ் எ பிரேவ் லேடி ...
சொன்னாப் புரிஞ்சுப்பாங்க ....!" பிரபு கூறியதைக் கேட்ட நிலா ,

" க்கும் ... நா அழுமூஞ்சியா .... நீங்க என் இடத்துல இருந்திருந்தா .... அந்த இன்சிடண்ட் எனக்கு நடந்திருந்தா .... நீங்களும் இப்படித்தான் இருப்பீங்க ...."

" எக்ஸாட்லி ....! ஆனா இந்நேரம் அவனை துரத்தி போய் புடிச்சி நாலு சாத்து சாத்திருப்பேன் . இப்பிடி அழுதுகிட்டு இருக்க மாட்டேன் ...."

" பாஸ் .... நிலாவ ரிவால்வர் ரீட்டா ரேஞ்சுக்கு கற்பனைப் பண்ணி பாருங்க ... எப்படி இருக்கும் ...?" ஜானி சொன்னதைக் கேட்டு அனைவரும் விழுந்து விழுந்து சிரித்தனர் .

" ப்பா ... இப்பத்தான் நிலா பளிச்சினு கண்ணுக்குத் தெரியுது ...." பிரபுவின் பேச்சை ரசித்த நிலா பிரபுவின் தலையை மெல்ல கோதிவிட ,

தன்னுடைய மற்றொரு பக்கம் அனல்காற்று காதோரமாய் படவே , சட்டென்று திரும்பி பார்த்த பிரபு ,' யாருமில்லை எனத் தெரிந்தும் ஏன் பார்த்தோம் ' என நினைத்து வெட்கப்பட்டான் .

" என்ன பிரபு .... ஏன் அந்த பக்கம் பார்த்தீங்க ... யாராச்சும் பாலோ பண்ணுறாங்களா ....?" பயத்துடன் நிலா கேட்க ,

" நத்திங் .... அப்பிடியெல்லாம் ஒன்னுமில்லை . எறும்பு கடிச்சமாதிரி இருந்தது ..." பேச்சை திசை மாற்றி வேறு பேச்சை பேச ஆரம்பித்தான் .

வீட்டை நெருங்குவதற்குள் எல்லா சேனல்களிலும் லைவ்வாக இந்த நியூஸ் ....

வீட்டில் அம்மா நிலைகொள்ளாமல் தவித்துக் கொண்டிருக்க , சித்தப்பா அவரை ஆறுதல் படுத்திக் கொண்டிருந்தார் .

இவர்கள் காரின் சத்தம் கேட்டதுமே வெளியே ஓடி வந்தனர் இருவரும் .

இறங்கிய பிரபுவை ஆரத்தழுவிக் கொண்டார் .

சிறிது நேர மௌனத்திற்கு பிறகு உள்ளே இருந்து வேலைக்கார பெண்மணி சித்ரா ஆரத்தி கொண்டுவர அம்மா அதை வாங்கி பிரபுக்கு திருஷ்டி சுற்றிப் போட

ஜானி அருகில் வந்து " அம்மா ... எங்களுக்கு கிடையாதா ....?" என்று கேட்க ,

" உனக்கு இல்லாமலா ... வாப்பா " என்று கூறி அனைவரையும் சேர்த்து சுற்றிப் போட்டார் .

ஜானி நிலாவின் அருகில் வந்து அவள் காதில் கிசுகிசு குரலில் " பாத்தியா .... இப்பவே உன் மாமியார் உனக்கு ஆரத்தி எடுக்கிறார் " என்று கூற
வெட்கத்தில் முகம் சிவந்தாள் நிலா .

உள்ளே வந்து அனைவரும் அமர

" என்னப்பா நடந்தது .... நியூசைப் பாத்துட்டு நாங்க ஆடிப்போயிட்டோம் . சொல்லு ஜானி ... யார் அவன் .... எதுக்காக இந்த வேலை செய்தான் ....?" அடுக்கடுக்காக சித்தப்பா கேள்வி கேட்க ,

ஜானி நடந்தவற்றை கூறினான் .

" தாயே கற்பகாம்பா ....! நீதான் எம்புள்ளயை பத்திரமா காப்பாத்தி குடுத்திருக்கே ...." கோயில் திசைப் பார்த்து கன்னத்தில் போட்டுக் கொண்டார் பிரபுவின் தாய் .

" சரி ... இனிமே இதப்பத்தி பேச வேணாம் . அவனோட பீல்டு அப்படி .... நிறைய கிரிமினல்ஸ் அவனோட எதிரியா இருக்காங்க .... அதுல எவனோ செஞ்ச

வேலையாத்தான் இது இருக்கும் . எம்புள்ளக்கி ஆயுசு கெட்டி . எனக்குத் தெரியும் . எதுவும் ஒன்னும் பண்ண *முடியாது* . சரி .... நீங்களும் பத்திரமா வீடு போய் சேருங்க ...."

அனைவரும் விடைபெற்றுச் சென்றபின் பிரபு தன் அறைக்குச் சென்றான் .

விட்டத்தைப் பார்த்தபடி படுத்திருந்த பிரபு தன் அருகில் யாரோ இருப்பதுபோல் உணர்ந்தான் .

இது தன்னுடைய மனப்பிரமையாக இருக்கக்கூடும் என நினைத்தவன் அசதியின் காரணமாக உடனே உறங்கிப் போனான் .

**'நிர்மலேஷ்வரா....நிர்மலேஷ்வரா....!'** கூப்பிடும் குரலுக்கு ' ம் ... ம் ...' என்று பதில் வரவே ,
**நீ ஏன் என்னை விட்டுச் சென்றாய்....உனைத் தேடி தேடி அலைந்தேனே....நீ ஏன் எனைத் தேடவில்லை....மாயவன் உனைத் தொடர்கிறான்...**
**உன்னிலே உள்ளவள்**
**உணர்வோடு இருக்கிறாள்....கடமையை**
**நீ மறந்து விட்டாய்....**
**உன் கண்மணி காத்திருக்கிறேன்....நம் கடமையை நிறைவேற்றும் காலம் நெருங்குகிறது....**
**வா....உனக்கான கடமை அழைக்கிறது....வா...வா'**

வருகிறேன் .... வருகிறேன் .... முணுமுணுத்த படி புரண்டு படுத்தான் பிரபு ...

காலை வழக்கம்போல் எழுந்தவனுக்கு தலை பாரமாக இருந்தது .

அவன் வருவதைக் கவனித்த அவனுடைய தாயார் " நல்லா தூங்கினியா ... ரெண்டு தடவை உன் ரூமுக்கு வந்தேன் . புரண்டு புரண்டு படுத்திக்கிட்டே இருந்தே .... வந்து நெத்தியிலே விபூதி வெச்சிவிட்டு வந்தேன் ...."

" தெரியலையே ... நல்லா தூங்கிட்டேன் . யாராச்சும் போன் பண்ணாங்களா ....?"

" ஆமாப்பா ... சீரி போன் பண்ணான் . நீ எழுந்திட்டியான்னு கேட்டான் . மதியமா வர்ரதா *சொன்னான்* ."

" சரிம்மா ... நா குளிச்சிட்டு வரேன் ... டிபன் ரெடியா இருக்கா ...

" ம் ... ம் .. ரெடியாத்தான் இருக்கு ..."

காலை வழக்கம்போல் பிரபு அலுவலகம் வர வணக்கங்களுடன் வேலை தொடங்கியது .

மதியம் சிரீ வந்தவுடன் பிரபுவும் மற்றவர்களும் வரவேற்க

" நல்லா தூங்கினியா .... டிஸ்டர்ப் எதுவும் இல்லியே ....?" சிரீ விசாரிக்க

" எனக்கென்னப்பா ... ஒரு பிரச்னையும் இல்ல .... சரி ... என்னாச்சு மேட்டர் ....?"

" விட்டுடுவோமா .... நேத்து நைட்டே புடிச்சாச்சு ... நீ ஆறு மாசத்துக்கு முந்தி
கவுன்சிலர் தம்பி கொலை வழக்குல
வாதாடி தண்டனை வாங்கி கொடுத்தில்ல ..."

" ஆமாம் ... கவன்சிலரோட சம்பந்தி ராசாராம் . அவரா ....?"

" ஆமாம் ... அரசாங்க வக்கீலை பணம் குடுத்து வாங்கியும் , நீ உனது கிளையண்ட் கொலை செய்யப்பட்டவரோட மனைவிக்காக வாதாடி அந்த ஆளுக்கு ப்ரீ பிளான் மர்டர்னு ஆயுள் தண்டனை வாங்கிக் குடுத்தேல்ல .... அதுக்கு பழிவாங்க கவுன்சிலர் ஏவி விட்ட துருப்பு சீட்டுதான் அவன் . அவனுக்கு குடுத்த மரியாதையில எல்லாத்தையும் கக்கிட்டான் . ஆனா கவுன்சிலர் முன்ஜாமீன்

வாங்கிட்டான் . ஸ்கௌன்ட்ரல் ....! எத்தனை நாளுக்கு இந்த பாதுகாப்பு ...?

" இந்த பீல்டுல இதெல்லாம் சகஜம் தானே ... என்னா நாம எங்கிருந்தாலும் மூணாவது கண்ணோட வலம் வரணும் ..."
பிரபுவின் பேச்சுக்கு தலையாட்டிய சிரீ

" பிரபு .... சற்குணம் நேத்து நடந்த இன்சிடண்ட் பத்தி விசாரிச்சாரு . அப்புறம்
நீ போன வாரம் அங்க போயிருந்தியா ...?"

" ஆமாம் .... அவர்கிட்ட ஒரு ஷெல்ப் கேட்டிருந்தேன் ...."

" சொன்னாரு ... அங்கேயும் ஒரு கொலை கேசு போல ..."

" ஹஹஹா .... அது செம காமெடி . கொலையே நடக்காம கொலை மாதிரி ....."

" என்னப்பா .... என்ன சொல்ற ... எனக்கு புரியலையே ...?"

" அப்புறமா உனக்கு விளக்கமா சொல்றேன் ..."

" அப்படியா ... சரி ... டேக் கேர் ... பிரண்ட்ஸ் ... வீ வில் மீட் அகெய்ன் ...'

சீரி புறப்பட்டு போனவுடன் பிரபுவிடம் அந்த கவுன்சிலர் கேசைப் பத்தி தீவிரமா டிஸ்கஸ் பண்ணிக்கிட்டு இருந்தவர்கள் சட்டென்று பேச்சை நிறுத்தினார்கள் .

உள்ளே இளம்பெண் ஒருவரும் , இளைஞர் ஒருவரும் வந்ததைப் பார்த்த பிரபு ஆச்சரியமானான் .

" ஹேய் .... அஞ்சனா ....! வாட் எ சர்ப்ரைஸ் ..."
எப்ப வந்தே ... இந்தியாவுக்கு ...?"

அவள் அருகில் வந்து பிரபுவை கட்டிப்பிடிக்க அதிர்ச்சி அடைந்தாள் நிலா .

" என்னடா ... ஷாக் கொடுத்திட்டேனா ... சர்ப்ரைஸா இருக்கட்டும்னு தான் இன்பார்ம் பண்ணல .. அப்புறம் எப்படி இருக்கே ... முன்னவிட ஹாண்ட்ஸ்சம்மா இருக்கே ...' என்று கூறிக் கொண்டே அவன் வயிற்றில் லேசா ஒரு குத்து குத்தினாள் .

அதைப் பார்த்துக் கொண்டிருந்த நிலாவின் காதில் புகை வரத் தொடங்கியது .
' யாரிவள் ... சொந்தமோ ... இல்லை .. பிரண்டா ..? இந்தளவுக்கு குலோசா இருக்கா .. இருக்கட்டும் .... அவ *போன* பிறகு அவருக்கு இருக்கு ' மனதுக்குள் புகையத் தொடங்கினாள் .

ஜீன்ஸும் லூசான டி சர்ட்டும் அணிந்தவள் முடியை பாய்கட் பண்ணியிருக்க , கண்ணில் காண்டாக்ட் லென்ஸ் அணிந்திருந்தாள் .

கழுத்திலோ கையிலோ எந்த நகையுமில்லை . காதில் சிறு வளையம் கையில் வாட்ச் .

ஐந்தரைஅடி உயரமிருப்பாள் ... போல .
எடுப்பான நாசி ... நல்ல கலர் .

ஜானியும் வந்தியத்தேவனும் தங்களுக்குள் குசுகுசுவென்று பேசிக் கொள்வதைப் பார்த்தவள் " ஹாய் ... ஐ அம் அஞ்சனா ...! பிரபுவின் கஸின் சிஸ்டர் ... யூ ...?" என்று இழுக்க ,

ஜானி சட்டென்று கையை நீட்டி " ஜானி ... ஜுனியர் லாயர் ...' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான் .

" ஓ ... ஜானி நீங்கதானா ... உங்களைப்பத்தி நிறைய விசயம் எனக்குத் தெரியுமே ....!"
என்று கூறிவிட்டு அவள் சிரிக்க ,

" பாஸ் ... என்ன சொல்லி இருக்கீங்க ... என்னை டேமேஜ் ஆக்குறதுல பாஸுக்கு ரொம்ப குஷி ..." முகத்தை

உம்மென்று வைத்துக்கொண்டான் ஜானி .

" ஹேய் .... கூல் ... கூல் . நா எதுவுமே சொல்லல ... அவ போட்டு வாங்குறா .... ஜாக்கிரதை ..." பிரபு சிரித்துக் கொண்டே கூற ,

" இல்ல ஜானி .... அவன் பொய் சொல்றான் ... உங்க டினா கோவிச்சிக்கிட்டு அவங்க அம்மா வீட்டுக்குத்தானே போயிருக்காங்க ... சரியா நா சொல்றது ..."
சிரித்துக்கொண்டே அஞ்சனா கூற ,

" பாஸ் .... ஆனாலும் நீங்க ரொம்ப போங்கு ..."

" ஏய் ... வந்தவுடனே வம்பு பண்ண ஆரம்பிச்சிட்ட பாத்தியா ...?" பிரபு அவள் காதை பிடித்து திருக ,

இந்த விளையாட்டில் கலந்து கொள்ளாமல் சிஸ்டர் எனத் தெரிந்தவுடன் மனசு லேசாகி புன்சிரிப்புடன் இருந்த நிலாவின் அருகில் சென்றவள் " ஹாய் நிலா ...! யூ லுக் வெரி சார்மிங் . அதனாலத்தான் பிரபு மயங்கிட்டான் போல ..." என்று கூறவும் ,

திடுக்கிட்ட நிலா " உங்களுக்கு எப்படி இந்த விசயம் ..." என்று கேட்க ,

" நா எவ்வளவு தூரத்துல இருந்தாலும் அப்டேட் விசயம் என் காதுக்கு வந்திடும் ... ஏன்னா ... எங்களுக்குள்ளே அப்படிப்பட்ட அக்ரிமெண்ட் ...." என்ன பிரபு நா சொல்றது சரிதானே ...."

" அப்கோர்ஸ் .... இதுநாள் வரைக்கும் இதுல ஏதாவது மாற்றம் வந்திருக்கா ...?" பிரபு கேட்க ,

" பாஸ் ... அதுக்காக எங்களை இப்பிடி மாட்டிவிடுறது டூ மச் ...'

" ஹஹஹா .... ஜானி எதை செஞ்சாலும் ஹண்ட்ரண்ட் பர்சண்ட் கரெக்டா செய்யிறது என்

பழக்கம்னு உனக்குத் தெரியாதா ...?" சிரிப்புடன் அவன் கூறுவதைக் கேட்டுக்கொண்டிருந்த நிலா
பிரபுவை முறைத்தாள் .

" சரி ... சொல்லு ... திடீர் பிரவேசம் எதுக்கு ...?" பிரபு கேட்க ,

" இதோ இவன் என்னோட சென்னை ஆபிஸ் கொலீக் . என்னோட பெஸ்ட் பிரண்டு . இவனுக்கு இந்த சண்டே திருநெல்வேலியில மேரேஜ் .
நா வராட்டி தாலியே கட்ட மாட்டேனுட்டான் .
அதான் அவசரமா கிளம்பி வந்தேன் ...." என்கூறவும்

" ஹாய் ... ஐஅம் ஆதித்யன் . அஞ்சனா உங்களைப் பத்தி நிறைய சொல்லி இருக்கா .
உங்களுடைய இமேஜ் தமிழ்நாட்டுல பேமஸ் . நானும் உங்க பேன் . உங்கள பாக்கணும்னு அஞ்சனாகிட்ட கேட்டுகிட்டே இருப்பேன் .... இன்னிக்கிதான் அந்த வாய்ப்பு கிடைச்சிருக்கு ...!" நெர்வஸா ஆதித்யன் கூறுவதைக் கேட்ட பிரபு

' ஆதி ... இவ எப்பவுமே எதையும் மிகைப்படுத்திதான் சொல்வா ... அதையெல்லாம் நம்பாதீங்க ..."

" அப்பிடி இல்ல சார் ... வெளியில நீங்க எவ்வளவு பேமஸ் லாயர்னு உங்களுக்கு தெரியாம இருக்கலாம் ... எத்தனை கேர்ள்ஸ் உங்க பேரை பச்சை குத்தி வச்சி இருக்காங்க தெரியுமா ....?"

" ம் ... பாஸுக்குதான் மச்சம் அதிகம் .. அதிர்ஷ்டக்காரரர் தான் பாஸ் நீங்க ..." பெருமூச்சு விட்ட ஜானியைப் பார்த்து அனைவரும் சிரித்தனர் .

" பிரபு ... இவர் யாருனு நீ சொல்லவே யில்லையே ...?" வந்தியத்தேவனைப்பார்த்து அஞ்சனா கேட்க ,

" இவரும் என்னோட ஜூனியர்தான் . லேட்டஸ்டாதான் சேர்ந்தாரு . பேரு வந்தியத்தேவன் ..." என்று பிரபு

கூறவும்

" வாவ் ...! என்ன பேரு சொன்னீங்க ... வந்தியத்தேவனா .... என்னுடைய பேவரிட் ஸ்டோரி ஹுரோ நேம் . ஹேய் ... ஐ லைக் யுவர் நேம் ....! என்று கூறிக்கொண்டே அவன் கைகளைப்பற்றிக் குலுக்கினாள் .

கூச்சத்துடன் தன் கைகளை விடுவித்துக் கொண்டான் வந்தியத்தேவன் .

ஆதித்யன் திருமண பத்திரிகைகளை எடுத்து தனித்தனியாக எல்லோருக்கும் கொடுத்துவிட்டு
" சார் ... நீங்க எல்லோரும் என் வெட்டிங்குக்கு அவசியம் கலந்து சிறப்பிக்கணும் . நீங்க வந்தா எனக்கு ரொம்ப சந்தோசமா இருக்கும் ..." எனக்கூற ,

" சாரி ஆதி ....! இந்த வாரம் நிறைய கமிட்மென்ட்ஸ் இருக்கு . தப்பா நினைச்சிக்காதீங்க ..." பிரபு கூறியதைக்கேட்ட அஞ்சனா
" இதோ பார் பிரபு .... உங்கிட்ட நா நிறைய பேசணும் . ஆனா இப்பவே இவன் கூட நான் இவன் ஊருக்கு போறேன் .
அதனால நீ கண்டிப்பா நீ வந்துதான் ஆகணும் .
அதுவுமில்லாம நா அவனுக்கு ப்ராமிஸ் பண்ணியிருந்தேன் ... அவனோட கல்யாணத்துக்கு உன்ன அழைச்சிக்கிட்டு வர்ரதா ... என் பேரை ரிப்பேராக்கிடாதே ... நீ மட்டும் வரலேன்னா நா அப்பிடியே கிளம்பி போயிடுவேன் ... சம்மதமா ...?" அஞ்சனாவின்
கெஞ்சலில் ஆர்டரில் பிரபு வருவதாக ஒத்துக் கொண்டான் .

" வீட்டுக்குப் போயி அம்மாவை பாக்கலியா ...? அப்புறம் அவங்களுக்கு என்னால பதில் சொல்ல முடியாது ..."

" ஏய் ... பெரியம்மாவை பாக்காம வருவேனா ... அப்புறம் அவங்க தங்கச்சி என்னை காய்ச்சி

எடுத்துடுவாங்க ... டிபன் அங்கதான் சாப்பிட்டோம் . திரும்பி வரும்போது ஒருநாள் இருந்துட்டு போறேன்னு சொன்னப்புறம்தான் பர்மிசனே குடுத்தாங்க "

" பிரபு நீ மட்டும் தனியா வந்திடாதே ... இவங்களும் கண்டிப்பா வரணும் ... வந்தியத்தேவன் .... நீங்க வராம இருந்துடாதீங்க ... உங்கள நா ரொம்ப எதிர்பார்ப்பேன் ..." அவனை ஒரு மாதிரி பார்த்து சொல்வதை அனைவரும் கவனித்தனர் .

அவர்கள் இருவரும் சென்ற பின்பு வந்தியத்தேவனை கலாய்க்க ஆரம்பித்தார்கள் .

அதுவரை நடந்தவற்றை கவனித்துக் கொண்டிருந்தது ' வேண்டாம் .... அங்கே போக வேண்டாம் ... ஆபத்து ... ஆபத்து ...' எனக் கூவியது .

# அத்தியாயம் 11

திருநெல்வேலிக்கு போக வேண்டாம் என்று குரல் ஒன்று கேட்டுக் கொண்டிருந்து அவர்களுக்கு கேட்கவில்லை ....

பிரபு அன்று கோர்ட்டில் வாதாடிக் கொண்டிருக்க ,

அவனுடைய அலுவலகத்தில் அவனுக்கு ஒரு சோதனை காத்துக் கொண்டிருந்தது .

அலுவலகத்தில் வந்தியத்தேவனும் நிலாவும் தங்கள் பணிகளில் மூழ்கியிருக்க அப்போது சீனு உள்ளே வந்து

" சார் .... ஒரு விசிட்டர் பிரபு சாரை பாக்கணும்னு காத்திருக்கிறார் . அவர்மதியந்தான் அப்பாயிண்ட்மெண்ட் குடுப்பாரு .... ன்னு சொல்லியும் போகாம உங்களையாவது பாக்கணும்னு சொல்றார் ... என்ன சொல்லட்டும் ?" என்று கேட்க

" சரி ... நான் வெளிய வந்து அவரைப் பார்க்கறேன் ...." என்று கூறிவிட்டு வெளியே வந்தான் வந்தியத்தேவன் .

சுமார் அறுபது வயசிருக்கும் பெரியவர் ஒருவர் வந்தியத்தேவன் வந்ததும் எழுந்திருந்து வணக்கம் சொல்ல

பதில் வணக்கம் சொன்ன வந்தியத்தேவன் " சொல்லுங்க சார் ... என்ன விசயம் .... சொல்லுங்க ....?'

பிரபு சாரைப் பார்க்கணும்னு வந்தேன் ... மதியந்தான் பாக்கமுடியும்னு சொலறீங்க ... முக்கியமான விசயம் ... ஆனா எனக்கு டிரெயின் . அதனாலத்தான் உங்ககிட்ட சொல்றதுக்கு பர்மிசன் கேட்டேன் ..."

" சொல்லுங்க ... சார் வந்ததும் சொல்றேன் ... மனு எழுதி கொண்டு வந்திருக்கீங்களா ...?"

" இல்லை .... நேர்ல சொல்லிட்டு போகலாம்னு வந்தேன் ... ஏன் மனுவாத்தான் கொடுக்கணுமா ...?"

" பரவாயில்லை சொல்லுங்க ... நான் மனுவா எழுதித்தரேன் ... கையெழுத்துப் போட்டுக் கொடுங்க " என்று கூறிவிட்டு பேப்பரும் பேனாவும் கொண்டு வந்தான் வந்தியத்தேவன் .

அவர் கூறியதை எழுத தயாரானான் .

என் பெயர் சாருதேவன் மாயாவி . நான் வளவனூரைச் சேர்ந்தவன் . எனக்கும் பிரபு சாருக்கும் ஒரு வழக்கு இருக்கிறது . அவர் அதை மறந்து விட்டார் ... எனக்கு செய்து கொடுத்த வாக்கை அவர் காப்பாற்றவில்லை .... என் வழக்கு என்னவாயிற்று ...?" இதுதான் நான் கேட்கவிருந்த கேள்வி . அவர் வந்தவுடன் இதைக் கொடுங்க ....' என்று கூறி எழுதியதில் மாயாவி என்றும் அதன் அருகில் குத்தீட்டி ஒன்றையும் வரைந்து கொடுத்துவிட்டு விரைந்து சென்று விட்டார் அந்தப் பெரியவர் .

வந்தியத்தேவன் சற்று குழப்பத்துடனே அந்த மனுவை நிலாவிடம் கொடுக்க
அவளும் அதைப்படித்து விட்டு

' என்ன பிரதர் ... பிரபுவுக்கும் அந்த பெரியவருக்கும் வழக்கா ... புரியாத புதிர் போல இருக்கிறதே ... ?" என்று கூற

' ஆமாம் அப்படித்தான் எனக்கும் தோன்றுகிறது ... கேப்டன் வந்தாத்தான் விவரம் புரியும் ..." என்று வந்தியத்தேவனும் பதிலுரைக்க

நிலா சேரில் சாய்ந்து கண்ணை மூடி யோசனையுடன் இருந்தாள் .

இந்த நேரத்தில் பொன்ராயன் மங்கலம் காவல் நிலையத்தில் எஸ் பி சற்குணம்
தன் எதிரே குத்துக்காலிட்டு அமர்ந்திருந்த ஐவரிடம் விசாரணை நடத்திக் கொண்டிருந்தார் .

முதலில் அமர்ந்திருந்த நாம் முன்னமே சந்தித்திருந்த இராமன் என்று தன்னைக் கூறியிருந்தவனிடம் விசாரனை நடத்திக் கொண்டிருந்தார் .

" சொல்லு ... உன் பெயர் என்ன ..?"

" ஐயா .... ஏற்கனவே நா உங்ககிட்ட சொல்லி இருக்கேனே .. என் பெயர் இராமன்னு ...!"

" அது பொய்யானப் பேருன்னு எனக்குத் தெரியும் . உண்மையானப் பேரைச் சொல்லு ... இல்லாட்டி போலீஸ்காரன் கவனிப்பு எப்படி இருக்கும்னு தெரியுமில்ல ..."

" சொல்லிடறேன் ஐயா .... சாரங்கன் என்பது தான் என் பெயர் ..."

" ம்ம் ... தடி எடுத்தா எல்லாம் வந்து விடும் . சரி இங்கயிருந்து போனவன் *வழியி ல்யாருகிட்ட* போன்ல பேசினே ....?"

" என் சம்சாரத்துக்கிட்ட தான் ஐயா ...."

" மறுபடியும் பொய்தான் வருது . நீ யார் கிட்ட பேசினேன்னு எனக்குத் தெரியும் . உண்மையைச் சொல்லிட்டா உனக்கு நல்லது ...'

' அது வந்துங்கய்யா முதலாளி தென்னவன் ஐயாகிட்டத்தான் பேசினேன் ..." என்று கூறிவிட்டு , தன் அருகில் அமர்ந்திருந்தவரை பார்க்க

பக்கத்தில் அமர்ந்திருந்த அந்த நபர் அவனை எரித்து விடுவது போல் பார்க்க ,

" ஏய் .. என்ன முறைப்பு ... பண்றதும் பண்ணிவிட்டு ..... சரி அந்த காட்டுல என்ன பண்ணிக்கிட்டு இருந்த .. உண்மையை மட்டுந்தான் சொல்லணும் ....?"

" ஐயா .... நா எந்த தப்பும் பண்ணல ... ஊரூல இருந்து வரும்போது நா வேலை செய்யிற முதலாளி ', ஏன் வேலைக்கு வரவில்லை என்று போன்ல கேட்டார் .' அதான் நேர்ல போயி விசயத்தை சொல்லிட்டு வந்தேன் "

" மறுபடி மறுபடி பொய் சொல்ற ... என் கோவத்த கிளறாதே ... காட்டுல நீங்க என்ன பண்ணிக்கிட்டு இருந்தீங்க ...?"

" மரம் வெட்டி லோடு அனுப்புவோம் ...."

அடுத்து இருந்த முதலாளி என்றழைக்கப்பட்டவனிடம் விசாரிக்க ஆரம்பித்தவர் " உன் பெயர் என்ன ...?"

" தென்னவன் ..."

" காட்டுக்குள் எவ்வளவு நாளா மரம் வெட்டுறீங்க ...?"

" ரொம்ப வருசமா இதுதாங்க எங்க தொழில் ..."

" என்ன மரம் வெட்டுறீங்க ...?"

" முள்ளு மரங்களும் சவுக்கு மரங்களும் ..."

" அப்புறம் வேற என்ன மரம் ...?'

" அவ்வளவுதான் ஐயா ...."

" இங்க பாரு .... ஒழுங்கா உண்மையைச் சொன்னா உனக்கு நல்லது ... நீங்க வெட்டிய மரத்தோடு தானே பிடிச்சோம் ... இப்ப சொல்லு .... என்னன்ன மரங்கள் ...?"

" அது வந்து ... சந்தன மரங்களும் ... செம்மரங்களும் ..."

" அப்படி வா வழிக்கு ... அரசாங்கத்தை ஏமாத்தி சொகுசான வாழ்க்கை ...! ஆமா ...
செக்போஸ்ட்டுல ஒருதடவை கூட மாட்டலையா ....?'

" அது வந்துங்கய்யா ...." என்று அவன் நீட்டி இழுக்க

" ஏய் ... சும்மா இப்படி பயப்படறமாதிரி எல்லாம் நடிக்காதே .... நீங்க எப்படிப்பட்டவங்கன்னு எனக்கு நல்லாத் தெரியும் ...."

" செக்போஸ்ட்டுல எங்க லாரி வந்தா விட்டுடுவாங்க . மாசா மாசம் அவங்களுக்கு கலெக்சன் போயிடும் ...."

" தெரியும் .... அவங்களும் சேர்ந்துதான் மாட்டப்போறாங்க . அதுசரி ... அந்த காட்டுக்குள் வர்ரவங்களை மிரட்டி ஏன் அனுப்புறீங்க .... உங்க தொழிலுக்கு இடையூரா இருக்கும்னு தான் அப்படி செஞ்சீங்களா ...?"

" ஆமாங்க ஐயா ...! டிஸ்டர்ப் இல்லாம தொழில் செய்யத்தான் பங்களாவுல ஆவி நடமாடுறதா பொய் சொன்னோம் ... அது மட்டுமில்லாம யாராவது அந்தப்பக்கம் வந்தா அவங்களை பயமுறுத்த ஆள் மாதிரி இருக்கிற மெழுகு பொம்மைக்கு அடிபட்ட

மாதிரி சிவப்பு பெயிண்டை அங்கங்கே பூசிவிட்டு கார்ல வந்தாங்கன்னா காருக்கு முன்னால சட்டுனு போட்டுவிடுவோம்

அவங்க ஆக்ஸிடண்ட் பண்ணிட்டதா நினைச்சி பயந்து போய் காரை நிறுத்தாம போயிடுவாங்க ....

நடந்து வராங்கன்னா அவங்க தூரத்தில வரும்போதே இந்த பொம்மையையும் அதன் மேல் ஒரு கத்தியையும் சொருகி கொலை நடந்த மாதிரி வச்சிடுவோம் .

வரவங்க பாத்துட்டு அலறி அங்கிருந்து ஓடிடுவாங்க ...."

" பக்கா ஹைடெக் கிரிமினல்ஸ்டா நீங்க .
அது சரி அந்த பங்களாவில வேற என்ன கிரிமினல் வேலை செய்யறீங்க .... நீங்களா சொல்லிட்டா நல்லது . நாங்களா கண்டுபிடிச்சா அவ்வளவுதான் உங்க கதி .
ஆண்டவனே நினைச்சா கூட உங்களை காப்பாத்த முடியாது ...."

" என்னங்கய்யா சொல்றீங்க .... பங்களாவுல கிரிமினல் வேலையா ....! நல்லா சொன்னீங்க போங்க .... பங்களா பக்கமே போக முடியாது .... அப்புறம் எப்படி இந்த வேலையெல்லாம் செய்யிறது ...?"

" ஏன் .... எதுக்கு பங்களா பக்கம் போகமுடியாது ...? கார்ட்ஸ் யாரும் இருக்காங்களா ...?"

" பங்களா பக்கம் போகணும்னு நினைச்சி அங்கே போனா மறுபடி நாம எங்க நின்னுக்கிட்டு இருந்தோமோ அங்கேயே
வந்து இருப்போம் .... நாம அங்க போனோமா என்பதே நினைவில் இருக்காது ...
ஏதோ ஒரு மந்திரசக்தி அங்கே இருக்குது .

அதனாலேயே யாரும் அந்த பங்களா அருகே போகவே மாட்டோம் ...."

இதைக் கேட்டுக் கொண்டிருந்த போலீஸ்காரர்களும் சற்குணமும் ஆச்சரியமடைந்து " என்னய்யா .... எங்ககிட்டயே உன் வேலைய காட்டுறியா ...?
இந்த தில்லுமுல்லு எல்லாம் எங்ககிட்ட செல்லாது ...."

" ஐயயோ ...! நிசமாலுமே இது உண்மைதானுங்க .
எங்களை நீங்க நம்பளைன்னா அந்த ஊர்ல
இருக்குறவங்களை கேளுங்க ....
இல்லாட்டி நீங்களே அங்க போயி பாருங்க ....
அப்பத்தான் உங்களுக்குத் தெரியும் ..."

" நாங்க போக மாட்டோம்னு நினைப்பா ...
போயிட்டு வந்ததுக்கப்புறம் தான் உங்களுக்கு இருக்கு
மண்டகப்படி ..."

" ஐயா ... நிசமாலுமே நான் சொல்றது
உண்மைதானுங்க .... இவங்களை வேணா
கேட்டுப்பாருங்க ..."

உடனே அங்கிருந்த அக்கியூஸ்டுகளும் ' ஆமாம் .... இது
உண்மைதான் ' என்று ஏகக் குரலில் கூற ,

சற்குணமும் மற்ற போலீஸ்காரர்களும் ஒருவரை
ஒருவர் குழப்பமாய் பார்த்துக் கொண்டனர் .

மதியம் இரண்டு மணியளவில்
பிரபுவும் ஜானியும் தங்கள் அலுவலகம் வந்தனர் .

அன்று நடந்த கேசைப்பற்றி மற்றவர்களுடன் கலந்து
பேசி விட்டு
அந்த பைலை நிலாவிடம் கொடுத்து கம்ப்யூட்டரில்
பதிவேற்ற சொல்லி விட்டு
ரெப்ரெஸ் பண்ண ரெஸ்ட்ரூம் சென்று விட்டு
உணவருந்த அமர்ந்தனர் .

இன்னிக்கி அப்பாயிண்ட்மெண்ட் எத்தனை இருக்கு
என்று சீனுவிடம் கேட்டுவிட்டு உணவருந்திக்
கொண்டே
வந்தியத்தேவனிடம் அவர்கள் இன்று பார்த்த
வேலையைப் பற்றிக் கேட்க ,

வந்தியத்தேவன் தன்னுடைய வேலையை எந்தளவுக்கு
முடித்திருக்கிறான் என்பதை
கூறிவிட்டு நிலாவை ஏறிட்டுப் பார்த்தான் .

நிலாவும் அவனுடைய குறிப்பை உணர்ந்து
" பிரபு .... உங்களைப் பாக்கணும்னு ஒரு பெரியவர்
வந்திருந்தார் .

மதியம் பார்க்கலாம் என்று கூறியும்
தான் மதியம் ரெயிலில் செல்லவேண்டும் என்று கூறியதால் , வந்தியா விசாரிச்சார் .
அவர் கூறியதை மனுவாக எழுதி இருக்கிறார் .
இந்தாங்க ...." என்று கூறியபடி
அந்த காகிதத்தை நீட்ட அதை வாஙீகிய பிரபு படித்தான் .

அதைப் படித்து முடித்தவுடன் பிரபு " இது என்ன .... எனக்கு புரியவில்லையே ....?" என்று கூற ,

" அதுதான் நாங்களும் என்னவென்று புரியாமல் குழப்பத்தில் இருந்தோம் ...." என்று நிலா கூற ,

ஜானிக்கு ஒன்றும் புரியாமல் அந்த மனுவை வாங்கி படித்து அவனும் புரியாமல்
பிரபுவைப் பார்க்க ,

" வந்தியா .... அவர் எப்படி இருந்தார் ...?" என்று பிரபு கேட்க ,

அவரின் அங்க அடையாளங்களை விவரிக்க

ஒன்றும் புரியாமல் பிரபு கண்மூடி யோசனையில் ஆழ்ந்தான் .

திடீரென்று அவன் சிந்தனையில் **மாயவன் உனைத் தொடர்கிறான்** என்ற வார்த்தை
நினைவில் வந்து போனது ....

' இது என்ன ... கனவில் வந்த பெயர் போலவே இருக்கு ... என்னைச் சுற்றி ஏதோ ஒரு நிகழ்வு நடந்து கொண்டே இருக்கிறது ...
என்னவென்றுதான் புரியவில்லை ....

யாரிந்த மாயவன் ... அவருக்கும் எனக்கும் என்ன வழக்கு ....
அம்மாவிடம் இதைப்பற்றிக் கேட்கலாமா ...
சே .. சே ... அவங்க ரொம்ப பயந்துடுவாங்க ...
நிலா இப்பவே பயந்த மாதிரி இருக்கிறா ...
ஜானியை கூட்டிக்கிட்டு அந்த சித்தரை முதலில் பார்த்தால்தான் மனசுக்கு நிம்மதியா இருக்கும் ....
ஓகே ... முதல்ல நாளை திருநெல்வேலி போறதப்பத்தி

டிஸ்கஸ் பண்ணுவோம் ...
அஞ்சனாகிட்ட அங்க ரூம் எங்க போட்டு
இருக்காங்கன்னு கேட்கணும் .'...

தன் இயல்பு நிலைக்கு திரும்பிய பிரபு
" ஜானி ... நாளைக்கு திருநெல்வேலி போறதப் பத்தி
எப்படி பிளான் ...?"

" நாலு பேரும் கார்லேயே போயிக்கலாம் .
நானும் பார்ட்னரும் மாறி மாறி கார் ஓட்டிக்கிறோம் ...
நிலா ... நீங்க வீட்ல சொல்லீட்டீங்களா ...?"

" ம் ... பர்மிசன் வாங்கிட்டேன் ... உங்களோட
வரதுல எனக்கு ரொம்ப சந்தோசம் ...."
நிலா கூறியதைக் கேட்ட ஜானி " ஹை .... எதுக்கு இந்த
டயலாக் ... நீங்க ரெண்டு பேரும் ஜாலியா
இருக்கிறதுக்கு
நாங்க சப்போர்ட்டா ...?"

ஜானி இறுக்கமான சூழ்நிலையை கலகலப்பாக மாற்ற
,

பிரபு புன்னகையுடன் தன் மொபைலில்
அஞ்சனாவுக்கு போன் பண்ணிணான் .

போனில் அஞ்சனா வர , தங்களுக்கு எந்த ஹோட்டலில்
ரூம் போட்டிருக்கிறாய் என்று பிரபு கேட்க ,
அங்கே சிறு மௌனம் .

" ஹலோ ... அஞ்சனா .... லைன்ல இருக்கியா ...?" என்று
பிரபு கேட்க ,

" சொல்லுடா ... நீ சொல்றது எனக்குப் புரியலை ....
எதுக்கு ரூம் ... நீ சிகாகோ வரியா என்ன .... அப்படியே
வந்தாலும் நம்ம வீடு இருக்கிறப்ப நீ ஏன் ஹோட்டல்ல
தங்கணும் ...?"

அஞ்சனாவின் பதிலால் குழப்பமடைந்த பிரபு " ஏய்
வாயாடி ... என்ன விளையாட்டு இது . நீ இங்க
இருக்கறப்ப நா எதுக்கு அங்க வரணும் ..."

" ஏய் ... கொஞ்சம் இரு .... என்ன சொன்ன ...?
நா அங்க இருக்கிறேனா ...? ஆர் யூ டிரங் ....!
நா இப்ப சிகாகோவிலத்தான் இருக்கிறேன் ...

இராத்திரி மூணு மணிக்கி போன் பண்ணி ஏண்டா படுத்துற ...."

அவன் பேசுவதைக் கவனித்தவர்கள் ' என்ன ' வென்று கேட்க ,

கை சைகையில் கொஞ்சம் இருங்கள் என்று கூறிய பிரபு

" இங்க பாரு சிஸ்டர் .... விளையாடாம பதில் சொல்லு .... நீயும் உன்னோட நண்பர் ஆதித்யாவும் இரண்டு நாளுக்கு முந்தி இங்க வந்தியா இல்லியா ... உன் நண்பன் திருமணத்திற்கு திருநெல்வேலிக்கு வருமாறு அழைப்பிதழ் குடுத்தியா .... இல்லியா ...?"

" போனிலேயே பதறியபடி பேசிய அஞ்சனா .... ஏய் .. அண்ணா .... என்னடா சொல்ற ....? நா எங்கடா அங்க வரப்போறேன் ... இப்ப அங்க வர ஐடியாவே எனக்கு இல்லியே ....?
ஆபிசுல இப்ப லீவு கேட்டாக்கூட குடுக்கமாட்டாங்க .... அதுவுமில்லாம அப்பாவுக்கு கொஞ்சம் உடம்பு சரியில்லாம இருக்கிறாரு . வேணா .. உன்னோட சித்திக்கிட்ட பேசு ...." என்று கூறியவளாய் யாரிடமோ *போனைக்* கொடுக்க ,
மறுமுனையில் பிரபுவின் சித்தி பேசுவது மட்டுமே அவன் காதில் விழுந்தது .

சம்பிராயத்துக்காக அவர்களிடம் ஏதோ பேசிவிட்டு போனை வைத்தவன் பிரமை பிடித்தவன் போல் அமர்ந்திருக்க ,

அனைவரும் அவன் அருகில் வந்து அவனைப் பிடித்து உலுக்க ,

தன் நிலைக்கு வந்தவன் அவசரமாக " ஏய் ... வந்தியா ... அந்த கல்யாணப் பத்திரிகையை சீக்கிரம் கொண்டுவா ..."
என்று கூற

தான் வைத்த இடத்தில் பத்திரிகையை காணாது பரபரப்படைந்த வந்தியா மற்ற இடங்களிலெல்லாம் தேடினான் .

ஜானி நிலா தன் பங்குக்கு அவர்களும் தேட ,
எங்கும் அந்த பத்திரிகை காணவில்லை ...

## அத்தியாயம் 12

பிரபுவும் தன் பங்குக்கு தேட எங்கும் காணவில்லை பத்திரிகை .

அனைவரும் திகைப்பு மாறாமல் சிலை போல நின்றிருக்க ,

நிலா மெல்ல " பிரபு .... என்ன நடக்குது இங்கே ... எல்லாம் மர்மமா இருக்கு ...."

" நிலா .... இது அமானுஷ்ய வேலை எல்லாம் கிடையாது . யாரோ நமக்கெதிரா திட்டம் போட்டு காய் நகர்த்தற மாதிரி எனக்கு பட்சி சொல்லுது .... சரிதானே பாஸ் ...!" ஜானி கூறியதைக் கேட்ட பிரபு

" அப்ஸ்யூட்லி யூ ஆர் கரெக்ட் . இது எல்லாமே கொஞ்ச கொஞ்சமாய் காய் நகர்த்தி நம்மை குழப்பவைக்கிற வேலைதான் . ஆனா எனக்கு இது மட்டுந்தான் கன்ப்பூயூஸ்டா இருக்கு .
அஞ்சனா வந்தது நிஜம் . ஒருத்தர் பார்த்திருந்தா கூட அது பிரமை அப்படீன்னு சொல்லலாம் .
ஆனா நாமெல்லாரும் பார்த்தது நிசம்தானே ....?"

" ஆமாம் .... நாமெல்லாரும் பார்த்ததுதானே ... அது எப்படி உண்மையாய் இல்லாம இருக்க முடியும் ...?" வந்தியத்தேவன் பதிலுரைக்க

" பிரபு ... உங்க அம்மாவை பாத்துட்டு வந்ததா அவங்க சொன்னாங்க இல்ல ... அன்னிக்கு
உங்க அம்மா அவங்க வந்ததா சொன்னாங்களா ...?"

" ஆமா ... அதை நா மறந்தே போனேனே ... அன்னிக்கி வீட்டுக்கு லேட் நைட் தான் வீட்டுக்குப் போனேன் ... அம்மா தூங்கிட்டாங்க ... காலையில நானும் கேட்க மறந்துட்டேன் .
ஆனா அம்மா கண்டிப்பா அவ வந்ததை சொல்லாம இருக்க மாட்டாங்களே ....
சரி ... நா போயி இதபத்தி விசாரிச்சிட்டு வரேன் ..." என்று அலுவலகத்தின் பின்புறம் இருக்கும் தன் வீட்டிற்குச் சென்றான் .

சிறிது நேரத்தில் திரும்பி வந்தவன் உதட்டை பிதுக்கினான் .

" பாஸ் ... அம்மாகிட்ட நேரடியாவே கேட்டீங்களா .... அஞ்சனா வந்ததைப் பத்தி ...?"

" இல்லை ... சித்தியை விசாரிக்கிற மாதிரி பேச்சுக் கொடுத்தேன் . அப்படியே அஞ்சனாவுக்கு நல்ல வரன் ஒன்னு வருது ...
அவங்களை கேக்கிறீங்களான்னு கேட்டேன் .
அப்பதான் அவங்களா சொன்னாங்க ... அவளைப் பாத்து வருசக்கணக்காச்சு ... எப்ப வருவாளோ .. கண்ணுலேயே இருக்கிறா ... அப்பிடீன்னு சொன்னாங்க .
நா கெஸ் பண்ணினது சரியாத்தான் இருக்கு ...

" பாஸ் .... கண்டிப்பா இதுக்கு பின்னாடி ஏதோ சதி வேலை நடக்குதுன்னு மட்டும் புரியுது ... ஆனா எதுக்காகன்னு மட்டுந்தான் புரியாம இருக்குது ..."

" பிரபு ... எனக்கு அப்படி தோணலை ... இது கண்டிப்பா ஏதோ ஆவியோட வேலைதான் ... நாம எதுக்கும் மறுபடி அந்த சித்தரை பார்த்து விட்டு வருவோம் ... என்ன சொல்றீங்க ...?" நிலா சற்று நடுக்கத்துடனே பேச ,

" நான் கூட ஆரம்பத்தில் அப்படித்தான் நினைச்சேன் .... ஆனா போகப்போக நடக்கும் நிகழ்வுகளைப் பார்த்தா

இது கண்டிப்பா மனுச சூழ்ச்சி மாதிரி தெரியுது ... விடு ...
நடப்பதற்கு இனிமே தடாலடி வைத்தியந்தான் ....!"

" பாஸ் ... முதன்முதல்ல இந்த பிரச்னை எப்ப ஆரம்பிச்சது ... அந்த லேடி வந்துட்டு போனதிலேருந்து தானே ....
அப்ப அவங்க சொன்ன விசயத்திலேயிருந்து .... ஆரம்பிக்க வேண்டியது தானே ....!"

" ஆரம்பிக்கணும் . இதுக்கு தீர்வு கிடைச்சாத்தான் ரிலாக்ஸ் ஆகும் . யோசிச்சி யோசிச்சி மண்டை காஞ்சதுதான் மிச்சம் .
எல்லாத்தையும் ஒதுக்கி வச்சுட்டு எங்கியாவது போய் மைண்ட்ஸை ப்ரீ பண்ணணும்
அதுக்கு ஏதாவது பிளான் போடுங்க ...",

" கேப்டன் .... எங்கியாவது ஜாலியா ஒரு டிரிப் போகலாமா .... ஏற்கனவே போட்ட பிளான் டௌன் ஆயிடுச்சி ...."

" குட் ... நீ சொல்ற யோசனை நல்லாதான் இருக்கு ... நீங்க என்ன சொல்றீங்க ....?"

" பாஸ் ....' தம்மை நோக்கிய நோக்கியா ....
இப்பிடி நொடியில் நோக்காமல் நோயை தந்ததுவே ' என்று விரக்தியாய் விட்டான் வந்தியா ... பாருங்க ... அவன் கண்ணில் வலியை ...." சிரிக்காமல் ஜானி கூறியதைக் கேட்டு கலகலவென்று அனைவரும் சிரித்தனர் .

" என்ன நிலா .... நீ ஒன்னும் சொல்லலை ....
பிளான் ஒகே வா .... "

" எனக்கும் ஆசைதான் . ஆனா லீவு நாளா இல்லாம வொர்க்கிங் டேஸ்சா இருந்தா பெட்டரா இருக்கும் ...."

" ஆஹா ... வீட்டுக்கு அடங்கின பொண்ணு ....
எப்பிடி ஸ்மார்ட்டா பிளான் பண்ணுது பாரு ..."
ஜானியின் கலாய்ப்பில் முகம் சுருங்கி போனாள் நிலா
....

அதைக்கவனித்த பிரபு " ஹேய் ... ஜானி ... போதும் கலாய்ப்பு .... அவ அப்பாவுக்கு பயந்தவ .... வேற என்ன பண்ணுவா ... நிலா ...! வொர்க்கிங் டேஸ்ல போனாலும் வீட்டுக்கு தெரியாம போக முடியுமா ...?"

" வேலை விஷயமா வெளியூர் போக வேண்டிய சூழல் .... அப்பிடீன்னு சொல்லிடுவேன் ... அப்ப ஒன்னும் சொல்ல மாட்டாங்க ...."

" சரி .... அப்படியே பண்ணிடுவோம் .... எங்க போகணும்னு சொல்லுங்க ...."

" ம் ... ம் ... எங்க போகலாம் ... நிலா உனக்கு புடிச்ச இடமா சொல்லு ... இரண்டு நாள் பேக்கேஜ் ..."

" ஹில்ஸ் ஏரியா போகலாமா ....?"

" ஆல்ரெடி ஊட்டி , கொடைக்கானல் , மூணாறு எல்லாம் பலதடவை பாத்தாச்சு ...
வேற இடமா சொல்லு ...."

பேசிக்கொண்டிருக்கையில் பிரபுவின் கைப்பேசியில் சற்குணம் அழைக்க ,
" வணக்கம் .... சொல்லுங்க சற்குணம் ...."
பிரபு பேச

மறுமுனையில் சற்குணம் " பிரபு ... நாளை இங்க வந்துட்டு போக முடியுமா ...?" என்று கேட்க ,

" எனிதிங்க் இம்பார்ட்டண்ட் ....?"

" யா ....! கொஞ்சம் கிரிடிகலான மேட்டர் . நீங்க வந்தா நல்லா இருக்கும்னு எனக்குத் தோணுது ."

" ஓகே .... டுமாரோ ஐ வில் கம் ஸ்யூர்லி ..."

" வெல் பிரபு . நாளைக்குப் பார்க்கலாம் ..."
சற்குணம் போனை வைத்து விட

" நிலா .... நாளை என்ன புரோகிராம் ..."
என்று பிரபு கேட்க ,

" தாம்பரம் கிருபாகரன் நில மோசடி புராஜக்ட் 875
வாய்தா வாங்கணும் ...."

... ஜானி நம்ம கேஸ் எத்தனை மணிக்கு வருது .."

" லெவனோ கிளாக் .... "

" சரி .... அத முடிச்சிட்டே போகலாம் ... சீனுவைக்
கூப்பிடு ...."

மறுநாள் சற்குணத்தை மீட் பண்ண சென்றனர்
இருவரும் .

" வணக்கம் ... எஸ் . பி . சார் ...!, ஜானி வணக்கம்
சொல்ல , பதில் வணக்கம் சொன்னவர்
" பிரபு ... மயிரிழையில் உயிர் பிழைத்து
வந்திருக்கிறீர்கள் ... கடவுள் கருணை உங்களுக்கு
நிறைய இருக்கு .... ஆல் தி பெஸ்ட் ...!"

" கடவுள் கருணை இருக்கிறதோ இல்லையோ ... என்
அம்மாவின் பாசம்
என்னைக் காப்பாற்றும் ... அப்புறம் .... சொல்லுங்க ..
அந்த இராமன் விவகாரம் என்னவாச்சு ....?"

" அதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன் ...
நாம நினைச்ச மாதிரி வுட் ஸ்மக்ளிங் தான் .
ஒரு குரூப்பே மாட்டிஇருக்குது . இதுல
அரசியல்வாதிகளும் உடந்தை .
கண்டிப்பா பிரசர் இருக்கும் ."

" அது நமக்கு தெரிஞ்சதுதானே .... நம்ம கடமையை
நாம பர்பெக்டா செஞ்சா போதும் ." என்று பிரபு கூற

" எக்ஸாட்லி ....! ஆனா இப்படி கஷ்டப்பட்டு உழைச்சது வேஸ்டா போகும்போது மனசு வலிக்குது ."

" சரியா சொன்னீங்க சார் ... என்னிக்கு உழைக்கிற காசு போதும்னு நினைக்கிற
தலைவர்கள் வருவார்களோ .... அன்றுதான் உண்மை நிலைக்கும் ..." ஜானி கூறிய கருத்துக்கு

" இருந்தாங்களே .... காமரசர் போன்ற பெர்பஃசனிஸ்ட் லீடர்ஸ் ... இனி இதுபோல
தலைவர்கள் கிடைப்பது அரிதுதான் ..."
பிரபு கூற ,

அதை ஆமோதிப்பது போல் தலையாட்டிய
சற்குணம் டீ கொண்டுவரச் சொல்ல
அதைக் குடித்துக் கொண்டே " பிரபு ... நான் உங்களை வரச் சொன்னதுக்கு இராமன் விவகாரம் மட்டுமல்ல ... வேறோரு விசயமும் இருக்கு ... அதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன் ..." என்று கூறவும்

" இப்படித்தான் இருக்கும் என்று நினைச்சேன் . சொல்லுங்க ... என்ன விசயம் ...?"

" இதச் சொல்றதுக்கு எனக்கே ஒருமாதிரி தான் இருக்கு . இருந்தாலும் உங்ககிட்ட டிஸ்கஸ் பண்ணணும்னு தோணிச்சி .... அதான் ..."

" என்ன சார் ... பீடிகை பலமா இருக்கு . ஏதாச்சும் அடல்ஸ் ஒன்லி மேட்டரா ...?"
ஜானியின் கேள்வியால் சிரித்துவிட்ட
சற்குணம்

" சீரியசான நேரத்துல கூட மொக்க ஜோக் சொல்லியாவது மைண்டை டைவர்ட் பண்ணிடுறீங்க ஜானி ... ஐ லைக் யுவர் பிரசண்டேசன் ...."

" சார் ... இது வஞ்சப்புகழ்ச்சி இல்லியே ...!'

" சே சே .... அப்படியெல்லாம் இல்லை . நிசமாலுமே உங்க ஸ்பாட்லைட் எனக்குப் புடிச்சிருக்கு . பிரபு கொடுத்து வைத்தவர் .
உங்களைப்போல உள்ளவங்களை தன் பக்கத்தில் வைத்திருப்பதற்கு ...", என்று சற்குணம் பாராட்ட ஜானி கூச்சப்பட்டு தலைகுனிந்துக் கொண்டான் .

" ஜானிக்கு தற்பெருமை பிடிக்காது ... அப்படித்தானே ஜானி ...!"
புன்னகையுடன் பிரபு கேட்க ,

" அதானே பார்த்தேன் ... எங்கடா இன்னும் புகை தெரியலையேன்னு ... முதல்ல விட்டுக்குப் போனதும் சுத்திப் போடச் சொல்லனும் எனக்கு ...."

" ஹே .... பாத்து ... அப்படியே அலேக்கா தூக்கிப் போட்டுடப் போறா டினா ..." பிரபு சொல்வதைக் கேட்டு சற்குணமும் சேர்ந்து சிரிக்க ,

" பாஸ் ... ஆனாலும் நீங்க போங்கு ...." சொல்லிவிட்டு ஜானியும் சிரிக்க சிரிப்பலை சிறிது நேரம் நீடித்தது .

" சரி ... நா விசயத்துக்கு வரேன் . நீங்க உங்க பிரண்டுக்கு வாங்கப் போறதா அந்த ஜமீன் மாளிகையை விசாரிக்க சொன்னீங்கல்ல ... அதப்பத்தி ஒரு விசயம் தெரிய வந்துருக்கு ..." சற்குணம் கூறியதைக் கேட்ட இருவரும் நிமிர்ந்து அமர்ந்தனர் .

" இஸிட் ...! என்ன ...?"

" நேத்திக்கி ஐந்து அக்கீயூஸ்டுகளை பிடிச்சி விசாரிச்சோம்னு சொன்னேன் இல்லியா .... அப்ப அந்த மாளிகைப் பத்தி கேட்டதுல அவங்க சொன்ன விசயத்தை நம்பறதா .... இல்லயான்னு எனக்கு ஒரே குழப்பமா இருக்கு ..."

" உங்களையே கன்ப்யூஸ் பண்ணிட்டாங்களா .... அப்ப ஸ்டராங் கிரிமினல்ஸ் தான் ..."

" நான் கூட முதல்ல அவனுங்க குழப்பறானுங்கன்னு தான் நினைச்சேன் .
அதனால இன்னிக்கி பக்கத்துல இருக்கிற கிராமத்துல விசாரிக்கச் சொன்னேன் .
அவங்களும் இவனுங்க சொல்றமாதிரி தான் சொல்றாங்க ..."

" சற்குணம் .... நீங்க சொல்றதப் பார்த்தா அங்கே ஏதோ வில்லங்கம் இருக்கும் போல தோணுதே ...?"

" அப்ஸ்யூட்லி . யூ ஆர் கரெக்ட் ... வில்லங்கம் மட்டுமல்ல ... மர்மமானதும் கூட ...."

" என்னங்க சார் ....!, அநியாயத்துக்கு எங்களை இப்படி சஸ்பென்ஸ்லேயே இருக்க வைக்கிறீங்க ...
மனசு படபடன்னு அடிச்சிக்கிது ..."

" கூல் ... கூல் . சொன்னதுக்கப்புறம் ஹார்ட்டே நின்னாலும் நின்னுடும் ..."

" என்ன சற்குணம் ... நீங்க கூட இப்பிடி பேசுறீங்க .... நாமெல்லாம் எல்லா ஹாரர்ஸ்ஸையும் பாத்து வந்தவங்கதான் . இதுக்கெல்லாமா பயப்படுவோம் .
பரவாயில்லை சொல்லுங்க ..."

" அந்த மாளிகை பக்கம் ஸாரி கேட்டுப்பக்கம் கூட யாரும் இதுவரை போனதில்லையாம் ...."

" ஏன் ... போனவங்க உயிரோடு திரும்பி வந்ததில்லை ... அப்படித்தானே சொல்லப்போறீங்க ...?"

" நீங்க நினைக்கிறது தப்பு ஜானி ...!
இது அப்படி அல்ல . நாம பங்களாவுலேருந்து குறிப்பிட்ட இடம் வரைதான் போக முடியுமாம் .
அதற்கு மேலே போனாலும் நம்மை அறியாமலேயே எந்த இடத்தில் ஆரம்பித்தோமோ அங்கேயே மீண்டும்

வந்துவிடுவோமாம் .... அதனால இது வரைக்கும் யாருக்குமே அந்த பங்களா எப்படி இருக்கும்னு தெரியாதாம் ..."

" என்ன சற்குணம் .... இது நம்பறமாதிரியா இருக்கு ... இதெல்லாம் சுத்த ஹம்பக் ...
அது சரி ... நீங்க அங்க போயி பாத்துட்டு வந்தீங்களா ...?"

" இல்லை ... நாம ஒண்ணா சேர்ந்து போயி கன்பார்ம் பண்ணிக்கலாம் ..."

" ம் ... ம் .. ஒகே ... என்னிக்கி போகலாம் ...?"

" இந்த வாரம் வொர்க்லோடு அதிகமா இருக்கு ... நெக்ஸ்ட் வீக் போலாமா ..?"

" பாஸ் ... நாம போட்டுருக்கிற பிளான் ...?"

" ஆமா ... மறந்துட்டேன் . சற்குணம் நெக்ஸ்ட் வொர்க்கிங் டேஸ் நாங்க வெளியூர் புரோகிராம் போட்டிருக்கிறோம் ... பிகாஸ் ஆப்டர் வீக் போலாமா ...?

" ஒகே ... நீங்க டிசைட் பண்ணிட்டு சொல்லுங்க ..."

" பாஸ் ... ஏன் நாளைக்கு போகக்கூடாது ...?"

" சாரி ஜானி ... சேட்டர்டே ஒன்லி என்னோட பேமிலிக்கு மட்டும் . வேற கமிட்மென்ட்ஸ் நோ வே .... இட்ஸ் ஒகே ... மறுபடி பாக்கலாம் ...."

அலுவலகத்தில் இன்று நால்வரும் அனைத்தையும் மறந்து மகிழ்ச்சியுடன்
காணப்பட்டனர் .

" நிலா ... எப்ப வீட்ல சொல்லப் போறீங்க ..."

" அப்பாவை நினைச்சா பயமா இருக்கு ஜானி .... மெல்ல அம்மாகிட்ட சொல்லிட்டு அவங்களை கன்வின்ஸ் பண்றேன் ...."

" அதுதான் எப்போ ....? இப்படியே ஆபிஸ்லேயே லவ் பண்ணிகிட்டே இருக்கலாம்னு நினைப்பா ..."

" ஏய் .... என்னப்பா .... உங்க பாஸ் கேக்க சொன்னாரா ....?"

" ஹேய் .... என்ன ... என்னை கோத்துவிடற ... இவன் பேச்சுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமுமில்லை ...
ஏதோ அவனுக்கு கேக்கணும்னு தோனிருக்கு ...."

" ஏன் பாஸ் .... இப்பவே இப்பிடி பயப்படுறீங்க ... தைரியமா சொல்லுங்க ... ஆமா நாந்தான் கேக்க சொன்னேன் என்று ...."

" *பிரபு ... ஆல்ரெடி* உங்ககிட்ட நா சொல்லியிருக்கேன் . ஆனாலும் நீங்க கன்வின்ஸ் ஆகலன்னு தெரியுது ... உங்களோட அவசரத்துக்கு என்னால வரமுடியாது . சரி ... இதோட பிரேக்கப் பண்ணிக்கலாம் ."

" ஹே ... நிலா .... அவன்தான் உன்னை கடுப்பேத்துறான் . நீயும் அதை நம்புறே ...
ஜானி ... ஏண்டா ... இவ்வளவு வன்மம் உனக்கு ....?"

" ஆஹா ... யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெற வேண்டாமா ....?"

" கேப்டன் ....! பிரதர் நல்லாவே கோத்து விடுறாரு ..."

" என்ன பிரபு .... பயந்துட்டீங்களா ... சும்மா உல்லாலங்கடி ..."

" நிலா .... பாத்தீங்களா ... பாஸை எப்படி நடுங்க வச்சிட்டேன் ...."

ஜானியும் நிலாவும் விழுந்து விழுந்து சிரிக்க ,

" ரெண்டு பேரும் பேசி வச்சி வார்ரீங்களா ..."

" தொப்பி ... தொப்பி " என்று இருவரும் கோரஸாக கத்த
,

பிரப ஜானியை துரத்த வந்தியா மறுபக்கம் ஜானியை பிடிக்க முயல ,
சிரிப்பலை தொடர்ந்தது .

**' நிர்மலேஸ்வரா... மாயாவி விடவில்லை... மகுடத்தை சுமந்து விடு'**

காதோரம் கிசுகிசுத்த குரலில் சட்டென நின்றான் பிரபு .

# அத்தியாயம் 13

கார் சென்னை டூ கன்னயாகுமரி சாலையில் சென்று கொண்டிருந்தது .

காரை வந்தியத்தேவன் ஓட்டிக்கொண்டிருக்க ,

ஜானி அவன் அருகில் முன்னால் அமர்ந்திருந்தான் .

வழக்கம் போல் பிரபுவும் நிலாவும் நெருக்கியபடி கைகளைப் பிடித்துக் கொண்டு கைகளால் பேசியபடி அமர்ந்திருந்தனர் .

மௌனமாக கார் பயணம் சென்று கொண்டிருக்க ,

ஜானி " பாஸ் ... மேகமலை பிளான் ஒகே தானே ....?"

" ஏன் வேண்டாம்னா மாத்திடுவியா ...?

" ஏன் பாஸ் உங்களுக்கு பிடிக்கலையா ...?
நிலாதான் அங்க போகலாம்னு சொன்னாங்க ...'

" சே ... சே ... சும்மா சொன்னேன் .... அதிக ஆரவாரமில்லா அழகான மலைத்தொடர் .
பிடிக்காம போகுமா ... ஆக்சுவலா ரொம்பநாளாவே அங்க போகலாம்னு நினைச்சிக்கிட்டு இருந்தேன் ....

" பிரபு ... நா காலேஜ் டேஸ்ல வந்திருக்கேன் ... அழகான பள்ளத்தாக்குகள் . ரம்மியமான காபி தோட்டங்களும் தேயிலை தோட்டங்களும் ... இதமான சீதோஷ்ண நிலையும் அப்ப்பா ... வாட் எ பியூட்டிபுல் லொகேசன் ....!"
கண்களை விரித்து காட்சியை அவள் வர்ணித்தவிதம் பிரபுவுக்கும் மற்றவர்களுக்கும் ஆச்சரியமாய் இருந்தது .

" ஹே ... நீ இப்படியெல்லாம் கூட பேசுவியா ...?
லாயருக்கு படிச்சவ பேசறதுக்கு கூலி கேக்கறாளேன்னு நினைச்சிருக்கேன் .
ஆனா ... இப்பிடி ரம்மியமா பேசுவியா ..!"

" பாஸ் ... பேசறதுக்கு கூலி வாங்கத்தானே நாம படிச்சிருக்கோம் ..."

" சரி சரி சும்மா வாயடிக்காம பாட்ட போடு ... எதையாவது பேசி அவளை இம்ப்ரஸ் பண்ணலாம்னு பாத்தா ... நடுவுல ஏதாச்சும் பேசி கெடுத்துவிடுறது ... ஆமா ... டினாவை கூட்டிக்கிட்டு வாடான்னு சொன்னா ... அவ இல்லாம நீ மட்டும் வந்து நிக்கிற ... அவ வந்தா உன் ஜாலி பணால் ஆகும்னுதான் விட்டுட்டு வந்தியா ...?"

" ஆமா ஜானி ... டினாவை கூட்டிக்கிட்டு வந்திருந்தா ... எனக்கு கம்பெனியா இருந்திருப்பா ...!"

" நீங்க வேற நிலா ...! அவளுக்கு ஏகப்பட்ட கமிட்மென்ட்ஸ் என்னை கவனிக்கிறத தவிர ... பேருக்குத் தான் நாங்க லவ் மேரேஜ் .... ஆனா அங்க துளிகூட லவ்வு இல்ல ..."

" நா ஒருநாள் டினாவ மீட் பண்றேன் ... அவளுக்கு புரிய வைக்கிறேன் ..." நிலா கூற ,

" ஏய் நிலா .. . அவள நீ மாத்திரியோ இல்லியோ அவ உன்னை மாத்திடுவா ஜாக்கிரதை ..."
ஜானி கூறியதைக் கேட்ட நிலா

" நா என்னிக்குமே என் பிரபுவை லவ் பண்ணாம இருக்கமாட்டேன் .
யாரும் என்னை மாத்த முடியாது ...."

நிலா சட்டென்று பிரபுவின் மேல் சாய

" ஓ ... ஓ .. சோ ஸ்வீட் ...!" பிரபு நிலாவை தன் பக்கம் இழுத்து அணைக்க

" பாஸ் ... இங்க ஒரு கல்யாணமாகாத வயசுப் பையன் இருக்கிறான் .... பாத்துக்குங்க ..."

" அவனுக்கு வயித்தெரிச்சல் . அதை வந்தியா மேல போடறான் பாரு ...' சிரித்தபடி பிரபு கூற

" எனக்கென்ன எரிச்சல் ... பெரியகுளத்துல என் ஆளு இருக்கிறா ... எனக்கு எந்த பீலும் இல்லை ... பாவம் பையன்னு சொன்னா எனக்கே வத்திகுச்சியா ...?"

" பிரதர் ... நா பேசாம காருதானே ஓட்டிக்கிட்டு இருக்கேன் . என்னை ஏன் வம்புல மாட்டி உடுறீங்க ...?"

" ஹீம் ... நல்லதுக்கே காலமில்லை ... யாரோ எப்படியோ ரொமான்ஸ் பண்ணா எனக்கென்ன ....
வந்தியா ... அந்த கேபி சுந்தராம்பாள் பாட்டைப் போடு ... நா கண்ணு மூடி ரசிச்சிக்கிட்டு வர்ரேன் ..."

" இதுக்குதான் வயசானவங்களையெல்லாம் கூட்டிக்கிட்டு வரக்கூடாது .... சொன்னா கேட்டீங்களா பிரபு ..."

சிரிக்காமல் நிலா கூற

" நிலா .... யூ டூ பூரூடஸ் ...! நா நினைச்சே பாக்கலை இப்பிடி மாறுவீங்கன்னு ...?"

" பிரதர் ... யூ டோண்ட் வொரி ... நா காரை நிறுத்துறேன் . அப்படியே பொடி நடையா சென்னைக்கு திரும்பிடுங்க ..." வந்தியாவும் தன் பங்குக்கு ஜானியை கலாய்க்க ,

" அப்படியா .... வா அங்க ... கொசு கடி ரூமா பாத்து உனக்கு ஒதுக்குறேன் ..."
ஜானி சீரியஸானவன் போல் பேச
அனைவரும் சிரிக்கத் தொடங்கினர் .

" சரி வேற எதுனா பேசலாம் ... பிரபு உங்களுக்கு எந்த ஆர்த்தர் ரைட்டிங் மிகவும் பிடிக்கும் ...?"

நிலா பேச்சை மாற்றி கேட்க

" ம் .. ம் . என்று சிறிது நேரம் யோசித்த பிரபு

" ஜெயகாந்தனின் ' சில நேரங்களில் சில மனிதர்கள் ' நாவலை சமீபத்தில் படிச்சேன் .
ப்பா .... என்ன நடை .... என்ன தாட்ஸ் ...
ஷி இஸ் வெரி கிரேட் ... அவங்க வாழ்ந்திருந்த காலத்துல நாமும் வாழ்கிறோம் என்பதே நமக்கு பெருமைதான் ...."

" ஆமா பிரபு ... எனக்கு அதுல ஹீரோயின் கங்கா கேரக்டர் ரொம்ப பிடிக்கும் ..." நிலா பதில் கூற ,

" சரி உனக்கு யாருடைய எழுத்து ரொம்ப பிடிக்கும் ...?" பிரபு நிலாவைப் பார்த்துக் கேட்க ,

" நா காலேஜ் டைம்ல ' பொன்னியின் செல்வன் படிச்சேன் . அதுல வந்தியத்தேவன் கேரக்டர் எனக்கு

ரொம்ப பிடிக்கும் .
பிரதர் இண்டர்வியூவுக்கு வந்தப்போ இவர் பேரைக் கேட்டே இவரை எனக்கு ரொம்ப புடிச்சிப்போச்சு ..."

" வந்தியா ... உன் பேருதான் உனக்கு வேலையை வாங்கிக் குடுத்துருக்கு ... பார்த்தியா ...?"
ஜானி கூறியதைக் கேட்ட வந்தியா

" எங்கம்மாவுக்கு பொன்னியின் செல்வன் நாவல் ரொம்ப புடிக்குமாம் ... அதனாலத்தான் எனக்கு அவங்க பேவரிட் ஹீரோ பேரை வெச்சாங்கலாம் ...'

" அப்பறம் எனக்கு சிவகாமியின் சபதம் சிவகாமி கேரக்டர் ரொம்ப பிடிக்கும் ..."
நிலா கூறுவதைக் கேட்ட பிரபு

" ஏன் அவங்க டான்சர் என்பதாலா ...?'

" இல்ல ... அவங்களோட  காதல் துணிச்சல் தைரியம் தியாகம் .... ரொம்ப இம்ப்ரஸ் பண்ணிடுச்சி ....",

" ஆமா .... ஏன் டிராஜடி கேரக்டரையே பிடிக்குது உங்களுக்கு ....
எனக்கு எப்பவுமே ... நம்ம ஹீரோ ரைட்டர் சுஜாதா தான் .
அவரோட சயின்ஸ்பிக்ஷன் நாவல்ஸ் தான் நம்ம பேவரிட் ...
அப்புறம் வந்தியா ... உனக்கு யாரோட ரைட்ஸ் பிடிக்கும் ..?' ஜானி கேட்க

" எனக்கு நாவல்ஸ்ல அவ்வளவா இன்ட்ரஸ் கிடையாது .
வைரமுத்து கவிதைகள் , மு மேத்தா , அப்துல் ரகுமான் போன்றோரின் கவிதைகள் தான் மிகவும் பிடிக்கும் ...
சமீபத்துல ஜெயமோகனின் ஏழாம் உலகம் படிச்சேன் .
அது என்னை ரொம்ப இம்ப்ரஸ் பண்ணிடுச்சி ...
அதுல பண்டாரம்னு ஒரு கேரக்டர் வரும் ... வெரி இன்டரஸ்டிங் கேரக்டர் ..."

" வந்தியா ... நீ ரொம்ப மெச்சூரானவன்தான் ... நீ படிக்கிறத வச்சே
சொல்லத் தோணுது ..." பிரபு கூறியதைக் கேட்ட ஜானி

" அதென்னவோ வாஸ்தவந்தான் பாஸ் ... ஒருத்தருடைய கேரக்டரை புரிஞ்சுக்க அவங்களோட வாசிக்கும் புத்தகங்களை வெச்சே சொல்லிடலாம் ..."

" பாஸ் ... திருச்சிய நெருங்கிட்டோம் ... மதிய உணவை இங்கேயே முடிச்சிக்கலாமா ...?"

" ரெண்டு ஆயிடுச்சே ... சாப்டுட்டே போகலாம் .. சரி நைட் எங்க தங்கறது ... அரேஞ்ச் பண்ணியிருக்கியா ...?"

" நாம பெரியகுளத்துலதான் நைட் தங்கப்போறோம் ... அங்க என் கிளாஸ்மேட் இருக்கிறான் ... அவன் எல்லாம் ரெடி பண்ணியிருப்பான் .
காலையிலதான் நாம மலைமேல போகிறோம் ...
அதுக்கும் ஜீப் அரேஞ்ச் பண்ணிட்டான் .
கைடா நமக்கு துணையா அவனும் வரான் ..."

" கிரேட் ... நல்லா பிளான் பண்ணியிருக்குற ..." சரி .. சாப்பிட்டு பிறகு நீ டிரைவ் பண்ணு . வந்தியா கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கட்டும் ..."

" ஒகே ... அப்புறம் நிலா ... உங்க பிரண்டு உமா நல்லா இருக்கிறாங்களா ..?",

" அவளுக்கென்ன நல்லாத்தான் இருக்கா ... ஏன் கேக்குறீங்க ...?",

" போன வாரம் லைப்ரரிக்கு போயிருந்தேன் .. அங்க அவங்களை ஒரு பையனோட பார்த்தேன் ... அதான் கேட்டேன் ."

" பையனோடவா ... அவ அப்படி எல்லாம் போக மாட்டாளே ... அவ ரிலேசன் யாராவது இருக்கும் ...'

" இல்லங்க ... நானும் அப்படித்தான் நினைச்சேன் .... அதை அவங்ககிட்டயும் கேட்டேன் ...
அவங்க இவர் என் லவர் . இப்பத்தான் கொஞ்சநாள் முன்பு நாங்க பிரண்ட்ஸா
ஆனோம் . இன்னம் நிலாவுக்கு சொல்லலை ...
தயவுசெய்து அவகிட்ட சொல்லிடாதீங்க ...
நானே அப்புறமா சொல்லிக்கிறேன்னு சொல்லிட்டாங்க ....

நானும் எதுக்குடா பிரண்ட்ஸுக்குள்ள சண்டையை மூட்டி விடுறதுன்னு சொல்லல ..."

ஜானி கூறியதைக் கேட்ட நிலா " அப்படியா சொன்னா அவ ... கிராதகி ...!,
நா இது வரைக்கும் எதுவுமே மறைச்சதில்லை ...
பிரபு ... நம்ம *கமிட்மெண்ட்ஸ்* உருவான அன்னிக்கே அவளைத் தேடி போயி சொல்லிட்டு டீரீட் கேட்டா குடுத்துட்டு வந்தேன் .
ஆனா அவ என்கிட்ட இவ்வளவு முக்கியமான விசயத்தை மறைக்கிறாளா ...
இருக்கட்டும் ... அவளை போயி வச்சிக்கிறேன் ..."
நிலா கோவத்துடன் முகம் மாறி உர்ரென்று அமர்ந்திருக்க

" இப்ப உனக்கு எதுக்கு கோபம் ... அவ சொல்லலன்னா .... இல்ல டிரீட் கொடுக்கலன்னா .." பிரபு நிலாவைப் பார்த்து கேட்க ,

" என்னயப் பார்த்தா எப்பிடித் தெரியுது ...
தீனிப்பண்டமா தெரியுதா ... பிரண்ட்ஸிக்குள்ளே எந்த ஒளிவு மறைவும் இருக்கக் கூடாதுன்னு எங்களுக்குள்ளே அக்ரிமெண்ட் தெரியுமா ...
அவளுக்கு இருக்கு சென்னை போனதுக்கப்புறம் ...."

" ஏன் நிலா ... பிரண்டு சொல்லலேன்றதுக்கே இப்படி கோவப்படறீங்களே ....
பாஸ் உங்ககிட்ட ஏதாச்சும் மறைச்சார்னா என்ன பண்ணுவீங்க ...?"

" ம் .... மறைச்சாதானே .... அவரு மேல எனக்கு நம்பிக்கை இருக்கு ... '

' அப்படி இல்ல ... இனிமேல மறைக்க வேண்டிய சூழல் வராலாமில்லையா ....?"

" ஏண்டா ... எல்லாம் சுமூத்தாதானே போய்கிட்டு இருக்கு .... இப்ப இது தேவையா ...? அது சரி
அவ பிரண்டு சொல்லவேணாமுன்னு சொன்ன விசயத்தை ஏன் இப்ப சொன்னே ...?"
பிரபு கேட்க ,

" அது போனவாரந்தானே சொல்லமாட்டேன்னு சொன்னேன் ...
இது இந்த வாரம் ..."

" ஒழுங்கா ஓடிக்கிட்டு இருந்த வண்டியை சட்டுனு பிரேக் போட வச்சிட்டியே ... நல்லா இருக்கா ...?"

பிரபு ஆதங்கத்தை ரசிச்ச ஜானி " வண்டி ஓவர் ஸ்பீடு போகக்கூடாது ... அதுக்குதான் சடன் பிரேக் போட்டேன் ... எப்படி பாஸ் ... என்னை வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டனும்போல இருக்குதா ...?" சிரிக்காமல் ஜானி சொன்னதைக் கேட்டு மற்ற மூவரும் கலகலவென்று சிரிக்கத்தொடங்கினர் .

இரவு ஒன்பதுமணியளவில் அவர்கள் பெரியகுளம் சென்றடைய ,

ஜானியின் நண்பன் கதிரவன் அவர்களை ரிசீவ் செய்து நல்ல பிரபலமான ஓட்டலில் தங்க ஏற்பாடு பண்ணினான் .

ஜானியும் வந்தியனும் ஒரு அறையிலும் நிலா பிரபுக்கு தனித்தனி அறைகளும் ஒதுக்கப்பட
நால்வரும் தங்கள் அறைகளில் தஞ்சமடைந்தனர் .

புது இடம் என்பதால் பிரபுவுக்கு தூக்கம் வரவில்லை ...

தான் கொண்டு வந்திருந்த புத்தகத்தை எடுத்து படிக்கத் தொடங்கினான் .

அப்படியே உறங்கிவிட தன் கால்களை யாரோ பிடித்து விடுவது போல் உணர்வு தோன்ற

நிலா தான் தூக்கம் வராமல் இங்கே வந்து தன் காலை பிடிக்கிறாள் என நினைத்து ,

' கள்ளி ... மனசுல ஆசையை வச்சுக்கிட்டு தான் பட்டும் படாமலும் எங்கிட்ட பழகுகிறாளோ ...

கண்ணைத் திறக்காமலேயே மெல்ல எழுந்திருக்கலாம் ' என நினைத்து மெல்ல கட்டிலில் எழுந்து அமர்ந்து கண்ணைத் திறந்தான் .

யாரும் அங்கிருப்பதாக தெரியவில்லை ...
' ஆமாம் நாம் தான் கதவை லாக் பண்ணியிருக்கோமே

...
அப்படியிருக்க நிலாவால் எப்படி வர முடியும் ...?
தூக்கத்துல கனவா இருக்கும் ' என நினைத்துக்
கொண்டவனாய் மீண்டும் உறங்கிப் போனான் .

காதோரம் உஷ்ணக்காற்று படவே திரும்பி படுத்தான் .

அவனருகில் அமர்ந்திருந்த உருவம் மெல்ல சிரித்தது .

பின் அவன் காதோரம்

**'நிரமலேஷ்வரா.... நிலவு மயங்கி முற்றம் வரும். நீசனுடைய
நிர்மலங்கள் நீராய் போகும்... மாறனின் வம்சம் களித்திடும்....
சிகரம் சங்கடம்... சஞ்சினியை விட்டு விடாதே...
சதிகாரன் சடுதியில் சுட்டெரிப்பான்... சமயம் சாதிக்கும்...!'**

காதோரம் கேட்ட குரலுக்கு ' ம் ... ம் '... என்று
முனகிக்கொண்டே பதில் உரைத்தான் பிரபு .

" காலையில் கண்விழித்தவனுக்கு இரவு கனவில் கேட்ட
வார்த்தைகள் மனதில் வந்து நின்றது .
' ஏதோ சங்கடம்னு கேட்டேமே ... ஏதாச்சும் பிரச்னை
வருமா .... எதற்கும் ஜாக்கிரதையா இருக்கனும் ...'
என்றெண்ணியவாறு எழுந்தான் .

காலை ஏழு மணிக்கெல்லாம் அனைவரும் ரெடியாகி
மலைமேல் செல்வதற்கு தயாரானார்கள் .

ஜீப் நின்று கொண்டிருக்க அனைவரும் அதில்
ஏறினார்கள் .

கதிரவன் உரத்த குரலில் தூரத்தில் நின்றிருந்தவனை "
மாயவா ... வண்டியை எடு " என்று கூற ,

நால்வரும் திடுக்கிட்டுப் பார்த்தனர் அவனை ..

முரட்டு மீசை உடைய ஆஜானுபாகுவாய் கறுத்த
நிறத்துடன் உடையவன் அவர்களை நோக்கி வந்தான் .

வந்தவன் பிரபுவை வைத்த கண் வாங்காமல் உற்று நோக்கியவாறு விரைப்பாக வந்து நின்றான் .

# அத்தியாயம் 14

மாயவா என்று கதிரவன் அழைக்க ,
முறுக்கு மீசையுடன் ஆஜானுபாகுவாய் பிரபுவை பார்த்துக் கொண்டே வருவதைப் பார்த்த நால்வரும் சிறிது திகைத்துதான் போனார்கள் .

இப்பொழுதெல்லாம் மாயவன் என்கின்ற வார்த்தை அடிக்கடி கேட்கப்படுவதால் ஏற்பட்ட நிலை .

மாயவன் என்ற ஜீப் டிரைவர்
பிரபுவிடம் வந்து ,

" வணக்கம் சார் ... நீங்க லாயர் பிரபுதானே ...?" என்று கேட்க

" *ஆமாம்* .... உங்களுக்கு என்னை தெரியுமா ...?" என்று பிரபு கேட்க ,

" நாலு வருசத்துக்கு முந்தி என்னோட பங்காளி என் நிலத்தை எனக்குத் தெரியாம வித்துட்டான்னு கேஸ் குடுத்தேன் ... நீங்க அதுக்காக வாதாடி எனக்கு அந்த நிலத்தை திருப்பி வாங்கிக் குடுத்தீங்களே ... ஞாபகம் இல்லீங்களா ...?"
என்று மாயவன் கேட்க ,

சிறிது நேரம் யோசித்த பிரபு
" ஆமாம் ... இப்ப ஞாபகம் வருது .
பெரியதுரை தானே அவரு பேரு ...?"

" சரியா ஞாபகம் வச்சிருக்கீங்க ...
உங்களை தூரத்துல பார்த்ததுமே நா
கண்டுபிடிச்சிட்டேன் ....
ஐயா ... நல்லாயிருக்கீங்களா ...?"

" ம் ... நல்லா இருக்கேன் ... இங்க மேகமலை போகலாம்னு கிளம்பி வந்திருக்கோம் ... கதிரவன் உங்களைத்தான் எங்களுக்கு கைடா கூட்டி வராரா ?"

", ஆமாங்கய்யா ... யாரு வந்தாலும் என்னைத்தான் அனுப்புவாரு ... எனக்கு இங்க சுத்து வட்டாரம் முழுக்க அத்துப்படி ...
இன்னிக்கி உங்களுக்காக வரேன்னு ரொம்ப

சந்தோசமா இருக்குங்க ...
என்னோட நன்றியை இப்பிடியாவது தீர்த்துக்கிறேன் ...",

" ரொம்ப நல்லது ... நீங்க என் மேல வச்சிருக்கிற
பிரியம் .

" ரொம்ப அழகான அமைதியான வெண்பணி
மேகங்கள் சூழ்ந்த இடமுங்க ... நீங்க உங்க
பேமிலியோட நல்லா என்ஜாய் பண்ணலாங்க ...
எனக்கு இந்த மலையில நிறைய இடம் தெரியுங்க ... நா
உங்களுக்கு எல்லா இடத்தையும் சுத்தி காட்டுறேனுங்க
....
ஐயா ... அங்க தங்கி பாக்கறதுங்களா ... இல்ல
சாயங்காலமே திரும்பிடறதாங்க ...?"

" இல்லை ... நைட் ஸ்டே பண்ணிட்டு நாளைக்கு
ஈவினிங் கீழே இறங்கிட வேண்டியதுதான் ..."

" இன்னிக்கு பௌர்ணமி வேற ... மலை
சூப்பரா இருக்கும் ... "

ஜீப்பில் அனைவரும் ஏற மாயவன் ஜீப்பை ஓட்டியபடி
அந்த இடங்களைப்பற்றிக் கூறிக்கொண்டே வந்தான் .

சின்னமனூரிலிருந்து மேகமலை அடிவாரம் வந்தனர் .

பார்க்கும் இடங்களிலெல்லாம் முந்திரி மரங்கள்
காணப்பட

", என்ன இங்கு அதிகமா முந்திரிதான் இருக்கு ....?"
வந்தியத்தேவன் கேட்க ,

" இங்க விளையிற முந்திரிப்பழம் ஒயின்
தயாரிக்கப்படுகிறது ..." என்று கதிரவன் கூற ,

" இஸிட் ... திராட்சையிலதானே ஒயின் தயாரிப்பாங்க
..?"
நிலா கேட்க ,

" பேக்டிரி எங்க இருக்கு ...? போகும்போது
நிறைய வாங்கிட்டுப் போகலாம் ...", ஜானி கூற ,

" எங்க போனாலும் இந்த நினைப்பு போகாதா ...?" நிலா
கடிந்து கொள்ள ,

" ஹலோ மேடம் ... நாம எந்த இடத்துக்கு வந்தாலும் அங்க என்ன சீப்பா கிடைக்குதோ அதை வாங்கிக்கிட்டா
மணி சேவ் ஆகும் தெரியுமா ...?

" ஆமா ... வாங்கறதே வேஸ்டுதான் . இதுல மணி சேவ் பண்ணப் போறீங்களா ...?"

" மேடம் ... இங்க பேக்டிரில இத வாங்க முடியாது ... எல்லாம் எக்ஸ்போர்ட் தான் ...'
கதிரவன் கூற ,

" போதுமா ... உன் வயித்தெரிச்சல் ... சரியாயிடுச்சா ...?" ஜானி வருத்தப்படுபவன் போல் முகத்தை வைத்துக் கொள்ள ,

" ஜானி .. இந்த முகம் நல்லாயில்லை ... வேற முகத்தை கொண்டுவாங்க ..." நிலா சிரித்துக் கொண்டே கூற ,

" இந்த முகத்தைப் பார்த்துதான் எத்தனைப் பொண்ணுங்க பின்னால சுத்துராங்க ... என் பிரண்ட்ஸெல்லாம்
என்னப் பாத்து பொறாமைப் படறாங்க தெரியுமா ....?",

" ஐயோடா ... சிங்கப்பூர் பொண்ணு சுத்தி வராங்க ... ஜப்பான் பொண்ணு ஜாக்கிங் வராங்கன்னு ரீல் விடறதுல மன்னனா நீங்க ... நம்பிட்டோம் நாங்களும் ...'
நிலா கிண்டல் பண்ண

" நிலா ... சூப்பர் . உங்கிட்ட இதை நா எதிர்பார்க்கலே ... வெல்டன் ..." நிலாவின் கையில் ஹைஃபை பண்ணிணான் பிரபு .

", பாஸ் இது ரொம்ப ஓவரா தெரியல ..
ம் ... காதலுக்கு கண்ணில்லைன்னு பெரியவங்க சும்மாவா சொன்னாங்க ..."

" பிரதர் ... அதனாலதான் நீங்க கண் இல்லாமலே திரிஞ்சி டினா அண்ணி மேல மோதி அடிவாங்கிக்கிறீங்களா ...?"
வந்தியத்தேவனும் தன் பங்குக்கு ஜானியைக் கலாய்க்க ,

" பாருடா ... மீன்குஞ்சுகூட நடனம் ஆடுது ..."
ஜானி பேச சிரிப்பலை தொடர்ந்தது .

அடிவாரத்திலிருந்து தென்பழனி செக்போஸ்ட் வர அங்கு உள்ள வழிவிடும் முருகன் கோவிலில் இறங்கி அனைவரும் வழிபட்டனர் .

பல ஏர்பின் வளைவுகள் தாண்டி ஜீப் சென்று கொண்டிருந்தது .

பள்ளதாக்குகளில் நீர்நிலைகள் காணப்பட்டது .

சரிவுகளில் தேயிலைத் தோட்டங்கள் கண்ணுக்கு குளுமையாய் காட்சியளிக்க ,

நால்வரும் அதிக உற்சாகத்தோடு காட்சிகளை ரசித்து வந்தனர் .

12 கிமீ தொலைவில் ஹைவேவிஸ் என்ற ஊர் வந்தது .

அங்கே உள்ள ஓட்டலில் அனைவரும் இறங்கி சூடாக காபி அருந்தி விட்டு மீண்டும் பயணத்தை தொடங்கினார்கள் .

தூரத்தில் காணப்பட்ட ஹைவேவிஸ் டேமை கதிரவன் சுட்டிக்காட்ட

தூவானம் எனுமிடத்தில் ஜீப்பை நிறுத்தி அனைவரும் இறங்கி வியூ பாயிண்டை ரசித்தனர் .

இடத்தின் பெயருக்கேற்றாற்போல அங்கே சிறுதூரல்கள் போட்டுக்கொண்டே இருந்தது .

கதிரவன் இவ்விடத்தின் சிறப்புகளை கூறிக்கொண்டே வந்தான் .

மேகமலையைச் சுற்றி ஐந்து அணைகள் உள்ளதாகவும் அதில் இரைச்சல் பாறை நீர்வீழ்ச்சியே சுருளியாறாக மாறி வைகைநதியில் கலக்கிறது எனக் கூறும் போது ,

மலைச்சரிவுகளில் வரையாடுகள் மேய்ந்து கொண்டிருப்பதைப் பார்த்து அனைவரும் தங்கள் போன்களில் போட்டோ எடுத்துக் கொண்டனர் .

இருநூறு *சதுரகிமீ* சுற்றளவில் காபி தேயிலை பயிரிடப்படுவதாகவும் தனியார் நிறுவனங்களே இங்கு

உள்ளதாகவும்
கூற

முப்பது கிமீ தூரம் போனதும் சாலை மண்சாலையாக கரடு முரடாக இருந்தது .

ஜீப் மெல்ல செல்ல ஆரம்பித்தது .

அங்குள்ள மரங்களிலும் ரோட்டோரங்களிலும் சிங்கவால் குரங்கு அலைந்துக் கொண்டிருந்தது .

அதைப்பார்த்த நிலா குழந்தையைப் போல் உற்சாகமானாள் .

1996 வரை தேனி மாவட்டம் மதுரை மாவட்டமாக இருந்ததாகவும் அதன்பிறகே தேனி மாவட்டமாக மாறியதாகவும் ,
தமிழ்நாடு 2009 முதல் தான் சுற்றுலாத்தலமாக மேகமலையை அறிவித்தது என்றும் கதிரவன் கூற அவன் கூறும் தகவல்களை ஆர்வத்துடன் கேட்டனர் .

இங்கு ஊர்கள் அதிகமில்லாதது போல இருக்கிறதே என்று வந்தியத்தேவன் கேட்க ,

பள்ளத்தாக்கில் கொஞ்சம் மக்களே வசிப்பதாகவும் , இங்கிருக்கும் தேயிலை காபி தோட்ட வேலைகளுக்கு கீழிருந்துதான் மக்கள் வந்து செல்வதாகவும் கூற ,

நாம் இவ்வளவு தூரம் வந்தபிறகும் பேருந்துகள் எதுவும் வந்த மாதிரி இல்லியே என்று ஜானி கேட்க ,

ஒரு நாளைக்கு மூன்று முறைதான் பேருந்து விடப்படுவதாகவும் தனியார் ஜீப்புகளே அதிகம் பயணத்திற்கு பயனில் இருப்பதாகவும் மாயவன் கூறினான் .

மூன்று மணி நேர பயணத்தில் மேகமலையை அடைந்தனர் .

கீழே இறங்கிய அனைவரும் அங்கே மேகங்கள் கைகளில் தவழ்ந்து செல்வது போல் செல்வதைப் பார்த்ததும்
குதூகலமாயினர் .

அங்கே தங்குவதற்கு மிகவும் வசதியான காட்டேஜில் புக் செய்யப்பட்டு இருந்ததால்
அனைவரும் ரெஸ்ட் எடுக்க சென்றனர் .

மதியம் ஒருமணி ... சாப்பிடுவதற்கு அனைவரும் ஒன்றுகூடினர் .

எங்கே செல்வது என்று டிஸ்கஸ் பண்ணி அதற்கு தயாரானார்கள் .

திடீரென்று யானைகள் வழி மறிக்கும் என்றும் அதனால் தகுந்த பாதுகாப்புடன் செல்வதே நல்லது என்றும் ரிசார்ட் நிர்வாகம் கூறவே

ஒரு கைடை அழைத்துக் கொண்டு கிளம்பினார்கள் .

மதியநேரத்திலேயே குளிர் எடுக்க ஆரம்பித்து விட்டது .

அமைதியான அதிக ஆரவாரமில்லாத வியாபார நெரிசல் இல்லாமல் மனதுக்கு இதமான சூழ்நிலை நிலவியதால்
காதலர்களுக்கு அது உன்னத பூமியாக இருந்தது .

பிரபுவும் நிலாவும் ஒருவரையொருவர் கைகளைப் பற்றிக் கொண்டு கண்களால் காதல் மொழி பேசி அவர்களுடன் வந்துக் கொண்டிருந்தனர் .

ஜானியும் வந்தியனும் அவர்களை விட்டு விலகி அவர்களை பிரீயாக்கினர் .

இரவு அவரவர்களுக்கு தனித்தனி அறைகள் இருந்தாலும்

அனைவரும் பிரபுவின் அறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர் .

" பாஸ் ... ரொம்ப அமைதியான சூழலா இருக்குல்ல ...!"

" ஆமாம் ... அதிக ஆரவாரமாவே பழகிட்டமா ...
இது ஒரு வித்தியாசமான அனுபவமா இருக்கு ...."

" மற்ற ஹில் ஸ்டேசன் போல இன்னும் மக்களிடையே இன்னும் இந்த இடம் ரீச்சாகலை ... இப்பத்தான் நெட்டிசன்கள் இந்த இடத்தைப் பற்றி மக்களிடையே கொண்டு போராங்க ...

அதனால இப்ப மக்கள் சீசன்ல அதிகமா வர ஆரம்பிச்சிருக்காங்க ..." கதிரவன் கூற ,

" ரீச்சாயிடுச்சினா இதுவும் பொலூசன் எர்த்தா மாறிடும் ..." பிரபு கூற

" வேண்டாம் ... இப்படியே இருக்கட்டும் ..." நிலா பேசவும்

" சரி போரடிக்குது ... கார்ட்ஸ் போடலாமா ... ?" ஜானி கேட்கவும் அனைவரும் விளையாடுவதற்கு தயாரானார்கள் .

இரவு நீண்ட நேரம் விளையாட்டு முடிவடையாமல் நீண்டுக் கொண்டிருக்க
தனக்கு தூக்கம் வருவதாக நிலா கிளம்பி சென்று விட்டாள் .

விடிந்து வெகுநேரம் அனைவரும் தூங்கிவிட

கதிரவன் வந்து அனைவரையும் வந்து எழுப்பி " நேரமாகிவிட்டது ... பார்க்க கூடிய இடங்களைப் பார்த்து விட்டு இருட்டுவதற்குள் கீழே இறங்கி விடலாம் ..."
என்று கூறவே
அனைவரும் தங்கள் கடமைகளை செய்ய கிளம்பினார்கள் .

அனைவரும் கிளம்பி காட்டேஜின் விசிட்டர் அறையில் கூடினார்கள் .

நிலா இன்னம் வரவில்லை ...

சிறிது நேரம் காத்திருந்த பிறகும் நிலா வராததால் பிரபு நிலாவிற்கு போன் செய்ய போன் மணி அடித்துக் கொண்டே இருந்தது .

" சரி நான் போய் அவளை அழைத்து வருகிறேன் " என்று கூறிவிட்டு பிரபு நிலாவைத் தேடி அவள் அறையைத் தேடிச் சென்றான் .

அவள் அறைக்குச் சென்று கதவைத் தட்டினான் .

எந்த பதிலும் இல்லாததால் கதவைத் தள்ள
கதவு வெளிப்பக்கம் பூட்டப்பட்டிருப்பது தெரிந்தது .

உடனே கீழிறங்கி வந்தவன் அறை பூட்டப்பட்டிருப்பதாக கூறவும் அனைவரும் கலக்கத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர் .

ரிசப்ஷனில் சென்று நிலாவை விசாரிக்க " ஆமாம் சார் ... நீங்க தானே அவருடன் இன்று காலை ஆறுமணியளவில் வெளியே செல்வதாக சாவியை குடுத்துவிட்டுச் சென்றீர்கள் ... நான் கூட இவ்வளவு காலையில் வெளியில் சென்றால் பனி அதிகமாக இருக்கும் என்று கூறினேன் ... இல்லை ... பக்கத்தில் தான் செல்கிறோம் ... அரைமணி நேரத்தில் வந்து விடுவோம் என்று கூறிச் சென்றீர்கள் .... இப்ப என்னிடம் வந்து கேட்கிறீர்கள் ...?"
என்று கூற ,

" என்ன .... நான் அழைச்சிக்கிட்டு போனேனா ...! என்ன சொல்றீங்க ... நான் இப்பதானே எழுந்திருச்சேன் ...?"
அதிர்ச்சியுடன் பிரபு கூற

" என்ன சார் குழப்புறீங்க ... இருங்க அவங்க குடுத்த சாவி இருக்கான்னுப் பாக்கிறேன் ..."
என்று கூறிவிட்டு மாட்டப்பட்டிருந்த சாவிகளைப் பார்த்த ரிசப்ஸனிஸ்ட்

" சார் ... இங்க பாருங்க அவங்க ரூம் சாவி . அவங்க வந்து கலெக்சன் பண்ணிக்கலை ..."

அவர் கூறிய செய்தி அனைவருக்கும் பயத்தைக் கொடுத்தது .

பிரபுவுக்கு இரவு தன் கனவில் கூறிய ஆபத்து செய்தி நினைவுக்கு வர

" ஜானி ... எனக்கு பயமா இருக்குடா ... நம்மைத் தொடரும் ஆபத்து இங்கேயும் தொடருதா ...?"
என்று கலக்கத்துடன் கேட்க ,

" அப்படியெல்லாம் இருக்காது ... நீங்க அதைரியப்படாதீங்க ... நாம போயி அவங்களைத் தேடுவோம் ... வாங்க " என்று கூறவும்

ஜீப்பை எடுத்துக் கொண்டு வழியெங்கும் பார்த்துக் கொண்டே சென்றனர் .

ரொம்ப நேரமாகியும் நிலாவை அவங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை ....

# அத்தியாயம் 15

நிலாவைக் காணவில்லை என்று
கவலையடைந்த பிரபு , ஜானி , வந்தியத்தேவன் ,
கதிரவன் , மாயவன் ஐவரும் அவளைத் தேடி தாங்கள்
தங்கியிருந்த ரிசார்ர்ட்டிலிருந்து படப்படப்புடன்
வெளியே வந்தனர் .

" எல்லோரும் ஒன்றாகவே தேடுவோம் ...
உங்களுக்கு புது இடம் . வழி தெரியாமல் விலங்கு
நடமாட்டம் பகுதிக்கு சென்று விடக் கூடாது அல்லவா ..."
கதிரவன் கூற ,

" நல்லது ... வாங்க ...."

முக்கியமான இடங்கள் வியூ பாயிண்ட் பகுதி மக்கள்
நடமாட்டம் இல்லாத பகுதி எல்லா இடங்களிலும் தேடி
களைத்துப்
போனவர்கள் என்ன செய்வது என்று பிரமை பிடித்து
ஓர் இடத்தில் அமர்ந்து
விட்டனர் .

பிரபு தலை இரண்டும் பிடித்தபடி கண்ணில் நீர் வழிய
அமர்ந்து கொண்டிருந்ததைப் பார்த்த நண்பர்கள்
அவன் அருகில் மெல்ல அமர்ந்து அவன்
தலையிலிருந்து கையை
எடுத்து விட்டனர் .

" பாஸ் .... நிலாவுக்கு ஏதாவது ஆகியிருந்தால் நம்
எல்லோருக்குமே பிரச்சினைதான் . அதிலும் நீங்கள்
தான் அழைத்துச் சென்றதாக அந்த மானேஜர் வேறு
கூறுகிறார் .
இது பிரச்சினையை நம்மை நோக்கி குற்றம்
சாட்டுவதற்கு முக்கிய ஆதாரம் ....!" ஜானி
கவலையுடன் கூற

" என்னைத் தூக்கில் கூட போடட்டும் ...
கவலையில்லை . ஆனால் என் நிலா இல்லாத உலகில் நான் வாழ மாட்டேன் ... இது மட்டும் உறுதி ....!" பிரபு கண்களில் வெற்றுப் பார்வை வைத்தபடி பேச ,

" கேப்டன் .... கண்டிப்பாக நிலாவுக்கு ஏதும் நடந்திருக்காது . இதை நான் உறுதியாக கூறுகிறேன் . என் உள் மனசு சொல்லுது ...
பாருங்கள் இன்னும் கொஞ்ச நேரத்தில் நிலா நமக்கு கிடைத்து விடுவார்கள் ..."
வந்தியத்தேவன் ஆறுதல் படுத்த முயன்றான் .

கதிரவனும் மாயவனும் வேறு பக்கம் பார்த்து விட்டு களைப்புடன் இவர்கள் அருகில் வர

இவர்களை மூவரும் நிமிர்ந்துப் பார்க்க
அவர்கள் உதட்டைப் பிதுக்கினார்கள் .

" ஜானி ... என்னால முடியலடா .... என் நிலா இல்லாமல் இனிமே நான் வாழ விரும்பவில்லை ... நிலா .... நிலா ... இதோ நானும் உன் கூடவே வந்துவிடுகிறேன் ....
நீ மட்டும் தனியாக போய் விடாதே ....!" பித்துப் பிடித்தவனைப் போல் பிரபு எழுந்து மலையின் ஓரம் வேகமாக நடக்கத் தொடங்கினான் .

இதைக் கண்ட நண்பர்கள் அதிர்ச்சியடைந்து அவன் பின்னால் ஓடி அவனைத் தடுத்து நிறுத்த முயல , அவர்களை தள்ளி விட்டு மூர்க்கனைப் போல் ஒரே சீரான நடையில் வெற்றுப் பார்வை பார்த்தபடி நடக்க பின்னாலேயே அனைவரும் கத்திக் கொண்ட ஓடி வந்தனர் .

வேகமாக வந்து கொண்டிருந்தவன் சட்டென்று நின்றான் .

**'நிர்மலேஷ்வரா மனதிற்கிசைந்த மல்லிகை சற்று வடபுறமாக சென்று**
**தேடு .... மனத்தில் மணத்தோடு மாயவனை அகற்றி**

**மலர்ந்திருக்கிறாள்** .... '
காதில் குரல் கேட்டவுடன் சட்டென்று நின்றவன் திரும்பி

" ஜானி .... சீக்கிரம் வாங்க ... இந்தப் பக்கமா போயி தேடுவோம் ...." என்று கூறிக்கொண்டே வேகமாக ஓடினான் .

அவன் ஓடுவதைக் கண்டவர்கள் அவன் பின்னாலேயே பதட்டத்துடன் ஓடினர் .

மலையின் பள்ளத்தாக்கு ஓரம் இருந்த பாறையின் மேல் அமர்ந்திருந்த உருவத்தைப் பார்த்தவன் " நிலா ... ஆஆஆ "
என்று கத்திக் கொண்டே அந்த உருவத்தின் அருகில் ஓடிவர
திரும்பிப் பார்த்த உருவத்தைப் பார்த்ததும் திகைத்து நின்று விட்டான் .

தான் கூப்பிட்டக் குரலுக்கு திரும்பிப் பார்த்த உருவம் நிலா இல்லாமல் வேறொறு பெண்ணாக இருக்க அவள் அருகில் வாலிபன் ஒருவனும் அமர்ந்திருப்பது அப்போதுதான் தெரிந்தது .

இவர்கள் *அனைவரும்* தங்கள் அருகில் மூச்சிரைக்க ஓடி வந்து நிற்பதைப் பார்த்ததும் திகைத்து எழுந்த ஜோடி
பயத்துடன் " ஏமி ... ஏமி காவாலி ... மீரு எவுரு ...?' நடுங்கிக் கொண்டே கேட்க ,

" ஏமி லேதம்மா ... மன செல்லலு தொருகி போயிந்தி ... லாங் சைட்ல சூஸ்தேதானிக்கி
மன செல்லலு நூவன்னிட்டி சந்தோசமாயி பரீக்க ஓச்சேசிந்தோம் .... வீ ஆர் வெரி சாரி ...!"
வந்தியத்தேவன் கூற

" சார் ... ஒக்க லேடி அக்கட உந்தி . நூவு அக்கட சூடண்டி ...' என்று தங்களுக்கு நேர்எதிரே இருக்கும் மரத்துப்

பக்கம் காட்ட
அனைவரும் வேகமாக அங்கு செல்ல

பெரிய ஆலமரம் இருக்க அது மறைத்தப் பக்கம் கீழே உட்காருவதற்கு ஏற்றாற்போல் சதுரமான பாறை இருக்க ,
அதில் உட்கார்ந்தபடி இலைகள் கீழே நிறைய இருக்க அதை நார் போல் கிழிக்கப்பட்ட மரப்பட்டையினால் நீளமாகக் கோர்த்துக் கொண்டிருந்த நிலா அந்த இலை மாலையை கழுத்தில் போட்டு பார்ப்பது போல் வைத்துப் பார்த்து விட்டு ,

" பிரபு .... இப்ப நீங்க வரலாம் ... மாலை கட்டி விட்டேன் .... நீங்க சொன்ன கால் மணி நேரத்தில் . நீங்க தோத்துட்டீங்க ...
வாங்க ... நூறு தோப்புக்கரணம் போடுங்க ...!"
மரத்தின் பின்பக்கம் பார்த்துக் குரல் கொடுக்க

பிரபு அவள் குரலினைக் கேட்டு வெகு வேகமாக மரத்தைச் சுற்றி வந்து மூச்சிரைக்க அவள் எதிரில்வந்து நின்றான் .

" வந்துட்டீங்களா .... இந்தாங்க மாலை ...." என்று அவன் கழுத்தில் போட்டாள் .
பின்பு " என்ன .... நான் ஜெயிச்சிட்டேனா ...
நீங்க தோத்துட்டீங்க .... போடுங்க நூறு தோப்புக்கரணத்தை ... சால்ஜாய்ப்பெல்லாம் சொல்லக்கூடாது ...." என்று சொல்லி விட்டு சிரிக்க

அதுவரை அவளையே இயலாமையால் தோற்றவனைப்போல் பரிதாபமாக பார்த்துக் கொண்டிருந்த பிரபு திடீரென்று
அவளை இறுக அணைத்துக் கொண்டு
" நிலா ... நிலா .... என்று சொல்லிக் கொண்டே மாறி மாறி அவள் கன்னத்தில் ஆவேசமுடன் முத்தமிடத் தொடங்கினான் .

இதை சற்றும் எதிர்பார்க்காத நிலா அதிர்ச்சியடைந்து அவன் செயல்களை தடுக்காமல் பிரமை பிடித்து நின்று விட்டாள் .

சிறிது நேரங்கழித்தே சுயநிலை அடைந்தனர் இருவரும் .
சட்டென அவன் பிடியில் இருந்து தன்னை விலக்கிக் கொண்ட நிலா
" பிரபு .... உங்களுக்கு என்ன ஆச்சு ... ஏன் இப்பிடி பிஹேவ் பண்றீங்க ...
என்னமோ ரொம்ப நாள் பிரிஞ்சி ஒண்ணு சேர்ந்தது மாதிரி இருக்கு உங்க ஆக்டிவிட்டீஸ் .... வொய் திஸ் கொலை வெறி ...?"
நாணத்துடன் சற்று அவனை விட்டு விவகி அவள் கேட்க ,

அதுவரை தள்ளி நின்று கவனித்துக் கொண்டிருந்த நண்பர்கள் அருகில் வர ,

அவர்களைப் பார்த்ததும் நிலா
" ஹேய் .... என்னப்பா நீங்களும் இந்த இடத்தை கண்டு பிடிச்சி வந்துட்டீங்களா ...
இல்லை ... உங்க பாஸ் போன்ல இடத்தைச் சொல்லி வரச் சொன்னாரா ...?"

அவள் கேள்வி கேட்க அவளை கேள்வி கேட்க ஜானி முயல

சட்டென்று ஜானியின் கையை அவளுக்குத் தெரியாமல் அழுத்திப் பிடித்த பிரபு தலையாட்டி வேண்டாமென்று கூற

புரிந்து கொண்ட ஜானி
", இல்ல நிலா ... நீங்க இருக்குற இடம் எங்களுக்குத் தெரியாது .
நாங்கள் இந்தப் பக்கமாக பார்த்துக் கொண்டே வந்தோம் .

உங்கள் குரல் போல் கேட்கவே நீங்களா இருக்குமோ என்று சந்தேகத்திலேயே வந்துப் பார்த்தோம் .... கரெக்டா நீங்கதான் இருக்கீங்க ....!" என்று கூறியதும்

" காலையில இவரு வந்து கூப்பிடும் போதே
நான் சொன்னேன் ... எல்லாரையுமே அழைச்சிக்கிட்டே போகலாம்னு .
இவுருதான் அவங்க இன்னும் எந்திரிக்கலை ... நாம கொஞ்ச நேரம் தனியா சுத்திப் பார்த்துட்டு வருவோம்னு சொன்னாரு ...."

" ஆமா .... சீக்கிரமே வந்துட்டீங்களே . சாப்பிட்டீங்கிளா ...?"
ஜானி கேட்க ,

" ஆமால்ல ... மணி இப்ப என்ன ...?"
என்று பார்த்தவள் ,

" அட .... மணி ஒன்னாயிருக்கு .... இதுவரை எனக்கு பசியே தெரியலையே ... என்ன ஆச்சரியம் ...?"

வியந்து அவள் கூறிய வார்த்தைகள் அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தன .

ஜானி அவளை திசைத் திருப்ப
" காதலில் கட்டுண்டால்
நூறு காலமும்
ஒரு நொடி தான் ...!
ரெண்டு பேரும் யாருக்கும் தெரியாம
சிறகடிச்சி பறந்துகிட்டு இருந்தீங்கள்ள ... அதான் உங்க பசி எல்லாம் சேர்த்து எங்ககிட்ட குடுத்திட்டீங்க போலும் .
கொஞ்சம் உங்க காதலுக்கு பிரேக் கொடுத்தா ...
நாங்களும் பசி நீங்கி சற்று இளைப்பாறுவோமல்லவா ...?",
ஜானியின் கவித்துவ பேச்சில் கலகல வென்று சிரித்த நிலா

" ஜானி ... ரொம்ப அழகா பேசுறீங்க ... உங்க பசி நல்லாவே தெரியுது எல்லோர் முகத்திலும் .
ஆனா எனக்கு ஒரு சந்தேகம் ....?"
என்று அவள் நிறுத்த ,

சட்டென்று ஜானியும் பிரபுவும் ஒருவரையொருவர் பார்க்க ,

கதிரவன் " ஏங்க மேடம் நீங்க பேசுறது சரியா ....
உங்களைக் காணாம நாங்க பட்ட பாடு எங்களுக்குத் தானே தெரியும் ...?"
படபடவென்று பேசியவனை

" சாரி ... உங்க யார் கிட்டயும் சொல்லாம வந்தது தப்புதான் . அப்படியே வந்திருந்தாலும் சீக்கிரமா திரும்பியிருக்கணும் .... இயற்கை ரசிப்பில் நேரம் போனதே தெரியவில்லை .
வாங்க ... போகலாம் ...." என்று கூறியபடி நிலா கிளம்ப ,

வந்தியா ஜானியை பின்னுக்கு இழுத்து ,
" என்ன நடக்கிறது என்றே எனக்குப் புரியவில்லை ....
குழப்பமாக இருக்கிறது ...
கொஞ்சம் சொல்றீங்களா ... பிரதர் ...!"
என்று கூற ,

" இங்க எதுவும் பேசாதே ... நான் சென்னை போனப்புறம் விரிவாக உனக்கு கூறுகிறேன் .
அதுவரை நீ வேடிக்கை மட்டும் பார் . மற்றவைகளை குறித்து எதுவும் பேசாதே ...!"
அவன் கூறிய விளக்கத்தில் மேலும் குழம்பிப் போனான் வந்தியத்தேவன் .

ரிசார்ட் வந்தவர்கள் சாவியை வாங்கச் செல்ல மேனேஜர் வந்து நிலாவைப் பார்த்தவுடன் சற்று நிம்மதியடைந்தவர் போல் அவளைப் பார்த்து
" என்னங்க மேடம் .... எங்களை ரொம்பவே பயப்பட வச்சிட்டீங்க ... இங்க பாதுகாப்பு இல்லாத பகுதிகள்

அதிகம் .
நீங்க யாருக்கிட்டயும் சொல்லாம போனது சரியில்ல மேடம் .
உங்களுக்கு ஏதாவது ஒன்னு நடந்திருந்தா உங்க கூட வந்தவங்க எல்லாருமே கம்பி எண்ணிக்கிட்டு இருக்கணும் . இனிமே இப்பிடி ஏதும் பண்ணிடாதீங்க ...?"
அறிவுரை கூறுவது போல் வார்ண் பண்ணவும் சற்று நிலகுலைந்த நிலா பிரபுவின் கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டு அவனை கோபப் பார்வைப் பார்த்தாள் .

ஒன்றும் பேசாமல் அறைக்கு வந்தவள் தொப்பென்று படுக்கையில் வீழ்ந்தாள் .

பின்னாலேயே வந்த பிரபு அவள் குலுங்கி குலுங்கி அழுதுக் கொண்டிருப்பதைக் கண்டு மெல்ல அவள் தோளை தொட்டு உலுக்க ,

சட்டென்று நிமிர்ந்த நிலா கோபத்துடன் அவனைப் பார்த்து
" எல்லாம் உங்களால் வந்த வினைதானே இது .
காலங்காத்தாலே தூங்கிகிட்டு இருந்தவளை எழுப்பி கிளம்பச் சொன்னீங்களே ....
அந்த மானேஜர் பேசும் போது நான்தான் அவளை அழைச்சிக்கிட்டு போனேன் ... இதில் பயப்பட என்ன இருக்கு என்று கேட்டிருக்கலாமில்லையா ...
வாயை மூடிக்கிட்டு சும்மா வர்றிங்க ..?
பிரண்சுகளும் ஏதோ வித்தியாசமா என்னைப் பாக்குறாங்க ....
எனக்கு பிடிக்கவே இல்லை ...
உங்களுக்காக உங்க சந்தோசத்துக்காகத் தான் நீங்க கூட்டிக்கிட்டுப் போன மலை உச்சிக்கெல்லாம் வந்தேன் ....
ஒரு இடத்துல என்னை தள்ளி விடற மாதிரியே நீங்க பிஹேவ் பண்ண நா சட்டுனு உங்க கையைப் பிடிக்க

நீங்க ஏதோ தேள் கொட்டுன மாதிரி கையை விடுக்கென்று பின்னுக்குத் தள்ளிவிட்டு நீங்க எனை விட்டு பின்னால செல்ல முயல , நல்ல வேளை நான் சற்று பாலன்ஸ் பண்ணிக் கொண்டேன் .
இல்லாவிட்டால் அதள பாதாளத்தில் விழுந்திருப்பேன் .
சரி போகலாமென்று நான் கூறியும்
நீங்கள் இங்கே அமர்ந்து இலைகளினால் மாலை கட்டிக் கொடு ... கட்டாவிட்டால் எனக்கு எனக்கு முத்தம் நூறு கொடுக்கவேண்டும் என்று கூறினீர்கள் ...
நான் சவாலை ஏற்று கட்டிவிட்டால் நூறு தோப்புக்கரணம் போட வேண்டும் என்று கூறினேன் .
நான் மாலை கட்டும் அவசரத்தில் உங்களை கவனிக்கவே இல்லை .
இப்பொழுதுதான் நினைவுக்கு வருகிறது ...
நீங்கள் அங்கு இருந்தமாதிரியே இல்லை .

ஒஹோ ... இப்போதுதான் புரிகிறது ...
நீங்கள் அவர்களுக்கு போன் போட்டு வரச் சொல்ல தூரமாக சென்றிருக்கிறீர்கள் ...
ஆனால் எல்லாவற்றையும் பண்ணிவிட்டு
பழி என் மேல் போடுவதா ...?"
மீண்டும் அழ ஆரம்பித்தாள் நிலா .

அவள் இதுவரை கூறியவற்றை பிரபுவும் அவனைத் தேடி பின்னாலேயே வந்த ஜானியும் வந்தியத்தேவனும் திகைப்படைந்து நின்றனர் .

ஜானி வந்திருப்பதைக் கவனித்த நிலா
" ஜானி .... ஏன் இப்படி எல்லோரும் திகிலடைந்த மாதிரியே இருக்கீங்க ...
ப்ளீஸ் ... சொல்லுப்பா .... எனக்கு மண்டையே வெடிச்சிடும் போல இருக்கு ...." என்று கேட்க ,

பிரபு தலையசைத்து கூறச் சொல்ல

ஜானி மெல்லமாக
நிலா ... நா சொல்றதைக் கேட்டு நீங்க பயப்படக்கூடாது .... காலையில உங்களை
கூட்டிக்கிட்டுப் போனது பாஸ் இல்லை ...
பாஸ் எங்க கூடத்தான் இருந்தாரு .

காலையில நாங்க லேட்டாத்தான் எந்திருச்சோம் .",...
நடந்த நிகழ்வுகளை ஜானி விவரிக்க விவரிக்க நிலா திகிலடைந்து மயங்கி சாய பிரபு தாவி அவளை தன் மேல் சாய்த்துக் கொள்ள

வந்தியா ஓடிச் சென்று பாட்டிலில் இருந்த நீரை குடுக்க அதை வாங்கி முகத்தில் தெளித்தான் ஜானி .

மயக்கம் தெளிந்த நிலா திக்கித்திணறி
" அப்போ இவரு மாதிரி வந்தது யாரு ...
எப்படி இவரு மாதிரியே வர முடியும் ...
ஐயோ .... தலை சுத்துதே ...
பிரபு எனக்கு பயமா இருக்கு ...
இல்லை ... நீங்கல்லாம் யாரு ... மாய உருவங்களா ....
எங்க என்னோட பிரண்ட்ஸ் ... அவங்களை என்னப் பண்ணீட்டீங்க ... பிரபு .... ஜானி ... வந்தியா ...
எங்கப் போயிட்டீங்க ... இந்த மாய பிசாசு உங்களையெல்லாம் என்னக் கொல்லப் பாத்த மாதிரி கொண்ணுடுச்சா ...?"
அலறிக் கொண்டே மீண்டும் மயங்கி விழுந்தாள் .

இவளின் அலறல் சத்தம் கேட்டு ஓடி வந்த கதிரவனும் மாயனும் அவள் மயங்கிய நிலையில் இருப்பதைப் பார்த்து திகைத்து நின்றனர் .

" டாக்டர் யாரும் பக்கத்துல இருக்காங்களா ...?"
ஜானி கேட்க ,

" இந்த ரிசார்ட்டுலேயே ஒரு டாக்டர் பேமிலி வந்து தங்கியிருக்காங்க ... நா அவரை கூட்டிக்கிட்டு வரேன் ..." என்று சொல்லி விரைந்துச் சென்றான் கதிரவன் .

நடுத்தர வயதுடைய டாக்டர் ஒருவர் கதிரவனுடன் வந்து மயக்கத்தில் இருக்கும் நிலாவை பரிசோதித்து விட்டு
ஒரு இன்ஜெக்ஷன் போட்டார் .
பிறகு அங்கிருப்பவர்களைப் பார்த்து
" நத்திங் டு வொரி அபௌட் திஸ் .
காலையில அவங்க சாப்டாங்களா ...?"
என்று கேட்க ,

" இல்ல சார் ... சாப்பிடாமலே வெளிய வந்துட்டாங்க ..." ஜானி கூற

" அதான் ... வேற ஒன்னுமில்லை ... அப்பறம் ஏதோ பயந்துருக்கிற மாதிரி நடுக்கம் இருக்குது ...
யானை ஏதாச்சும் பாத்து பயந்துட்டாங்களா ...?" டாக்டர் கேட்க ,

" ஆமாங்க டாக்டர் ... யானைக் கூட்டம் எங்க ஜீப்பை கிராஸ் பண்ணும் போது சன்னலோரமா பிளிறிச்சி ... அதப் பாத்து அவங்க கத்திட்டாங்க ...." சட்டென்று வந்தியத்தேவன் கூற

அனைவர் முகத்திலும் ஒரு திருப்தி .

டாக்டர் சென்ற சிறிது நேரத்தில் நிலா கண்விழிக்க

மாயவன் அருகில் சென்று தன் மடியில் இருந்த பொட்டலத்தைப் பிரித்து அவள் நெற்றியில் பூசி விட்டு

" இது எங்க குலதெய்வம் காளியம்மன் பிரசாதம் . இதைப் பூசிக்கிட்டா உங்களுக்கு எந்த கெடுதலும் ஏற்படாது . பயப்படாம இருங்க ... எங்களை மீறி உங்களை யாரும் எதுவும் செய்ய முடியாது ...."
என்று கூறி விட்டு அங்கிருந்துகதிரவனும் மாயனும் அகன்று விட

" நிலா ... ஆர் யூ ஆல்ரைட் ... ?" பிரபு கேட்க

" ம் ... பரவாயில்லே ... பிரபு ... நாம கிளம்பலாமா ... இனிமே இங்க வேணாம் ..."
அவன் கையைப் பிடித்துக் கொண்டே கேட்க

" சாப்டுட்டு கிளம்பிடலாம் ... ஜானி எங்க ரெண்டு பேருக்கும் சாப்பாடு இங்கியே கொண்டு வா ..." என்று கூறியதும் இருவரும் அங்கிருந்து வெளியே சென்றனர் .

" நிலா ... அந்த எட்ஜில போனதும் டக்குனு நின்னுட்டதா சொன்னியே எப்பிடி ...?"

" நீங்க அது வரைக்கும் என்கூடவே வந்தீங்களே தவிர என்னை தொட்டுகூட பேசலை ...
ஆனா அந்த எட்ஜிக்கு வந்தப்ப என் கையை பிடிச்சீங்க .... என்ன நடந்ததுன்னு தெரியல
சட்டுனு கொஞ்ச தூரத்துல நின்னுக்கிட்டு இருந்தீங்க ...
நா தடுமாறி பாலன்ஸ் தவறி விழற மாதிரி
இருக்கிறப்ப பிடிச்சி இழுத்த மாதிரி இருந்துச்சி ...
நீங்கதான் இழுத்துவிட்டிங்கன்னு நா நினைச்சி
திரும்பி பார்த்தா தள்ளி நின்னுக்கிட்டு வா
போகலாம்னு கூப்டீங்க ...."
நிலா கூறவும் அவளை கட்டிப்பிடித்து அணைத்துக் கொண்டான் பிரபு .

" பிரபு ... எனக்கென்னவோ ... அந்த லேடி தான் இதுமாதிரி எல்லாம் பண்றாங்களோன்னு தோணுது ...."

" நீ ஏம்மா ... இப்பிடி நினைக்கிறே ...
ஏதோ ஒரு மிஸ்டரீஸ் நம்ம வாழ்க்கையில நடக்குது .
எல்லாம் ஏதோ ஒரு நன்மைக்கேன்னு நினைச்சிக்க வேண்டியதுதான் . எப்பவும் நமக்கு எதுவும் ஆகாது .
தைரியமா இரு . இதையே நினைச்சி உடம்பை கெடுத்துக்காதே ..."
ஆறுதல் கூறிய பிரபு அவளை தன் மேல் சாய்த்துக் கொண்டான் .

ஜுப் மலையின் வளைவுகளில் சென்று கொண்டிருக்க யாரும் எதுவும் பேசாமல் அமைதியாக வேடிக்கைப் பார்த்த வண்ணம் வந்தனர் .

ஒரு வளைவு திரும்பும் போது திடீரென்று பிரேக் பிடிக்காமல் ஜீப் சாலையின் ஓரமாக செல்ல ,

மாயவன் ஸ்டியரிங்கை வளைத்து ஓரமாக செல்லாத வண்ணம் முயற்சிக்க

ஜீப்பின் தடுமாற்றத்தில் அனைவரும்
ஒருவர் மேல் விழ

", என்னப்பா .... என்ன ஆச்சு ... ஏன் ஜீப் தடுமாறுது .... ?" ஜானி கேட்க ,

" என்ன மாயவா ... என்ன ஆச்சு ... படபடப்புடன் கதிரவனும் கேட்க ,

" சார் ... பிரேக் பிடிக்கலை ... வண்டி பள்ளத்தாக்க நோக்கி போகப் பாக்குது ... நா திருப்ப டிரை பண்றேன் .... முடியலை ....!"
மாயவன் கூறி முடிப்பதற்குள் வண்டி பள்ளத்தாக்கை நோக்கி பாய

" ஐயோ ! என்ற அலறல் மலையில் ஒலித்தது .

## அத்தியாயம் 16

பள்ளத்தாக்கை நோக்கி ஜீப் ரோடை விட்டு இறங்கி
சறுக்கிக் கொண்டே செல்ல
ஜீப்பில் இருந்தவர்கள் மரணபயத்தில்
ஒருவரையொருவர் தழுவிக் கொள்ள ,

மாயவனுக்கு உதவியாக கதிரவனும் ஸ்டியரிங்கை
திருப்ப முயற்ச்சி செய்ய
எதற்கும் பலனில்லாமல் கீழ் நோக்கி வேகமாக நகர ,

அனைவரும் மயக்கநிலை அடைந்தனர் .

**'நிர்மலேஷ்வரா.... ரதத்தின் கடிவாளத்தை திருப்பு....
மாயவனின் கரங்கள் உனை நோக்கி நீள்கிறது....
உன் கரம் மட்டுமே அவன் ஆளுமையை
அடக்கிவிடும்.... விரைந்து முடி....** '

மயக்கநிலைக்குச் சென்றுகொண்டிருந்த
பிரபு தன் காதில் கேட்கும் குரலினைக்
கேட்டு தன் இயல்பை மறந்தவனாய்
சட்டென்று ஜீப்பின் முன்புறம் தாவிக் குதித்து
ஸ்டியரிங்கை பற்றினான் .

ரோட்டின் சரிவில் இறங்கிக் கொண்டிருந்த ஜீப்பின்
பின்சக்கரம் இருந்த
இடத்தில் நேராக பள்ளம் ஒன்று தோன்ற
பின்சக்கரம் அந்த பள்ளத்தில் கீழே சென்று
அதில் அழுந்தி நின்றுவிட

முன் சக்கரம் பள்ளத்தில் நேராக நிற்க தொடங்கியது .

பிரபு ஸ்டியரிங்கை வளைத்து திருப்ப
வண்டி ஸ்பிரிங் போல முன்பறம் சுழன்று
ரோட்டின் பக்கமாக திரும்பி நின்றது .

பின்சக்கரம் பலமாக பள்ளத்தில் தாங்கி நின்றதால் ஜீப்
நலமாக ஆபத்திலிருந்து

தப்பியது .

இப்போது ஜீப்பின் பின்சக்கரம் தானாகவே மேலெழும்பி சமநிலத்தில் நிற்க ,

மீண்டும் பிரபு தான் இருந்த பின்சீட்டில் வந்தமர்ந்து மயக்கமானான் .

இந்த நிகழ்வு நடந்த சமயத்தில் அனைவரும் மயக்கநிலையிலேயே இருந்தனர் .

ரோட்டின் ஓரமாக நிழல் இருக்கும் இடத்தில் வண்டி நின்று கொண்டிருக்க அனைவரும் ஓய்வு எடுத்துக் கொண்டிருப்பதாக போகிறவர் வருகிறவர்கள் நினைத்துக் கொண்டனர் .

அரை மணி நேரம் கழித்து ஒவ்வொருவராக மயக்கம் தெளிந்தனர் .

முதலில் தாங்கள் எங்கிருக்கிறோம் என்பதே ஒருவருக்கும் புரியவில்லை .

பின்புதான் தாங்கள் பத்திரமாக இருக்கிறோம் என்பதே அவர்களுக்குப் புரிந்தது .

சட்டென்று அனைவரும் ஜீப்பிலிருந்து கீழே இறங்கினர் .

ஒருவரையொருவர் ஒன்றும் புரியாதவர்கள் போல் குழப்பமாக பார்த்துக் கொண்டனர் .

" என்ன நடந்தது .... நாம் காப்பாற்றப்பட்டிருக்கிறோம் .... எப்படி ...?"

கதிரவன் கேள்வியில் அனைவருமே தங்களுக்கும் இதே கேள்வி தான் என்பது போல் பார்த்தனர் .

" பிரபு சார் ... நடந்த நிகழ்வில் கண்டிப்பாக நாம அறுநூறு அடி பள்ளத்தாக்கில் சிதறி சின்னாபின்னமாகி போயிருப்போம் .
ஆனால் எந்த நிகழ்வுமே நடவாத மாதிரி

சேப்டியா ரோட்டாரமா நின்று கொண்டிருக்கிறோம் ... நிசமாவே நாம ஆபத்தை நோக்கிச் சென்றது உண்மைதானே .... கனவில்லையே ....?"
மாயவன் கேட்ட கேள்வியில்

", எனக்கும் புதிராத்தான் இருக்கு . ஆனா நீங்கதான் எப்படியோ சேப்டி பண்ணிட்டீங்கன்னு நினைச்சேன் ..."

" இல்லை ... எனக்கு எதுவுமே ஞாபகம் இல்லை ..."

" பாஸ் ... எப்பிடியோ நாம காப்பத்தப்பட்டிருக்கிறோம் .. அது மட்டும் உண்மை ... மாயவன் வண்டியில பிரச்சினை ஏதும் இருக்கான்னு பாருங்க ... வேற வண்டியை ஏற்பாடு பண்ணி போயிக்கலாம் ..."

" இருங்க ... இறங்கி செக் பண்ணிக்கிறேன் ..." இறங்கி வண்டியை செக் பண்ணிய மாயவன்
" எல்லாம் சரியா இருக்கு ... பிரேக் கூட சரியா இருக்கு ... திடீர்னு பிரேக் பிடிக்காம போனதுக்கு என்ன காரணமோ ... எல்லாம் ஒரே மர்மமா இருக்கு ... சரி எல்லாரும் வண்டியில உக்காருங்க ... சீக்கிரமா அடிவாரம் போயிடலாம் ..."

மறுநாள் காலை அலுவலகத்தில் நிலா வேலைக்கு வரவில்லை . மற்ற மூவரும் அவரவர் வேலையில் மும்முரமாக இருப்பதுபோல் இருந்தாலும் யாரும் நார்மலாக இருப்பது போல் தோன்றவில்லை .

... ஜானி தன் மௌனத்தைக் கலைத்தான் .

" பாஸ் .... நடக்கிற நிகழ்வுகளையெல்லாம் பார்த்தால் எனக்கே அச்சமாகத்தான் இருக்கு .
நாம மறுபிறவி எடுத்து வந்த மாதிரி இருக்கு ...
நேத்திக்கி எப்படி ஜீப் கவிழாம மறுபடி சேப்டியா ரோட்ல நின்னுச்சி ...
யாரோ ஒரு நிகழ்வு நம்மை அழிக்க நினைக்கிது ...
வேறோரு நிகழ்வு காப்பாத்துது ... ஏன் ... எதற்காக ...
உங்களுக்கு ஏதாச்சும் புரியுதா ...?"

" உங்களைப் போல்தான் நானும் .
எனக்கும் ஏதும் புரிய மாட்டேங்குது ...
எனக்காக யாரோ இருவர் போராடுறாங்கன்னு
தெரியுது ... ஆனா
ஏன் ... எதற்குன்னு தான் விளங்கலை ...
என்னால நிலா ரொம்ப சபர் ஆகிறா ..
அதான் எனக்கு மனசுக்கு கஷ்டமா இருக்கு ..."

" கேப்டன் ... எனக்குத் தெரிஞ்ச சாமியார் ஒருவர்
இருக்கிறார் . அங்கப் போயி என்ன ஏதுன்னு கேட்டுப்
பாக்கலாமா ...?"

" இல்ல வந்தியா ... ஏற்கனவே நாங்க ஒரு சித்தரை
பாத்துருக்கிறோம் ...
மறுபடி அவரைப் போயி பாக்கணும் ...
இத இப்படியே நீடிக்க விட்டா எல்லாருக்குமே
பிரச்சினைதான் .
தொழில்ல சரியா கான்சன்ட்ரேட் கூட பண்ண
முடியலை ...
அதுவுமில்லாம எனக்கு உங்களோட சேப்டி முக்கியம்
...."

" அப்பிடி சொல்லாதீங்க பாஸ் ... உங்களுக்கு
ஒன்னுன்னா அது எங்களுக்கும் தான் . அதனால எது
வந்தாலும் நாங்க உங்க பக்கந்தான் .
நாம நாளைக்கு முதல் வேலையா சித்தரைப் போயிப்
பாக்கறோம் ...'

" வந்தியா ... நாளைக்கு ஷியரிங் வர்ற
புராஜக்ட் 785 க்கு வாய்தா வாங்கிடு ...
நாங்க ரெண்டு பேரும் நடுமலைக்குப் போயி
சித்தரைப் பாத்துட்டு வர்ரோம் ...
நிலாவை நாளைக்கு வேலைக்கு வரவேண்டாம்னு
சொல்லிடலாம் ... நீயும் கோர்ட்டுக்குப் போயிட்டா
அவ தனியா ஆபிசுல இருக்கவேணாம் ...'

" சரிங்க கேப்டன் ... நீங்க அவரப் பாத்து சரியான விளக்கம் கேட்டுட்டு வாங்க ..."

மறுநாள் பிரபுவும் ஜானியும் சித்தரைப் பார்க்க விடியற்காலையிலேயே கிளம்பிவிட்டனர் .

சித்தர் வசிக்கும் குகையைத் தேடிச் சென்றவர்கள் அங்கே அவரின் சீடர்களை பார்த்து சித்தரைப் பார்க்க வந்திருப்பதாக கூற ,

" சித்தர் இமயமலை யாத்திரிகைக்குச் சென்றிருப்பதாகவும் வருவதற்கு இரண்டு மாதங்கள் ஆகும் எனக் கூறிவிட

என்ன செய்வது என்று புரியாமல் இருவரும் திகைத்து நின்றனர் .

" இப்ப என்ன செய்யிறது ... சித்தர் இருந்தாலாவது ஏதாவது தீர்வு சொல்லியிருப்பாரு ... ஒன்னுமே புரிபடலை ..." பிரபு கையை காரின் மேல் வைத்து சாய்ந்து நின்று கொண்டிருக்க ,

அப்போது திருஷ்டி பொம்மைகளை விற்றுக் கொண்டிருந்த பெண்மணி
ஜானியின் அருகில் வந்து

" ஐயா ... திருஷ்டி பொம்மையை வாங்கி காருல கட்டிவிடு ... போற வர்ர இடத்துல எந்த அசம்பாவிதமும் நடக்காது காத்து நிற்கும் . இந்த மந்திரிச்ச கயிறை வாங்கி கட்டிக்கிங்க .. எந்த காத்து கறுப்பும் உங்களை அண்டாது ... இந்தாங்க ..."
என்று கூறியவாறு வண்ணக்கயிறுகளை நீட்ட

" வேண்டாம்மா ... எங்களுக்கு இதிலெல்லாம் நம்பிக்கை இல்லை ...
நீ போ ..." என்று ஜானி கூற

பிரபு ஏதோ யோசனையில் ஆழ்ந்திருக்க சட்டென்று அவன் காதில்

**'நிர்மலேஷ்வரா.... அந்த கயிறு உனக்கானது... நான்தான் அனுப்பியிருக்கிறேன்..
உனக்கும் உனைச் சேர்ந்தவர்களுக்கும் பாதுகாப்பான அரண் அந்தக் கயிறுதான்.
அதை வாங்கி அனைவரும் அணிந்து கொள்ளுங்கள்...
இனி எந்த கெடுதலும் உங்களை நெருங்காது... மாயவனின் காலம் முடிவுக்கு வரூகிறது...
சொன்னதை உடனேச் செய்...'**

காதில் கேட்ட குரலினால் தன் நிலைக்குத் திரும்பிய பிரபு
அந்தப் பெண்மணியிடம் உள்ள கயிறுகள் அனைத்தையும் காசு கொடுத்து வாங்கிக் கொண்டான் .

இதைப் பார்த்த ஜானி ", என்ன பாஸ் ...
நீங்களா இதை வாங்குறீங்க .. என்னால நம்பவே முடியலை ... இதையெல்லாம் நீங்க நம்பவே மாட்டீங்களே ....?", என்று கேட்க ,

" இப்ப நடக்கிறசெயல்களையெல்லாம் பார்த்தா நம்பத்தானே செய்யனும் ...
நாம நினைச்சிப் பாத்தோமா ... இப்பிடி சித்தரை தேடிக்கிட்டு அலைவோம்னு ...
இப்ப எத்த தின்னா பித்தம் தெளியும்னு நிலை .
அதனால யாரு என்ன சொன்னாலும் நம்பள சுத்தி இருக்கிறவங்க நல்லா இருக்கணும்னு நம்பித்தான் ஆகணும் .
சரி ... இந்தா ... இந்தக் கயிரை நீ கையிலக் கட்டிக்க .
எந்தக் காரணம் கொண்டும் நா சொல்றவரைக்கும் இதை கழட்டிடக்கூடாது .
அப்புறம் இதை டினாவுக்கும் கட்டிவிட்டுடு . அவ நம்பற மாதிரி ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லு .

எனக்கு கட்டிவிடு ஒரு கயிரை ..." என்று தன் கையை நீட்டினான் .

புரிந்தும் புரியாதவனாக ஜானி பிரபுவுக்கு கட்டிவிட்டு தானும் கட்டிக் கொண்டான் .

காரில் முன்புறத்தில் ஒரு கயிரை கட்டிவிட்டப் பிறகு இருவரும் புறப்பட்டனர் .

" ஜானி ... இனிமே நமக்கு எந்த ஆபத்தும் நெருங்காது ... இனி பயப்படத் தேவையில்லை " என்று பிரபு கூற

" வரவர உங்களுடைய ஆக்டிவிட்டீஸ் டிபரண்டா இருக்குது ... எங்கிட்டயும் ஏதும் சொல்ல மாட்டேங்கிறீங்க ...
அன்னிக்கி மலையில நிலா காணாமப் போனப்போ நா சாகப் போறேன்னு கத்திக்கிட்டே போன நீங்க திடீர்னு வேற பக்கம் போறீங்க ...
அங்க நிலா இருக்காங்க .
அவங்க அங்க இருக்காங்கன்னு எப்பிடித் தெரிஞ்சிது உங்களுக்கு ...?",

" எனக்கு அவ அந்தப் பக்கம் இருப்பான்னு தெரியாது . எதுக்கும் அந்தப் பக்கம் பாக்கணும்னு என் மனசு சொல்லிச்சு ... வேற காரணம் ஒண்ணும் இல்லை . இப்பவும் நாம சித்தரை பாக்க வந்தோம் . இந்த அம்மா ஏன் நம்மகிட்ட வந்து காத்து கறுப்பு தொந்தரவு வராம இருக்க இதை வாங்கி கட்டிக்கிங்கன்னு சொல்லனும் . எனக்கு என்னவோ சித்தர் தான் இத சொல்ல வச்சிருப்பாருன்னு என் மனசுக்கு தோணிச்சி ..."

" எப்பிடியோ ... நீங்களும் சராசரி மனுசருங்க போலத்தான் ஆயிட்டீங்க ... இந்த பகுத்தறிவு ... பிலாசபி எல்லாம் மத்தவங்ககிட்ட மட்டுந்தான் . நமக்குன்னு வந்துட்டா எல்லாம் காத்துல பறந்துபோயிடும் ....",

" ரொம்ப பேசாதே ... வண்டியை எடு ..."

" உண்மையைச் சொன்னா பொல்லாப்புதான் . எனக்கெதுக்கு வம்பு ..." புலம்பிக் கொண்டே காரை ஓட்டினான் ஜானி .

' அவன் சொல்வதிலும் நியாயம் இருக்கத்தானே செய்கிறது ...
நேற்று வரை எதிலும் நம்பிக்கை இல்லாமல் வாழ்ந்து விட்டு இன்று
தங்களுடைய உயிர் பாதுகாப்புக்கு சாதாரண கயிறை வாங்கி கட்டிக் கொள்ளும் மனநிலைக்குத் தள்ளப்பட்டு இருப்பது எவ்வளவு மடத்தனம் ... ஆனாலும் இது தேவையென்று நினைக்கத்தானே தோன்றுகிறது ...'
பிரபு பல சிந்தனையில் இருக்க வீடு வந்து சேர்ந்தது கூட தெரியவில்லை .

வீட்டில் அவன் அம்மா எதற்கு இது என்று கேட்க தெரிந்த சித்தர் கொடுத்தார் ... இப்ப நமக்கு நேரம் சரியில்லையாம் ... அதனால் இதை வீட்டு வாசலில் கட்டி விட்டு நம் கைகளிலும் கட்டிக்கச் சொன்னார் ... இதை அவர் சொல்லும் வரையிலும் கழட்டக்கூடாதுன்னு சொல்லியிருக்கிறார் ... சித்தப்பாவுக்கும் இதைக் கொடுத்து கட்டிக்கச் சொல்லுங்கள் ..." என்று கூறவும் அம்மா பயந்து அதை பத்திரமாக வாங்கி கட்டிக் கொண்டார்

இரவு வெகுநேரம் பிரபுக்கு தூக்கம் வரவில்லை . மனது குழப்பநிலையிலேயே இருந்தது .

' தான் எதற்கு திடிரென்று பல பிரச்சினைகளில் சிக்கிக் கொண்டுள்ளோம் ... தனக்கும் நிர்மலேஷ்வரன் என்ற மனிதருக்கும் என்ன தொடர்பு .
ஏன் என்னை அப்பெயர் சொல்லி காதில் கேட்கிறது .
மாயவன் என்பவன் யார் ...? ஏன் அவன் தன்னை பழிதீர்க்க அலைகிறான் .
உண்மையில் தான் யார் ... தனக்கும் அந்த மாளிகைக்கும் என்ன சம்பந்தம் ...?',

இதெற்கெல்லாம் விடை கிடைத்தாலொழிய தன்னுடைய பிரச்சினைகள் தீராது ....
இதை எனக்கு கூற கடமைபட்டவர் அந்த குரலுக்கு சொந்தக்காரரர் ஒருவரே ...
அம்மணி .... தாங்கள் யார் என்பது எனக்கு புலனாகவில்லை ...
இத்தனை சோதனைகளிலிருந்து என்னைக் காப்பாற்றியவர் நீங்கள் ...
தாங்கள் தான் என்னை இக்கட்டான இச்சூழலில் இருந்து காப்பாற்ற வேண்டும் ...',

தூக்கத்தில் உளறியபடி பிரபு பேச

**'நிர்மலேஷ்வரா.... இன்றுதான் நீ என்னை அழைத்திருக்கிறாய்... இதற்காகத்தான் நான் ஆண்டாண்டு தோறும் காத்துக் கொண்டிருந்தேன். உன்னுடைய கேள்விகளுக்கு விடை சேத்துப்பட்டு மாளிகையில் இருக்கிறது. நீ அங்கு செல்லும் நேரமும் கூடிவிட்டது. உடனே மாளிகைக்குச் செல்... நான் துணை இருப்பேன்.... '**

தூக்கத்திலிருந்து திடுக்கிட்டு எழுந்த பிரபு தான் கனவில் கண்ட நிகழ்வுகளை எண்ணிப் பார்த்தவன் காலையில் தான் எண்ணச் செய்யவேண்டும் என்பதை தீர்மானித்தான் .

பின்பு நிம்மதியாக தூங்க ஆரம்பிச்சான் .

காலை எழுந்ததும் ஜானிக்கு போன் போட்டு அலுவலகத்திற்கு இரண்டு நாட்கள் விடுப்பு அளித்து விட்டு
வந்தியனும் நீயும் என்னோடு கிளம்பி வாருங்கள் என்று கூற ,

ஏதும் புரியாமல் ஜானியும் வந்தியத்தேவனும் பிரபுவின் வீட்டிற்கு வந்தனர் .

' ஏம்பா ... ஆபிஸ் எதுக்கு லீவு விட்டே ...
எங்க கிளம்பிறீங்க மறுபடியும் ...?",
அம்மாவின் கேள்விக்கு

" கேசு விசயமா தீவிரமா விசாரிக்க வேண்டி இருக்கு ...
அதுக்காகத்தான் புதுக்கோட்டை வரை போகணும் .
சாயங்காலம் வந்துடுவோம் ... " என்று ஏதோ ஒரு
காரணத்தைக் கூறிவிட்டு மூவரும் கிளம்பினர் .

ஜானி ", எங்க பாஸ் போறோம் ... சஸ்பென்ஸா இருக்கு
...
நீங்க வேற மூட் அவுட்டா இருக்கிறாப்பலேயே இருக்கு
... நிலா வேற ஏன் எதுக்கு லீவுன்னு என்னை கேள்வி
மேல கேள்வியா கேட்டாங்க ...
உங்களுக்கு போன் போட்டா நீங்க எடுக்கவே
இல்லியாமே ...? ஏன் பாஸ் ...?"

ஜானியின் கேள்விகளுக்கு பதில் ஏதும் கூறாது
மௌனமாயிருப்பதைப் பார்த்து பயந்த
வந்தியத்தேவன்
" கேப்டன் ... ஏன் எதுவும் சொல்ல மாட்டேங்கிறீங்க ...
உங்களை இப்பிடி பாக்க பயமா இருக்கு ..."

" என் மேல உங்களுக்கு நம்பிக்கை இருக்குல்ல ...
நம்பினா எதுவும் கேக்காம வாங்க ...."

" பாஸ் ... இன்னிக்கி என்னாச்சு உங்களுக்கு ...? நாங்க
உங்களை நம்பாம யாரை நம்புவோம் .
உங்களுக்காக உயிரை விடச் சொன்னாக் கூட
விடறதுக்கு தயாரா இருக்கேன் ... "

" ஆமாம் கேப்டன் ... நீங்க என்ன சொன்னாலும்
மறுநிமிசம் என்ன ஏதுன்னு கேள்வி கேக்காம உயிரைக்
குடுக்க சித்தமா இருக்கோம் ..

ஆனா நீங்க ஏதோ ஒரு வெறியோடு புறப்படுற மாதிரி
எங்களுக்குத் தோணுது .... அதனாலத்தான்
கேக்கிறோம் ... '

" அப்படியா .... சரி சொல்றேன் .
நாம இப்ப சேத்துப்பட்டு பங்களாவுக்குள்ள போகப் போறோம் ..."

பிரபு கூறியதைக் கேட்ட இருவரும் திடுக்கிட்டு " என்ன ....!" என்று ஏககாலத்தில் கேட்டனர் .

# அத்தியாயம் 17

பிரபு , ஜானி , வந்தியத்தேவன் மூவரும் நிலாவுக்கு தாங்கள் எங்குச் செல்கிறோம் என்று சொல்லாமல் சேத்துப்பட்டு பொன்ராயன் மங்கலம் மாளிகையை நோக்கி செல்ல கிளம்பினார்கள் .

தூரத்தில் ஒரு உருவம் அவர்கள் கிளம்புவதையே சந்தோசமாக பார்த்துக் கொண்டிருந்தது .

இதற்குத்தானே ஆசைப்பட்டாய் மாயவா இத்தனைக்காலமாய் . நீ நினைத்தது நிறைவேறப் போகிற காலம் கூடிவிட்டது .
மாளிகையில் மாதங்கியின் தடையை முறியடித்து உன் தேவையை நிறைவேற்றிக் கொள் . இந்த தடவை ஏதும் தடங்களில்லாமல் நிறைவேற்றிக் கொள் . அதற்கு ஏதும் தடை வந்தால் ஒட்டு மொத்தமாக எல்லாவற்றையும் அழித்து விடு . இனிமேல் எதற்கும் யாருக்காகவும் உன்னுடைய அபிலாசை நிறைவேற்றுவதை தடை வராமல் கவனித்துக் கொள் ....', இவர்கள் செல்லும் வாகனத்தை கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தது அவ்வுருவம் .

காரை ஜானி ஓட்டிக் கொண்டிருக்க வந்தியத்தேவன் முன் இருக்கையிலும் பிரபு பின் இருக்கையிலும் இருக்க

" பாஸ் ... ஏன் திடீர்னு பங்களாவுக்கு போகணும்னு முடிவெடுத்தீங்க ... நாம அங்க போகிறதால ஏதாச்சும் பிரச்சினை வந்தா எப்பிடி சமாளிக்கிறது .
அதுவுமில்லாம யாருக்கிட்டயும் இங்கதான் போகப்போறோம்னு சொல்லாம வேற வந்திருக்கிறோம் .
சற்குணம் சார் கிட்ட பேசினீங்களா ... அவுரு போன வாரமே போகலாம்னு கூப்பிட்டாரே ..."

ஜானியின் கேள்வியை கவனித்து வந்த பிரபு " சற்குணத்தை நா காண்டாக்ட் பண்ணலே ... போகும்போது பாத்துட்டு போகலாம்னு நினைச்சேன் . சரி ... இப்ப அவர்கிட்ட பேசிப்பாக்கலாம் ..." என்று கூறிவிட்டு அவருக்கு போன் போட

சிறிது நேரங்கழித்து லைனுக்கு வந்தார் சற்குணம் .

" சொல்லுங்க பிரபு ... காலையிலேயே போன் பண்றீங்க ... ஏதாச்சும் உதவி வேணுமா ...?"

" யா .... இப்ப அங்கதான் வந்துகிட்டு இருக்கோம் . நீங்க மாளிகைக்கு போகலாம்னு சொன்னீங்கல்ல ... இன்னிக்கி போக முடியுமா ...?"

" ஓ ... ஐ அம் சாரி பிரபு ...!, எனக்கு டெப்டேசனா மதுரைக்கு போட்டுருக்காங்க ...
வாரம் ஒருநாள்தான் அங்கே இருப்பேன் . மீதி நாள் மதுரையில தான் இருக்கணும் .
இன்னும் மூணு மாசத்துக்கு இப்படித்தான் நான் அலையணும் .
கொஞ்ச நாள் பொறுத்துக்குங்க ... நா அங்க வந்த பிறகு போயிக்கலாம் ..."

" இட்ஸ் ஒகே சற்குணம் . யூ கேரி ஆன் . எனக்கு எந்த பிராப்ளமும் இல்லை . இன்னொரு நாள் பாத்துக்கலாம் . பை ..." என்று கூறி விட்டு போனை வைக்க

" என்ன பாஸ் ... சற்குணம் என்ன சொல்றார் ... ?"

" அவரு டெப்டேசன்ல மதுரைக்கு போயிருக்காராம் . வாரத்துல ஒருநாள் மட்டுந்தான் இங்க இருப்பாராம் . மூணு மாசம் ஆகுமாம் இங்க ஸ்டடியாக . அப்புறம் போயிக்கலாம்னு சொல்றார் ...",

" அப்ப இப்ப என்ன செய்யிறது . திரும்பிடலாமா ... ?"

" வேண்டாம் . போட்ட பிளானை மாத்த வேண்டாம் . வருவது வரட்டும் . ஏன் ஜானி ... உங்க ரெண்டு பேருக்கும் பயமா இருக்கா .. அப்படின்னா சொல்லிடுங்க ... நான் மட்டும் போய் வரேன் . உங்களை ஆபிஸ்ல விட்டுட்டு போறேன் . என்ன சொல்றீங்க ...?",

", கேப்டன் ... என்ன இப்பிடி கேக்குறீங்க ...
உங்களை விட்டுட்டு நாங்க மட்டும் எதுக்கு போறது ... உங்களுக்கு இருக்கிற தைரியம் எங்களுக்கு இல்லியா ... உங்களை தனியா விட்டுட்டு எங்களால நிம்மதியா இருக்க முடியுமா ...?"

" பாஸ் ... நீங்க இப்படிக் கேக்குறதுதான் எங்களுக்கு கஸ்டமா இருக்குது .
உங்களுக்கு ஒன்னன்னா அது எங்களுக்குந்தான் . என்ன நடந்திடப் போகுது ... இது வரைக்கும் நடந்த அத்தனை ஆபத்துகளிலும் ஏதோ ஒரு சக்தி நம்பளை காப்பாத்திக்கிட்டே வந்துருக்கு . இப்பவும் அந்த சக்தி கண்டிப்பா நம்பளை பாலோ பண்ணும் . நாங்க தைரியமா வரோம் ... என்ன ஆறிலும் சாவு ... நூறிலும் சாவு . சாண் போனால் என்ன ... முழம் போனால் என்ன ...
ஒரு கை பார்த்திடறது .... "

" ஆமாம் கேப்டன் ... நாங்க எதுக்கும் பயப்பட மாட்டோம் . உங்க கூடவே இருந்து உங்களோட வெற்றிக்கு உறுதுணையா இருப்போம் ...."

**', நானும் உனக்கு உறுதுணையா இருக்கிறேன் நிர்மலேஸ்வரா ... உனக்கு எந்த ஆபத்தும் வராது நான் பாத்துக்கிறேன் ... உன்னுடைய தைரியம் தன்னம்பிக்கையை மட்டும் கூட எடுத்து வா ... அது போதும் ... வெற்றிக்கு ...'** காதில் அருகில் கேட்ட குரலால் தன் தைரியம் கூடியதை உணர்ந்துக் கொண்ட பிரபு இனி தனக்கு எந்த கவலையும் இல்லை ... எல்லாம் என் தேவதை கவனித்துக் கொள்ளும் என்று நிம்மதியடைந்ததால் இதுவரை இறுகிய முகத்துடன் இருந்தவன் சட்டென்று தன் பழைய கலகலப்பை முகத்தில் வரவழைத்துக் கொண்டான் .

அவன் ரியாக்சனை . கவனித்த நண்பர்கள் தாங்கள் குடுத்த ஊக்கமே பிரபு சகஜமாக ஆனதற்கு காரணம் என்று நினைத்துக் கொண்டனர் .

" வந்தியா ... நாம போற இடத்திலே எதுவுமே கிடைக்காது . அதனால தண்ணிர் பாட்டிலும் பிஸ்கட் பாக்கெட் பழங்கள் அப்புறம் மதியம் சாப்பிடுவதற்கு சாப்பாடு எல்லாம் வாங்கி வா ... இரவு திரும்புவதற்கு லேட்டாகும்னு நினைக்கிறேன் ..."
பிரபு கூறியதற்கு தலையாட்டியவந்தியனும் ஜானியும் இறங்கி கடைப்பக்கம் சென்றனர் .

காரில் அமர்ந்து யோசனையில் அமர்ந்து இருந்தவனை தூரத்தில் இருந்த உருவம் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்க ,

எதேச்சையாக அந்தப் பக்கம் பார்வையை செலுத்திய பிரபு தன்னையே கறுப்புத் துணி போர்த்திய உருவம் ஒன்று கவனித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து திடுக்கிட்டாலும் மனதில் தைரியம் வரவழைத்துக் கொண்டு
மீண்டும் அந்தப் பக்கம் பார்வையைச் செலுத்தினான் .

இப்போது அந்த இடத்தில் அந்த உருவத்தைக் காணவில்லை . சுற்றுமுற்றும் பார்வையை ஓட்டியவன் எங்கேயும் அந்த உருவத்தை பார்க்க முடியாததால் இது தனது பிரமையாகக் கூட இருக்கும் ... ' அரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேய் ' போல தனக்கு இப்போது உள்ள மனநிலையில்யாரைப் பார்த்தாலும் தன்னையே உற்றுப் பார்ப்பதைப் போல் தோன்றுகிறது என்று நினைத்து தன்னை சமாதானப்படுத்திக் கொண்டான் .

இருவரும் எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு வந்து காரின் டிக்கியில் வைத்து விட்டு மீண்டும் காரை ஓட்ட சிறிது நேரம் கண் அயர்ந்தான் பிரபு .

" பாஸ் ... பாஸ் என்று கூப்பிட்ட குரலுக்கு விழித்த பிரபு ஜானி கூப்பிடுவதைப் பார்த்து " என்ன ஜானி ...?" என்று கேட்க ,

" நாம காட்டு வழி வந்துட்டோம் ... ஆனா இப்ப மூணு வழி பிரிஞ்சிருக்கே எந்த வழியில அன்னிக்கு போனோம்னு மறந்துட்டேன் ... என்ன செய்யிறது ...?" காரை நிறுத்தி விட்டு பின்னால் திரும்பி ஜானி கேட்க ,

ஒருகணம் வழிகளை ஆராய்ந்த பிரபு மூன்றில் ஒருவழியை காட்டி " இது வழியாகப் போய் பார் ... மாறி இருந்தா திரும்பி வேற பாதையைப் பார்ப்போம் என்று கூற ,

அவன் சொன்ன வழியிலேயே ஜானி
காரைச் செலுத்த உள்ளே செல்ல செல்ல அடர்த்தியான

மரங்கள் இருபுறமும் சூழ்ந்திருப்பதைக் கண்டார்கள் .

" இந்த வழிதான் பாஸ் ... அன்னிக்கி நாம வந்த வழி மாதிரியே இருக்கு ... "

" ஆமாம் ... அப்படித்தான் தெரியுது . மெல்லமாவே போ ... அவசரம் வேண்டாம் ... "

", சரி ...." என்று கூறிவிட்டு அக்கம் பக்கம் பார்த்தவாறே மெல்ல காரை ஓட்டினான் .

கொஞ்ச தூரம் போனவுடன் தூரத்தில் இருவர் சைக்கிளில் செல்வது தெரிந்தது .
பிரபு அவர்களைப் பார்த்ததும் ஜானியைப் பார்த்து அவர்கள் அருகில் சென்று மாளிகையின் வழியைக் கேள் என்று கூற

சரி என்று காரை வேகமாக ஓட்டி அவர்கள் அருகில் நிறுத்தினான் .

கார் ஒன்று தங்களை உரசினாற் போல வந்து நிற்பதைப் பார்த்ததும் சைக்கிளில் சென்றவர்கள் சட்டென்று நின்றனர் .

" ஏங்க ... இந்த காட்டு பங்களாவுக்கு வழி எப்பிடின்னு சொல்ல முடியுங்களா ...?"
என்று ஜானி அவர்களைப் பார்த்து கேட்க ,

ஜானியை வித்தியாசமாக பார்த்தனர் இருவரும் . பிறகு ஜானியைப் பார்த்து
" என்ன கேட்டீங்க ... பங்களாவுக்கு வழியா ...?" என்று சந்தேகமாக கேட்டனர் .

" ஆமாம் ... பங்களா வழிதான் கேட்டேன் ... ஏன் வித்தியாசமாய் கேட்கிறீர்கள் ...?" என்று ஜானி கேட்க ,

" இல்லை ... யாராலுமே அந்த மாளிகைப் பக்கம் போக முடியாதே . ... நீங்க எப்படி போவீங்கன்னு பார்த்தோம் ... வேற ஒன்னும் இல்லை ... " என்று அவர்கள் கூற ,

" என்ன .... பங்களா பக்கம் போக முடியாதா ... ஏன் வழி அவ்வளவு மோசமாகவா இருக்கும் ...?"

" மோசமா இருக்குமா ... இல்லையான்னு போனாதானே தெரியும் . இன்னும் கொஞ்ச தூரம் போனீங்கன்னா

பாதை பிரியும் .
ஆனா அதுக்கு மேல நம்மலால போகவே முடியாது .
போகனும்னு நினைச்சி முன்னேறுனா கூட திரும்ப நாம நின்ன அந்த இடத்துலேயே வந்து நின்னுருப்போம் .
அது எப்படீன்னு யாருக்குமே புரியாத *புதிராகத்தான்* இருக்கு இன்னமும் ... "

வந்தவரில் ஒருவர் கூற மற்றவனும் தலையாட்டி உண்மைதான் என்று கூற

" என்ன பாஸ் ... இவங்க இப்பிடி சொல்றாங்க ... அப்ப எப்பிடி நாம அங்க போக முடியும் ....?",

", போயித்தான் பார்ப்போம் ... மேற்கொண்டு போக முடியுமா ... முடியாதான்னு . சரி நீ வண்டியை எடு ..." பிரபு கூற ,

மேற்கொண்டு எதுவும் பேசாமல் வண்டியை ஓட்டினான் ஜானி .

வர வர வெளிச்சம் குறைந்து அடர்ந்த வனம் போல் காட்சியளித்தது போகும் பாதை .

காரின் ஹெட்லைட்டை போட்டுக் கொண்டு ஜானி காரை ஓட்ட அவர்கள் சொன்ன பாதைப் பிரிவு வந்தது .

காரின் வெளிச்சத்தைப் பார்த்து இருவர் தலையில் தொப்பி அணிந்தவர்கள் கையில் டார்ச் லைட்டை அடித்தபடி அருகில் வந்தனர் .

காரின் கண்ணாடியை இறக்கிய ஜானி வந்தவர்கள் பாரஸ்ட் ரேஞ்சர்ஸ் என்பதை புரிந்துக் கொண்டான் .

" யார் சார் நீங்க ... இந்தப் பக்கம் எதுக்கு வந்தீங்க .... இதுக்கு மேல நீங்க போக பாதை கிடையாது ... " என்று கேட்க ,

பின்னால் அமர்ந்திருந்த பிரபு சட்டென்று குரல் கொடுத்தான் .

" இங்க பங்களா ஒன்னு இருக்கே ... அதுக்கு எப்படி போகணும் ...?"

" யார் சார் நீங்க ... எதுக்கு பங்களாவுக்குப் போகணும் ...?"

" பங்களா பத்தி கேள்விப்பட்டோம் . இந்த பக்கமா ஒரு வேலையா வந்தோம் . அப்படியே அதையும் பாத்துட்டு போகலாம்னு உங்ககிட்ட வழி கேட்கிறோம் ..."

" பங்களாபத்தி நாங்களும் கேள்விதான் பட்டிருக்கிறோம் . இதுவரைக்கும் நாங்களும் போனதில்லை . ஏன் ... யாராலுமே அங்கே போக முடியாது ... நீங்க திரும்பி போங்க சார் ... இன்னும் கொஞ்ச நேரத்துல இங்க இருட்டாகிடும் . அப்புறம் பாதை கண்டுபிடிக்க கஸ்டமாயிடும் . நாங்களே இதோ கிளம்பிகிட்டே இருக்கிறோம் ....'"

" என்னங்க சார் ... அதிசயமா இருக்கு நீங்க சொல்றது . இந்த காட்டுக்குள்ளே இருக்கிற நீங்களே அந்த மாளிகையை பாத்தது இல்லியா ... நிசமாத்தான் சொல்றீங்களா ...?"

" மாளிகை என்னமோ தூரத்துல தெரியும் . ஆனா நம்மால அங்கே போகவே முடியாது ...."

" பாதை ரொம்ப மோசமா இருக்குங்களா ...?"

" சார் ... அதை எப்பிடி உங்களுக்கு புரிய வைக்கிறதுன்னு தெரியலை . அந்த மாளிகை ஒரு மர்ம தேசம் . நாம அங்க போகணும்னு நினைச்சி இந்த வழியில போனாக்கூட திரும்பவும் இந்த இடத்துக்கே வந்துருப்போம் . ..."

" எங்களுக்குப் புரியலை .... வழி மறந்துடுவோமா ... இல்லை இந்த வழி மீண்டும் இங்கேயே கொண்டுவந்து விடறமாதிரி அமைப்பா ...?"

" அப்படியெல்லாம் இல்லை . வழி என்னவோ போய்கிட்டே இருக்கிறமாதிரி தான் தோணும் . பங்களாவும் பக்கத்துல வந்தமாதிரிதான் இருக்கும் . நாம கிட்ட போயிட்டோம்னு நினைச்சிருப்போம் . ஆனா இப்ப நிக்கிற இடத்துலதான் நின்னுருப்போம் . அதுதான் எப்பிடின்னு புரியாத மர்மமா இருக்குது . இதை தெரிஞ்ச நிறைய பேர் இங்க வந்து பிளைட் மூலமா ... ஹெலிகாப்டர் மூலமாவும் அங்கே போக

டிரை பண்ணிணாங்க .
ஆனா அவங்களால கூட பங்களாபக்கம் போகமுடியலல .
ஏன் ... இப்ப போனமாசம் ஒரு ஆராய்ச்சிகுழுவே வந்து எப்படியெல்லாமோ டிரை பண்ணிப் பார்த்தாங்க .
அவங்களாலும் அங்கே போகவே முடியலை .
மாந்திரீகம் மந்திரவாதிகள் யாராலும் அங்க நெருங்க முடியலன்னா பாத்துக்கோங்களேன் .... "

" நீங்க இங்க இருக்கீங்களே .... ஏதாச்சும் அசம்பாவிதம் நடக்க சான்ஸ் உண்டா ...?"

" இதுவரைக்கும் இங்க வர்ரவங்க யாருக்குமே எந்த தீங்கும் வந்ததில்லை .
என்னா ... தூரத்துல தெரியற பங்களா பக்கமா வர உடறதுஇல்ல . அதுதான் இங்க புரியாத மர்மம் .
எத்தனை காலமா இந்த பங்களா இருக்குதுன்னே யாருக்கும் தெரியாது . அங்க யாராவது வசிக்கிறாங்களான்னும் தெரியாது . நிசமாலுமே அங்க பங்களா இருக்குதா ... இல்ல மாயையா ... என்பதும் தெரியாது ...."

" நீங்க சொல்றது விசித்திரமா இருக்கு . இந்த காலத்துலேயும் இப்பிடி ஒரு அதிசயம் இருக்குன்னு கேள்விப்படறதே ஆச்சரியமா இருக்கு .
உங்ககிட்ட ஒன்னு கேக்கலாமா ...?
ஜானி கேட்க

", என்ன சார் ... கேளுங்க . எனக்குத் தெரிஞ்சா சொல்றேன் ..."

" இது போல ஒரு மர்ம தேசம் நம்ம பகுதியில இருக்குன்றது ஏன் யாருமே வெளி உலகத்துக்குச் சொல்லல ... பத்திரிகைகள் கூட இதுவரைக்கும் இதைப்பத்தி எழுதுனதா தெரியலையே ...?",

" எழுதுனும்னு நினைச்சாலும் தொலைக்காட்சி போன்ற மீடியாக்களும் இதை சொல்றதுக்கு முயற்சி பண்ணிணாங்க . ஆனா அதை அவங்க பப்ளிஷ் பண்ணும்போது எதுவுமே இல்லாம பிளாங்க்காதான் இருக்கும் . இது ஆச்சரியத்தை விட பயம்

அதிகமாக்கிடுச்சி .
யாரு இதை வெளி உலகுக்கு கொண்டுவரணும்னு நினைக்கிறாங்களோ
அவங்க மரணம் உடனடியா ஏதோ ஒரு ரூபத்துல வந்துடுது . அதுக்காகவே இந்த எக்ஸிபிரிமெண்ட்டுக்கு யாரும் தயாராகவில்லை .
உங்களுக்கும் புரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன் .
நீங்களும் இதை போயி வெளியில சொல்லிடாதீங்க ...
நா இதை உங்ககிட்ட சொன்னதுக்கே எனக்கு ஏதாச்சும் ஆயிடுமோன்னு பயமா இருக்கு .
சீக்கிரம் இங்கிருந்து கிளம்பிடுங்க ..." ரேஞ்சர் கூறிய பேச்சுக்களைக் கேட்டு மூவரும் என்ன செய்வது என்று புரியாமல் பார்த்துக் கொண்டனர் .

" கேப்டன் ... எனக்கென்னவோ இது மிகைப் படுத்தி சொன்னமாதிரி தோணுது . நாம போயித்தான் பாப்போமே ... என்னதான் நடக்குதுன்னு பாத்துடுவோம் ...."

" ஆமாம் பாஸ் . எனக்கும் அப்படித்தான் தோணுது . வீணான வதந்தி இது . இப்படி ஒரு அமானுஷ்யமான இடம் இருக்குதுன்னு தெரிஞ்சிருந்தா இந்நேரம் மீடியாக்காரங்க பிரிச்சி மேஞ்சிருப்பாங்க . யாரோ அந்த இடத்துக்கு யாரும் போகக்கூடாதுன்னே இப்பிடி ஒரு செய்தியை பரப்புறாங்க ... "

" இப்ப மணி ஒன்னுதான் ஆகுது . ஆனா இருட்டானமாதிரி இங்க இருக்குது . இவ்வளவு அடர்த்தியான வனத்தில கண்டிப்பா ஏதாச்சும்இல்லீகல் சமாச்சாரம் இருக்கும் .
அதுக்காகத்தான் இந்த ரேஞ்சர்ஸ் கூட இப்பிடி பயமுறுத்தி வைக்கலாம் .
நாம போய்த்தான் பார்ப்போம் . என்ன நடக்குதுன்னு தெரிஞ்சிடுது ... " பிரபு கூற

" கரெக்ட் பாஸ் ... ஆத்துல இறங்கிட்டோம் . இனி நீந்தி கரை சேர வழியைத்தான் பாக்கனும் . அதை விட்டு பயந்தா காரியம் நடக்காது ."

" அப்ப சரி ... காரை இந்த வழியே விடு . பாக்கலாம் ...." பிரபு கூறியதும்

ஜானி ஹெட்லைட்டை போட்டுவிட்டு
காரை செலுத்தத் தொடங்கினான் .

போகப் போக காரை செலுத்துவதற்கே சிரமமாக இருந்தது . இருபுறங்களிலும் முள் செடிகளும் வேறு செடிகளும் வளர்ந்து கார் கண்ணாடியை உரசிக் கொண்டே வந்தது .

மெல்ல கார் சென்று கொண்டிருக்க மூவரும் வந்த வழியை கவனித்துக் கொண்டே வந்தனர் .

ஒரு பெரிய ஆலமரம் நெருங்கி வர தூரத்தில் பங்களா தெரிவது போல் தெரிந்தது .

", அங்கப் பாருங்க ... பங்களா தெரியுது . ",
ஜானி கூற

" ஆமாம் ... தெரியுது . அப்பகிட்ட வந்துட்டோமா ...?",

" இன்னும் கொஞ்ச தூரம் போனா
வந்துடும்னுநினைக்கிறேன் . "

" சரி ... மெல்ல பாத்துப் போ ... நாங்களும் வழியைக் கவனிக்கிறோம் ...."

", கார் ஒரு வளைவில் சென்று திரும்ப இது வரை கண்ணுக்குத் தெரிந்த பங்களா தெரியாமல் போக ,

" ஜானி ... ஏன் காரை திருப்பினே ... வழி மாறுது போல . பங்களா தெரியலை பாரு .."

" நான் திருப்பல பாஸ் . தானாகவே காரு திரும்பிடுச்சி ...."

" என்ன ....! அதிர்ச்சியுடன் இருவரும் கேட்க

" ஆமாம் பாஸ் ... தானாகவே ஸ்டியரிங் திரும்புது . நா எதுவுமே செய்யல ... " அதிர்ச்சியில் ஜானி கூற ,

" நீ காரை நிறுத்து . கீழே இறங்கிப் பாக்கலாம் ... "

சட்டென்று ஜானி பிரேக் போட முயல ,
கார் நிற்காமல் சென்று கொண்டே இருந்தது .

மூவரும் பிரமையுடன் அமர்ந்திருக்க கார் ஒரு இடத்தில் சென்று நின்றது .

சட்டென்று காரை விட்டு மூவரும் இறங்கி சுற்றுமுற்றும் பார்க்க

கார் முதலில் தாங்கள் நின்று ரேஞ்சர்ஸிடம் பேசிய இடம் போலவே தெரிந்தது .

# அத்தியாயம் 18

பங்களா வழி கேட்டு காட்டுக்குள் சென்றவர்கள் மீண்டும் தாங்கள் பேசிக் கொண்டிருந்த இடத்திலேயே இருப்பதைப் பார்த்ததும் அதிர்ச்சியடைந்தனர் .

" என்ன பிரதர் .... திரும்பவும் இங்கேயே வந்துவிட்டோம் ..."

" அதுதான் அவர்களே சொன்னாங்களே .... *இப்படித்தான்* நடக்கும்னு ... இப்ப என்ன செய்யிறது ...?" ஜானி கேட்க

" கார்ல போனதாலதானே நம்மால ஒண்ணும் செய்ய முடியலை . நடந்துப் பார்த்தா என்ன ...?" பிரபு கூற

" நல்ல ஐடியா பாஸ் . காரை இங்கியே நிறுத்திட்டு நாம நடந்து போய் வரலாம் ...."

" இப்ப மணி மூணு ஆயிடுச்சி . பசிக்கிதா உங்களுக்கு ....?"

" லைட்டா ... ஆனாலும் சமாளிக்கலாம் . உனக்கெப்படி வந்தியா ...?"

" நீங்க என்ன சொல்றீங்களோ அப்பிடியே செய்வோம் . சாப்பிட்டா எல்லோரும் சாப்பிடுவோம் ... "

" சரி ஜானி .... சாப்பிட்டு விட்டே கிளம்பலாம் . அங்க போனா எவ்வளவு நேரமாகுமோ தெரியாது . சரி ... சாப்பாட்டை எடுங்க .... "

டிக்கியைத் திறந்தவர்கள் அதில் எதுவுமே இல்லாமல் இருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தனர் . பிரபுவிடம் இதைக் கூற அவனும் பிரமையடைந்தான் .

" பாஸ் .... இப்ப நடக்கறதெல்லாம் பாக்கிறபோது ஹிட்சாக் ஸ்டோரி படிக்கிறதை லைவ்வா

பாக்கிறமாதிரி இருக்கு ...."

" ஆமாம் பிரதர் .... நம்மூரு விட்டலாச்சாரியா படம் போல இருக்கு .
இதையெல்லாம் யாருகிட்டயாவது சொன்னாக்கூட நம்ப மாட்டாங்க ..."

" இப்ப என்ன செய்யிறது ஜானி .... குடிக்க கூட தண்ணீர் இல்லை .
மணியும் ஆயிடுச்சி . ரொம்ப இருட்டா வேற இருக்கு .
ஒன்னு செய்யலாம் .
பக்கத்து டவுன்ல ஏதாவது லாட்ஜ்ல ரூம் போட்டு தங்கிப்போம் .
விடியற்காலை கிளம்பி இங்க வந்திடலாம் ... என்ன சொல்றீங்க ...?",

" நல்ல ஐடியா ... அப்படியே செய்வோம் பாஸ் ...!"

" சரி ... ஒரு செட் டிரஸ் எடுத்துக்கச் சொன்னேனே .... எடுத்துகிட்டு வந்தீங்களா ....?"

" கொண்டுவந்திருக்கிறோம் . சரி கிளம்பலாம் .... பக்கத்து டவுன்ல ரூம் கிடைக்கணும் ...."

மூவரும் அங்கிருந்து கிளம்ப அதுவரை அவர்களையே மரத்தின்
மீதிருந்த பார்த்துக் கொண்டிருந்த உருவம் கையைத் தட்டி சிரித்தது .

ஒரு நல்ல லாட்ஜாகப் பார்த்து இரண்டு அறை எடுத்தனர் .

பசி அதிகமானதால் முதலில் சாப்பிட்டு விட்டே அறைக்குச் சென்றனர் .

சிறிது நேரம் உறங்கி ரெஸ்ட் எடுத்துக் கொண்டு இரவு ஏழு மணியளவில்
அந்த ஊரைச் சுற்றிப் பார்க்க புறப்பட்டனர் .

மனதுக்கு இதமாக பல இடங்களைப் பார்த்து விட்டு ஒரு கடையின் முன்பாக நின்று கொண்டிருந்து பேசிக் கொண்டிருக்க ,

அப்போது தங்களை கிராஸ் செய்து இருவர் செல்வது தெரிந்தது .

பிரபு அவர்களைப் பார்க்க அந்த இருவரும் அவனை திரும்பி பார்த்து புன்னகைக்க அவர்களையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தவனை கவனித்த ஜானி

" பாஸ் .... பாஸ் ... என்ன ஆச்சு ... ஏன் அங்கியே வெறிச்சிப் பாக்கறீங்க ...?"
என்று கேட்க ,

" அதோ பாரு ஜானி .... அன்னிக்கி நம்ம ஆபிசுக்கு வந்தாங்களே ஒரு லேடியும்
அவங்க சின்ன வயது மகளும் .
என்னைப் பார்த்து சிரிச்சிக்கிட்டே போறாங்க ... வா அவங்களைப் பிடிப்போம் ...." என்று கூற

ஜானியின் கண்களுக்கு எதுவும் தெரியவில்லை .
", எனக்கு யாருமே தெரியலேயே ... ரெண்டு ஆண்கள்தான் போயிக்கிட்டு இருக்காங்க ... நா அவங்களை வேணா தடுத்து நிறுத்தவா ...",

" இல்லை ... எனக்குத் தெரியராங்க ... நானே போயி கூப்பிடறேன் . நீங்களும் கூட வாங்க ..." என்று கூறி விட்டு பிரபு முன்னால் வேகமாக நடக்க
அவனைத் தொடர்ந்து இருவரும் வேகமாக பின் தொடர்ந்தனர் .

அதற்குள் வேகமாகச் சென்ற பிரபு
சென்று கொண்டிருந்த இருவரை
தடுத்து நிறுத்த
அவர்களிடம் அவன் பேசிக் கொண்டிருப்பதைப்

பார்த்து விரைந்து அருகில் சென்றனர் ஜானியும் வந்தியனும் .

அங்கே அவர்களுக்கு ஏற்கனவே அறிமுகமான சீனியர் வக்கீல் லேடி ஒருவரும் அவருடன் அவர் மகள் போல் தோற்றம் கொண்ட ஐந்து வயதுடைய பெண்குழந்தையும் நின்று கொண்டிருக்க திகைப்படைந்தனர் இருவரும் .

இவர்களைப் பார்த்ததும் அந்த லேடி வியப்படைந்து
" நான் காண்பது உண்மைதானா ... தி பேமஸ் லாயர்ஸ் குரூப் இங்கு இந்த நேரத்துல என் முன்னே நிக்கிறாங்க ... வாட் எ சர்ப்ரைஸ் ....!
அதுவும் பிரபு சார் என்னை அடையாளம் கண்டு வந்து தடுத்து நிறுத்தி பேசுறது என்பது கனவுப் போல இருக்கு .
கோர்ட்ல பாத்தாக்கூட ஒரு ஸ்மைலோட போறவரு தானாகவே வந்து பேசுறதுன்னா எவ்வளவு எக்ஸைட்டா இருக்கு .
அதுவும் மூவேந்தர்களோட தரிசனம் வேற ... என்ன ஜானி ... பேச்சையேக் காணோம் ... வேறு யாரையாவது

பாக்க வந்து அது நானாக இருந்ததுல ஆச்சரியமா ...?"

சுமார் முப்பது வயதிருக்கும் அந்தப் பெண் பேசிக் கொண்டேயிருக்க

அதுவரை பேசாமலிருந்த பிரபு
" உங்களை அங்கிருந்துப் பார்த்துட்டுத்தான் பிரேமா மாதிரி இருக்குதேன்னு தான் பாத்து பேச வந்தேன் . ஆமாம் ... நீங்க சென்னைதானே ... அப்புறம் இங்க எப்பிடி ...?"
என்று இழுக்க ,

" இந்த ஊர் என்னோட ஹஸ்பெண்ட் ஊர் . என்னோட நாத்தானாருக்கு கல்யாணம் அடுத்த வாரம் .

அதுக்காக பேமிலியோட ரெண்டு நாளுக்கு முந்திதான் இங்க வந்தோம் . கடையில பர்சேஸ் பண்ணலாம்னு பொண்ணோட வந்தேன் .
ஆமா ... நீங்க இந்த ஊருக்கு வந்திருக்கிறதைப் பார்த்தா ஏதோ ஒரு கேசை துப்பு துலக்க வந்த மாதிரி தெரியிதே ... என்ன நா சொல்றது சரிதானா ...?"
சிரிப்போடு பிரேமா கேட்க ,

" இல்லீங்க ... இங்க என் பிரெண்டு இருக்கிறான் . அவங்க வீட்டு கிரகப்பிரவேசம் . அதுக்காகத்தான் வந்து இங்க ஓட்டல்ல தங்கியிருக்கிறோம் . நம்ப கொலீக் ஒருத்தரை நம்ம ஊரை விட்டு வெளியூர்ல பார்த்ததும் ஒரு சந்தோசம் . அதனாலத்தான் உங்களை

பார்த்து பேசிட்டு போகலாம்னு வந்தோம் ...." ஏதேதோ கூறி சமாளித்து பேசினான் பிரபு .

" இவ்வளவு தூரம் வந்துட்டு எங்க வீட்டுக்கு வரலேன்னா எப்பிடி ...
வாங்க வீட்டுக்கு போகலாம் ..."
அவள் அழைக்க

", இப்ப இரவு நேரத்துல எதுக்குங்க ...
இன்னொரு முறை ஏன் சென்னையில வரோம் . சரி நாங்க வரோம் ...",
என்று விடைபெற்று நகர்ந்தனர் .

" என்ன பாஸ் ... நாம இங்க வந்தது யாருக்கும் தெரியக் கூடாதுன்னு நினைச்சோம் . ஆனா இவளுக்குத் தெரிஞ்சிடுச்சே ... ஏற்கனவே இவ
சைலன்ஸ் ஸ்பெர்டர் . நம்ப சமூகத்துல டமாரம் அடிக்காத குறையா சொல்லித் தீர்த்துடுவாளே ...?"

", இது என்ன பெரிய விசயமா ....
அவங்க சொல்லிடுவாங்களேன்னு பயப்படறதுக்கு ....
அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்னு சொல்வாங்க ... அது போலத்தான் இருக்கு நம்ம

கதையும் . சரி வாங்க போகலாம் . சீக்கிரமா தூங்கினாத்தான் விடியற்காலை எழுந்திருக்க முடியும் ."

இரவு மூவரும் ஒரே அறையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர் .

" பாஸ் ... நிலா இதுவரைக்கும் நாலைஞ்சி காலாவது பண்ணியிருப்பாங்க ...
அவங்களுக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை எனக்கு ... நீங்க ஏன் அவங்க காலை அட்டெண்ட் பண்ண மாட்டேங்கிறீங்க ... அவங்களுக்குத் தான் எல்லா விசயமும் தெரியுமே ...
அப்புறமென்ன ...?"

" நாம ஒரு குழப்பத்துல இருக்கிறப்ப அவங்களுக்கு என்ன சமாதானம் சொல்றதுன்னே தெரியலை ... அவகிட்ட நா பேசினா அவ அழ ஆரம்பிச்சிடறா ... சங்கடமா இருக்கு எனக்கு ... நாளைக்கி அங்க போயிட்டு வந்து விவரமாவே அவகிட்ட பேசறேன் . சரி ... அலாரம் வச்சிட்டு படுங்க ... குட்நைட் ..." என்று கூறிவிட்டு படுக்கச் சென்றனர் .

இரவு பிரபுவுக்கு தூக்கமே வரவில்லை . நிலா போனில் அழைக்க
அவளிடம் பேசியவன் அவளுக்கு தைரியம் சொல்லி எங்களுக்கு எதுவும் ஆகாது ... என்று சமாதானப்படுத்தி விட்டு தூங்குவதற்குள் வெகு நேரம் ஆகி விட்டது .

தூங்கிக் கொண்டிருந்தவனை யாரோ கூப்பிடும் குரல் கேட்க விழித்தவன்
தன்னிடம் பேசும் குரல்தான் என்று அறிந்தான் .

ஒருவாறு தைரியம் வரவழைத்தவனாய் அந்தக் குரலிடம் எதிரே இருப்பவரிடம் பேசுவது போல் பேசினான் ...
நீங்கள் சொல்லித்தானே நான் மாளிகையை பார்க்க

வந்தேன் ... ஆனால் ஏன் அனுமதிக்கவில்லை ..
எனக்கு எதற்கு இந்த வேண்டாத வேலை ...
உங்களுக்காக நான் ஏன் சிரமப்படவேண்டும் ...?"

**'நிர்மலேஷ்வரா... உன்னுடைய கேள்விகளுக்கு நீ மாளிகை சென்றால் பதில் கிடைக்கும்...**
**மாளிகையில் செல்வதற்கு உன் ஒருவனுக்கு மட்டுமே உரிமை உண்டு.**
**மற்றவர்களுக்கு அனுமதி கிடைக்காது. நீ தனியே செல்லவேண்டிய நேரம்... உன் அருகில் நானிருப்பேன்... பயம் வேண்டாம்... காலை நீ கிளம்பிவிடு...**
**மற்றவர் வேண்டாம்... உன்னுடைய**
**இந்த பயணம் பல சிக்கல்களை தீர்க்க உதவப் போகிறது... தைரியத்துடன் கிளம்பு... நம் அன்னை பவானி துணையிருப்பாள்...!**

தூக்கத்தில் கண்ட கனவுடனே தூங்கிப் போனவன் காலை நான்கு மணியளவில் தன்னை எழுப்புவதைப் போல் தோன்றவே விழித்துக் கொண்டான் .

மடமடவென்று தன்னை தயார்படுத்திக் கொண்டவன் காரின் இன்னொரு சாவி தன்னிடம் இருப்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டான் .

தன் செல்லிலிருந்து ஜானிக்கு மெசேஜ் ஒன்றை அனுப்பினான் .
' ஜானி ... வந்தியா ... நான் உங்களிடம் சொல்லாமல் மாளிகைக்குச் செல்கிறேன் . காரை எடுத்துக் கொண்டு போகிறேன் . முடிந்தவரை மாலைக்குள் வந்துவிடுவேன் என்கின்ற நம்பிக்கை இருக்கிறது . நீங்கள் பயப்படவேண்டாம் .. எனக்கு எதுவும் நடக்காது . நீங்கள் மாலை வரை இங்கேயே இருங்கள் ... நான் வந்துவிடுவேன் .
ஒருக்கால் வரவில்லையென்றால்
நீங்கள் இங்கிருந்து கிளம்பிவிடுங்கள் . யாரிடமும்

எதையும் கூறவேண்டாம் .
மறுநாள் கண்டிப்பாக நான் வந்துவிடுவேன் . மாலை கண்டிப்பாக வந்துவிடுவேன் ... கவலை வேண்டாம் ...'
செய்தியை அனுப்பிவிட்டு
தைரியத்துடன் கிளம்பினான் .

தன்னை உலுக்கி எழுப்புவதுபோல் தோன்றவே திடுக்கிட்டு விழித்த ஜானி எதிரே வந்தியா நிற்பதைப் பார்த்து

" என்ன வந்தியா ... ஏன் என்னை எழுப்புறே ...
விடிஞ்சிடுச்சா ... ?"
என்று கேட்க ,

" பிரதர் ... மணி ஒன்பதாயிருக்கு ...
நல்லா தூங்கிட்டோம் ... அலாரம் ஏன் அடிக்கலை ...
ஆறுமணிக்கு வச்சிட்டுதானே தூங்கினேன் ..."

" டேய் என்னடா சொல்றே ... மணி ஒன்பதா ...
அச்சச்சோ ... பாஸ் திட்டுவாரே ... அவரு எழுந்தாரா ...
இல்லியா ... எந்திரிச்சிருந்தா வந்து எழுப்பி இருப்பாரே ...
சரி ... வேகமா கிளம்பு ... பாஸை எழுப்பிட்டு வரேன் ..."
கூறி விட்டு ஜானி பிரபுவின் அறையை நோக்கிச் சென்றான் .

அறைக்கதவைத் தட்டியவன் திறக்காததால் ரூம் சர்வீஸ் பாயிடம் விசாரிக்க ' அவுரு காலையிலே வெளிய போன மாதிரி இருந்ததே ... நீங்க அவரோடு போகலையா ...?"
என்று கேட்கவும் ,

பயந்து போன ஜானி வந்தியனிடம் விசயத்தைக் கூற அவனும் பயந்து வெளியே கார் இருக்கிறதா என்று பார்க்க
கார் இல்லாததைக் கண்டு பதறியவர்களாய் என்ன செய்வது என்று யோசித்தார்கள் .

போன் போட்டு எங்கிருக்கிறார் என்று கேளுங்கள் பிரதர் ... "

ஜானி தன்னுடைய போனை எடுக்க அதில் மெசேஜ் வந்திருப்பதைக் கவனித்து அதை படித்தான் . பின்பு அதை வந்தியனிடம் கொடுத்து படிக்கச் சொல்ல அவனும் படித்துவிட்டு

" இப்ப என்ன செய்யிறது நாம ... இங்கேயே இருப்பதா ... இல்லை கேப்டனைத் தேடி அங்கே போவதா ...?" கலங்கிய குரலில் வந்தியன் கேட்க ,

" எனக்கும் என்ன செய்யிறதுன்னே புரியலை ... ஒன்னு செய்வோமா ...
கால்டாக்சி புக் பண்ணி மாளிகை பார்த்த இடம் வரைக்கும் போவோம் .
பாஸ் அதுக்குமேலே போக முடியாம கண்டிப்பா அங்கதான் நிப்பார் . நாம அவரை அழைச்சிக்கிட்டு வந்திடலாம் .. என்ன சொல்றே ...?"

" சரியான யோசனை . கேப்டனை விட்டுட்டு நாம மட்டும் ஊருக்கு போவது என்பது முடியாத காரியம் . சரி ... டாக்சி புக் பண்றேன் ..."

அதே நேரம் பிரபு தாங்கள் நின்றிருந்த இடம் வரை சென்றிருக்க இனிமேல் மாளிகை வரை தன்னால் போக முடியுமா என்பதை யோசிக்கத் தொடங்கினான் .

காலை நேரம் அங்கு இன்னமும் விடியாதது போல் இருட்டாக காட்சியளிக்க நிசப்தமான சூழ்நிலை ஒருவித அச்சத்தை அளித்தது .

பறவைகளின் ஒலியும் பூச்சிகளின் ரீங்காரமும் உடம்பை மயிர்கூச்செரியச் செய்தது .
காட்டுக்குள் இருந்த தனிமை பிரபுவின் நெஞ்சை படபடக்கச் செய்தது .

காற்றில் அசைந்த மரங்களின் சலசலப்பும் கிளைகளின் அசைவும் வாவா என்று அழைப்பது போலவே இருந்தது .

மனதில் ஒரு துணிவை வரவழைத்துக் கொண்ட பிரபு மாளிகை தூரத்தில் தெரியும் வரை காரை மெல்ல ஓட்டிச் சென்றான் .
இனி காரிலேயே செல்லலாமா ... இல்லை நடந்து போய் பார்க்கலாமா ... என்று யோசித்து காரிலேயே அமர்ந்திருந்தவன் காதில் **இறங்கு**
என்று குரல் கேட்கவே காரை விட்டு இறங்கினான் .

**' முன்னோக்கிச் செல்** ' என்று கட்டளைத் தொடர காரை பூட்டி விட்டு நடக்கத் தொடங்கினான் பிரபு .

பாதை கார் செல்ல முடியாத அளவில் ஒற்றையடி பாதையாய் மாறியது .
மாளிகை கண்ணிலிருந்து மறையவில்லை .

இருபக்கமும் மரங்களின் பூதாகரமான வளர்ச்சியே பார்ப்பதற்கு பயத்தை அளித்தது .
பிரபுவின் மனதில் இப்போது ஏந்த சலனமும் இல்லாமல் ஒரே நோக்கு பயணம் செல்பவனைப்போல் நேரான பார்வையுடன் சென்று கொண்டே இருந்தான் .

மாளிகை மிக அருகில் தென்பட ஆரம்பித்தது .

இப்போது பிரபு அவனாகவே இல்லாதது போல் இருந்தான் .

இதோ மாளிகை நெருங்கி விட்டது .
வாசகர்களாகிய நம் மனதில் திக் திக் என்ற சப்தம் கேட்கத் தொடங்கி விட்டது .
இனி என்ன நடக்குமோ என்று சீட் நுனியில் அமர்ந்து விரலின் நகத்தை
கடிக்கத் தொடங்கி விட்டோம் ...

மாளிகையின் முன்னால் பிரபு நின்றிருக்க
அண்ணாந்து பார்க்கும்
உயரமுடன் மாளிகை இருந்தது .

மாளிகையைச்சுற்றி மரங்களும் செடி கொடிகளும்
படர்ந்து வழியே இல்லாமல் அடைத்து இருந்தன .

மிகப்பெரிய இரும்பு கேட் செடிகொடிகளால் படர்ந்து
துருவேறி
காணப்பட

பிரபு மெல்ல அந்த கதவை திறக்க முயன்றான் .

அவன் தொட்ட உடனேயே அந்தக் கதவு ' கீறீச் ', என்ற
சத்தத்துடன்
மெல்லதிறக்கத் தொடங்கியது .

பிரபு மெல்லத் தன் கால்களை கேட்டைத் தாண்டி
உள்ளே வைக்க
எங்கிருந்தோ வந்த ஆந்தைகள் படபடவென்று
அடித்தபடி மாளிகையைச் சுற்றத் தொடங்கின .

திடீரென்று காற்று சுழன்றடிக்க
அங்கே காய்ந்து கிடந்த சருகுகளெல்லாம் மேலேபறக்க
ஆரம்பித்தது .

எங்கிருந்தோ நரி ஒன்று ஊளையிட
மாளிகையின் சுற்று சுவர்களில்
பாம்புகள் ஊர்ந்து செல்லத் தொடங்கின .

ஒரு அமானுஷ்யமான சூழல் அங்கே நிலவ
இது எதுவுமே தன்னை பாதித்த மாதிரி பிரபுவுக்குத்
தெரியவில்லை ..

மாளிகையின் வாசலில் கால் வைக்க

" ராஜாதி ராஜ ... ராஜ மார்த்தாண்ட
கோட்டைபட்டின ஜமீன் திருங்காட்டையூர் வழி வந்த
அணங்கலேஷ்வரர் வழியூரார் நிர்மலேஷ்வரர்

பாக்கியவார் பராக் ...
பராக் ...

கட்டியங்காரனின் வாழ்த்தொலியில் உள்ளே இருந்த அம்மங்கா விதங்காராணி மடமடவென்று வெளியே வர அவரைத் தொடர்ந்து
மாவலியூரான் கோட்டை பத்மகோபன்
பெற்றெடுத்த ஒரே மகள் மாதங்கி கோமகள் அலங்கார தேவதை போல்
தன் கையில் சிறு சிசுவை ஏந்தியபடி
வர பின்னால் சேடியர்கள் புடைசூழ
வெளியே வந்தவர்கள்

ராணியின் கைகளில் ஆரத்தி தட்டை அளிக்க அதை வாங்கிய ராணியார்
புன்சிரிப்புடன் தன் மகனை ஆரத்தி எடுத்து தட்டை சேடியர்களிடம் கொடுத்துவிட்டு தன் இரு கைகளினால் கன்னத்தை வழித்து திருஷ்டி எடுத்தார் .

" அம்மீ ... நான் என்ன போரில்ஜெயித்து விட்டா வந்திருக்கேன் ... பாலவராயருடன் பேச்சு வார்த்தை தானே நடத்தி விட்டு வந்திருக்கேன் ... "

" சாமானியப்பட்டவருடனா பேச்சு வார்த்தை நடத்தி வெற்றிக் கண்டு வந்திருக்கிறாய் ... ஒரு தேசத்து மந்திரி ... அவர் கேட்ட நிபந்தனைகளுக்குப் பணிந்து போகாமல் அதே நேரம் அவரையும் திருப்திபடுத்தி போர் சூழலில் இருந்து
நமது ஜமீனை காப்பாற்றி இருக்கிறாய் ... இதை விட பெரிய வெற்றி வேண்டுமா ...?"

" அம்மீ ... நீங்க உங்க பிள்ளையை அதிகமா புகழிரீங்க ... பாலவராயர்
நியாயமானவர் . நாம் கூறிய கோரிக்கையில் எந்த தர்மமும் மீறப்படவில்லை என்பதை புரிந்துக் கொண்டார் . அதனால் நமக்கு விதித்த

அதிகப்படி வரிகளை தார்மீக அடிப்படையில் குறைக்க ஒத்துக் கொண்டார் . "

" எது எப்படியோ ... நம்ம ஜமீனின் அதிகப்படியான பளுவை தைரியமாக எதிர்கொண்டு தீர்த்திருக்கிறாய் . கரணம் தப்பினால் மரணம் என்பது போல போர் சூழலை தவிர்த்திருக்கிறாய் ... சரி உள்ளே வா ..
உனது அழகு புதல்வியின் திருமுகத்தை இதுவரை நீ காணவில்லை .
அவள் பிறந்த நேரமே தந்தையின்
வெற்றிக்கு காரணம் ...
அவளை கண்டு மகிழ விரைந்து சென்று
புத்துணர்ச்சிப் பெற்று வா ..."
தாயின் கூற்றால் மகிழ்வுற்ற நிர்மலேஷ்வரன் எதிரில் நின்று கொண்டிருந்த தன் தர்மநாயகி மாதங்கி கோமகளை ஓரக்கண்ணால்
காதலுடன் பார்த்தான் .

தங்களது தனியறையில் அருகருகே
அமர்ந்திருந்தவர்கள் தங்கள் கைகளை
ஒன்றோடொன்று பிணைத்தபடி கண்களினால் காதல் மொழி பேசியபடி இருக்க
குழந்தையின் அழுகுரல் அவர்களை இவ்வுலகத்திற்கு வரவழைத்தது .

" அமித்தாய் ... இங்க பாரு உன்னுடைய
அப்பச்சி .... உன்ன பாக்காம இவ்வளவு நாளா எங்கே போயிருந்தீங்கன்னு கேளுடா .... பாத்து பாத்து கண் ரெண்டும் பாப்புக்கு வலிக்கவே செஞ்சிடுச்சின்னு சொல்லிடு ... "
தன் மகள் குழந்தையிடம் தன் கணவன் இதுநாள் வரை பிரிந்திருந்ததை சூசகமாக கூற ,

சிரித்துக் கொண்டே தன் மகளை கையில் வாங்கியவன்
" கண்ணம்மா ... அப்பச்சி உன் ஞாபகமாவே

இருந்தேண்டா ... எப்ப வந்து உன்னைப் பார்ப்பேன் என்றே
துடிச்சிக்கிட்டு இருந்தேன்னு உன்னோட அம்மீகிட்ட சொல்லுடா ..."
கண்களால் தன் மனைவியிடம் காதலை காட்டியபடி குழந்தையைக் கொஞ்சினான் .

அப்போது கதவில் இருக்கும் மணி ஆட்டப்பட எழுந்து கதவைத் திறந்தவன் சேவகன் நின்றிருப்பதைப் பார்த்து என்னவென்று கேட்க ,

" திவான் உங்களைப் பார்க்கவேண்டுமென்று காத்திருக்கிறார் " என்று கூற

" வருகிறேன் என்று கூறு ..." என்று கூறி விட்டு தன் மனைவியிடம் வந்து விடுவதாக கூறி விட்டு வெளியேச் சென்றான் .

அப்போது மாளிகையின் மேல்புற
மாடத்தில் ரகசிய சதியாலோசனை நடைபெற்றுக் கொண்டிருப்பது
இவர்களுக்குத் தெரியாதது எவ்வளவு விபரீதத்தை ஏற்படுத்தப் போகிறது என்பது அவர்கள் அறியவில்லை .

# அத்தியாயம் 19

பிரபு மாளிகையின் கேட்டைத் திறக்க துருப்பிடித்து
அங்கங்கே இத்துப் போயிருந்த கேட்டு என்று
சொல்லலாம் என்ற அளவில் ஓட்டிக்
கொண்டிருந்தது கீறீச் என்ற சத்தத்துடன் திறக்க ,

காலை உள்ளே வைத்தவன் நிமிர்ந்து
சற்றுத் தூரத்தில் இருந்த மாளிகையை நிமிர்ந்துப்
பார்த்தான் .

வாசலிருந்து ஒரு பர்லாங் தூரத்தில் இருந்த மாளிகை
சிதிலமடைந்து
முன்புற பகுதியின் மிகப்பெரிய தூண்கள் கீழே
விழுந்து செல்லறித்து
சிறு பகுதிகள் மட்டுமே மிஞ்சியிருந்தது .

சுற்றியிருந்த பிரம்மாண்டமான மரங்களிலிருந்த
சருகுகள் வழியெங்கும் சிதறி நடக்கையில்
சரக் சரக் என ஒலி எழுப்பி ஒரு பயங்கரத்தை
ஏற்படுத்தியது .

மெல்ல சுற்றுமுற்றும் பார்த்தவாறே
மெல்ல நடந்தான் .

காலின் கீழே ஏதோ சரசரவென்று சத்தம் கேட்கவே
சட்டென்று துள்ளி தள்ளிப்போனவன்
பாம்பொன்று வேகமாக செல்வதைப்
பார்த்தவன் உடம்பில் வியர்வை வழியத் தொடங்கியது
.

அதன் பிறகு கீழே பார்வையை வைத்தவாறே
நடந்தான் பிரபு .

மாளிகையின் அருகில் வந்தவன்
முன்பறச் சுவற்றில் இருபக்கமும்
வேல் பிடித்த வீரர்களின் ஓவியம்
வர்ணம் இழந்து சுண்ணாம்புக்காரை பெயர்ந்து விட்டு
விட்டு பகுதிகளாய்
காட்சியளித்தது ஓவியம் .

படிக்கட்டுகள் இடிந்து இருந்ததால்
தாவி மேலே ஏறினான் பிரபு .

கதவு எதுவும் இல்லாமல் பங்களா வாயில் ஆவென்று காட்சியளித்தது .

உள்ளே செடி கொடிகள் படர்ந்து , போக வழியில்லாமல் புதர் போல காட்சியளிக்கவே ' இதில் நாம் எப்படிப் போவது ' என்று சிந்தித்தவாறு
யோசித்து நின்றுக் கொண்டிருந்தான் .

திவான் அழைப்பதாக காவலாளி கூறவும் தன் மனைவி மாதங்கியிடமிருந்து பிரிந்து வெளியே வந்தவன் மடமடவென்று
காரிடாரில் நடக்க ஆரம்பித்தான் .

அப்போது மாளிகையின் மேல் மாடத்தில் அவனின் சிற்றன்னையின் மிகப் பெரியஅறையில்பதும விலாசனி தன் சகோதரன் விராச்சிக்கோட்டை தலைவன் இறும்பூதியான் மற்றும் அவளின் மகன் விஸ்வேஸ்வரா பாக்கியவான் மூவரும் கலந்தாலாசோனையில் ஈடுபட்டிருந்தனர் .

வேறு மனிதர்கள் அங்கே வந்துவிடாவண்ணம் காவல்காரர்கள் மேல் மாடத்தின் பால்கனியில் உலா வந்த வண்ணம் *இருந்தனர்* .

" சகோதரா ....! பாக்கியவான் நிர்மலேஷ் பாலவராயரை சந்திக்கவிடாத வண்ணம் ஏற்பாடுகள் மிகப் பிரமாதமாய் செய்யப்பட்டுள்ளதாக கூறினீர்களே ....
பார்த்தீர்களா ... அவன் சேமமாகவும்
பேச்சு வார்த்தையில் வெற்றியும் அடைந்து
மகாராணியின் அபிமானத்தை மீண்டும்
பெற்று வந்து விட்டான் .
ஏற்கனவே பாக்கியவான் விஸ்வா பேச்சுவார்த்தையில் தோல்வி கண்டு வந்த நிலையில் இந்த வெற்றி மக்களிடையே
அவனுக்கு மதிப்பை ஏற்படுத்தியுள்ளது .
ஏன் நீங்கள் இந்த காரியத்தில் கோட்டை விட்டு விட்டீர்கள் ...?"

சின்ன ராணியின் கேள்விக்கணையால் சங்கடப்பட்ட இறும்பூதியான் தலையைக் கவிழ்ந்த வண்ணம்

" சின்ன ராணி .... உங்களுக்கேத் தெரியும் ...
நான் இந்தப் பயணம் தடைப்பட வேண்டும்
என்று முயற்சி பண்ணினேன் என்று .
நிர்மல் கோலக்கல் வழியாகத்தான்
செல்வான் என்று கொரில்லாத் தாக்குதலுக்கு ஏற்பாடு
செய்திருந்தேன் .
ஆனால் கருமலைத்தேசத்திற்கு மலை பக்கம்
வராமலேயேநதிக்கரையோரமாகவே
காண்டியூர் வழியாகச் செல்வான் என்று
எதிர்ப்பார்க்கவேயில்லை .

அப்போது குறுக்கிட்டுப் பேசிய பாக்கியவார்
விஸ்வேஸ்வரன் ... ", அம்மீ நான் எனது
நம்பிக்கைக்குரியவர்களை கருமலைதேசத்திற்கு
அருகில் வானவராயன் காட்டுப்பகுதியில் மறைந்து
நின்று தாக்குவதற்கு தயாராகத்தான்
நின்றிருந்தேன் .
ஆனால் கடைசியில் கிடைத்த சேதியில்
பாலவராயர் தலைநகர் கருமலையில்
இல்லையென்றும் , மன்னருடன் பொதிகை
மலைக்குச் சென்றிருப்பதாகவும்
அங்கு அவர்களை அங்கே வரச்சொன்னதால்
தாமிரபரணிக்கரையோரமாகவே சென்றுள்ளதாகவும்
கிடைத்த சேதியில்
நான் அங்கு செல்வதற்குள் விசயம் முடிந்து விட்டது .
இதற்கெல்லாம் காரணம் அவர்கள் விசயத்தை
ரகசியமாக செயல்படுத்தியதால் தான் . நம்முடைய
ஒற்றுப் பிரிவு நம்மை ஏமாற்றி விட்டது ."

" ம் ... ஒவ்வொரு முறையும் நாமும் அவனுக்குச்
சங்கடங்களைத் தருவிக்க
எத்தனையோத் தடைகளை ஏற்படுத்தி தான்
வருகிறோம் . ஆனால் அவன் எல்லாவற்றையும்
முறியடித்து இந்த ஜமீனின் வாரிசு என்பதை
நீருபித்துக்
கொண்டே இருக்கிறான் .
இதற்கெல்லாம் காரணம் பர்வதமலை
சித்தரின் தகடின் மகிமை என்று நான்
நினைக்கிறேன் .

அது உனது தந்தையார் அவனிடம் கொடுத்துச் சென்றதால் தான் .
அதை அவரிடமிருந்து கைப்பற்ற நானும் எத்தனையோ வழிகளில் முயற்சி செய்தேன் .
ஆனால் அந்த மனிதர் தன் ஆசை மகனிடம் தன் உயிர் போகும் தருவாயில்
கொடுத்து விட்டு ' இது உன்னிடம் இருக்கும் வரையில் உனது வெற்றியை யாராலும் தடுக்க முடியாது .
நமது ஜமீனின் வளமும் குறையாது . இதை எக்காரணம் கொண்டும் உன் கைவிட்டுச் செல்லாமல் பாதுகாக்கவேண்டியது உன்னோட கடமை ' என கூறிவிட்டே இவ்வுலகை விட்டுச் சென்றார் .
அவருக்கு நானும் நீயும் ஒரு பொருட்டே அல்ல . அதை நினைத்தால் தான் எனது
நெஞ்சம் எரிகிறது .
சிற்றரசன் மகளாகப் பிறந்து என்னப் பயனைக் கண்டேன் . கட்டாயப்படுத்தப்பட்டத் திருமணம் . தந்தை மட்டும் அன்று எனது பேச்சைக் கேட்டிருந்தால் பேரரசனின் மருமகளாகி இருப்பேன் . தந்தையின் வீண் பிடிவாதத்தால் அரசை பகைத்துக் கொண்டு நாட்டை இழந்து கடைசியில்
இங்கே தஞ்சமடைந்து , இரண்டாம்தார நிலைக்குத் தரம் தாழ்ந்து விட்டேன் .
ஒரு ஜமீனின் மகளானவள் இன்று என்னை அதிகாரம் பண்ணிக் கொண்டிருக்கிறாள் .
இதுக்கெல்லாம் எனது மகனின் காலத்திலாவது மாற்றம் வரும் என்று
நினைத்தேன் . அதுவும் நடவாது போல் உள்ளது ."

" அம்மீ .... வருந்தாதீர்கள் . கண்டிப்பாக தங்களது ஆசை நிறைவேறும் காலம்
நெருங்கிவிட்டது .
நானும் மாமாவும் ஒரு திட்டம் வைத்திருக்கிறோம் . அதை படிப்படியாக
நிறைவேற்றி விட்டு தங்களிடம் தெரிவிக்கிறோம் .

அதுவரை தாங்கள் வேதனைப்படாமல் காத்திருக்கவும்
.
இது உறுதியான முடிவாக இருக்கும் . "

பிரபு மாளிகையின் முன்வாசலில் காலை வைத்தவன்
தான் வரும்போது
எடுத்து வந்திருந்த ஒரு பெரிய குச்சியால்
முன்னால் இருந்த செடி கொடிகளை விலக்கி விட்டுச்
சென்றவண்ணம்
முன்னோக்கிச் சென்றான் .

வானமே கூரையாக இருந்த மாளிகை
ஓரிரு இடங்களில் கூரையுடன் காட்சியளித்தது .

முன்பகுதியைக் கடந்து உள்ளேச் செல்ல
பிரம்மாண்டமான ஹால் போல் காட்சியளித்தது .

தூண்கள் மூன்று ஆட்கள் சேர்த்துப் பிடித்தாலும் அடக்க
முடியாத நிலையில்
தன் வண்ணத்தை இழந்து செதில் செதிலாக அந்த
மரத்தூண்கள் சாய்ந்த நிலையிலும் சில தூண்கள் கீழே
உடைந்த
நிலையிலும் காட்சியளித்தது .

சுவற்றில் என்ன ஓவியங்கள் என்று
தெரியாத நிலையில் இருக்க மேலே
கூரையின் பல இடங்கள் இடிந்து காணப்பட்டது .

சுற்றுமுற்றும் பார்த்தபடி மெல்ல அடி எடுத்து
வைத்து மனது திக் திக் என அடித்தபடி
முன்னோக்கிச் சென்றான் .

தான் எந்த தைரியத்தில் யாரிடமும் சொல்லாமல்
மற்றவர் துணையின்றி
இங்கு வந்துள்ளோம் .

மற்றவர்கள் யாரும் இத்தனை காலமாக
வராத நிலையில் தனக்கு மட்டும் எப்படி
வழி கிடைத்தது .

புரியாத இந்த மர்மத்தை தெரிந்து கொள்ளாமல் இனி
இங்கிருந்து செல்வதில்லை .

தினம் தினம் பயந்து வாழ்வதைவிட
உண்மையை அறிந்துக் கொண்டு உயிர்
போனாலும் பரவாயில்லை .

ஒருகணம் தன்னுடைய தாயின் முகம் வந்து போனது .
' அம்மா தயவுசெய்து என்னை மன்னித்துவிடுங்கள் .
உங்களிடம் சொல்லாமல் இவ்வளவு பெரிய
விபரீதத்தில் நான் சிக்கிக் கொண்டேன் .
நான் வராமல் போய்விட்டால் நீங்கள் உடைந்துப்
போய்விடுவீர்களே ...
என்ன செய்வேன் அம்மா . உங்களைத் தனிமையில்
சிக்க வைத்துவிடுவேன்
போலிருக்கிறதே .... மறுகணம் நிலாவின் முகம் தெரிய
கண்களில் நீர் வழிய
'
நிலா .... நாம் காதலை பரிமாறிக் கொண்ட
தருணத்திலே இருந்து ஒருநாள் கூட
தனிமையில் நம் காதலை வளர்த்துக் கொள்ள
முடியவில்லையே ....
என்னால் நீயும் துன்பப்படுகிறாயே என்றுதான்
இக்காரியத்தில் துணிந்து
இறங்கிவிட்டேன் .
என் அன்பே ... நீ கண்ணீருடன் நிற்கின்ற காட்சி
கண்களில் தெரிகின்றதே ...!,
இனி உனை எப்பொழுது காண்பேன் .
இப்படி ஒரு பைத்தியக்காரத்தனமாய்
சிக்கலில் மாட்டிக் கொண்டேனே ....!

அருமை சகோதரர்களே .... எனக்காக
உங்கள் உயிரையும் பொருட்படுத்தாது
இங்குவரை வந்தீர்களே ....
உங்களிடம் சொன்னால் எனைத் தனியே
அனுப்பமாட்டீர்கள் என்றுதான் உங்களிடம்
சொல்லாமல் வந்து விட்டேன் .
என் மெசேஜைக் கண்டிருப்பீர்கள் .
ஆனாலும் நீங்கள் இங்கிருந்து சென்றிருக்க
மாட்டீர்கள் . எனைத் தேடி
நாம் நின்ற இடம்வரை வந்து காத்திருப்பீர்கள் .

நான் மீண்டும் உங்களை காண்பேனோ மாட்டேனோ .... நிச்சயமாகச் சொல்கிறேன் ... அடுத்தப்பிறவி என்று ஒன்று இருப்பது உண்மையென்றால் நீங்களே என் நட்புகளாக வரவேண்டும் ....' ஒரிடத்தில் நின்றுவிட்ட பிரபு அங்கிருந்து இன்னும் உள்ளே சென்றான் .

முற்றம்போல் அமைந்த இடத்தில் மேல் மாடம் அமைக்கப்பட்ட மற்றொரு ஹால் போன்ற அமைப்பில் கைப்பிடிகள் இல்லாமல் ஆவென்று வாய் பிளந்தாற் போன்றத் தோற்றத்தில் மாடம் காட்சியளிக்க
' இங்கு எதைக்காண வரச் சொன்னது அத்தேவதை . இதுவரை நமது கண்களுக்கு எதுவும் தெரியவில்லையே ....'
யோசித்தவாறே நடந்தவனின் காலில் ஏதோ ஒன்று இடிக்கவே ' ஆ ' வென்று காலைத் தூக்கினான் பிரபு .

கீழே குனிந்து கைகளால் அங்கிருந்த சருகுகளை விலக்க அங்கே ஏதோ ஒன்று இருப்பது போல் உணர்ந்தான் .

அப்பொருளை எடுத்து தனது கர்சீப்பினால் தூசியைத் தட்டிவிட்டுப் பார்க்க அதிர்ச்சியில் உறைந்து போனான .

# அத்தியாயம் 20

மாளிகையின் உட்புறம் சென்ற பிரபு சுற்றி பார்வையைச் செலுத்தினான் .

மாடம் அமைந்த மேற்புர கூரை வட்ட வடிவில் காட்சியளிக்க , கூரையின் காரை பெயர்ந்து எப்போது தலையில் விழுமோ என அச்சப்படும் வகையில் காட்சியளித்தது .

கீழே உள்ள சுவர்களில் கற்கள் பெயர்ந்து ஆங்காங்கே ஒட்டைகள் காணப்பட்டது .

கீழே தரை முன்ஹாலில் புதராக காட்சியளித்தது போல் இல்லாமல் மணலாக காட்சியளித்தது .

அந்த ஹாலின் நடுவில் மாடத்திற்கு செல்லும் வகையில் படிக்கட்டுகள் வெறும் கற்களாக காட்சியளித்தது .

அதன் மேல் ஏறிச்செல்ல யோசித்த பிரபு காலடி எடுத்து நகர முயன்றான் . அப்போது ,

காலில் ஏதோ சுரீர் என்று குத்த ' ஆ ' வென்று அலறியபடி சற்றுத்தள்ளி பயந்து போனவன் காலை குனிந்துப் பார்க்க ,
காலின் பாதத்தின் அடியில் இரத்தம் வேகமாக வருவதைக் கண்டான் .

சட்டென்று நொண்டியபடியே அந்த படிக்கட்டில் சென்று அமர்ந்து காலைத் தூக்கி மற்றொரு தொடையின் மேல் வைத்து இரத்தத்தை தனது கர்சீப்பால்
துடைத்தான் .

சிறிது நேரம் அழுந்தப் பிடித்துக் கொண்டிருந்தவன் மெல்லக் கையை எடுத்தான் .

இரத்தம் நின்றிருந்தது . மெல்ல எழுந்தவன் ஏதோ ஒரு உந்துதலால் காலில் குத்திய பொருள் என்னவாக இருக்கும் என எண்ணி
அதை எடுத்துப் பார்க்க அங்கு சென்றவன் ,

அங்கு கிடந்த குச்சி ஒன்றை எடுத்து மெல்லக் கிளறினான் .

ஏதோ தட்டுப்பட குனிந்து அந்த குச்சியாலேயே மணலைத் தள்ளி பார்த்தான் .

பொருள் ஒன்று தட்டுப்பட அதை கைகளினால் எடுத்தான் .

அதை எடுத்தவுடன் திடீரென்று காற்று வெளியிலிருந்து சுழன்றடித்து உள்ளே உள்ள மணலை வாரி அடித்தது .

முகத்தில் பளிர்பளீரென்று மணல் அடிக்க
தன் இரு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டான் .

அப்போது திடீரென்று தூரத்தில் நரி ஊளையிடும் ஓசை கேட்டது . பிரபுவின் மனது திக் திக் என அடித்துக் கொண்டது .

தன் கையிலிருந்த பொருள் மண் படிந்து என்ன என்பது தெரியாமல் இருக்கவே கர்சீப்பினால் அதை அழுத்தி துடைத்தான் .

முகத்தருகே பெரிய வவ்வால்
ஒன்று படபடவென அடித்தபடி வர ,

திடுக்கிட்ட பிரபு பயத்தினால் முகம் வெளிற வியர்வை வெளியேற , துடைப்பதற்கு கர்ச்சீப்
சுத்தமாகஇல்லாதபடியால் தனது சட்டையை இழுத்து துடைத்துக் கொண்டான் .

இப்போது அந்த பொருளைப் பார்த்ததும் அது ஒரு கட்டாரி போல்தோற்றமளிக்கவே
அதை திருப்பிப் பார்த்தான் .

அதில் ஏதோ எழுதி இருப்பது போல் தோன்ற அதை படிப்பதற்கு முயற்சி செய்தான் .
வட்ட எழுத்துக்கள் போல் இருக்க சில எழுத்துக்களை படிக்க முடிந்தது .
பாக்கியவார் என்பது மட்டும் புரிந்தது .

திவானைப் பார்க்க வேகமாக வந்த நிர்மலேஷ்வர் பாக்கியவார் அங்கே சுமார்
அறுபது வயசிருக்கக் கூடிய உயரமாக

தலைமுடிமுன்பக்கம்வெளுத்துக் காணப்பட்ட ஒருவர் நின்று கொண்டிருந்தார் .

இளைய ஜமீனைப் பார்த்தவுடன் கையை எடுத்து கும்பிட்ட திவான் விகற்ப வேலுக்குறிச்சியார் அமருங்கள் என்று
ஜமீன் கூறவே எதிரில் இருந்த ஆசனத்தில் அமர்ந்தார் .

" நானே உங்களை அழைக்க வேண்டும் என்று நினைத்திருந்தேன் . இளையதேவி
பிறந்து பார்க்கவில்லையல்லவா ...
அதனால் அவளிடம் சிறிது நேரம் பொழுதைப் போக்கினேன் ."

" நல்லது . தாங்கள் இளையராணியை விட்டு நிறைமாதத்தில் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது . மகாராணி அம்மங்காதேவி பிரசவ நேரத்தில் மிகவும் பயந்துவிட்டார் .
தாதி குழந்தை குறுக்காக போய்விட்டது . தாயோ சேயோ ஒருவரைத்தான் காப்பாற்ற முடியும் என்று கூறிவிட்டாள் .

பெரிய உயிரை காப்பாற்றினாள் போதும் என மகராணி கூறிவிட்டார் .
நல்லவேளை நமது குலதெய்வம் காண்டியப்பதேவி அருளால் யாருக்கும்
எந்தவித பாதிப்புமின்றி குழந்தை பிறந்துவிட்டாள் .",

" எப்போதும் கார்காலம் முடிந்து வசந்த காலத்தில் தானே வரிவிதிப்பு ஓலை
மன்னரிடமிருந்து வரும் .
இந்த ஆண்டு ஏன் முன்கூட்டியே கோடைகாலம் முடிந்த உடனே ஓலை வந்தது ?"

" பிரபு ...! நாம் தங்களின் இரகசிய அறையில் அமர்ந்து பேசலாமா ...?
தங்களிடம் கூற வேண்டிய செய்தி நிறைய இருக்கிறது ..." மெல்ல அருகில் வந்து இரகசியமாக திவான் கூறவும் ,

" நல்லது . வாருங்கள் ... அங்கேயேச் சென்று பேசிக் கொள்ளலாம் ..."
என்று கூறியவாறு தன்னுடைய இரகசிய அறை நோக்கிச் சென்றான் .

திவான் பின் தொடர்ந்து செல்ல
அந்த அறையில் இருந்த ஆசனத்தில் இருவரும் அமர்ந்தனர் .

" பிரபு ....! கருமலைத்தேசத்து மந்திரி பாலவராயரை திருக்கோட்டையூர் திவான்
சங்கிலி குட்டவராயன் சென்ற திங்கள் சந்தித்து வந்திருக்கிறான் . அவன் அங்கு போய் வந்த பிறகுதான் பாலவராயர் எல்லா ஜமீனுக்கும் ஓலை அனுப்பியிருக்கிறார் .

அவரோட நிபந்தனைகளை ஏற்காவிட்டால் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு
ஜமீனின் உரிமைகளை இழக்கவேண்டுமென்று செய்தி .

இதற்கு காரணம் சங்கிலியின் குறுக்கு திட்டமே ."

" சங்கிலிக்கி இதனால் என்ன இலாபம் .
அவங்க ஜமீனும் இந்த புதிய வரியை கட்டவேண்டுமவ்லவா ...? "

" அவர்கள் இப்போது எவ்வளவு வரியென்றாலும் தருவதற்கு சித்தமாக உள்ளனர் . அதற்கு பதிலாக மற்ற சிற்றரசுகள் ஒத்துக் கொள்ளாவிடில்
அவர்கள் மேல் போர் தொடுக்க வேண்டியது .
இதற்கு படைபலமும் வீரர்களின் உணவுக்கும் தாங்கள் பொறுப்பென்றும்
அதற்கு ஈடாக சுற்றிலும் உள்ள ஜமீன்களின் கருமலைத்தேசத்தின் பிரதிநிதியாக நியமிக்க வேண்டுமென்று பேச்சு வார்த்தை .
இதற்கு சம்மதித்து விட்டார் மன்னர் .

பிரபு மற்றொரு விசயம் . இவனுக்கு உதவிக்கரம் நீட்டப்பட்டுள்ளது நமது ஜமீனிலிருந்து . " என்று கூறியதுதான் தாமதம் விருட்டென்று ஆசனத்தை விட்டு எழுந்து விட்டார் ஜமீன் .

" நமது ஜமீனிலிருந்து அந்தக் கயவனுக்கு ஆதரவா ... யார் ... ? இப்போதே அவன் தலையை சீவிவிடுகிறேன் .." கோபத்தில்
கண்கள் சிவந்தன நிர்மல் பாக்கியவாருக்கு .

" இதுமட்டுமல்ல பிரபு ... தாங்கள் செல்லும் வழியிலேயே தங்களை கொல்ல சதியும் நடந்தது ."

மீண்டும் ஆசனத்தில் அமர்ந்தவன் " கூறுங்கள் எனக்குத் தெரியாமல் இந்த ஜமீனில் ஏழாம்படை இருக்கிறதா ...?"

" ஆம் பிரபு ... தாங்கள் நிர்மல் கோலக்கல் வழியாக செல்வதாகத்தானே நமது திட்டம் ."

", ஆமாம் . அந்த காட்டுவழியாகச் சென்றால் சிறுகேணி ஆற்றங்கரையோரமாகவே
விரைவில் கருமலையை அடைந்து விடலாம் .
அதனால்தான் அவ்வழியைத் தேர்ந்தெடுத்தேன் .
ஆனால் தாங்கள் நாங்கள் பாதி வழி செல்கையிலேயே ஓலை அனுப்பி காண்டியூர் வழியாகச் செல்லச் சொல்லிவிட்டீர் .
காரணம் தெரியாவிட்டாலும் ஏதோ ஒரு காரணத்திற்காகத்தான் நீங்கள் இந்த சுற்று வழியைத் தேர்ந்தெடுத்துள்ளீர்கள் என நினைத்து அவ்வழியே படைகளைத் திருப்பினேன் . அதனால் பத்து நாட்கள் கூடுதலாகிவிட்டது பயணம் "

" நீங்கள் இங்கிருந்து கிளம்பிய பிறகுதான் எனக்கு நம்பகமான தகவல் கிடைத்தது .
நிர்மல் கோலக்கல் காட்டுப்பகுதியில் வைத்து தங்களை தாக்க கும்பல் ஒன்று காத்திருப்பதாகவும் , அது தோற்கடிக்கப்பட்டால் அதை அடுத்து வரும் வானவயராயன் காட்டுப்பகுதியிலும்
ஆபத்து இருப்பதாக தெரிந்தது .
அதனால் உடனே உங்களுக்கு மெய்ப்படை உதவி மூலம் விரைவில் சேதி கிடைக்க ஏற்பாடு செய்தேன் .
சாலைப்பிரிவு வருவதற்குள் கொண்டு சேர்ப்பித்துவிட வேண்டும் என்பது என் ஆணை .
அவ்வீரனும் குதிரையின் வாயில் நுரை தள்ளுமளவிற்கு

காற்றாய் பறந்து தங்களிடம் சேர்ப்பித்து விட்டான் ஓலையை . '

" யார் இதற்கெல்லாம் காரணம் ...? கூறுங்கள் இன்றுடன் இந்த உலகத்தில் அவன் வாழ தகுதி இல்லாதவனாக்கி விடுகிறேன் ."

" நீங்கள் இந்த விசயத்தில் அவசரப்பட்டால் மன்னருக்கு விசயம் தெரிந்து நமது ஜமீனின் வருங்காலம் கேள்விக்குரியாகி விடும் .
நான் கூறுவதை ரகசியமாக வைத்துக் கொண்டு அவர்களின் அழிவை திட்டம் போட்டு நம் மேல் பழி வராதவாறு
செயல்படுத்தவேண்டும் . "

" சரி கூறுங்கள் ... எனக்கு அவர்கள் யார் என்று இப்போதே தெரிய வேண்டும் .."

திவான் எழுந்து ஜமீனின் அருகில் வந்து அவன் காதோரமாக ரகசியமாக கூற ,

' ஆ ' இவர்களா ... ! துரோகிகள் . இப்பவே இவர்களை கத்தியால் முத்தமிடவேண்டும் என்று துடிக்கிறது மனசு . நீங்கள் எனது கையை கட்டிப் போட்டுவிட்டீர்கள் . "

" பொறுமை பிரபு . சிறிது சிறிதாக காயை நகர்த்தி தான் நமது திட்டத்தை செயல்படுத்த வேண்டும் . "

" ஆகட்டும் திவான் . நீங்கள் கூறியபடியே செய்திடலாம் . "

திவான் விடைபெற்றுச் சென்றபின்பும் நீண்ட நேரம் அங்குமிங்கும் சிந்தனையோடு நடை பயின்று கொண்டிருந்தான் .

சிறிது நேரங்கழித்து தன் அறையில் இருக்கும் அழைக்கும் மணியை
அதன் இரும்புக் குழாயை எடுத்து
அடிக்க ,

காவலன் வந்து நிற்க

" விஸ்வேஸ்வரா பாக்கியவாரை வரச் சொல் " என்று கூற

" உத்தரவு பிரபு " என்று கூறிவிட்டு
அங்கிருந்து அகன்றான் .

சிறிது நேரங்கழித்து சின்ன ஜமீன்
விஸ்வா வந்து தலைவணங்கி நிற்க ,

" உட்கார் விஸ்வா ..." என்று கூற
எதற்காக தன்னை அழைத்திருக்கிறான் என்ற
சந்தேகத்தோடே அமர்ந்தான் .

" பாலவராயர் நம்ம ஜமீனுக்கு போட்ட அதிகப்படியான
வரியை விலக்கிட்டார் . அதற்கு ஈடாக அவர்
நமது படைப்பிரிவில் ஒருகலம் வீரர்களை
கருமலையின் தென்பகுதிக்கு அனுப்பச் சொல்லி
உத்தரவிட்டுள்ளார் .
நீ படையின் சேனாதிபதியாக
அப்படையை வழி நடத்திச் செல் .
வரும் வைகாசி மாதத்தில் கிளம்புவதற்குரிய
ஏற்பாடுகளைச்
செய்துக்கொள் .
உனக்கு வேண்டிய நிதியை கணக்காளரிடம் சொல்லி
வாங்கிக் கொள் ..." என்றதும் பிரமையுடன்
நின்றான் சின்ன ஜமீன் .

" சகோதரரே ... அப்படைக்கு நான்தான் தலைமை ஏற்க
வேண்டுமா ...?
வேறு யாரையாவது அனுப்பலாமில்லையா ..."
என்று கேட்க ,

" ஏன் ... உனக்கு செல்ல மனமில்லையா ... இல்லை வேறு
பணி காத்திருக்கிறதா ...?"

" வேறுபணி இல்லை . நான் எனது சிறிய மாமா
கவிக்குளம் சீர்மாறரை
சென்று சந்தித்து வரவேண்டும் என்று அம்மீ
கூறியிருக்கிறார் . ", என்று இழுக்க

" எதற்கு இப்பொழுது கவிக்குளம் செல்ல வேண்டும் .
உனது மாமனுக்கு உடல்நலம் நலம்தானே ...?",

" நலம்தான் . ஆனால் அவரை சந்தித்தாக வேண்டும் .
மாமன் மகள் பூம்பாவையை
பார்த்து விட்டு வரச் சொல்லியிருக்கிறார் ."

" பூம்பாவையையா ... ஏன் உன் மணம் பேச நாங்கள் இல்லையா ...?, நீ எதற்கு அங்கு செல்ல வேண்டும் . இது முறையல்லவே ...?"

" ஏன் சிறு வயதிலிருந்து நாங்கள் பழகியவர்கள் தானே . இதில் என்ன தவறு ..?"

" நீ மாமன்மகளை பார்ப்பதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை . ஆனால் மணம் முடிக்க வேண்டும் என்று நினைக்கும் போது
அங்கு செல்வது முறையல்லவே ...?"

" நீங்கள் சொன்னால் நான் செல்லவில்லை .
அம்மீயிடம் சொல்லிக் கொள்கிறேன் ."

" நல்லது . இன்னும் ஒரு திங்கள் இருக்கிறது .
நீ அதற்குள் படையைப் பிரித்துக் கொள் . "

" உத்தரவு . நான் செல்கிறேன் . " வெளியேறிய விஸ்வேஸ்வரன் மடமடவென்று தன் அறைக்குள் சென்று கைகளால் தான் அமர்ந்திருந்த படுக்கையில் குத்தினான் .

உள்ளே நுழைந்த சின்ன மகாராணி
தன் மகன் ஏகக்கோபத்தில் இருப்பதைப் பார்த்து அருகில் வந்து அமர்ந்தாள் .

" மெல்ல அவன் தோளைத் தொட்டு
" ஏன் ... எதற்கு இவ்வளவு கோபம் ...?"

" என்னை இந்த ஜமீனிலிருந்து விலக்க நிர்மல் திட்டம் வகுத்து விட்டான் . ஒரு படைப்பிரிவை அழைத்துக் கொண்டு கருமலையின்
தென்எல்லைக்குச்  செல்ல வேண்டுமாம் .
அங்கு சென்றால் எத்தனை காலமாகுமோ
திரும்புவதற்கு .
என் வாழ்வின் சுகம் இத்துடன் முடிந்து விட்டது . "
கோபத்துடன் பெருமூச்சு
விட்டான் .

இதைக் கேட்டதும் வெகுண்டெழுந்த சின்னமகாராணி
" யாரைக்கேட்டு என் மகனை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்கிறான் .

தனக்கு அதிகாரம் இருந்தால் தன் உறவுவரை வைத்துக் கொள்ளவேண்டும் . என் மகனிடம் இந்த அதிகாரத்தைக் காட்டக் கூடாது இப்பொழுதே செல்கிறேன் அம்மங்காவிடம் . "

சட்டென்று தன் அம்மாவின் கையைப்பிடித்தவன் " வேண்டாம் அம்மீ ... இன்னும் ஒரு திங்கள் இருக்கிறது . அதற்குள் இவனின் கதை
முடிந்துவிடும் .
நானும் மாமாவும் ஒரு இடத்திற்கு சென்று வருகிறோம் . "

" எங்கு செல்லப் போகிறீர்கள் .
என்ன செய்வதாக திட்டம் ...?"

" தெரியவில்லை . மாமாவுக்குத் தான் தெரியும் . சரி ... நான் செல்வது இரவு நேரமாக இருக்க வேண்டும் . நிர்மல் நம்மை ஒற்றுப் பார்க்கிறான் என்று நினைக்கிறேன் . நீங்கள் கவனமாக எதையும் செயல்படுத்துங்கள் . கவனம் ' என மற்றொருமுறை கூறிவிட்டு வெளியேச் சென்றான் .

இரவு இரண்டாம் ஜாமம் தொடங்கியதும் விஸ்வேஸ்வரன் , தனது தலையைச் சுற்றி முக்காடு போட்டுக் கொண்டு பின் படிக்கட்டு வழியாக கீழே இறங்கினான் .

குதிரையுடன் வீரன் ஒருவன் நின்றிருக்க குதிரையில் ஏறியவன் ஊர் உட்புறமாகச் செல்லாமல் ஏரிக்கரை ஓரமாகவே குதிரையைச் செலுத்தினான் .

அவன் செல்லும் திசையில் பின்புறமாக குதிரையில் ஓர் உருவம் பின் தொடர்ந்தது .

சட்டென்று திரும்பிய விஸ்வா பின்புறம் திரும்பிப் பார்க்க கும்மிருட்டு மட்டுமே தென்பட மீண்டும் குதிரையை விரைவாகச்
செலுத்தினான் .

ஏரிக்கரை முடிவில் ஒரு மண்டபம் இருந்தது . அந்த மண்டபத்தில் மிகப் பெரிய காளி சிலை இருக்க காளி நன்கு அலங்கரிக்கப்பட்டு ஆக்ரோசமாக

காட்சியளித்தது . அதன் முன்னால் ஒரு யாகக்குண்டம் நெருப்பு கொழுந்துவிட்டு எரிந்துக் கொண்டிருந்தது .

அதன் முன்னால் கழுத்தில் ருத்ராட்ச மாலைகளை அணிந்தபடி
வெற்று மார்புடன் இடுப்பில் ஒரு சிறு துண்டு கட்டியபடி நெற்றி நிறைய விபூதி பூசியபடி ஒருவன் மந்திரங்களை கூறியபடி யாகக்குண்டத்தில் நெய் ஊற்றியபடி .
இருந்தான் .

குதிரையை விட்டு கீழே இறங்கிய
விஸ்வா தன் காலனியைக் கழற்றி விட்டு அவன் எதிரே சென்று அமர்ந்தான் .

அவனைப் பார்த்த அவன் தலையை அசைத்து வரவேற்றான் . வாய் மந்திரங்கள் சொல்வதை நிறுத்தவில்லை .

சுமார் இரண்டு நாழிகை அளவில் நடந்த பூசை தீபாராதனையுடன் முடிவுற்றது .

தன்இருக்கையிலிருந்து எழுந்த இருவரும் அங்கு வைக்கப்பட்டிருந்த பாத்திரத்து நீரில் கையைக் கழுவிக் கொண்டு வேறு ஒரு இடத்தில் அமர்ந்தனர் .

" என்ன மாயவா ... இன்னும் எத்தனை நாள் இருக்கிறது பூஜை முடிவடைய .
இந்த பூஜை முடிவடையும் நாளில் ஜமீனின் பட்டத்தை நான் சுமப்பேன் என்று கூறினாய் . அந்த நாளை நான் ஆவலாக எதிர்பார்க்கிறேன் ."

" பிரபு ... ஜாதக ரீதியா உங்கள் லக்ன பலன் அருமையாக ராஜ யோகம் பெற்றிருக்கிறது .
இந்த பூஜை உங்களுக்கு எந்த சிக்கலும் இல்லாமல் அப்பதவி கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் .
இன்னும் மூன்று தினங்களில் முடிவடைந்து விடும் . "

" நல்லது . மூன்று தினங்கள் . நிர்மலா ... உன் சகாப்தம் முடியப்போகிறது . இனி நானே
என் சந்ததியே இந்த ஜமீனை ஆளப் போகிறது .

இவ்வாறு எண்ணியவன் ஏதோ நினைத்தவனாக " மாயவா ... நிர்மலா சித்தர்கிட்ட வாங்கிய பொருள் இருக்கின்ற வரையில் அவனை யாரும் நெருங்க முடியாது என்று சொன்னாயே ,
எப்படி அவனை அழிக்கப் போகிறாய் ...?"
என்று கேட்க ,

" அதற்குத்தான் அன்றே கூறினேன் அதை எப்படியாவது அவனிடமிருந்து பறித்து விடு ... அல்லது தெரியாமல் எடுத்து உன்னிடத்தில் வைத்துக் கொள் என்று . ஆனால் நீ அதையெல்லாம் செய்ய இயலாமல் என்னையே கேள்விக் கேட்கிறாய் ...?"

" என்ன செய்வது ... அது அவனிடத்தில் இருந்திருந்தாலோ அல்லது அவன் மனைவி , அல்லது அவன் தாயிடத்தில் இருந்திருந்தாலோ எப்படியாவது எடுத்திருப்போம் . ஆனால் அப்பொருளை எங்கே வைத்திருக்கிறான் என்றே தெரியவில்லை . எப்படி கண்டுபிடிப்பது என்றுதான் ஒரே சிந்தனை ."

" சரி ... நான் நாளை ஜமீனுக்கு வருகிறேன் . வந்தால் என் சர்வ சக்தியால் அது மாளிகையில் எங்கே ஒளிக்க வைக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து விடலாம் . "

" நல்லது . நாளை நீ சாமியார் போல் வேடம் பூண்டு வா . அதற்குள் நான் அங்கு பூஜை செய்வதற்குரிய ஏதாவது ஒரு காரணத்தை
என் பெரியம்மா பெரிய மகாராணியின் உத்தரவைப் பெற்றுத் தருகிறேன் . அதன் பிறகு உனது சாமார்த்தியம் . "

" சரி ... அவ்வாறே செய்துவிடுங்கள் . கவனம் அதை நாம் கைப்பற்றினால்தான் அவனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் ஏதும் செய்யமுடியும் ."

" இரவு மூன்றாம் ஜாமம் வந்துவிட்டது . யாரும் பார்ப்பதற்கு முன் அரண்மனை செல்லவேண்டும் " என்று கூறிவிட்டு
வந்த பாதையில் செல்லாமல் ஊர்வழியாக குதிரையைத் தட்டினான் .

அவன் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த மாயவன் ' பைத்தியக்காரன் .
இவனுக்காகவா இந்த பூசை . மாளிகையில் மறைந்துகிடக்கும் பொக்கிசத்தை கைப்பற்றவும் சித்தரின் தகட்டை கைப்பற்றி
சகல சர்வ வல்லமையும் பெற்று இந்த வையத்திலே சர்வ அதிகாரமாக நான் விளங்கிடவே செய்கிறேன் .
இவன் மூலமாகவே அந்தத் தகட்டைப் பெறத்தானே இவனிடம் வலியச் சென்று பழகினேன் .
இனி வருங்காலமே அனைத்து கிரகங்களும் எனது சொல்படிதான் கேடாக வேண்டும் .' என்று சொல்லியவாறு சத்தம் போட்டு ஹஹா ஹா என்று பயங்கரமாகச் சிரித்தான் .

ஊர் எல்லையில் கூடாரம் அமைத்து நாடோடிக்கும்பல் தங்கியிருந்தது . அமாவாசைக்காலமாக இருந்த காரணத்தால் கும்மிருட்டாக காட்சியளித்தது .

குதிரையை அதன் போக்கில் வேகத்துடன் ஓடவிட்டவன் சிந்தனையை சிந்தித்தவாறு வந்தவன் திடீரென்று ' ஐயோ ... அம்மா ...!
என்ற அலறிலில் குதிரையின் கடிவாளத்தை பிடிக்க

அதற்குள் அங்கே சிலர் தீப்பந்தத்தை எடுத்து ஓடிவர . குதிரையின் காலடியில் கர்ப்பிணி பெண்ணொருத்தி இரத்த வெள்ளத்தில் கிடந்தாள் .

பிரபு அந்தக் கட்டாரியை திருப்பி திருப்பி பார்த்துக் கொண்டிருக்கையில் அவன் நினைவில் ஏதேதோ நிழலாடியது .

# அத்தியாயம் 21

வீல் என்ற பெண்ணின் அலறலில் தூங்கிக் கொண்டிருந்த நாடோடிக்கூட்டம் விழித்துக் கொண்டது .

தங்கள் இன கர்ப்பிணி பெண் குதிரையின் காலில் மிதிபட்டு வயிற்றுக்குழந்தை வயிற்றிலிருந்து வெளிவந்து கிடந்தது கண்டு பதறி அருகே ஓடினர் .

அந்தப் பெண்ணின் தாய் கதறியபடி ஓடி அப்பெண்ணை தூக்கி தன் மடிமேல் கிடத்திக் கொண்டு கதறி கதறி துடிக்க ஆரம்பித்தாள் .

நிமிர்ந்து குதிரையில் வீற்றிருந்த விஸ்வேஸ்வர பாக்கியவானைப் பார்த்து
*கோபத்துடன்*

" ஏ கணவாணே ...! பரியின் மீது அமர்ந்துவிட்டாள் காட்சிப்பிழை வந்துவிடுமோ ...?
தவமாய் தவமிருந்து குலதெய்வம் கன்னிமாடத்தி அருளால் சூல் கொண்ட என் மகவு இன்னும் சில தினங்களில் தான் ஈனும் குழவியைத் தாலாட்ட அல்லும் பகல் காத்திருந்தாளே ...
அடேப் பதரே ....! கண்ணிமைக்கும் நேரத்தில் ஈருயிரை காலனிடம் அனுப்பி வைத்து விட்டாயே ...
என்னிடத்தில் ஒப்படைத்து விட்டு எல்லைக்காவலுக்குச் சென்றிருக்கும்
அவளின் கணவனுக்கு நான் என்ன பதில் சொல்வேன் .
ஐயோ ...! என் குலவிளக்கை அழித்துவிட்டாயே சண்டாளா ...!
என் வயிறு துடிப்பது போல் உனை ஈன்ற தாயும் துடிக்க வேண்டும் .
என்குலம் விளங்காது சென்றது போல் உனைச்சேர்ந்த அத்தனை குலங்களும் அழிந்து போக வேண்டும் .
நீ அழிய உனக்கு எள்ளும் தண்ணீரும் தெளிப்பதற்கும் நாதி இன்றி மண்ணோடு மண்ணாக போக வேண்டும் .
நீ வாழும் பூமி கோட்டான்களும்

வெளவால்களும் ஓநாய்களும் வாழும்
மயான பூமியாக வேண்டும் .
நான் ஒருவனுக்கே துணைவி என்பது
உண்மையானால் கன்னிமாடத்தி தாயே ... இவன்
குலநாசம் அடையவேண்டும் !"

அழுது புலம்பி அவள் சாபம் கொடுக்க ,

குதிரையின் மேல் இதுகாறும் ஒருவித அதிர்ச்சியில்
இருந்த விஸ்வா ,
கண்கள் சிவந்து உதடுகள் துடித்து
சட்டென்று தன் வாளை உருவினான் .

" ஏ .. நாடோடி நாயே ! உனக்கு எவ்வளவு துணிச்சல்
இருந்தால் இந்த ஜமீனின் அடுத்த வாரிசுக்கு சாபம்
கொடுப்பாய் .
அற்ப பதரே ...! ஊரை விட்டு ஊர்வந்து பஞ்சம் பிழைக்க
வந்த நீஎன்னையா ஏக வசனத்தில் அழைக்கிறாய் ?
சாலையில் படுத்துறங்கினால் குதிரை மட்டுமல்ல ,
யானை , புலி , சிங்கம் என அனைத்தும் ஏறிக்
கொல்லும் .
அவள் கணவன் வந்தால் பதில் என்ன சொல்வேன்
என்றுதானே புலம்புகிறாய் ?
உன்மகள் சென்ற இடத்து காலன் உனையும்
அழைக்கிறான் .
போய் அவளுக்கு அங்கே துணையாயிரு .."
என்று சொல்லி தன் வாளால் ஒரே சீவில் தலையைத்
துண்டித்து தலையைத்
தூர வீசி எறிந்தான் .

இதனைக் கண்ட மற்ற ஆண்கள் தங்களிடமிருந்து
ஈட்டி , குத்துவாள் , வேல்
கம்பு போன்ற ஆயுதங்களை எடுத்து
அவனைச் சுற்றி கோபாவேசமாக
தாக்குவதற்கு நிற்க ,

" என்ன ... தாக்க வந்தீர்களா ..!,
உங்களுக்கு இங்கு தான் கலம் போடப்பட்டுள்ளது
போலும் . இனி ஒருவரும்
தலைநிமிரக் கூடாது ." என குரூரமாக

வாளைச் சுழற்றி சுழற்றி அனைவரின் தலைகளையும் கீழே மண்ணில் விழ வைத்தான் .

அப்போதும் ஆவேசம் அடங்காமல் பயந்து நடுங்கிக் கொண்டிருந்த பெண்களையும் வயோதிகர்களையும் பயத்தினால் இன்னதென்று புரியாமல் அழுதுக் கொண்டிருந்த குழந்தைகளையும் வெட்டி எறிந்தான் .

சற்று நேரத்திலே அப்பகுதியே பிணக்குவியலாகக் காட்சியளித்தது .

கழுகுகளும் வல்லாறுகளும் சுற்றிப் பறக்கத் தொடங்கின .

எங்கிருந்தோ ஓடிவந்த நரிக்கூட்டம் பிணங்களை குதறத் தொடங்கின .

இதுவரை இவற்றையெல்லாம் தூரத்தில் இருந்து விஸ்வாவை தொடர்ந்த உருவம்
உடல் நடுங்கியபடி குதிரையில் அரண்மனைக்கு விரைந்தது .

நாடோடிப் பெண் சாபமிட்ட அதே நேரத்தில் கொடியக் கனவொன்று கண்டு திடுக்கிட்டு எழுந்த நிர்மலேஷ்வரன் வியர்வையினால் உடல் நனைந்து படபடப்புடன் எழுந்தான் .

அவனுடைய மனைவி மாதங்கி தன் குழந்தையின் வீரிட்ட அலறலில் எழுந்துவிட ,

திடிரென்று கோட்டான்களும் நரிகளும் ஊளையிடும் சத்தம் கேட்க ,

அதற்குள் அரண்மனை விளக்குகள் ஏற்றப்பட அனைவரும் முற்றத்தில் குழுமி விட்டனர் .

எல்லோருக்குமே ஏதோ ஒரு துர் நிமித்திகம் தெரியவே கவலையுடன் எல்லோரும் ஒருவரையொருவர் கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தனர் .

நிர்மலேஷ்வரன் வெளியில் வந்து எல்லோரும் நின்றிருப்பதைப் பார்த்து

" ஏன் எல்லோரும் இங்கு நின்றுகொண்டிருக்கிறீர்கள் ?' என்று கேட்க ,

" பிரபு ... என்னவென்று தெரியவில்லை . வெளியில் நிமித்தகம் சரியில்லை . ஏதோ சொல்லவெணா துயரம் நம் ஜமீனுக்கு நிகழப் போகிறதோ என கவலையாக இருக்கிறது ." என்று தலைக்கோல் தனாதிகாரி கூற ,

அப்போது குதிரையின் வாய் நுரைதள்ளும் அளவுக்கு வந்து நின்ற வரகனேரி வாசல் கடைமடை வீரன் காளத்தி மூச்சிரைக்க வந்து நின்று ஜமீனுக்கு தலை வணங்கினான் .

" என்ன காளத்தி ... ஏன் இந்த நடுராத்திரியில் பிரவேசம் . ஏதாவது பிரச்சினையா ...?"

" பிரபு .... பிரபு ..". என்று வாய் குழறி கண்களில் கண்ணீர் வழிய கதற ஆரம்பித்தான் .

திடுக்கிட்ட அனைவரும் அவன் ஏதோ சொல்ல வருகிறான் என அவனையேப் பார்த்துக் கொண்டிருந்தனர் .

", காளத்தி .. முதலில் கூற வந்ததைக் கூறு ." வார்த்தைகளில் கடுமையைக் காட்டிக் நிர்மல் கேட்க ,

" பிரபு ... திவான் அவர்களுக்கு ஏதோ சந்தேகம் ஏற்பட்டதால் இந்த அரண்மனையிலிருந்து இன்று இரவு யாரோ வெளியில் செல்லப் போகிறார்கள் .
நீ அவனை பின்தொடர்ந்து சென்று அவன் எங்குச் செல்கிறான் என்பதைக் கண்காணித்து வந்துச் சொல்லவேண்டும் .
என்று கூறினார் .

அதன்படியே நான் இன்று இரவு முதல் சாமத்தில் இங்கிருந்து குதிரையில் சென்றவரை பின் தொடர்ந்துச் சென்றேன் .
பிறகு நடந்தவற்றையெல்லாம் விவரித்துக் கூறிவிட்டு தேம்பி தேம்பி அழ ஆரம்பித்தான் .

இதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் எல்லாம் திகிலடைந்து சிலை போல நின்றிருந்தனர் .

நிர்மலேஷ்வரன் கண்களில் தீப்பொறி பறக்க அங்கிருந்த வீரனை அனுப்பி நடந்தவை உண்மைதானா என அறிந்து வர அனுப்பினான் .

சிறிது நேரத்தில் அரக்க பரக்க ஓடிவந்தவன்

" பிரபு ... நமது எல்லையோரம் பிணக்குவியலாக இருக்கிறது . நாய்களும் நரிகளும் கூகைகளும் அங்கே நிரம்பிக் கிடக்கின்றன ." எனக் கூற ,

ஆரவார பேச்சினால் மகாராணி அம்மங்காதேவி ,
மாதங்கி , இளையராணி ,
இறும்பூதியான் , திவான் என அனைவரும் வந்து நிற்க மகாராணி திவானைப் பார்த்து

" இந்த நடுசியில் ஏன் எல்லோரும் இப்படி அதிர்வுடன் நிற்கிறீர்கள் . திவான் என்ன நடக்கிறது இங்கு ?" என கேள்விக் கேட்க ,

திவான் நடந்த விவரங்களை நடுக்கத்துடன்
கூற
மகாராணி சற்று மயக்கம் வருவது போல் சாய ஓடிச் சென்று நிர்மலேஷ்வரன் தாங்கிக் கொண்டான் .

தன்னிலை மறந்தவர் போல் கதறத் தொடங்கினார் மகாராணி .

" ஐயோ .... என் தெய்வமே ...! நான் என்ன செய்வேன் .
என் கண்முன்னே இந்த ஜமீன்
ஒரு பத்தினிப் பெண்ணின் சாபத்தால் அழியப் போகிறதா ...?
கோட்டையூர் மதாங்கினித்தாயே ...!
நீ எங்கள் காவலதிகாரி ஆயிற்றே ..
நீ இருந்துமா எங்களுக்கு இந்த நிலை .
கயவன் ஒருவன் செயலால் பழியை நீ சுமந்துக் கொண்டாயோ ?
அநியாயமாக தஞ்சமாக இவ்வூரில் காலடி வைத்தவர்களை பழிபாவத்துக்கு அஞ்சாமல் எங்களை படுகுழியில் தள்ளி விட்டானே மாபாதகன் ...!"
மகாராணி கதறலில் மாளிகையே அதிர்ந்தது .

இதைப் பார்த்துக் கொண்டிருந்த இளையராணி தன் சகோதரனை கையைப் பிடித்து மறைவான இடத்திற்கு அழைத்துச் சென்றார் .

சகோதரா ... இரவு மாளிகையில் இருந்து நீயும் விஸ்வாவும் தானே சென்றீர்கள் . என்ன நடந்தது ?" என்று கேட்க ,

" என்ன ... நான் சென்றேனா ...!, யார் அப்படிச் சொன்னது ?"

" ஏன் இப்படிக் கேட்கிறாய் ...? விஸ்வா என்னிடம் , மாமாவும் நானும் ஓரிடத்திற்கு இன்று இரவுப் போய் வருகிறோம் என்று தானே சொன்னான் ".

" இல்லை சகோதரி ...! நான் அப்படி எதுவும் சொல்லவில்லையே . அதுவுமில்லாமல் இரவு வெகு சீக்கிரம் உறங்கச் சென்று விட்டேன் . ஆமாம் விஸ்வா என்னிடம் கூட சொல்லாமல் அப்படி எங்குதான் சென்றிருப்பான் ? இன்னும் வரவில்லையோ ?"

" எனக்கும் புரியவில்லை . அவன் போக்கு வரவர சரியில்லை . ஜமீனை வசப்படுத்த வேண்டுமென்றால் மக்களிடம் நாம் கருணையுடன் நடந்துக் கொள்ள வேண்டும் .
அதை விடுத்து எதற்காக இப்படி ஒரு விபரீதத்தை கொண்டு வந்திருக்கிறான் .
நிர்மல் எது கிடைக்கும் , அதைப் பிடித்து தொங்கலாம் என நம்மை அழிக்க நினைக்கிறான் .
இனி இதுதான் சாக்கு என நம்மை தீட்டி விடுவான் .
என்ன செய்வது ?"

" இதை அவன் தான் செய்தான் என்பதற்கு அந்த வீரன் கூறும் சாட்சி மட்டுமே ஆதாரமாக முடியுமா ...?
நீதி சபையில் இதற்கான தகுந்த ஆதாரத்தை நிர்மல் காட்டினால் தான்
குற்றம் நிரூபிக்கப்படும் . "

" அப்படி சொல்ல முடியாது . இந்த அரண்மனையில் இருந்து குதிரையில் சென்றதற்கான ஆதாரத்தை நிர்மல் கண்டுபிடித்து விட்டான் .

குதிரை லாயத்தில் இல்லை . மற்றொன்று
விஸ்வாவும் அறையில் இல்லையென்று
சேடிகள் கூறிவிட்டனர் .
அவனை பிடிப்பதற்கு திவான் வீரர்களை
அனுப்பியதை நீயுந்தானே பார்த்தாய் ."

அதற்குள் முற்றத்தில் ஆவென்ற பலரின் அலறல்
கேட்கவே இருவரும் ஓடினர் .

அங்கே அவர்கள் கண்ட காட்சி வயிற்றில் பயத்தை
ஏற்படுத்தியது .

மகாராணி கீழே கிடக்க நிர்மல் ஓடிவந்து அவரை
தூக்கி மடியில் கிடத்திக் கொண்டு
" அம்மீ ... அம்மீ என உரத்தக் குரல் கொடுக்க அவரிடம்
எந்த சலனமும் இல்லை .

வைத்தியரை அழைக்க சிலர் ஓடினர் .

எல்லாம் முடிந்து விட்டது என வைத்தியர் கைவிரிக்க
ஹோ வென்ற அழுகை குரல்
தாதிகள் சேடிகள் காவலர்கள் எனகதற ,

மாதங்கி தனது குழந்தையுடன் அவர் அருகில் அமர்ந்து
" அத்தை ... அத்தை ' எனக் கதறினாள் .

நிர்மல் தனது மடியிலிருந்த தாயை அணைத்துக்
*கொண்டு* கதறினான் .

இளையராணி விசயம் இன்னும் விபரீதமாகி விட்டதை
உணர்ந்து தனது சகோதரினடம் இரகசியமாக
" விஸ்வா எங்கிருக்கிறான் என கண்டறிந்து
இங்கு வரவிடாமல் அழைத்துக் கொண்டு
கட்டியூர் மங்கலம் சென்று விடுங்கள் .
நான் சேதி சொல்லும் வரை அங்கேயே இருங்கள் .
விரைந்து யாரும் பார்ப்பதற்கு முன் செல்லுங்கள் "
எனக் கட்டளையிட
அங்கிருந்து நகர்ந்தான் இறும்பூதியான் .

அவன் சென்ற சில நாழிகையில் பத்து பதினைந்து
வீரர்கள் ஈட்டி முனையில் விஸ்வாவை கைது செய்து
அழைத்து வந்தனர் .

அவனைப் பார்த்தவுடன் கண்களில் கோபக்கனல் கொண்டு தனது தாயை மஞ்சத்தில் கிடத்தி விட்டு வேகமாக விஸ்வாவிடம் வந்தவன்

" இரவு நேரத்தில் எங்கே சென்றிருந்தாய் ?"
எனக் கேட்க ,

" ஏன் எங்கு செல்வதாக இருந்தாலும் ஜமீனின் உத்தரவு தேவையோ ?"

" உன் உடையெல்லாம் இரத்தக்கறை எப்படி வந்தது ?"

" அமாவாசை இருட்டல்லவா ... குதிரை பள்ளத்தில் கவிழ்ந்து உடலில் அங்கங்கே காயங்கள் . அதனால் வந்த குருதி "

" உனது வாள் குருதியில் நனைந்ததுபோல் உள்ளதே ... போருக்கு ஏதும் சென்றாயோ ..?"

" சகோதரரே ... என் மேல் என்ன குற்றச்சாட்டு சுமத்துவதற்கு இத்தனை . வினாக்களை எழுப்புகிறீர் . எதற்காக எனக்கு கைவிலங்கு எனத் தெரிந்து கொள்ளலாமா ...?',

" நமது எல்லைப் புறத்தில் எதற்காக நாடோடி மக்களை கொன்று குவித்தாய் . நீ சென்ற
மாயக்காரன் மாயாவி நரபலி கேட்டானா ...?",

" வீணாக என் மேல் பழி சுமத்துகின்றீர் .
வெகு நாட்களாகவே இந்த ஜமீனிலிருந்து
என்னை வெளியேற்ற திட்டம் போட்டுக் கொண்டுதான் வருகிறீர் .
நீங்கள் நடத்தும் இந்த நாடகத்தைக் கண்டு
அஞ்சுபவன் நானல்ல .
நான்தான் இந்த குற்றத்தை செய்தேன் என
ஆதாரபூர்வமாக அறிவித்தால் தண்டனையை ஏற்றுக் கொள்கிறேன் ."

" திவான் அவர்களே ... இவன் ஆதாரம் கேட்கிறான் .
நாளை மறுநாள் நீதி சபையில் ஆதாரம் தரப்படும் .
அதுவரையில் இவனை . காலாக்கிரகத்தில் அடைத்து வையுங்கள் .
நாளை அம்மீயின் இறுதிவீட்டு நிகழ்வுக்கு

அனைவருக்கும் சேதி அனுப்புங்கள் ."
எனக்கூறிவிட்டான் .

அவன் கூறியதைக் கேட்ட இளையராணி வேகமாக விஸ்வாவின் அருகில் வந்து
அவன் கையைப் பற்றிக் கொண்டு

" முடியாது . என் மகனை என்னிடமிருந்து யாராலும் பிரிக்க முடியாது . நிர்மல் ... நீ வேண்டுமென்றே யாரோ சொல்வதைக் கேட்டு என் மகனை குற்றவாளியாக்குகிறாய் .
அவன் இரவில் வெளியில் செல்வதற்கு ஆயிரம் காரணங்கள் இருக்கலாம் . அவன் திருமணமாகதவன் .
அதனால் தாசி வீதிக்குக் கூட சென்றிருக்கலாம் .
மாளிகையில் இருந்து வெளி சென்றவர்கள் வேறு யாராக வேணும் இருக்கலாம் .
ஏன் என் மகனை இங்கிருந்து அனுப்புவதற்கு நீயே கூட இக்காரியத்தை யார் மூலமாவது செய்திருக்கலாம் .
வீணாக பழி சுமத்தி அவனை காலாக்கிரகத்தில் அடைக்காதே ..."

அவளின் கோபச் சொற்களுக்கு செவி சாய்க்காத நிர்மல் " ம் ... ஏன் நிற்கிறீர்கள் .
இழுத்துச் செல்லுங்கள் இவர்களை ... " என ஆணையிட்டு சென்று விட ,

" நிர்மல் ... இதற்கெல்லாம் நீ பதில் சொல்ல வேண்டிய காலம் விரைவில் வரும் . என் உடன் பிறப்புக்கள் உன்னை சும்மா விட மாட்டார்கள் . உன் தாய் சென்ற இடத்துக்கு கூடிய சீக்கிரம் செல்ல தயாராயிரு ."
தன்னையும் கைதி போல் வீரர்கள் இழுத்துச் செல்வதை ஆவேசமாக எதிர்த்துப் போராடி கத்திக் கொண்டேச் சென்றாள் இளைய ராணி .

மறுநாள் மாலை தனது தாயின் ஈமக்கிரியைகளை முடித்து விட்டு களைப்புடன் தனது முற்றத்தில் அமர ,

திவான் மற்றும் சேனை தளபதி , எல்லை காவலதிகாரி அனைவரும் வந்து அவனிடம் ஜமீனில் மக்கள் எண்ணங்களை விவரித்துக் கூற ,

தலையாட்டி எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த நிர்மல் நாளை மக்கள் மன்றத்தில் நீதி சபையை கூட்டுவதற்கான
பணிகளை முடிக்க பல ஆணைகளைப் பிறப்பித்தவன் இரவின் அமைதியில் தன் படுக்கை அறைக்குச் சென்றான் .

அங்கே படுக்கை அறையில் மாதங்கி தன் குழந்தையை அரவணைத்தபடி உறங்கிக் கொண்டிருக்க சிறிது நேரம் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த நிர்மல் கண்களில் நீர் வழிய அப்படியே அமர்ந்திருந்தான் .

நேற்றய இரவில் உறங்குவதற்கு முன்
தன் அம்மியை சந்தித்து பேசி விட்டு வந்த
நிகழ்வை தன் கண் முன்னே நிழலாக்கினான் .

' வா நிர்மல் ... உன்னைத்தான் எதிர்பார்த்தேன் . இரவு நீ வழக்கமாக என்னைப் பார்க்க வரும் நேரத்துக்காகதான் காத்திருக்கிறேன் .',

' ஏன் அம்மீ ... ஏதாவது விசயம் உள்ளதா அவசரமாக பேசுவதற்கு ?'

' நீ இந்த ஜமீனின் தலைவன் . உனக்காக இந்த சமஸ்தானத்தில் பல பணிகள் இருக்கிறது . நீயும் அவற்றையெல்லாம் பொறுப்பாகவும் திறமையாகவும் நடத்திக் கொண்டு வருகிறாய் .
இப்பொழுது சில நாட்களாக நமது மாளிகையில் சிலர் கூடிகூடி பேசுகின்றனர் .
அவர்களின் செயல்பாடுகளும் மாறுபட்டு இருக்கிறது . "

" தெரியும் அம்மீ ...! நானும் கண்காணித்துக் கொண்டேதான் இருக்கிறேன் . எல்லாவற்றுக்கும் கூடிய விரைவில் விடை தெரிந்து விடும் . கவலை வேண்டாம் "

" நான் கூற வந்ததே வேற விசயம் . சென்ற வாரம் நான் நமது குலசாமி கோட்டையூர்
மதாங்கினி கோயிலுக்கு சென்றிருந்தேன் அல்லவா .
அங்கே நமது சோதிடர் இருந்தார் .
அவர் என்னைப் பார்த்ததும் பாராதவர் போல் செல்ல

முயற்சித்தார் .
அவரை அழைத்து ஏன் இந்த மாற்றம் ? என கேட்டேன் .

' அம்மாவின் முன் வர கஷ்டமாக இருந்தது .
அதனால் தான் தங்களை நேருக்கு நேர் சந்திக்காமல்
இருக்க விலகிச் சென்றேன் '
என்றார் .
எனக்கு குழப்பம் வரவே என்ன ஏது என்று
விசாரித்ததில் அவர் கூறிய விசயம் எனக்கு
அதிர்ச்சி அளித்தது ."

" என்ன விசயம் அம்மீ ...? எதற்காக அதிர்ச்சி "

" நம் ஜமீனுக்கு ஏதோ பிரச்சினைகள் வரப்போகிறதாம்
. ஜமீனின் வாரிசுகள்
உயிருக்கு ஆபத்தும் ஏதோ ஒரு பெண்ணின் மூலமாக
வரப்போகிறதாம் .
முக்கியமான இன்னொன்று நீ பித்ரு காரியம் செய்ய
வேண்டிய நேரம் இருக்கிறதாம் ..."

" பித்ரு காரியமா .. அப்படியென்றால் ?"

" நீ இனி யாருக்கு இக்காரியம் செய்வாய் ...?
இருப்பது நான் மட்டுந்தானே ..."

இந்த வார்த்தையைக் கேட்டதும் முகம் மாறிய நிர்மல் "
அம்மீ ... அப்படி ஏதும் நடக்காது . நடக்கவும் நான் விட
மாட்டேன் . " என தன் தாயின் கையை எடுத்து தன்
கையோடு வைத்துக் கொண்டான் .

" எனைப்பற்றிய கவலை இனி வேண்டாம் .
இது வாழ்ந்து முடிந்த உடல் . எனது கவலையெல்லாம்
என் குடும்ப வாரிசு எந்தக் குறையுமில்லாமல் நன்கு
வளர வேண்டும் என்பதே . நீ எனது மருமகள் அவள்
வாரிசை எந்த ஆபத்தும் வராமல் காப்பாற்றி விடு . "

அம்மீ பயந்தது போலவே அவர் மரணம் நடந்து விட்டது
. அப்படியென்றால்
இவர்களுக்கும் ஆபத்து காத்திருக்கிறதா ...?
ஆண்டவா ... நான் இவர்களை எப்படி காப்பாற்றுவேன் .
"
திடீரென்று அவனுக்கு ஏதோ தோன்றவே
தனது இரகசிய அறை நோக்கிச் சென்றான் .

பிரபு அந்த குத்துவாளை எடுத்தவுடன் தனது உடம்பில் மின்சாரம் பாய்ந்தது போல்
இருக்கவே சட்டென்று அதை கீழே போட்டுவிட்டான் .

மெல்ல நடந்து மாடி செல்வதற்குரிய
உடைந்து போன படிக்கட்டுகளின் மேல் கால் வைக்க ,

எங்கிருந்தோ பறந்து வந்த வெளவால் அவனது முகத்திற்கு அருகில் படபடவென்று பறந்துச் சென்றது .

தனது கையால் தட்டிவிட்டவன் மணி என்னவாக இருக்கும் என்பதை அறிய தனது வாட்சைப் பார்க்க அது காலை ஆறுமணியளவிலேயே நின்று போயிருந்தது .

அதனால் பாக்கெட்டில் வைத்திருந்த தனது கைப்பேசியை எடுத்து ஆன் செய்ய அது சார்ஜ் இல்லாமல் நின்று போயிருந்தது .

அந்த மாளிகையில் பகலா இரவா எனத் தெரியாத நிலை இருக்கவே சோர்வு உடலில் தோன்றியது .
நாம் வந்து வெகுநேரம் ஆகிஇருக்குமே
ஏன் பசி தாகம் எதுவும் தோணவில்லை .
இங்கு இருக்கும் மர்மங்களில் இதுவும் ஒன்று என நினைத்து மேலேறிச் சென்றான் .

மேலே பல அறைகள் இருந்ததுக்கான அடையாளம் காணப்பட்டது .

ஒவ்வொரு அறையும் மிகப் பெரியதாக காணப்பட்டது .

ஒரு அறையில் உள்ளே செல்ல அந்த அறை தனக்கு நெருக்கமான உணர்வைத் தர அந்த தரையில் சிறிது நேரம் அமர்ந்து இளைப்பாறினான் .

குழந்தை அழும் குரல் கேட்க அதன் அருகில் மங்கலான உருவம் அமர்ந்து இருப்பதுப் போல் தோன்ற மனதில் இனம்புரியாத சோகம் நிழலாடியது .

மீண்டும் எழுந்து பின்புறமாக செல்லும் படிக்கட்டு வழியாக இறங்க அது மாளிகையின் பின்பக்க *முற்றத்திற்கு* அழைத்துச் சென்றது

அது நீண்ட தாவாறமாகச் சென்றது .
அதன் கடைசியில் வலது பக்கமாக ஒரு அறை இருக்க அது சிதிலமடைந்து பாதி சுவர் கூட இல்லாமல் வெட்ட வெளியாக காட்சியளித்தது .

அதன் ஒரு சுவற்றில் வரையப்பட்டிருந்த ஓவியத்தை அருகில் சென்று கவனித்தான் .

அந்த ஓவியம் வர்ணங்கள் இழந்து உருவம் சரிவரத் தெரியாவிட்டாலும் அதன் முகம் நன்றாக தெரிந்தது .

அதன் அருகில் சென்று அதன் மேல் இருந்த தூசிக்களை கைகளால் துடைக்க அந்த முகம் .... அந்த முகம் அவனது முகம் போலவே இருந்தது .
அதிர்ச்சியுடன் அம்முகத்தை மீண்டும் பார்த்தான் .

ஆனால் அந்த முகத்தில் ராஜகளை தெரிய தலையில் கீரிடம் இருப்பது போல் தெரிந்தது .

சிறிது நேரம் அதையே பார்த்துக் கொண்டிருந்தவன் மெல்ல அந்த அறையைச் சுற்றி வந்தான் .

அறையின் தெற்கு மூலையில் புற்றுப் போல தெரிய அதன் அருகில் சென்று நின்றவனின் நினைவில் ஏதோ வந்து வந்து போனது .

திரும்பியவன் தன் காலை அங்கிருந்து எடுக்க முடியாமல் இருப்பதை உணர்ந்து
கீழே ஏதாவது காலில் ஒட்டி இருக்கிறதா
என குனிந்து பார்த்தான் .

எதுவும் இல்லை எனத் தெரிந்து மீண்டும் திரும்ப முடியவில்லை .

ஏன் இந்த நிலை ? ஏதோ ஒரு காரணம் இருக்கிறதோ என அங்கே அப்படியே அமர்ந்தான் .

அந்த தரையை உற்றுநோக்கியவன் தன் கையில் இருந்த சிறு பேனாக்கத்தியால்
அந்த தரையை குத்தினான் .

மெல்ல மெல்ல அந்த தரையைத் தோண்ட ஆரம்பித்தவன் சிறிது தரை பெயர்ந்த உடனே அந்த

மண்ணைக் கிளறினான் .

சிறிது நேரத்திலேயே அந்த இடத்தில்
ஏதோ ஒரு தகடு போல தெரியவே அதை மண்ணில்
பதிந்து கிடந்ததால் நன்றாக
அதை கிளறினான் .

தகடு மண் ஏறி துருபிடுத்துக் காணப்பட அதை
கையில் எடுத்தான் .
எடுத்தவுடனே காற்று உட்புறத்தில் பலமாக வீச ,
தடுமாறி கீழே விழப் போனான் பிரபு .

தன் மனைவி மாதங்கியையும் தன் வாரிசையும் எந்த
வித தீங்கும் நேராமல் காக்க வேண்டும் என தன்
இஷ்டத் தெய்வத்தைக் கையெடுத்துக் கும்பிட்டான்
நிர்மல் .

தனது இரகசிய அறையில் தனது தந்தையின் ஓவியம்
வரையப்பட்டிருந்த இடத்தில் தான் அமர்ந்து பேசும்
அழகிய வேலைப்பாடுடைய ஆசனத்தை இழுத்து
விட்டு கீழே உள்ள விரிப்பை எடுத்தான் .

அதன் கீழே திருகும் குமிழ் ஒன்று இருக்க அதை தன்
கைகளால் வலது புறம் மூன்று முறையும் இடது புறம்
மூன்று முறையும் சுழற்றினான் .

உடனே அந்த ஓவியம் இருக்கும் சுவர் திறந்துக்
கொள்ள அதன் உள்ளே இருக்கும் படிக்கட்டு வழியாக
உள்ளே இறங்கினான் .

கையில் இருந்த தீப்பந்தத்தால் வழி நன்றாகத் தெரிய
நேராக படிக்கட்டில் இறங்கியவன் பின்பு
சமநிலப்பகுதியில் இடது புறமாக வளைந்துச்
சென்றான் .

கடைசி படிக்கட்டில் இறங்கியவன் படிக்கட்டின்
பக்கவாட்டில் கையை வைத்து அந்த மரப்படிக்கட்டை
முன்பக்கம் தள்ளிவிட
பள்ளம் போன்ற பகுதியில் ஒரு சிறிய பேழை இருந்தது
.

அதை எடுத்து திறந்தவன் அதில் உள்ள
மயில் தோகைபோல் இருந்த திறவுகோலை

எடுத்தான் .

அங்கே சிறிய அறை போன்று கம்பிகளால் பின்னப்பட்டு சிறிய மரக்கதவு போடப்பட்டிருந்தது .

அந்தக் கதவைத் திறக்க அந்த திறவுகோலை எடுத்து திறக்க உள்ளே குனிந்துச் சென்றான் . இருட்டாக அறை காட்சியளித்தாலும் அந்த அறை முழுவதும் பளபளவென்று மின்னியது .

அறையில் ஆளுயுர அளவுக்கு மலை போல் தங்க நகைகளும் , வைரங்களும் , வைடூரியங்களும் நிறைந்துக் காணப்பட்டது .

இந்த பொக்கிசங்கள் காலங்காலமாய் தனது பரம்பரைகளால் பாதுகாப்பாய் பராமரிக்கப்பட்டு வருகின்றன .

ஜமீனுக்கு முடிசூடியவர்கள் மட்டுமே இந்த பொக்கிசத்தை பராமரிக்க தகுதியானவர்கள் .

தனது மனைவிக்கு கூட இந்த இரகசியத்தை கூறக்கூடாது . தனது மரணம் திடீரென்று ஏற்பட்டால் தனது கைப்பட எழுதிய ஓலையை அரக்கு முத்திரையிட்டு
ஜமீனின் வசத்தில் ஒப்படைத்திருந்த அதை வாரிசு முடிசூடிக் கொள்ளும் அன்று
ஒப்படைப்பார் திவான் .

அதை வாங்கியவர்கள் தான் மட்டுமே படித்து விட்டு மீண்டும் அரக்கு முத்திரையிட்டு திவானிடம ஒப்படைத்து விடுவார்கள் .

அதில் பொக்கிசத்தைப் பற்றிய தகவல்கள் இருக்கும் .

வயோதிகத்தால் இறக்கும்போது தனது முடிசூடும் வாரிசிடம் மட்டுமே அவர் கூறுவார் . அப்போது அந்த ஓலைக்கு வேலையிருக்காது .

நிர்மல் பொக்கிசங்களின் நடுவில் இருக்கும் ஒரு ஆரத்தை எடுத்தான் .
அதன் நடுவில் இருக்கும் லாக்கெட் போன்ற டாலரை

திறக்க அதில் ஒரு பித்தளைத்தகடு எழுத்துக்கள் பொறிக்கப்பட்டு காணப்பட்டது .

அதைக் கையில் எடுத்தவன் தனது இடுப்பு கச்சையில் பத்திரமாக சுருட்டி செருகிக் கொண்டான் .

மீண்டும் வந்த வழியே வந்தவன் தனது அறைக்கு வந்து கட்டிலில் அமர்ந்தான் .

தனக்கு அந்தத் தகடு கிடைத்த விவரத்தை நினைத்துப் பார்த்தான் .

தனக்கு திருமணமான புதிதில் மாதங்கியை அழைத்துக் கொண்டு சுற்றுலா சென்றிருந்த நிர்மல் தனது தோழன் கொடுங்கோளூர் காத்தவராயன் அழைப்பை ஏற்று அவன் ஆளுமைக்குட்பட்ட அதியங்காடு சென்றிருந்தான் .

அவன் மனைவி சித்ராங்கியை மாதங்கிக்கு மிகவும் பிடித்துவிட்டது .

இதனால் அவர்கள் இருவரும் இவர்களை மறந்துவிட்டு தனி உலகத்தில் பறக்க ஆரம்பித்தனர் .

இதனால் நிர்மலும் அவன் நண்பனும் தனியாக ஊரைச் சுற்றத் தொடங்கினர் .

ஒருநாள் குதிரையில் இருவரும் பக்கத்தில் இருக்கும் பர்வதமலையில் மேலேறிச் சென்றனர் .

அப்போது காத்தவராயன் தன் நண்பன் நிர்மலிடம் " நண்பா ... இந்த மலைமேல் சுனை ஒன்று இருக்கிறது . அந்த சுனைக்கு எதிர்புறத்தில் மலையைக்குடைந்து குகை ஒன்று உள்ளது .
அந்தக் குகைக்குள் சித்தர் ஒருவர் இருக்கிறார் . அவர் பௌர்ணமி நாளில்
அங்கு வரும் பக்தர்களில் சிலரை மட்டும்
அருகில் அழைத்து பிரசாதம் அளிப்பார் .
அவரின் கடாட்சம் கிடைக்காதா என்று
ஆயிரக்கணக்கில் பக்தர்கள் காத்திருப்பர் .
இன்று பௌர்ணமி நாள் அல்ல . நாம் எதற்கும் அந்த சுனைப்பக்கம் சென்று
பார்ப்போம் .

அதிர்ஷ்டமிருந்தால் அவரை சந்திக்கும் பாக்கியம் நமக்கு கிடைக்கலாம் ." என்று கூறி அங்கே அழைத்துச் சென்றான் .

சுனை நீர் பரவலாக கொட்டிக் கொண்டிருந்தது . எங்கிருந்து நீர் வருகிறது என்று தெரியவில்லை . அந்த நீர் ஓடை போல் ஓடிக் கொண்டிருந்தது .

குகைக்குள் செல்ல அந்த நீரைத் தாண்டிச் செல்லவேண்டும் .

அதனால் இருவரும் நீரில் இறங்கி எதிர்புறம் செல்லத் தொடங்கினர் .
ஆழம் குறைவாக இருந்ததினால்
நடந்தே ஓடை எதிர்ப்பக்கம் வந்தனர் .

குகை வாசலில் சிறிது நேரம் நின்றவர்கள் தங்கள் காலணியை விட்டு விட்டு மெல்ல உள்ளே நுழைந்தனர் .

உள்ளே இருந்து நறுமண வாசனை வந்தது .
இன்னும் உள்ளே செல்ல அந்த குகையின்
நடுநாயகமாக சிவலிங்கம் பூ அலங்காரம்
செய்யப்பட்டு அருகில் அகல் விளக்கில்
தீப ஒளி ஏற்றப்பட்டிருக்க ,

இடுப்பில் வெள்ளைநிறத் துண்டு மட்டுமே
அணிந்திருக்க வெண்தாடியுடன்
சற்றுக் குள்ளமான உருவத்துடன் கூடிய உருவம்
தியானநிலையில் அமர்ந்திருந்தது .

அவர் எதிரே இருவரும் அடக்கமாக கைகளை கட்டியபடி அமர்ந்தனர் .

சிறிது நேரத்தில் கண்களை மெல்லத் திறந்தவர் ஆண்டவனுக்கு மலரினால் அபிசேகம் செய்ய ஆரம்பித்தார் .

மீண்டும் கண்களை மூடி மந்திர உச்சாடனம் செய்தவர் கண்களைத் திறந்தார் . அங்கிருந்த மண்குடுவையில் இருந்த நீரை உள்ளங்கையில் மூன்றுமுறை ஊற்றிக் குடித்தார் .

பின்பே எதிரில் இருக்கும் இருவரையும் பார்த்து மண்குடுவை நீரை அவர்களுக்கும் உள்ளங்கையில் ஊற்ற பக்தியுடன் இருவரும் பவ்யமாக வாங்கிக் கொண்டனர் .

இருவரையும் உற்றுப் பார்த்தவர் நிர்மலைப் பார்த்து " நீ வருவாய் என எனக்குத் தெரியும் .
அணங்கலேஷ்வரன் வாரிசுதானே நீ ...?",
எனக் கேட்க ,

இருவரும் வியப்புடன்அவரைப் பார்க்க ,

" என்ன வியப்பாக இருக்கிறதா ... உனது தந்தை எனது பக்தன் . அடிக்கடி எனைத் தேடி வரும் அவன் நீ பிறந்த போது வந்து எனக்குச் சேதி சொல்லிவிட்டுப் போனான் .
எனக்குத் தெரியும் அவன் மீண்டும் இங்கு வரமுடியாது என்று ."

" ஆமாம் சுவாமி ... என் இளவயதில் நோய்க்காரணமாக இறைவனடிச் சேர்ந்து விட்டார் தந்தை ." நிர்மலின் கூற்றுக்கு

தலையசைத்த சித்தர் " தெரியும் ... நீ இப்போது விவாகப் பந்தத்தில் இணைத்துக் கொண்டாய் .
உன் வருங்காலம் மிகவும் சிக்கலாகப் போகிறது . உன் குடிமையே உனது காலத்திலேயே முடிவுக்கு வரும் நிலமையில் உள்ளது .
நீ செய்யும் மாட்சிமைப் பொருந்திய ஆட்சியே உனைக் காப்பாற்றும் ." எனக் கூறி விட்டு
உள்ளே சென்று வந்தவர் கைகளில் பித்தளை தகடு சிறிய அளவில் சதுர வடிவில் இருந்தது .
அதில் சிறிய கம்பி போன்ற கூர்மையான ஆயுதத்தால் ஏதோ எழுதினார் .

பிறகு அதை லிங்கத்தின் பாதஅடியில் வைத்து அதற்கு பூவால் சில மந்திரங்களை கூறி கைகளால் அதை எடுத்து கண்ணில் ஒற்றிக் கொண்டவர்

நிர்மலிடம் " கையை விரித்துநீட்டு " எனக் கூற ,

நிர்மல் தனது கையைவிரித்து காட்ட
அவன் உள்ளங்கையில் சிறிது நீரை தெளித்து விட்டு
அந்த தகட்டை வைத்தார் .

பின்பு அவனிடம் " இது மிகவும் சக்தி வாய்ந்தது . இது
உனக்கு பல சங்கடங்கள் வராமல் தடுக்கும் . இதை
வைத்திருக்கும் இடத்திலிருப்பவர்களை எந்த தீங்கும்
அணுகாது . இந்த உலகில் மிகவும் சக்தி வாய்ந்த
மனிதனாக விளங்க வைக்கும் .
இது நல்லவர்களிடம் இருந்தால் மக்களுக்கு
நன்மைகள் கிடைக்கும் .
ஆனால் தீயவர்களின் கையில் மட்டும்
கிடைத்து விடக்கூடாது .
எவ்வளவு பாதுகாப்பாக வைத்திருக்கிறாயோ
அவ்வளவு உனக்கு சிறப்புகள் சேரும் .
ஆபத்துக் காலங்களில் இது இருக்கும் இடத்தில்
இருந்தால் ஆபத்து நெருங்காது .
இதை உனக்கு மட்டும் நான் வழங்கக் காரணம் உன்
தந்தைக்கு நான் கொடுத்த
வாக்குறுதி .
நான் செய்த தவறு இப்போது என் பாவமாக காலைச்
சுற்றி இருக்கிறது .
அந்த பாம்புகளால் என் வாரிசுக்கு ஏதும் ஆபத்துக்கள்
வரலாம் .
தாங்கள் தான் அவனைக் காப்பாற்ற வேண்டும் என
உன் தந்தை என்னிடத்தில் கதறி என்னிடம் வாக்குறுதி
வாங்கிக் கொண்டார் .
எனக்குத் தெரியும் ... நீ வாலிப வயசில் எனைத் தேடி
வருவாய் என்று .
அதற்காகத்தான் இதை பாடம் போட்டு
வைத்திருந்தேன் ."
என்று கூறி அதை அவன் கையில் கொடுக்க ,

அதை பயபக்தியுடன் கண்களில் நீர் மல்க வாங்கிக்
கொண்டான் .

அவன் செல்வதையேப் பார்த்துக் கொண்டிருந்த சித்தர்
" பாவம் ... நீ . வரும் வினைகளை சற்று தாமதப்படுத்த
முடியுமே தவிர முற்றிலும் தடுக்க முடியாது . இது
பூர்வீக வினை . இதை தடுக்க நான் யார் ...?

ஆனால் இன்னும் சில காலத்தில் எனைத் தேடி நீ வருவாய் ..', என மனதிற்குள் நினைத்துக் கொண்டார் .

இதை இவ்வளவு நேரமும் குகையின் வாயிலில் நின்று கேட்டுக் கொண்டிருந்த
உருவம் அவர்கள் இருவரும் வெளிவருவதைக் கண்டு குகையின் அருகில் இருந்த பாறையின் மறைவில் மறைந்துக் கொண்டது .

அவர்கள் இருவரும் வெளிவந்து ஓடையைக் கடந்து செல்வதைக் கண்ட அந்த உருவம் மெல்ல குகையில் நுழைந்தது .

அந்த உருவத்தைக் கண்டவுடன் சித்தரின் முகம் மாறியது .

அவர் எதிரில் அமர்ந்த உருவம் அவரை நிமிர்ந்துப் பார்க்க

கண்களில் கோபக்கனலைக் காட்டிய சித்தர்
" மாயவா ... உன்னை இங்கு வரக்கூடாது என்று எத்தனை முறை எச்சரித்திருக்கிறேன் . மறுபடி மறுபடி ஏன் வருகிறாய் ..?"

" ஏன் சாமி ... எனக்கு செய்ய மாட்டேன் என்று கூறிவிட்டு எவனுக்கோ அந்த தகட்டை கொடுக்கிறீரே ... இது நியாயமா ...?
நானும் வருடா வருடம் அவ்வளவு தூரத்தில் இருந்து உன்னை தரிசிக்க வருகிறேனே ... ஏன் எனக்கு அதை கொடுக்க
மறுக்கிறீர் ...?"

" ஏனென்றால் நீ நல்ஆத்மா கிடையாது .
உன்னிடம் அந்தப் பொருள் இருந்தால் நீ இந்த உலகை அழிவுப் பாதையில்
கொண்டு செல்வாய் . இவ்வளவு நேரம் நீ மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தாய் அப்படித்தானே ."

" ஆமாம் சாமி . நான் உங்களைப் பார்க்க வந்தேன் . நீங்கள் வேறு நபரிடம் பேசிக் கொண்டிருந்தீர்கள் . அவர்கள் செல்லும் வரை காத்திருக்கலாம் என்று வாசலில் நின்றிருந்தேன் .

பேச்சு என் காதில் தானாக வந்து விழுந்தால் அதற்கு நான் பொறுப்பாக முடியாது ."

" நீ அதிகம் பேசுகிறாய் . உன்னிடத்தில் எனக்கு வேலையில்லை . நீ செல்லலாம் ."

" இனி எனக்கு இங்கு என்ன வேலை .
அதுதான் அந்த நபரிடம் இருக்கிறதல்லவா ...
அதை எப்படி பறிப்பது என்று எனக்குத் தெரியும் !"

அவன் கூறுவதைக் கேட்டவர் புன்சிரிப்பு சிரிக்க ,

" அது சரி . எனக்கு ஒன்று புரியவில்லை .
அவன் யார் ... எதற்காக அவனுக்கு கொடுத்தாய் .
அவனை நான் இதற்கு முன் இங்குப் பார்த்ததாகவே நினைவில்லையே ..."

" ஏன் ... நீதான் அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்ததாகக் கூறினாயே ...?"

" இல்லையே ... கடைசியாக தானே நான் வந்தேன் .
அவன் எந்த நாட்டுக்காரன் ?",

" ஏன் ... நீதான் மந்திரக்காரனாயிற்றே ...
கண்டுபிடிக்க வேண்டியதுதானே ...?"

" என்னால் முடியாது என்று ஒன்று இல்லை .
இப்பொழுதே அவனிடம் உள்ள பொருள் என்னிடம் வரவழைத்து விடுவேன் . பார்க்கிறியா ...' என்று சவால் விட ,

' இவன் முழுவதும் கேட்கவில்லை .. நல்லவேளை இவனிடமிருந்து நிர்மல் தூர
சென்றிருப்பான் . ' என எண்ணிய சித்தர்
அவனை தன் கண்களின் தீட்சண்யத்தால் எரித்து விடுவது போல் சித்தர் பார்க்க ,

அவன் மயக்க நிலை அடைந்து ஓடைக்கு அப்புறமாக தூக்கி எறியப்பட்டான் .

இது எதையும் அறியாத நிர்மல் தன் நண்பனுடன் குதிரையில் மலையிலிருந்து கீழே இறங்கிக் கொண்டிருந்தான் .

மாளிகை மர்ம முடிச்சுகள் அவிழத் தொடங்கிவிட்டது .

# அத்தியாயம் 22

காற்று சுழன்று சுழன்று அடிக்கவே பிரபு நிலைத் தடுமாறி அங்கிருந்த சுவற்றில் முட்டி நிற்க ,

நெற்றி சிறிது வீக்கம் காண அதைப் பொருட்படுத்தாது கையில் இருந்த தகடை இறுக்கமாக பிடித்துக் கொண்டான் . ட

காதில் ரகசியமான குரல் கேட்கத் தொடங்கியது .

**'நிர்மலேஷ்வரா... உன்னால் மீண்டும் இத்தனைக் காலங்களுக்குப் பிறகு எங்களால் மாளிகையின் உள்ளே வரமுடிந்தது.**
**உன்னுடைய மனோதிடம் எங்களின் புனர்வாழ்வுக்கு வழி வகுத்திருக்கிறது.**
**இன்னும் சில பணிகள் காத்திருக்கிறது.**
**அது உன்னால்தான் முடியும். இனி நீ பயமின்றி இங்கே செயல்பட நாங்கள் உறுதுணை.**
**முன்னேறிச் செல் மாளிகையின் பின்புற அறைக்கு.'**

இரவு முழுவதும் சரியாகத் தூங்காததால் நிர்மல் கோழி கூவியும் உறங்கிக் கொண்டிருந்தான் .

திவான் வந்து மாதங்கியிடம் ' இன்று மக்கள் மன்றத்தில் நீதிசபை நடத்தப்படவிருக்கிறது . பிரபு தயாரா இருந்தால் அழைத்துச் செல்லலாம் என்று வந்தேன் ' என்று கூற ,

இன்னும் சில நாழிகைக்குள் வந்துவிடுவார் எனக் கூறி அனுப்பிய மாதங்கி தன் பதியை எழுப்பி விவரத்தைக் கூற ,

அவசர அவசரமாகக் கிளம்பியவன் தன் மனைவியிடம் ' கவனமாக மாளிகைக்குள் மட்டுமே நீ இருக்க வேண்டும் .
எக்காரணம் கொண்டும் நீயும் குழந்தையும் மாளிகையை விட்டு வரக்கூடாது . இது என் கட்டளை '

எனக் கூறிவிட்டு வெளியே காத்திருக்கும் ரதத்தில் புறப்பட்டான் .

சபையில் உள்ளே நிர்மல் நுழைய சபையின் இருபக்கங்களிலும் ஆசனங்கள் போடப்பட்டு வலதுபுறம் உள்ள ஆசணங்களில் மக்கள் மன்றத் தலைவர்களும் , இடதுபுறம் உள்ள ஆசனங்களில் நீதிசபையின் உறுப்பினர்களும் , நடுவில் உயரமேடையில்
நீதியரசர் அவருக்கென அமைக்கப்பட்டிருக்கும் அழகிய வேலைப்பாடுடைய ஆசனத்தில் தலையில் வட்டவடிவ தலைப்பாகையுடன் அமர்ந்திருந்திருக்க அவர் அருகில் மற்றொரு ஆசனத்தில் நிர்மல் அமர்ந்திருக்க ,

முரசின் அறிவிப்பினைத் தொடர்ந்து
விஸ்வேஸ்வரன் கையில் விலங்குடன்
சுற்றிலும் வீரர்கள் புடைசூழ அவர்களுக்கு எதிரில் இருந்த வட்டவடிவ மரப்பலகையின் மேல் நிற்க வைக்கப்பட்டான் .

அவன் கண்களில் குரூர வெறி காணப்பட தலையை சிலுப்பிக்கொண்டு வெறிபிடித்தவன் போல் நிற்க

மன்றத்தின் வெளியே மக்களின் கூச்சல்
அதிகமாக வீரர்கள் தங்கள் கைகளிலிருந்த ஈட்டியால் அவர்கள் முன்னேறி உள்ளே நுழைவதை தடுத்துக் கொண்டிருந்தனர் .

மக்கள் மன்ற உறுப்பினர் ஒருவர் எழுந்து
" இன்று அவசரமாக மன்றத்தை வரவழைத்த காரணத்தை இவ்வழக்கை நீதிமன்றத்திற்கு கொண்டுவந்த இந்த மங்களாபுரி ஜமீனின் திவான் அவர்களை
குற்றம் எதற்காக ஏன் யார் நிகழ்த்தினர் என்பதை இச்சபை கேட்க உத்தரவிடுகிறது .

திவான் மன்றத்தின் மற்றொரு வட்டப்பலகை மீது
நின்றார் .

" கூறுங்கள் ஜமீனின் இளைய வாரிசு ஏன் இங்கே
குற்றவாளியாக நிறுத்தப்பட்டிருக்கிறார் ?"

" இங்கே நின்றிருக்கும் ஜமீனின் இளைய வாரிசு நேற்று
முன்தின இரவில் நமது ஜமீனின் எல்லைப்புற தெற்கு
வாசல் அருகில் உள்ள காட்டுப்பகுதியில் தங்கியிருந்த
நாடோடிக் கும்பலில் உள்ள கர்ப்பிணிப்பெண்ணை
குதிரையின் கால்களில் போட்டு மிதித்து
வயிற்றிலிருந்த குழந்தையையும் சேர்த்துக்
கொன்றுவிட்டார் .
அதைக் கேட்கப் போன அவளின் தாயையும்
அவளுடன் வந்த கூட்டத்தினர் என சுமார் நூறு பேருக்கு
மேல் தலை வேறு உடல் வேறு என வெட்டிச்
சாய்த்துள்ளார் .
மேலும் தற்காத்துக் கொள்ளும் போராகவே
இருந்தாலும் குழந்தைகளையும் , வயோதிகர்களையும்
,
நோயாளிகளையும் கொல்லக்கூடாது என்கின்ற
விதியையும் மீறி அனைவரையும்
கொன்று குவித்திருக்கிறார் .
வெளிஊரிலிருந்து தஞ்சம் என வந்தவர்களை வீழ்த்தி
நமது ஜமீனுக்கு அவப்பெயரை ஏற்படுத்திக்
கொடுத்துவிட்டார் .
இதன் தீவிரத்தை உணர்ந்து தாங்கள் தல்லதொரு
தீர்ப்பை அளிக்க விழைகிறேன் ."
திவானின் குற்றச்சாட்டைத் தொடர்ந்து
விவாதம் தொடங்கியது .

விஸ்வேஸ்வரன் தன் மீது கூறும் குற்றச்சாட்டுகளை
மறுத்து பேச
தனக்குள்ள உரிமையிலிருந்து தன்னை நீக்கவே
நிர்மல் இதைச் செய்கிறான் எனக் கூற ,

பிரபு எழுந்து அந்த வட்டப்பலகை மீது நின்று
அன்று இரவு அவன் மாளிகையிலிருந்து எழுந்துச் சென்றதும் பின் தன் வீரன் அழுதபடி வந்து விசயத்தைக் கூறவும்
அது உண்மைதானா என தான் வீரர்களை அனுப்பி வைத்து உண்மையை அறிந்துக் கொண்டதும் அதன் பிறகு விஸ்வா இரத்தக்கறை படிந்த உடையுடனும் வாள் இரத்தம்படிந்தும் குதிரையில் வந்திறங்கியதும் தெரிய வந்தது எனக் கூற ,

நீதிமன்றமும் மக்கள்மன்றமும் மாறி மாறி விவாதித்து , ஒரு முடிவை எடுக்க நீதியரசருக்கு விண்ணப்பம் வைத்தனர் .

மீண்டும் சிறிது நேரம் நீதிமன்ற தலைவர் விசாரிப்பு நடந்தது .

இறுதியில் விஸ்வா ஜமீனின் நலத்தைக் கெடுக்கும் வகையில் கொடூரமாக சிறிதும் இரக்கமின்றி நடந்துகொண்டதால் நூற்றுக்கணக்கானோர் பலியானதற்கு காரணமானவன் என்றும்
அதற்கு கழுவேற்றுதல் ஒன்றே தீர்வு என சபை நீதி வழங்கியது .

விஸ்வேஸ்வரன் திமிறியபடி ' இது அநியாயம் . என்னை அழிப்பதற்கு திட்டம்
தீட்டிவிட்டீர்கள் . இதைக் கேட்டு எனது மாமன்கள் சும்மா இருக்கமாட்டார்கள் .
நிர்மல் ... என் மரணம் உன் குடும்ப அழிவுக்கு காரணம் ஆகிவிட்டது ... புரிந்துக் கொள் .' என்று கத்தினான் .

மக்கள் இந்தச் சேதியைக் கேட்டதும் குதூகலத்துடன் பறைகொட்டிக் கொண்டும்
ஆடிப்பாடிக் கொண்டும் கழுவேற்றும் இடம் நோக்கிச் சென்றனர் .

இந்த செய்தி அரண்மனைக்குள் பரவியது .
மாதங்கி வருத்தமடைந்தாள் . நம் உறவுகள்
ஒவ்வொரு விதமாகவா மறைவது .
ஆண்டவா ... இது போன்ற நிகழ்வுகள் நல்லதில்லையே
. இது எதில் போய் முடியுமோ தெரியவில்லையே ...?"
என்று அரற்றிக் கொண்டிருந்தாள் .

இளையராணி பாதாளச்சிறையில்
அடைக்கப்பட்டிருந்ததால் அவள் காதுக்கு இந்தச்
செய்தி போய்ச் சேரவில்லை .

மாட்டுவண்டியில் கால்களை இருபிரிவாக பிரித்து
கட்டி வைத்தும்
கைகளை பிரித்தும் கட்டிவைக்கப்பட்டு
வீரர்கள் புடைசூழ இழுத்துச் செல்லப்பட்டான் விஸ்வா .

இதற்குள் தப்பி ஓடிவிட்ட அவன் மாமன்
இரும்பூதியான் தன் சகோதரன் கவிக்குளம் சீர்மாறன்
உடன் தீவிர ஆலோசனையில் இருந்தான் .

எப்படியாவது தங்கள் மருமகனை
காப்பாற்றிவிடவேண்டும் என்றும் தங்கள் சகோதரி
என்னநிலையில் இருக்கிறாள் என்பதை அறிந்து வர
அனுப்பிய வீரன் இன்னும் வரவில்லையே என
பயத்துடன்
அங்குமிங்கும் நடைபயின்றுக் கொண்டிருந்தான் .

வீரன் ஒருவன் மிக வேகமாக அங்கே வந்து நிற்க ,

" சொல் அங்கே நிலமை எப்படி ...? விஸ்வாவுக்கு என்ன
தண்டனை அளித்தார்கள் . சகோதரி எங்கே
இருக்கிறார் ?"
இரும்பூதியான் அவசரமாக அவனைக்
கேள்விக்கணைகளால் துவைக்க ,

" பிரபு ... ! நிலமை மீறிவிட்டது . நீதிமன்றமும்
மக்கள்மன்றமும் இணைந்து நம் சிறிய ஜமீனுக்கு
கழுவிலேற்றுதல் தண்டனை உறுதி செய்து

கழுமரத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டனர் .
இளையராணியை பாதாளச்கிறையில்
அடைத்திருக்கிறார்கள் .
நல்லவேளை நீங்கள் மங்களாபுரி எல்லைக் காட்டில்
வந்து இருந்ததனால் உடனடியாக வந்து சேதி சொல்ல
முடிந்தது .",

அவன் சென்றபிறகு சீர்மாறன் தனது சகோதரன்
இறும்பூதியானுடன் ரகசிய ஆலோசனை நடத்தினான் .
' நான் சொன்னபடி செய் . நீ யாரென்று தெரியாமல்
மாறுவேடத்தில் செல் .
வீரர்கள் இருபது பேர் போதும் . அதிகமாகச் சென்றால்
ஆபத்து நமக்கும் நிச்சயமாகிவிடும் . ம் ... விரைந்து
செல் ' என உத்தரவிட ,

இறும்பூதியானுடன் இருபதுவீரர்கள் குடியானவர்கள்
போல் வேடமிட்டு
ஆயுதங்களை தங்கள் குதிரைகளின் மேல்
தொங்கவிட்டபடி விரைந்தனர் .

விஸ்வேஸ்வரனை பாதுகாப்புடன் அனுப்பிவிட்டு
நிர்மல் சேனைத்தளபதி ,
திவான் , கோட்டை அதிகாரி மூவருடன் ஆலோசனை
நடத்தினான் .

கண்டிப்பாக அவனுடைய மாமன்மார்கள் இதை
முறியடித்து அவனை காப்பாற்றி அழைத்துச் செல்ல
முயற்சிப்பார்கள் .
நாற்புர எல்லையையும் பலப்படுத்துங்கள் .
சந்தேகப்படும்படி யார் திரிந்தாலும் கைது
செய்யுங்கள் .
மேலும் மக்களிடம் தண்டோரா மூலம் அறிவுப்புச்
செய்துவிடுங்கள் .
யாரும் கழுமரம் இருக்கும் இடத்திற்கு வரக்கூடாது .
மீறி வந்தால் கைது செய்யப்படுவார்கள் என்று .
மக்கள் இல்லாவிட்டால் அவனை நெருங்கும்

எவரையும் நம்மால் வளைத்துவிட முடியும் .
மேலும் கழுமரம் இருக்கும் இடத்தில் சுற்றிலுமுள்ள மரங்களில் வீரர்களை காவலுக்கு நிறுத்துங்கள் .
கண்டிப்பாக இறும்பூதியான் மாறுவேடமாக வரக்கூடும் .
அவனை உயிரோடவோ பிணமாகவோ பிடித்துவிடுங்கள் . அவன் நமக்கு எப்போதும் தலைவலிதான் '.

அவனுடைய கட்டளையை ஏற்று துரிதமாக செயல்படுத்த விரைந்தனர் .

கழுமரம் அருகில் வந்தவுடன் அவனை வளைத்து நின்ற வீரர்கள் அவன் கை கால்களை நீளமான கயிறுகளால் பிணைத்து மேலிருக்கும் இயந்திரத்தை கீழே இறக்கி அதில் கயிறுகளை பிணைத்துவிட ,
ஏற்றம் போல் காணப்பட்ட மரப்பலகையை இரு வீரர்கள் விசைப்லகையைப் போல்
. இயக்க மெல்ல மெல்ல அவனை தூக்கியது .

களைத்துப் போய் காணப்பட்ட விஸ்வா துவண்டு கண்கள் சொருகி மயக்கநிலையில் இருந்தான் . அவனைத் தூக்கிய விசைப்பலகையில் இருபுறங்களிலும் நீளமான படுக்கை பலகை இருக்க அதில் ஏறி இருந்த வீரர்கள்
அவன் கைகளிலிருந்த கயிற்றை அதில் பிணைத்து இறுகிக் கட்டினார்கள் .
பின்பு சிறிது கீழிறங்கி கால்களைப் பிரித்து இருபுறமும் கட்டைகளில் இறுக்கிக் கட்டினார்கள் .

கை கால்கள் பிரிக்கப்பட்டதால் வலியில் துடிக்க ஆரம்பித்தான் விஸ்வேஸ்வரன் .

அந்த இடத்தில் வீரர்களும் அதிகாரிகளையும் தவிர மக்கள் வரவில்லை .
அதிகாரிகளின் அறிவிப்பால் பயந்து ஒருவரும் வீடுகளை விட்டு வெளியே வரவில்லை .

ஊர் எல்லைப் பகுதியில் வந்த இறும்பூதியான் மற்றும் வீரர்கள் தூரத்தில் இருந்தமரங்களில் விடுவிடுவென்று ஏறியவர்கள் அருகருகே மரங்கள் இருந்ததால் கிளைகளை வளைத்து தாவி தாவி மறைந்து மறைந்து வரத் தொடங்கினர் .

கோட்டை வாசலின் மேல் காவலுக்கு இருந்த வீரர்கள் சுற்றி சுற்றி பார்வையை செலுத்தியவண்ணம் இருக்க ,

மரங்களின் தாவி ஏறிய இறும்பூதியான் கோட்டை மதில் மேல் நூற்றுக்கணக்கான
வீரர்கள் காவல் இருப்பதையும்
முன்னெப்போதும் இல்லாத அளவில் அதிக கண்காணிப்பு பலப்படுத்தப்பட்டு இருப்பதையும் கவனத்தவன் ,

கோட்டையைச் சுற்றியே அதிக காவலிருந்தால் உள்ளே கண்டிப்பாக அதிக காவல் இருக்கும் .
என்ன செய்வது ...? நம்மிடம் இருப்பதோ இருபது வீரர்கள் மட்டுமே .
உஹூம் ... இதை வைத்துக் கொண்டு கோட்டைக்குள் நுழையப் பார்ப்பது ஆபத்தை விலை கொடுத்து வாங்குவதற்குச் சமம் .

சிறிது நேரம் மரத்திலேயே இருப்போம் .
கொஞ்சம் அசந்தால் உள்ளே நுழைந்து விடலாம் எனநினைத்தான் .

சிறிது நேரத்தில் வீரர்கள் கலைந்து அங்கொன்றும் இங்கொன்றுமாக இருப்பதைப் பார்த்தவன் இதுதான் சரியான சமயமென்று தன் வீரர்களைப் பார்த்து கையசைத்தான் .

உடனே ஒவ்வொரு மரங்களும் சாயத்தொடங்க ,
கடைசி மரத்திலிருந்து ஒவ்வொருவராக மதில் மேல் தாவிக் குதிக்கத் தொடங்கினர் .

அனைவரும் தூண் போன்ற மறைவான பகுதியில் குதித்ததால் யார் கண்களுக்கும் தெரிந்திருக்கவில்லை .

சிறிது நேரம் அப்படியே நின்றவர்கள் மெல்ல தூணை விட்டு வெளியில் வர ஒருவனை அனுப்ப ,

வெளியில் மெல்ல வந்தவன் பார்க்க என்ன அதிசயம் .
ஒரு வீரன் கூட இல்லாமல் வெற்றிடமாகக் காட்டியளித்தது மதில் .
கையைசைத்து வரச் சொல்ல ,
ஒவ்வொருவராக வெளி வரத்தொடங்கினர் .

இறும்பூதியானுக்கு சந்தேகம் தோன்ற கையை காட்டி நகர வேண்டாம் எனக் கூற
அனைவரும் அப்படியே நின்றனர் .

பக்கவாட்டில் நகர்ந்து கீழே குனிந்துப் பார்த்தவன் அங்கேயும் யாருமில்லாததைக் கண்டு அதிர்ச்சியடைந்தவன் ஏதோ நினைத்தவனாக வீரர்களை வேகமாக மீண்டும் வந்த வழியே திரும்ப சைகை செய்ய வேகமாக அனைவரும் திரும்ப எத்தனிக்க ,

பக்கவாட்டு மறைவிடங்களிலிருந்து அம்புமழை பொழியத் தொடங்கியது .

திடீரென ஏற்பட்ட அம்பு விசையால் மடமடவென்று சிலர் உடல் சரிந்து கோட்டையைச் சுற்றி இருக்கும் அகழியில் மதிலிருந்து கீழே விழுந்தனர் .

மீதம் இருப்பவர்கள் சட்டென்று பக்கவாட்டில் சாய்ந்து இருந்த மரத்தில் குதிக்க ,

அந்த மரங்களில் இருந்து வில்அம்புகள் அவர்களை நோக்கிப் பாய மிச்சமீதி இருந்தவர்கள் உயிரற்று மரத்தில் தொங்கினர் .

இப்பொழுதுதானே இந்த மரங்களிலிருந்து கவனித்துக் கொண்டிருந்தோம் . அதற்குள் இவற்றை ஆக்கிரமித்ததும் இல்லாமல் வீரர்களை கொன்று விட்டார்களே ...! என கோபமுற்றவன் வருவது வரட்டும் என
தன்னுடைய வாளை உருவி மீண்டும் கோட்டை மதில் மேல் ஓடத் தொடங்கினான் .

இப்பொழுது முன்புறம் பின்புறம் என வீரர்கள் சூழ்ந்துக் கொள்ள அவர்களிடமிருந்து தப்பிக்க வாளைச் சுழற்றி சில வீரர்களை வெட்டித் தள்ளினான் .
கோட்டை படிக்கட்டு அருகில் வந்து விட்டவனை உள்ளே இருக்கும் மரத்தில் இருந்து கண்காணித்துக் கொண்டிருந்த வீரர்கள் அம்பு வாரி இறைக்க , இறும்பூதியான் உடல் சல்லடைக் கண்களாய் அவைத் துளைக்க மேலிருந்து கீழே அகழியில் விழுந்தான் .
விழுந்தவுடன் அகழியில் சுற்றிக் கொண்டிருந்த முதலைகள் அவனைச் சூழ்ந்துக் கொண்டன .

விஸ்வா கழுமரத்தில் தொங்கிக் கொண்டிருக்க தலை தொங்கி மயக்கநிலையில் இருந்தான் .

மேலே சுற்றிக் கொண்டிருந்த வல்லூறுகளும் கழுகுகளும் அவன் தலையில் வந்தமர்ந்து அவன் உடலை தன் கூரிய மூக்கால் கொத்தத் தொடங்கின .

மயக்க நிலையில் இருந்தும் வலியினால் கத்தத் தொடங்கினான் .
உடலில் இருந்து இரத்தம் வழியத் தொடங்கியது .

இதை தூரத்தில் இருந்து ஒரு உருவம் கவனித்துக் கொண்டிருந்தது .

இரவின் அமைதியில் ஊர் உறங்கிக் கொண்டிருக்க மறைந்திருந்தவன் மெல்ல விஸ்வாவின் உடல் தொங்கிய இடத்தில் அருகே வந்தான் .

தனது தோளில் தொங்கிக்கிடந்த பையிலிருந்து சிறிய குப்பி ஒன்றை எடுத்தவன் கீழே சிந்திக் கொண்டிருக்கும் விஸ்வாவின் குருதியை அக்குப்பியில் நிரப்பி அங்கிருந்து அகன்றான் .

மாளிகையில் நிர்மல் அதிக சோகத்தில் இருந்தான் .

அங்குமிங்கும் நடைபயின்றுக் கொண்டே இருந்தவன் ஏதோ நினைத்தவனாக தன்னுடைய இரகசிய அறைக்குச் சென்றான் .

கதவைச் சாத்திவிட்டு தன்னுடைய தந்தையின் ஓவியத்திற்கு நேராக நின்று கையெடுத்துக் கும்பிட்டான் .

' தந்தையே ...! இன்று நான் செய்த செயலால் மனம் குழம்பிக் கிடக்கிறது .
தாயின் மரணம் என்னை அநாதையாக்கிவிட்டது .
சிற்றன்னை என் தாயைப் போன்றவள் என்றுதானே நான்
அவளிடம் பாசம் காட்டியதில் பாரபட்சமின்றி நடந்துக் கொண்டேன் .
தம்பியை என் தோழனாகத்தானே நினைத்திருந்தேன் .
அவனுக்கு மணமுடித்து
கீழ் மங்களாபுரியை அவன் வசம் ஒப்படைக்கத்தானே திவானிடம் எல்லா ஏற்பாடுகளையும் செய்யச் சொல்லியிருந்தேன் . ஆனால் அவன் தன் மாமன்களுடன் இணைந்து இந்த ஜமீனைஅவர்களோடு பங்கு போட்டுக் கொள்ள திட்டம் தீட்டி , மந்திரவாதியுடன் சேர்ந்து என்னை அழிக்க அல்லவா விளையாடினான் .
அதுவே அவனுக்கு நான் தண்டனை கொடுக்க காரணமில்லையே .
அப்பாவி மக்களை கொன்று குவித்து இந்த ஜமீனின்

அழிவுக்கும் காரணமாகிவிட்டானே .
தந்தையே ... நீங்கள்தானே *கூறியிருக்கிறீர்கள்* . இந்த மக்கள் நம் கண் போன்றவர்கள் . அவர்களுக்கு தீங்கு விளைவிப்பவர்கள் யாராயிருந்தாலும் அவர்களை தண்டிக்கவேண்டியது இந்த ஜமீனின் ஆளுமைக்கு உரியவர்கள் கடமை . இதில் உறவுகளுக்கு இடமில்லை என எனக்கு பல அறிவுரைகளை எழுதி வைத்துவிட்டு சென்றிருக்கிறீர்கள் .

ஆனாலும் உறவுகளின் பிரிவுகள் என்னை தடுமாற வைத்திருக்கிறது .
நான் என்ன செய்வேன் ' என கண்ணீர் விட்டவன் கீழுள்ள நிலவறைக்குள் சென்றான் .

அங்கே தன் தந்தை தனக்காக எழுதி வைத்துவிட்டுப் போன ஓலைச்சுவடியை எடுத்தான் .
அதன் கூடவே ஒரு தாமிரத்தகடும் இருக்க அதை எடுத்துப் பார்த்தான் .

அதை தன் சிறிய பேழையில் எடுத்து வைத்துக் கொண்டு அந்த ஓலையையும் எடுத்துக் கொண்டு வெளியேறினான் .

திவான் காத்திருக்க என்ன விசயம் என்று கேட்க எல்லாம் முடிந்துவிட்டது . கீழே இறக்கிவிடலாமா ... எனக்கேட்க ,

' இறக்கி இங்கே கொண்டு வராதீர்கள் .
அவன் தாயை அழைத்துக் கொண்டுபோய் நம் ஊர் எல்லைக்கப்பால் விட்டு விடுங்கள் .

அவனுடைய சாம்பல் கூட இந்த எல்லைக்குள் வரக்கூடாது . அவனுடைய அன்னையை என் அன்னையாக நினைத்தக் காரணத்தால் அவர்களை ஒன்றும் செய்யவில்லை .'

அவனுடைய உத்தரவை ஏற்று காரியங்கள் மடமடவென்று நடந்தேறின .

இளையராணி கத்திக்கொண்டு அரண்மனை வாசலில் மண்ணை வாரி இறைத்து சாபமிடத் தொடங்கினாள் .

ஊர் எல்லையில் விஸ்வாவின் சடலத்துடன் தனித்தே விடப்பட்ட இளையராணி தன் மகன் மேல் விழுந்து கதறினாள் .

அதற்குள் அங்கே மறைந்திருந்த சீர்மாறனின் வீரர்கள் அவன் சடலத்துடன்
இளையராணியையும் பல்லக்கில் ஏற்றிக் கொண்டு கவிக்குளம் விரைந்தனர் .

தனது தாயின் அஸ்தியை எடுத்துக் கொண்டு சமுத்திரத்தில் கரைப்பதற்கு செல்ல ஏற்பாடுகளை செய்துக் கொண்டிருந்தான் .

மாளிகை சோகத்தில் மயான அமைதியாக இருந்தது .

மாதங்கியிடம் வந்த நிர்மல் தன் மனைவியின் அருகில் அமர்ந்து அவள் கையை தன் கையோடு இணைத்துக் கொண்டு அவள் தோள் மீது சாய்ந்தபடி
கண்ணீர் விட்டு அழுக

அவனை தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்ட மாதங்கி
" நிர்மலேஷ்வரா ..( தனிமையில் இருவரும் இருக்கும்போது ஆசையுடன் அவள் அப்படித்தான் தன் கணவனை அழைப்பாள் )
ஏன் இந்த வாட்டம் . அத்தை அவர்கள் எங்கேயும் போய்விடவில்லை .
நம்மைச் சுற்றிலும் அவரின் சக்தியாக
உலாவிக் கொண்டிருப்பார் .
நீங்கள் அவரின் ஆத்மா சாந்தியடைய
சமுத்திரத்தில் கரைத்துவிட்டு வாருங்கள் .
இந்த நேரம் நம் ஜமீனின் எதிர்காலமே உங்கள்

கையில்தான் இருக்கிறது .
விரைவாக சென்று வாருங்கள் ." என்று அவன் நெற்றியில் முத்தமிட்டாள் .

" மாதங்கி ... நான் சென்று வர மூன்றுநாட்களாவது ஆகும் . இப்போது இருக்கும் சூழலில் உன்னையும் நம் குழந்தையையும் தனியே விட்டுச் செல்ல தயக்கமாயிருக்கிறது .
உன்னை உனது தந்தையிடம் ஒப்படைத்துவிட்டு செல்லலாம் என்றிருக்கிறேன் . கிளம்புவதற்கு தயார் செய் " எனக் கூற ,

" வேண்டாம் நிர்மலா ... இந்த நேரத்தில் எனது தந்தையின் இல்லம் நோக்கி செல்வது நன்றாயிருக்காது .
எனக்கு ஒன்றும் அச்சமில்லை . நானும் எல்லா வீரப்பயிற்சிகளும் பெற்றவள் என்றுதான் உங்களுக்குத் தெரியுமே .
வீரர்கள் உடன் இருப்பதால் எனக்கு கவலையில்லை . தாங்கள் தைரியமாக என்னை இங்கு விட்டுச் செல்லலாம் .
ஆபத்து என்று வந்தால் சீர்மாறனால் தானே வரும் . பார்த்துக் கொள்கிறேன் .",
என்று கூற

" இல்லை . தேவையில்லாமல் உன்னை சிக்கலில் மாட்டிவிட எனக்கு விருப்பமில்லை . என்னோடு கிளம்பு ."

" அப்படியானால் ஒன்று செய்யுங்கள் . எனது தந்தைக்கு ஆளனுப்பி எனக்குத் துணையாக வரச் சொல்லுங்கள் . உங்களுக்கு வீண் சிரமம் வேண்டாம் ."

" சரி ... அப்படியேச் செய்கிறேன் . தெரியாத முகங்களை உள்ளே அனுமதிக்காதே ...
திவான் இருப்பார் . அவர் கவனித்துக் கொள்வார் .
அப்புறம் நீ என்னுடைய ரகசிய அறையில் தங்கிக்

கொள் . அங்கிருந்தால் உங்களிருவருக்கும் எந்த ஆபத்தும் நெருங்காது .
எக்காரணம் கொண்டும் நான் வரும் வரையில் அந்த அறையைவிட்டு நீ வெளிவரக் கூடாது . "

" என்ன ... ஏன் இத்தனை பாதுகாப்பு .
ஏதும் ஆபத்து வருமென்று நினைக்கிறீர்களா ...?"

" நமக்கு எந்த நேரத்தில் யார் ரூபத்தில் ஆபத்துகள் வருமென்று தெரியாது . அதனால் எந்நேரமும் நமது கண்களை உறங்கவிடாமல் மூன்றாவது கண்ணுடன் வலம் வர வேண்டும் .
இது உனக்கு தெரியாததல்ல . அதுவும் இப்போது இருக்கும் நிலை மிகவும் அசாதாரணமானது . நான் ஊரில் இல்லையென்று எதிரிகளுக்குத் தெரிந்தால் போதும் . வளைப்பதற்கு நேரம் கிடைத்தது என்று குவிந்து விடுவார்கள் ."

" அப்படியானால் உங்கள் பயணத்தை தள்ளி வையுங்கள் . அத்தையின் அஸ்தியை பூசை அறையில் வைத்து வழிபடுவோம் .
இந்த பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்தபிறகு செல்லலாம் .'

" இல்லை மாதங்கி . அஸ்தியை வீட்டில் வைத்திருக்கக்கூடாது . அது குலத்திற்கு ஆகாது .
மேலும் அது கரைக்கப்பட்டால் தான்
அம்மாவின் ஆத்மா இவ்வுலகைவிட்டு நீங்கும் .
அவர்கள் அமைதியில்லாமல் அலைக்கழிப்பது நமக்குத்தான் பாவம் ."

" சரி ஒரே மனதோடு சென்று வாருங்கள் .
கொங்சநாட்களுக்கு முன்புகூட ஆறுதிங்களாய் நீங்கள் இங்கு இல்லாமல் தானே இருந்தீர்கள் .
அப்போது நான் இருந்தேனல்லவா ...?"

" அப்போது அம்மா இருந்தார்கள் . அவர்கள் ஆயிரம் வீரர்களுக்குச் சமம் . அதுவுமில்லாமல் அம்மா என்றால் எல்லோருக்கும் சிம்மசொப்பனம் ."

" இதோ இந்தாருங்கள் நெற்றித்திலகம் . கவலையில்லாமல் சென்றுவாருங்கள் . நீங்கள் திரும்பி வரும்போது வெற்றித்திலகத்துடன் வரவேற்க காத்திருக்கிறேன் !".

மீண்டும் அவளை அந்த அறையைவிட்டு வெளிவரக்கூடாது என்று கூறிவிட்டு திவானுடன் பாதுகாப்பு ஏற்பாடுகளைப்பற்றி கேட்டுவிட்டு சேனைத்தலைவனிடம் சில பொறுப்புகளை ஒப்படைத்துவிட்டு தன்னுடன் சில மெய்க்காப்பாளர்களை அழைத்துக் கொண்டு புறப்பட்டான் நிர்மலேஸ்வரன் .

அந்த நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்த உருவம் மறுநாள் ஜமீனின் மாளிகை முன்பு வந்து நின்றது .

# அத்தியாயம் 23

நிர்மலேஷ்வரன் தனது தாயின் அஸ்தியை கடலில் கலக்க தனது மெய்க்காப்பாளர்களுடன் செல்வதற்கு சித்தமாக

தன் மனைவியின் பாதுகாப்புக்காக
தன் இரகசிய அறையில் இருக்கச் சொன்ன
நிர்மல் அந்த அறையில் சித்தர் அளித்த தகட்டை கீழே தரை விரிப்புக்குக் கீழே
சதுர வடிவில் இருந்த கல்லை எடுத்து
அதற்குள் ஒரு மஞ்சள் துணியில் சுற்றி
வைத்தான் .
பின்பு அதை மறுபடியும் சரிபடுத்தி விட்டு
தரைவிரிப்பை மேலே போட்டான் .

தான் இருக்கும் போதே அவளையும் குழந்தையையும் அறையில் கொண்டு
வந்து விட்டுவிட்டு சேடிகளிடமும் தாதிகளிடமும்
அவளுக்கு தேவையான அனைத்தையும்
அறையிலேயே சென்று சேவகம் செய்யவேண்டும்
எனக் கட்டளையிட்டான் .

பின்பு திவானிடமும் சேனாதிபதியுடனும்
மாளிகையில் காவலை பலப்படுத்தச்
சொல்லிவிட்டு தன் மெய்க்காப்பாளர்களை
அழைத்துக் கொண்டு கிழக்கு நோக்கிப்
பயணப்பட்டான் .

மாயவன் இதுதான் தகுந்த சமயம் என
மாளிகை நோக்கிப் புறப்பட்டுவிட்டான் .

கோட்டைவாசல் பயங்கர பாதுகாப்பாக
இருந்தது . கோட்டையின் பெரியக் கதவு
திறக்கப்படாமல் திட்டிவாசல் மட்டுமே திறந்திருந்தது .

வாசலின் வழியின் இருபக்கமும் வரிசையாக வீரர்கள் ஆயுதம் ஏந்தி நிற்க ,

சுங்கவரி விரர்கள் உள்ளே நுழைவதற்கான வில்லையை அவரவர் ஊரின் தலைச்செங்கோட்டு அதிகாரி கொடுத்திருந்த அத்தாட்சி வில்லையை வைத்து சரிபார்த்து அனுப்பிக் கொண்டிருந்தனர் .

வெளியூர்க்காரரர்கள் என்றால் அவர்களை தனியேப் பிரித்து நிற்க வைத்தனர் .

அவர்கள் எதற்காக வந்துள்ளனர் என்பதை விசாரித்து அவர்களுக்காக கோட்டைக்குள் இருக்கும் உறவினர்கள் வந்து அத்தாட்சி கொடுத்தால் மட்டுமே உள்ளே செல்ல அனுமதி அளித்தனர் .

அத்தாட்சி அளிக்கமுடியாதவர்களை பத்துதினங்கள் கழித்து வரச்சொன்னார்கள் .

இதனால் அவசிய வேலையாக வந்தவர்கள் திரும்பிச் செல்ல மனமில்லாமல் சென்றனர் .

ஏன் இத்தனை நாள் இல்லாத வழக்கமாக இத்தனைக் கெடுபிடி .
போர் ஏதும் வரப்போகிறதோ என்று பேசியபடி சென்றனர் .

மாயவன் வந்தபோது இருக்கின்ற நிலமையைக் கவனித்து என்ன செய்து உள்ளேச் செல்வது என யோசிக்கவேயில்லை . அவன் முறை வந்த போது அவனை நிமிர்ந்து பார்த்த வீரர்கள் அவனை பார்த்தபடியே இருக்க ,

அங்கிருந்த வில்லை ஒன்றை எடுத்து அவர்களின் கையில் வைத்துவிட்டு திட்டிவாசலைக் கடந்து சென்று கொண்டிருந்தான் .

சிறிது நேரத்திலேயே வீரர்கள் தாங்கள் உணர்வற்று இருந்தது தெரியாமலேயே

மீண்டும் தங்கள் பணிகளை செய்துக் கொண்டிருந்தனர் .

தன் கண்களின் வசியசக்தியைப் பயன்படுத்தி உள்ளே நுழைந்துவிட்டதை நினைத்து கர்வமுடன் மாளிகையை நோக்கிச் செல்ல ஆரம்பித்தான் .

மாளிகையின் அருகில் செல்லாமல் தூரத்தில் இருந்த மரத்தின் மீதேறி மாளிகையை நோக்கினான் .

மாளிகையைச் சுற்றி வீரர்களின் பாதுகாப்பு அரண் .

தன் தோளில் மாட்டியிருந்த பையிலிருந்து சாமியார் ஆடைகளை எடுத்து அணிந்துக் கொண்டான் . பின்பு மரத்திலிருந்து இறங்கியவன் நேராக மாளிகை வாசலை நோக்கி சென்றான் .

அவனைப் பார்த்துவிட்டு நெருங்கிய வீரர்கள் தவஞானி போல் இருந்ததால் பயபக்தியுடன் " சுவாமி .. தாங்கள் யார் ... இங்கு யாரைப் பார்க்க வந்துள்ளீர்கள் ...?" என்று கேட்க ,

அவன் பார்வையில் மௌனமாகி மாளிகையின் வாசலைத் திறந்தனர் .

உள்ளே அவன் காலடி வைக்க அவன் உடம்பில் ஒரு அதிர்வலை ஏற்பட்டது .

உடன் தன் கையில் வைத்திருந்த குடுவையை எடுத்து அதிலிருந்த இரத்தத்தை மயிலிறகால் எடுத்து ஒரு சொட்டு மண்ணில் விட மண் கருப்புநிறமாக மாறியது .

' நீ இங்கேயே காவலிரு . வருகிறேன் ', எனக் கூறிவிட்டு மாளிகையின் உள்வாசலை நெருங்கினான் .

அப்போது ' நில் ' எனக் குரல் கேட்க சட்டென்று மனதில் ஒரு நடுக்கம் ஏற்பட
நின்றுவிட்டான் .

குரலுக்குரியவர் யார் என்று பார்த்தவன் ஆஜானுபாகுவாய் துணை சேனாதிபதி நின்றுகொண்டிருப்பதைக் கண்டான் .

பழுத்தபழம் போல சித்தர் வடிவில் அவனைப் பார்த்தவர் அவன் அருகில் நெருங்கி
" சுவாமி யார் என்று அறியலாமா ...?"
என பணிவுடன் கேட்க ,

' எனை அறியவில்லை மூடன் . நன்று ' என நினைத்துக் கொண்டவன்

" பாலவராயன் நீதானே ? எனக் கேட்க ,

" ஆம் சுவாமி ..! தாங்கள் எனை அறிவீர்களா ?"

" உனது மனைவி சித்ரவல்லி நலந்தானே ?
அவள் கருவுறாமல் பலகாலம் வருத்தத்தில் இருக்கிறாள் அல்லவா ?"

" சுவாமி ... இது எப்படி உங்களுக்கு ....?" என்று இழுத்தவனை

" என்னப்பா ... நான் அறியாததா ? இப்பொழுது இந்த மண்ணின் தலைமையாளன் தன் இல்லாளும் , குழவியும் நலமுடன் வாழணும் என்பதற்காகத்தானே உங்களை பாதுகாப்பில் விட்டுச் சென்றிருக்கிறான் ."

சிறிது நேரம் யோசித்தவன் " ஆமாம் நீங்கள் எப்படி எல்லா வழியையும் தாண்டி வந்துள்ளீர்கள் . யாரும் உங்களை தடுக்கவில்லையா ...?'

" ஆஹ்ஹஹா .... என்று சிரித்தவன் பின்பு
" இந்த பர்வதமலை சித்தனை யார் தடுக்கமுடியும் ?
எனை அடைக்கலமாய் தேடியவன் வாழ்வில் சிக்கல் எனும்போது
என்னால் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது ." தன்னை பர்வதமலை சித்தனாக கூறியவன்

சித்தரை அறிந்தவன் நிர்மலேஷ்வரன் மட்டுமே .
அவனும் இப்பொழுது இல்லாதது
அவனுக்கு வசதியான பொய்யாகிவிட்டது .

பர்வதமலை சித்தர் எனக் கூறியவுடனே
' இவர் நம் ஜமீனின் பிரபு வணங்கும் தெய்வமல்லவா .
நம் பிரபுவின் சிக்கலான ஆபத்தை தீர்க்க
வந்திருக்கிறார் போலும் ',
என நினைத்துக் கொண்டவன்

" மன்னிக்க வேண்டும் சுவாமி ...! பிரபு இப்பொழுது
இருந்திருந்தால் மிகவும்
மகிழ்ந்திருப்பார் . அவர் இல்லாதது வருத்தமே .
தாங்கள் உள்ளே வாருங்கள் . சிறிய ராணி
இருக்கிறார் . அவர் தங்களை தரிசனம் செய்யட்டும் "
எனக்கூற ,

" இல்லை அப்பனே ! நான் உள்ளே இப்பொழுது
வருவதற்கில்லை .

இந்த இல்லத்தில் இரண்டு ஆத்மாக்கள்
வெளியேறி இருக்கின்றன .
அவற்றின் நிறைவேறா எண்ணங்கள்
துர்தோகையாக வலம் வருகிறது .
அவற்றை இங்கிருந்து நீக்காமல் என்னால்
உள்ளே வர இயலாது ."

" சுவாமி ... எங்கள் பெரிய மகாராணியார்
மட்டுமே இங்கிருந்து உயிர்நீத்தார் .
இளைய ஜமீன் இந்த ஊர் எல்லையில் தானே இறந்தார்
. அப்புறம் எப்படி இரண்டு ஆத்மாக்கள் வலம் வர
முடியும் ?

" இது என்ன அர்த்தமற்ற பேச்சு . வெளியூருக்கு
பணியாகச் சென்றால் இல்லம் திரும்ப
வருவதில்லையா ...?

அவனின் ஆசைகள் இந்த மாளிகையில் தானே வளர்ந்தது .'

" சுவாமி ...! அதுக்கென்ன செய்யவேண்டும் ?"

" இந்த மாளிகையைச் சுற்றி என்னுடைய மந்திரத்தை தெளிக்க வேண்டும் .
அவற்றால் துர்தேவதைகள் விலகிச் சென்று விடும் . அதன் பிறகே நான் உள் நுழைவேன் ."

" நான் போய் திவானை அழைத்து வருகிறேன் . நீங்கள் இந்த மாளிகையை சுற்றி வருவதற்கு வீரர்களை துணைக்கு அனுப்புகிறேன் . சுற்றிலும் மரங்கள் சூழ்ந்து
அச்சமாக இருக்கும் தனியாகச் சென்றால் ."

" தேவையில்லை . நான் வனங்களில் திரிபவன் . எனக்கு எந்த அச்சமும் கிடையாது . நீ உன் பணிகளை செய் .
என்னோடு யார் வந்தாலும் என் மந்திரத்தால் வயப்படும் ஆத்மா அவரைத்
தாக்கும் . அதனால் வீண் சிரமம் ஏற்படும் ."

" சரிங்க சுவாமி . அதற்குள் நான் திவானை அழைத்து வருகிறேன் ." துணை சேனாதிபதி புறப்பட்டுச் செல்ல ,

" முட்டாள் . உனைப் போல ஒருவனை பாதுகாப்பில் விட்டுச் சென்றானே ....
அவனைச் சொல்லணும் ". மனதிற்குள் சிரித்தபடி மாளிகையை வலம் வரத் தொடங்கினான் .

மடியிலிருந்த குப்பியை எடுத்து அதைத் திறந்தவன் அதிலிருந்த விஸ்வேஸ்வரன்
குருதியில் தன்னிடமிருந்த கருப்பான மையை ஊற்றிக் கலக்கியவன் ,
கண்மூடி தன் தேவதை நாமாவளியைச்

சொல்லியபடி தன் மயிலிறகால் ஒவ்வொரு சொட்டாக சொட்டவிட்டபடி நடந்தான் .

இதற்குள் சேனாதிபதி மூலம் பர்வதமலை சித்தர் வந்திருப்பதை அறிந்து வேகவேகமாக மாளிகை நோக்கி தன் குதிரையில் வந்திரங்கினார் திவான் .

சித்தரை வரவேற்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை மளமளவென்று நிறைவேற்றினார் .

அதற்குள் மாயவன் தன் பணியை முடித்து விட்டு மனத்திருப்தியுடன் வந்து நிற்க ,,

திவான் மாளிகை துக்கத்தில் இருப்பதால் மேளச்சத்தமின்றி வீரர்களை வைத்து முழக்கமிட்டு வரவேற்றார் .

திவானுக்கும் தன்மீது துளியும் சந்தேகம் ஏற்படவில்லையென்று சந்தோழத்துடன் உள்ளே காலடி வைத்தான் .

இப்போது அவனிடம் எந்த அதிர்வும் ஏற்படவில்லை . மனத்திருப்தியுடன் ' இனி தன் வேலை அந்த தகட்டை அபகரிப்பதே ... அதை இப்போது எங்கு வைத்திருப்பான் நிர்மல் . திவான் அல்லது அவன் மனைவி இருவரிடம் மட்டுந்தான் இந்த ரகசியம் சொல்லியிருப்பான் .
திவானிடம் நைச்சியமாக கேட்டுப் பார்ப்போம் ' என நினைத்தவன்

" திவான் விகற்பா ...! இந்த மங்களாபுரி ஜமீன் பத்தினிப் பெண்ணோருத்தி சாபத்தால் நிலைகுலைந்து கிடக்கிறது .
ஏற்கனவே இரண்டு உயிர்கள் ஜமீனில் பறிபோய்விட்டன .
இந்நிலையில் நிர்மலேஷ்வரன் எப்படி தனியாக வெளிச் சென்றான் .
அவன் உறவுகளையும் வாரிசையும்

ஏன் இப்பொழுது விட்டுச் சென்றான் .?
எதிரிகளும் , துர்ப்பீணிகளும் அவன் குடும்பத்தை அழிப்பதற்கு துடித்துக் கொண்டிருக்கும் காலத்தில் அவன் சர்வ எச்சரிக்கையாக இருக்கவேண்டாமா ...?" என்று கேட்க ,

" சுவாமி ... ! எதிரிகளால் எப்பொழுதும் இந்த ஜமீனுக்கு ஆபத்து வராது . நாங்கள் அதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம் .
அடுத்து நீங்கள் கூறும் துர்ஆத்மா பற்றி எல்லாம் நாங்கள் நம்புவதில்லை .
பிரபு தன் வீரத்தை நம்பி மட்டுமே சென்றிருக்கிறார் .
ஆனால் இங்கே சின்னராணிக்கும் இளைய தேவிக்கும் எந்த ஆபத்தும் நேரிடாது .
எங்களை மீறி ஒரு புழு பூச்சிக்கூட உள்ளே செல்லமுடியாது . அதனால் நீங்கள் பயப்படாதீர்கள் ."

புன்சிரிப்புடன் " அப்பனே ... நான் முக்காலமும் உணர்ந்தவன் . ஆபத்து நெருங்குகிறதா இல்லையா என்பதை உணர்ந்தவன் .
நான் நிர்மலின் வளர்ச்சிக்காகவும் அவனின் உயிர் பாதுகாப்புக்காகவும் ஒரு தகடு கொடுத்திருக்கேன் .
அதை அவன் தன்னுடன் எடுத்துச் சென்றிருந்தால் அவனை எந்தப் பகைவனும் நெருங்க முடியாது .
ஆனால் இங்கே உங்கள் பாதுகாப்பு இன்றி வேறதுவும் பாதுகாப்புக்காக செய்திருக்கானா நிர்மலேஷ்வரன் ...?'

" சுவாமி ... தகடுப் பற்றியெல்லாம் எனக்கு ஒன்றும் தெரியாது . ஆனால் இளையராணியை அவரின் ரகசிய அறையைவிட்டு வரக்கூடாது என்று மட்டும் கூறியிருக்கிறார் . "

' ஓ ... அப்படியா சங்கதி .! அப்போ அந்த அறையில் தான் தகடு இருக்கவேண்டும் .
அதனாலத்தான் தான் அவர்களை பாதுகாப்பாக

விட்டுச் சென்
றிருக்கிறோம் என கிளம்பிவிட்டானா ...?

' அதைக் கைப்பற்ற வேண்டுமென்றால்
இந்த மாளிகை என் கைக்கு வந்தால் தான்
முடியும் . நிர்மல் வருவதற்குள் காரியம் கைகூட
வேண்டும் .
என்ன செய்தால் இதை அடையமுடியும் .',

" விகற்பா ... நிர்மல் வருவதற்கு எத்தனை தினங்கள்
ஆகும் ? அவனைப் பார்ப்பதற்காகவே அவனிடம் ஒரு
பொருளை ஒப்படைப்பதற்காகவே வந்தேன் .
என் குருநாதர் என்னை **சங்கரன் " மலைக்கு (**
இமயமலை ) வரச் சொல்கிறார் .
அங்குப் போவதற்கு முன் நிர்மலேஸ்வரனிடம்
ஒப்படைக்கும்
ஒன்று வேறு உள்ளது ."

" சுவாமி ... அவர் சென்று இருதினங்களாகிவிட்டது .
மூன்று தினங்களுக்குள் வந்துவிடுவதாக கூறிச்
சென்றிருக்கிறார் .
கிழக்கு சமுத்திரம் அருகில்தானே இருக்கிறது ."

' அப்படியானால் நாளைய தினம் வந்து விடுவானோ ...
அதற்குள் தகட்டை எடுத்தாக வேண்டும் . அது மட்டும்
என் கையில் கிடைத்துவிட்டால் சர்வசக்தி
உடையவனாகி விடுவேன் .' என நினைத்தவன்

" நல்லது . நான் மாளிகைக்குள் செல்கிறேன் .
வாருங்கள் " என்று கூறியபடி உள்ளேச் செல்ல ,

பின்தொடர்ந்தார் திவான் .

' நிர்மல் வருவதற்குள் இந்த மாளிகை நம் வசம்
வரவேண்டும் . என்ன செய்வது ' என்று யோசித்தவாறே
சென்றான் .

உள்ளே வேலை செய்பவர்களைத் தவிர
வேறு யாரும் இல்லை .

" சுவாமி ... பிரபுவின் கட்டளையை நாங்கள்
மீறமுடியாது . அதனால்இளைய தேவியை நாங்கள்
அழைக்க முடியாது .
தாங்கள் இவ்வரண்மனை பாதுகாப்பிற்கு
தேவையான மந்திராட்சனம் செய்து வைக்க
வேண்டுகிறேன் ."

" நல்லது . நான் மந்திரம் சொல்லி பாதுகாப்பு
வளையத்தை ஏற்படுத்திவிடுகிறேன் . நீ வருத்தம்
கொள்ளாதே . என்னுடன் யாரும் வரவேண்டாம் ."

" சரிங்க சுவாமி ... உங்கள் பணியை எந்த இடையூறும்
இன்றி செய்யப் பணிகிறேன் ."

மாயவன் இதுதான் சமயமென்று தன் குடுவையைத்
திறந்து சொட்டு சொட்டாக
குருதியை ஓரமாக தெளித்துக் கொண்டே செல்ல
மாளிகையில் இருள் பரவிக் கொண்டு இருந்தது .

சிறிது நேரங்கழித்து திவான் வந்து " சுவாமி
தங்களுக்கான குடிலை மாளிகையின் நந்தவனத்தில்
அமைத்திருக்கிறேன் .
தாங்கள் இளைப்பாறி ஓய்வெடுங்கள் ."

நள்ளிரவு நேரம் . ஆழ்ந்த உறக்கத்தில் அனைவரும்
இருக்க
மாயவன் தனக்களிக்கப்பட்ட குடிலில் அமைதியின்றி
நடந்துக் கொண்டிருந்தான் .

எதையோ எதிர்பார்த்து வெளியே வந்து
அரண்மனையை வெறித்துப் பார்ப்பதும்
பின் உள் செல்வதாகவும் இருக்க ,

அரண்மனையில் மாதங்கியின் குழந்தை
திடீரென்று வீரிட்டு அழ ஆரம்பித்தது .

சேடிகள் விரைய குழந்தையை யாராலும் சமாதானப்படுத்த இயலவில்லை .

வைத்தியவர் வந்து குழந்தையைப் பரிசோதிக்க ஏதும் குறையிருப்பதாக
தெரியவில்லை .
ஆனாலும் சூரணம் தந்து விட்டு செல்ல
விடிய விடிய குழந்தை அழுகையை நிறுத்தவில்லை .

மூன்றாம் சாமத்தில் எங்கிருந்தோ நரி ஒன்று ஊளையிட ,

அரண்மனை பின்புற தோட்டத்தில் இருந்து அழுகைக்குரல் கேட்கத் தொடங்கியது .

அரண்மனை ஊழியர்கள் அனைவரும் திடுக்கிட ,

வெளியில் காவலுக்கிருந்த ஊழியர்கள் மாளிகையை நோக்கி அவசரமாக வந்தனர் .

அதே நேரத்தில் கோட்டைமணி ஒலிக்கத் தொடங்க

சேனாதிபதியை நோக்கி வீரன் ஒருவன் குதிரையிலிருந்து வேகமாக வந்தான் .

பிரபு பின்பக்க பெரிய வராண்டாவை நெருங்க அங்கே இருளடைந்து காணப்பட்ட
அறை ஒன்று இருப்பதை அறிந்தான் .

மெல்ல அதன் அருகில் சென்றவன் இரும்பிலான துருப்பிடித்து இறுகிப் போயிருந்த கதவைக் கண்டு அங்கேயே சிறிது நேரம் நின்றான் .

**' நிர்மலா... உள்ளே செல். உனது உடமை அங்கே உனக்காக காத்திருக்கிறது. விரைவு தேவை. மாயவன் ரௌத்திரம் அடைந்துவிட்டான்.'**
**மானாகி மருண்டு மருந்துண்டு சருகான சதி சஞ்சாரம் செய்திடுவாய். '**

பார்வையில் நேர்கோடாய் திடமுள்ள மனிதனாய் கதவைத் திறக்க கீறீச் என சத்தத்தோடு கீழே சாய்ந்தது .

தனது காலை உள்ளே வைக்க அவன் உடம்பு திடுக்கென்று தூக்கிப் போட்டது .

அவன் காட்சியோடு மிரள மிரள பார்க்க தான் இந்த அறையோடு ஒன்றி வாழ்ந்த நினைவுகள் அலைபாயத் தொடங்கின .

மெல்ல அடிமேல் அடியெடுத்து நடந்தான் .
அறையின் நடு இடத்தில் அமர்ந்தவன் கண்களில் தாரை தாரையாக நீர் வழியத்
தொடங்கின .

கீழே கைகளை அலையவிட்டு மாதங்கி ... மாதங்கி என புலம்ப வெளியே விம்மல்
குரல் கேட்டது .

என் கண்ணம்மா ... என் உயிர் செல்லம்மா ... உனை ஈன்ற தந்தை வந்திருக்கிறேன் . நீ ஏனம்மா என்னிடம் வந்தவுடனே மறைந்துவிட்டாய் .
உங்கள் இருவரையும் நான் தனியே விட்டுச் சென்றதுதான் காரணம் .

வருந்தாதீர் ... இதோ நிர்மல் இனி வாளாயிருப்பான் என்று எண்ணாதீர் .
**மாயவா... நான் எத்தனை ஜென்மம் எடுத்தாலும் உனை அழிப்பதற்காகவே**
**வாழுவேன்.**

பிரபு விருட்டென்று எழுந்தான் . சுவற்றில் ஓரிடத்தை குறிவைத்து பார்த்தான் .

பின் தன் கையினால் அங்கே தட்டிப் பார்க்க க்ணங் என ஒலி கேட்க

திருப்தியடைந்தவன் கீழே கிடந்த கல் ஒன்றை எடுத்து அங்கே உடைக்க
கல் சரசரவென்று கொட்டியது .

துளை போல வந்த இடத்தில் கையை விட்டு துழாவியவன் தன் கையில் கிடைத்த பொருளை உணர்ந்து திருப்தியடைந்தான் .

அதைக் கையில் எடுக்க ஒரு திறவுகோல் இருந்தது . அதன் மேல் தனது குலத்தின் சின்னமான ஸ்வஸ்திக் இருக்க அதை தன் வாய் அருகே கொண்டு சென்று முத்தமிட்டான் .

பின் தரையின் மத்தியில் அமர்ந்து தரையைத் துழாவினான் .
ஒரு இடம் வந்ததும் முகம் பளிச்சிட்டது .

அந்த இடத்தில் படிந்திருந்த மணல்களை கைகளால் அப்புறப்படுத்தினான் .

தரை நன்றாகத் தெரிந்தது . அந்த இடத்தில் துவாரம் ஒன்று தெரிய அந்த துவாரத்தில் தான் வைத்திருந்த சாவியை நுழைத்தான் .

இறுகிக் கிடந்ததாலும் சாவி துருப்பிடித்து இருந்ததாலும் திறக்க முடியவில்லை .
தன் பலம் கொண்ட மட்டும் அதை ஆட்ட தரை பெயர ஆரம்பித்தது .

ஒருவழியாக அந்த இடத்தை உடைத்தவன் உள்ளே சதுரமான இடத்தில் பேழை போன்ற பொருள் இருக்க அதை எடுத்தவன் மெல்லத் திறந்தான் .

அதற்குள் துணி ஒன்று நைந்து போய் கிடக்க

அதற்குள் தகடு ஒன்று தன் வனப்பை இழந்தாலும் பளபளப்பு சிறிது காணப்பட்டது .

அதை எடுத்தவன் தன் கர்சீப்பினால் துடைக்க அதில் இருந்த எழுத்துக்கள் நன்றாகத் தெரிந்தது .
**' வாசலுக்கு ஒன்பது வாயில்.ஒன்று பழுதானாலும் வாசல் அடைபடும்.**
**வரும்முன் காப்பதுவல்லவன் கடமை'**

அதைப் படித்தவன் தான் முன்பு வைத்திருந்த தகட்டை பாக்கெட்டிலிருந்து
எடுத்து இரண்டையும் ஒன்றாக வைக்க ,

வெளியே பறவைகள் படபடவென்று அடிக்கும்
சத்தமும் அதைத் தொடர்ந்து
நெடிய அழுகுரலும் கேட்கத் தொடங்கியது .

இது எதுவும் பிரபுவை பாதித்ததாகத் தெரியவில்லை . மீண்டும் வெளிவந்தவன்
தான் முதலில் தகட்டை கண்டுபிடித்த பகுதிக்கு விரைந்தான் .

உள்ளே எந்த அசம்பாவிதமும் இல்லாமல் இருக்க வெளியே புழுதிக்காற்றும் மரங்கள் அலைக்கழித்தபடி இருக்க , வௌவால்கள் படபடத்தபடி பறக்க , நரிகளின் ஊளையிடுதலும் ,
அசாதாரணமான சூழ்நிலை இருந்தது .

பிரபு காலங்காலமாய் அங்கு பழகியவன் போல் அந்த அறையில் சுவற்றின் பழுதான ஓவியத்தில் அருகில் சென்று அங்கிருந்த
கல்போன்ற பகுதியை அழுத்தினான் .

சுவர் சிறிதளவு இடைவெளிக் கொடுக்க
அதன் வழியே உள்நுழைந்தவன் குனிந்து
செல்லக்கூடிய வழியில் இருந்த இடம் இருட்டாக
இருக்க அங்கிருந்த சுவற்றை
கால்களால் உதைக்க சிறிதளவு சுவர்
இடிந்து வெளியிலிருந்து சூரியனின் ஒளி

கீற்றாகப் பரவி அங்கிருந்த நிலையைக் நன்றாக எடுத்துக் காட்டியது .

இப்போது நன்றாக உற்றுப் பார்த்தவன் அங்கிருந்த நிலையைக் கண்டு அதிர்ந்தான் .

## அத்தியாயம் 24

உதவி சேனாதிபதியிடம் அவசர செய்தியொன்றை சொல்வதற்கு வீரன் வேகமாக வந்தவன் சேனாதிபதி அங்கு இல்லாததைக் கண்டு

தலைமை வீரனிடம் விசாரிக்க சேனாதிபதி
' மாளிகையின் பின்புறம் அழுகுரல் கேட்டு
' வீரர்களுடன் சென்றிருப்பதாக கூறி

' நீ என்ன சேதியாய் சேனாதிபதியை தேடுகிறாய் ' என்று கேட்க ,

" ஆற்றங்கரையின் அக்கரையில் சீர்மாறன் படைகளுடன் வந்து தங்கியிருக்கிறான் .
சேனாதிபதி பாலவராயரிடம் இந்த ஓலையைக் கொடுக்கச் சொல்லி அனுப்பியிருக்கிறார் .
விரைவில் அவரிடம் ஒப்படைக்க வேண்டுமே " என கூற

" சரி என்னுடன் வா . மாளிகையின் பின்புறம் இருக்கும் சோலைபக்கமாகத்தான் சென்றிருக்கிறார் .
போகலாம் " என்று கூறிவிட்டு
அவனை அழைத்துக் கொண்டு புறப்பட்டான் .

இரவு நேரமானதால் தீப்பந்த ஒளியுடன் கிளம்பியவர்கள் வெகு தூரம் வரை யாரையும் காணாது திரும்ப நினைக்கையில் ஏதோ புகை மண்டலம்
எழுந்ததில் என்னவாயிருக்கும் என்று நினைக்கையிலேயே தலைசுற்றி மயங்கி கீழே விழுந்தனர் .

அவர்கள் தேடி வந்த துணைசேனாதிபதியும்
மற்ற வீரர்களும் மரத்தின் அடியில் மயங்கிக்கிடந்தனர்
.

இதையெல்லாம் அறியாத திவான் அவர்கள்
சேனாதிபதியுடன் போர் சூழலை எதிர்கொள்ள
அவரின் மாளிகையில் திட்டம்
தீட்டிக் கொண்டிருந்தனர் .

மாளிகையின் உள்ளே சேடிகள் இளையராணியின்
அறை பக்கமாக வரிசையாக படுத்திருந்தவர்கள்
மற்றும் வீட்டின் பணியாளர்கள் அனைவரும்
பெரிய வரவேற்பறையிலேயே ராணியின்
காவலுக்காக வரிசையாக படுத்திருந்தனர் .

இந்த இரண்டு அடுக்குகளை தாண்டி மூன்றாவது
அடுக்காக *வீரர்கள்* வரவேற்பரைக்கு முன்னால்
இருக்கும்
நீண்ட வராண்டாவில் வரிசையாக அமர்ந்தபடி
காவலுக்கு இருந்தனர் .

வெளியே மண்டபத்தில்ஆயுதம் பல தாங்கிய வீரர்கள்
அங்குமிங்கும் நடந்தபடி
காவல் காத்துக் கொண்டிருந்தனர் .

இதைத் தவிர வெளியே மாளிகையைச் சுற்றி
வீரர்களும்
மாளிகையின் மேற்புர மாடத்தில் வீரர்கள்
என்று மாளிகையில் எங்குப் பார்த்தாலும்
வீரர்கள் தலைகளாகவே இருந்தனர் .

ராணி மாதங்கியும் குழந்தையும் இருக்கின்ற
அறையில் குறிப்பிட்ட தாதிகளைத்தவிர வேறு யாரும்
செல்வதற்கு அனுமதியில்லை .

ஆனால் இன்றைய இரவு சோதனை இரவாக
அனைவருக்கும் இருந்தது .

மாயவன் மாளிகையில் இரத்தத் துளிகளை
விடும்போது கூடவே மூலிகை கலந்த
ஏதோ ஒரு செடியை அங்கங்கே போட்டுவிட்டான் .

இரவு நேரத்தில் தனது குடிலை விட்டு மெல்ல வெளியே வந்தவன் சிறு தீப்பொறியை கற்களை உரசி தான் போட்டுவிட்டு வந்த மூலிகைச் செடி ஒன்றில் பற்றவைத்துவிட

அது மெல்ல பரவி மற்ற செடிகளுக்கும் பரவி மாளிகையை சுற்றி புகையை பரவ செய்தது . மேலும்

மாயவன் தன் சித்து வேலையை ஆரம்பிக்க உயிரிழந்த
விஸ்வேஸ்வரனின் ஆத்மா வெளிவந்து தனது நிறைவேறா ஆசையினை அழுகுரலாக வெளிப்படுத்த ஆரம்பித்தது .

இந்த அழுகுரல் மாளிகையைச் சுற்றி உள்ளவர்களுக்கும் கேட்கவே நடுங்கினர் .

' ஏன் இந்த அழுகுரல் . இந்த ஜமீனுக்கு ஏன்இந்த பொல்லாத காலம் .
அந்த பெண்ணின் சாபம் பலிக்கத் தொடங்கிடுச்சோ .... ஐயோ ! பிரபு ஜமீன் வேற ஊரிலில்லாத நேரம் . இப்படி நடக்கிறதே ...' என்று நினைத்தார்களே தவிர யாரும் தங்கள் இல்லங்களை விட்டு வெளிவரவில்லை பயத்தினால் .

வெளியிலிருந்த வீரர்கள் வெகு நேரமாகியும் துணை சேனாதிபதி திரும்பாததைக் கண்டு இருவர் இருவராகச் செல்வதும் பின்பு அவர்களும் திரும்பாததும்
நடந்துக் கொண்டே இருந்தது .

வீரன் ஒருவனுக்கு ஏதோ சந்தேகம் ஏற்பட திவானைத்தேடி வேகமாகச் சென்றான் .

அதற்குள் மாளிகையின் உள்ளே படுத்திருந்த அனைவரும் புகைமண்டலம்
சூழ்ந்து வருவதை அறியாமல் உறங்கிக் கொண்டிருக்க
தூக்கத்திலேயே மயக்கமாயினர் .

நான்காம் சாமம் முடியும் நேரத்தில் திவான் வேகமாக வர மாளிகையின்

வெளிப்பறம் காவல் வீரர்கள் இல்லாமல்
வெறிச்சோடி கிடக்க
பதறி அடித்து உள்ளே வந்தவர் அங்கிருந்த
வீரர்களும் மாளிகையில் உள்ளே இருந்தவர்கள்
எல்லாம் பிணம் போல் கிடப்பதையும் பார்த்தவர்
அதிர்ச்சியடைந்தார் .

என்ன நடந்தது இங்கே ? எப்படி ஒரே நேரத்தில்
அனைவரும் இறந்துகிடக்கின்றனர் . வெளியிலோ
வீரர்களை காணவேயில்லை . ராணிக்கு
ஏதும் ஆபத்து வந்திருக்குமோ என பயந்தவராய் பதறி
அவர் அறையை தேடி
ஓடினார் .

புகை போல் மாளிகையில் இருப்பதைப் பார்த்து தன்
தோளில் கிடந்த துண்டினால்
முகத்தை மூடியவர் ராணியின் கதவை
படபடவென்று தட்டினார்

" யாரது ?" என உள்ளிருந்து குரல் வர

" ராணிம்மா திவான் வந்திருக்கிறேன் .
கதவை அகலத்திறக்காமல் லேசாக திறவுங்கள் .
அவசரம் ." எனக் கூற

கதவை லேசாகத் திறந்த மாதங்கி
வெளிப்புறம் கலவரமுடன் திவான் நின்றிருப்பதைப்
பார்த்து

" என்ன திவான் ... ஏன் இந்த பதற்றம் . என்ன நடந்தது .
ஏன் என்னை கதவை முழுவதும் திறக்க வேண்டாம்
என்று கூறினீர் ?"
என மாதங்கி கேட்க ,

" மகாராணி ...! நம் அரண்மனையில் ஏதோ விபரீதம்
நிகழ்ந்துக் கொண்டிருக்கிறது .
வீரர்கள் முதல் சேடிகள் வரை அனைவரும்
மயங்கி கிடக்கின்றனர் .
என்ன காரணம் என்று தெரியவில்லை .
நீங்கள் எந்தக் காரணம் கொண்டும் கதவைத்
திறக்காதீர்கள் .

என்ன நிகழ்ந்தாலும் யார் வந்து கூப்பிட்டாலும் பிரபு வரும்வரை திறக்காதீர்கள் ." என்று கூற

" ஏன் எல்லோரும் மயங்கினர் . யார் வந்தது .
பிரபு எப்பொழுது வந்து சேருவார் ?"

" ராணியம்மா ... ஏதோ புகைமண்டலம் சூழ்ந்திருக்கிறது . யார் இதை செய்திருக்கிறார்கள் என்பது யூகத்தின் அடிப்படையில் உணர்கிறேன் .
சீர்மாறன் அக்கரையில் போர் தொடுக்க
வந்து விட்டான் .
அவனின் சதியாகத்தான் இருக்கும் . நீங்கள் அடுத்து நான் அழைக்கும் வரை அறையை திறக்க வேண்டாம் ."
எனக் கூறிவிட்டு
விடுவிடுவென்று திரும்பி வெளியே சென்றார் .

மூக்கை மூடியபடியே வெளியேறியவர்
நேராக குடிலை நோக்கிச் செல்ல
குடிலில் மாயவனைக் காணவில்லை .

வெளியில் வந்து சுற்றிலும் நோட்டமிட்டவர்
எங்கும் காணாததால் சற்று சந்தேகம்
ஏற்பட்டது திவானுக்கு .

இவர் உண்மையிலையே நமது பிரபுவின்
பர்வதமலை சித்தர்தானா ...? நம் கணிப்பில்
ஏதும் தவறு ஏற்பட்டதோ .
எங்கோ மறைந்து விட்டான் பாதகன் .

திடீரென்று அவருக்கு அந்த சந்தேகம் ஏற்பட்டது . ஏன் இவன் மாயவனாக இருக்குமோ ...? அவனுக்குத்தான் எல்லா சித்திகளும் வசமாகுமே .
தவறு செய்துவிட்டோம் . ஆராயாமல்
அநீதி இழைத்து விட்டோம் .

வேகமாக சேனாதிபதியைத் தேடி குதிரையை விரட்டினார் .

சேதி கேட்ட சேனாதிபதி உக்கிரமடைந்தான் . " என்ன ஒரு மோசம் . நாம் இத்தனை பாதுகாப்பு கொடுத்தும் வீணாகிப் போய் விட்டதே ... துணை சேனாதிபதியை போய் பார்க்கலாம் . அவரை பார்த்தால் விவரம் தெரியும் .

பிரபு வந்துக் கொண்டிருக்கிறார் .
இன்னும் அரை நாளில் வந்துவிடுவார் .
அது வரை சீர்மாறன் நம் எல்லையைத்
தொடாமல் பார்த்துக் கொண்டால் போதும் .
வாருங்கள் மாளிகைக்குச் செல்வோம் .
முதலில் மகாராணியைக் காப்பாற்ற வேண்டும் ."

திவானும் சேனாதிபதியும் அரண்மனையை
நெருங்கும் வேளை எங்கிருந்தோ பறந்து வந்த
எரிஅம்பு அவர்களின் குதிரையின் முன்னால் வந்து
விழுந்தது .

திடீரென்று நெருப்பு தன் முன்னால் விழவே குதிரைகள்
மிரண்டு தடுக்கி விழுந்தன .

இருவரும் மணலில் கீழே விழ கோபத்துடன்
இருவரும் வேகமாக எழுந்தனர் .

கீழே விழுந்த எரிஅம்பிலிருந்து வேகமாக
புகை எழும்பி அவர்களைச் சூழ்ந்துக் கொள்ள மூச்சுத்
திணறலுடன் முகத்தை மறைக்க அவர்கள் செய்த
முயற்சி
தோல்வியடைந்தது .

சிறிது சிறிதாக இருவரும் மயங்கிட
அவர்களை நோக்கி சிரிப்பலை எழுந்தது .

' என்னிடமா ... உங்கள் வீரம் . இனி இந்த
உலகமே என் கைக்குள் அடங்கப் போகிறது .
அவள் மட்டுந்தான் பாக்கி . அவளையும்
அனுப்பிவிட்டால் அங்கிருக்கும் தகடு என்னுடையது .
ஏ ... சித்தனே .... ! என்னை அவமானப்படுத்தி
இந்தக் கயவனுக்குத்தானே கொடுத்தாய் .
பார்த்தாயா அவன் சாம்ராஜ்யத்தை .
ஒரு நொடியில் அனைத்தையும் இல்லாமல்
செய்து விட்டேன் .
வருகிறேன் மாதங்கி . உன் வசம் இருக்கும்
பொருள் என் வசமாக போகிறது .'
மாயனின் கர்ஜனையை கேட்பதற்கு மாளிகையைச்
சுற்றி ஒருவருமில்லை .
அனைவரும் மயக்கத்தில் .

மாளிகையில் விடிந்து ஒரு நாழிகை ஆனது . தனக்கும் தன் குழந்தைக்கும் தேவையான உணவை அளிக்க யாருமில்லாததால் கலக்க நிலையில் மாதங்கி இருக்க ,

குழந்தை பசியினால் வீரிட்டு அழத் தொடங்கியது .

என்னசெய்வதென்று புரியவில்லை . தன்னை வெளியில் வரவேண்டாம் என்று திவான் கூறியிருக்கிறார் . சரி முடிந்தவரை சிறிது நேரம் குழந்தையை தன் பாலினால் பசியாற்றி சமாதானப்படுத்துவோம் . பிரபு எப்படியும் இன்னும் சில நாழிகைக்குள் வந்துவிடுவார் .' என எண்ணியவள் குழந்தையை அரவணைத்து பசியாற்றினாள் .

திடீரென்று நிர்மலேழ்வரன் குரல் ' **மாதங்கீ ',** என அலறல் போலக் கேட்கவே திடுக்கிட்டாள் .

நிசமாகவே அவரின் குரல்தானா ... இல்லை பிரமையா ... காதை வெளியில் வைத்து உற்றுக் கேட்டாள் .

மீண்டும் **' ஐயோ மாதங்கி ... ! உனை பிரிந்து செல்கிறேனே .... பாவி எனையும் அம்பினால் தைத்து விட்டானே ... மாதங்கி ... விரைந்து கதவைத்திற . உன்னையும் என் மழலையையும் கடைசியாக பார்க்கிறேன் . மாதங்கி ... மாதங்கி '** என ஈனசுரத்தில் நிர்மல் குரல் அடங்கிப் போவது போல் கேட்க ,

தன் கணவனின் குரல்தான் என கண்டுபிடித்தவள் வெளியே வருவதற்கு வேகமாக கதவைத் திறக்க நினைக்கையில்

திடீரென்று ' ஏன் இது சதி வேலையாக இருக்கக் கூடாது . என்னவர் வீரமில்லாதவர் அல்லர் . எத்தனைப் பேர் மறைந்திருந்து தாக்கினாலும் அத்தனைப் பேரையும் வதம் செய்யக்கூடியவர் . அதனால் அவசரப்பட்டு

போகக்கூடாது ' என நினைத்தவள் கதவினருகே நின்றுவிட்டாள் .

' ஒருவேளை என் நாதனாய் இருந்தால்
ஐயோ அவரைக் காப்பாற்றாமல் போய்விடுமே . சரி எதுவந்தாலும் இனி
ஒரு கைப் பார்த்துவிடவேண்டும் ', என நினைத்தவள்

தனது வாளை எடுத்துக் கொண்டு தன் முதுகில் ஒரு துணியைச் சுற்றிக் கட்டிக்
கொண்டு குழந்தையை முதுகுத்துணியில் தொங்க விட்டு வாளை தன் வலது கையில் பிடித்தவாறு கதவை மெல்லத் திறந்தாள் .

நிர்மலேஷ்வரன் தனது காரியங்களை முடித்துக் கொண்டு விரைவாக தனது பயணத்தை தொடங்கினான் .

மனதில் ஏதோ இனம்புரியாத கவலை வாட்ட கலக்கமடைந்தான் .
மாளிகையில் ஏதும் வீபரீதம் நடந்திருக்குமோ என அவன் உள்ளுணர்வு உணர்த்த வீரர்களை துரிதப்படுத்தி வேகமாக வந்தான் .

திடீரென்று தன் காதில் சித்தரின் குரல் போல் கேட்க சட்டென்று நின்றான் .

' நிர்மல் ... நீ விரைந்து மாளிகையைச் சேர் .
உன் குலவிளக்குகள் அணையப் போகும் நிலையில் உள்ளன .
மாயவன் தன் ஆட்டத்தை ஆரம்பித்திருக்கிறான் . தனது துஸ்ட
துணைகளாக அரண்மனையைச் சுற்றிலும் நிறைவேறா ஆசையுடன் சென்றடைந்த விஸ்வேஸ்வரனையும் அவனின் தாயையும் விட்டு இனி வேறு யாரும் அந்தப் பகுதிக்குள் வரமுடியாதபடி வலையை
பின்னிவிட்டான் .
நிர்மலா ... உன்னிடத்தில் எனது தகடு இருக்கின்ற காரணத்தால் உன்னை அவனால் ஒன்றும் செய்ய முடியாது .
விரைந்து செல் . உன் வினைகளை

மாற்ற முயற்சி செய் ' எனக் கூற
பிரமை பிடித்தவன் போல் நின்றுவிட ,

கூட வந்த வீரர்கள் அவன் திடீரென்று நின்று
விட்டதைப் பார்த்து " பிரபு ... ஏன் நின்று விட்டீர்கள் . "
என்று கேட்டதால் நினைவு வந்தவன் போல் வேகமாக
குதிரையைத் தட்டினான் .

கிழக்கு வாசல் வழியாக அவன் வந்ததால்
மேற்குப் புறத்தில் முகாமிட்டிருக்கும்
சீர்மாறனைப் பற்றி அறியவில்லை .

அவன் வருவதைப் பார்த்ததும் கோட்டையின் மீது
காவல் காக்கும் வீரர்கள்
முழக்கத்தை எடுத்து ஊத

கோட்டைத்தலைவன் ஓடிவந்து " பிரபு வாழ்க ...
மங்களாபுரி தலைமை வாழ்க ! எனக் கூற

" ஏன் போர் கொடியை பறக்க வைத்திருக்கிறீர் . யார்
படையெடுத்து வருகிறார்கள் ? என்று கேட்க ,

" பிரபு ... தங்களுக்குத் தெரிவிக்க வீரனை செய்தி
ஓலையுடன் சேனாதிபதி அனுப்பி வைத்தாரே ...
கிடைக்கவில்லையா ஓலை ?"
என்று கேட்க ,

புருவத்தை நெறித்தவன் " இல்லையே ... எனக்கு விவரம்
வந்து சேரவில்லையே .
ஏதோ அசம்பாவிதம் எதிரிகளால் அவ்வீரனுக்கு
ஏற்பட்டிருக்கலாம் . சரி
திவானும் சேனாதிபதியும் என்ன ஏற்பாடு
செய்திருக்கிறார்கள் .
உங்களுக்கு என்ன கட்டளை இட்டார்கள் ?"

" பிரபு ... தாங்கள் வரும் வரையில் போர் தடுக்க
ஆணையிட்டிருக்கிறார்கள் .

சீர்மாறன் ஆற்றங்கரையின் அக்கரையில்
காலம் தாழ்த்திக் கொண்டிருக்கிறான் .
ஒற்றர்கள் அளித்த விவரப்படி கோதுமலை ஜமீன்
சிங்கவராயர் அவனுக்கு படைத் தருகிறார் .

அப்படை இன்னும் வந்து சேராததாலே
காத்துக் கொண்டிருக்கிறான் .

பிரபு மற்றொரு விசயம் நமக்கு சாதகமான சூழலை
ஏற்படுத்தப் போகிறது .

மேற்கு மலைகளில் திடீரென பருவம் மாறி
மழைப் பொழிவு அதிகமாக இருக்கிறதாம் .
அதனால் ஆற்றில் வெள்ளப் பெருக்கு
அபாயம் உள்ளதால் சீர்மாறன் திடிரென்று
ஏற்பட்டுவிட்ட இயற்கை சூழலை நினைத்து
ஆற்றைக் கடக்கத் தயங்குகிறான் .

அதனால்தான் தாங்கள் வரும் வரை போர் வேண்டாம்
என்று சேனாதிபதி கட்டளையிட்டுள்ளார் .

பிரபு மற்றொரு சேதி . திவானும் சேனாதிபதியும் வெகு
நேரமாக வரவில்லை . தெரிந்துக் கொள்ள
அனுப்புகின்ற வீரர்களும் திரும்பவில்லை .
நானே சென்று பார்த்துவிட்டு வரலாம் என்று
நினைத்தாலும் தலைமை என்று
ஒருவருமே இங்கு இல்லாத நிலை ஏற்படும்
என்று நினைத்துச் செல்லவில்லை .
இதுவரை இருபதுக்கு மேற்பட்ட வீரர்கள் சென்றும்
திரும்பவில்லை .
ஏதேனும் விபரீதம் நிகழ்ந்துக் கொண்டிருக்கிறதோ
என்று பயம் வருகிறது ." கோட்டைக் காவலனின் இந்த
அறிவிப்பால் மனம் குழம்பிப் போனவன்

அவனுக்கு சில கட்டளைகளைப் பிறப்பித்து விட்டு
மாளிகை நோக்கி விரைந்தான் .

மாளிகை அருகில் நெருங்க நெருங்க
எங்குப் பார்த்தாலும் வீரர்கள் கீழே விழுந்தநிலையில்
கிடப்பதைப் பார்த்தான் .

சிறிது தூரத்தில் திவானும் சேனாதிபதியும்
குதிரையோடு கீழே மயங்கி கிடப்பதைப் பார்த்ததும்
குதிரையை விட்டிறங்கி
கீழே குதித்து அருகில் ஓடி தூக்கினான்

அவர்களின் சுவாசத்தை தொட்டுப் பார்த்தவன்
வீரர்களிடம் சில மூலிகைச் செடியின் பெயர்களைக்

கூறி விரைவில் பறித்து வரச் சொல்ல விரைந்தனர் ஆளுக்கொரு திசையாக .

சிறிது நேரத்தில் அவர்கள் கொண்டுவந்த மூலிகையிலிருந்து சாற்றைப் பிழிந்து அவர்கள் இருவரின் மூக்கிலே சொட்டு சொட்டாக விழ வைக்க

சிறிது நேரத்தில் இருவரும் கண்களைத் திறந்து மெல்லப் பார்த்தனர் .

எதிரே தங்கள் ஜமீன் நிற்பதைப்பார்த்ததும் மெல்ல எழுந்தனர் .

" பிரபு ... நமது மாளிகையில் தேவிக்கு கெடுதல் நிகழப் போகிறது . விரைந்து செல்லுங்கள் " எனக்கூறியவாறு தலையைப் பிடித்துக் கொண்டனர் .

வீரர்களிடம் உடனே வைத்தியர்கள் அனைவரையும் மயக்கம் தெளிவிக்கும் ஔஷகத்துடன் வருமாறு கூறிவிட்டு விரைந்தான் குதிரையில் மாளிகைக்கு .

பிரபு இருட்டறையை நோக்கி உள்ளே செல்வதற்கு முன் தனக்கு சித்தர் கொடுத்த தகட்டையும் , தனது தந்தையால் தனக்களிக்கப்பட்ட தகட்டை மாதங்கிக்கு பாதுகாப்பாய் இருக்க முடியும் தனது இரகசிய அறையில் தரையில் புதைத்து விட்டுச் சென்ற தகட்டையும் எடுத்து ஒன்று சேர்க்க அழுகையுடன் கூடிய அலறல் சத்தம் கேட்க ஆரம்பித்தது .

மாளிகையில்
மாயவனால் தெளிக்கப்பட்ட விஸ்வேஸ்வரனின் இரத்தத்துளி மாயவனின் சித்தினால் அங்கே அடைக்கலமாகி ஆத்மா சாந்தியடையாமல் அங்கேயே சுற்றியலைந்துக் கொண்டிருந்ததவைகள் தகட்டின் ஒளி மாளிகையில் பிரதிபலிக்க அந்த ஒளியின்
வெளிச்சம் அந்த சித்திகளை இருக்கவிடாமல் கதறச் செய்தது .

மாளிகை வாசலை தாண்டமுடியாமலிருக்கும் மாதங்கி ' **நிர்மலா ... ! உன்னிடமிருக்கும் அந்த தகடுகளை**

**இந்த வாசலின் மேல் வைத்து விடு . அவைகள் ஒளியின் தீட்சண்ணியத்தில் எரிந்து இந்த உலகத்தை விட்டு நீங்கிவிடும் .',**
என்று கூற

அதன்படியே பிரபு அவைகளிரண்டையும் இணைத்து வாசலில் வைக்க அதன் ஒளி மாளிகை முழுதும் பிரதிபலிக்க ,

பல அழுகுரல்கள் ஒன்றாக இணைந்து அலறியபடி இருந்தவை திடீரென்று அமைதியாயின .

சிறிது நேரத்தில் இருளடைந்து கிடந்த மாளிகை ஏதோ விளக்கு போட்டது போல்
வெளிச்சம் பரவியது .

மீண்டும் அந்த இரு தகடுகளையும் எடுத்துக் கொண்டவன் ' மாதங்கி இனி நீ உள்ளே வரலாம் ' எனக் கூற

' இல்லை நிர்மலா ... அது என்னால் முடியாது .
மாயவன் மாளிகையின் பின்புறத்தில் வாசம் செய்துக் கொண்டிருக்கிறான் .
அவன் என்னை கட்டிவிட்டு விட்டான் .
அவனின் அழிவே என்னை இந்த வலையிலிருந்து விடுபடவைக்கும் .

அவன் அழிய வேண்டுமானால் நமது குலதெய்வம் கோட்டையூர் மதாங்கினித்தாயின் சூலாயுதம் நமது நிலவறையில் இருக்கிறது .
அத்துடன் நீ எடுத்த கட்டாரி இரண்டையும் கொண்டுவந்து பின்புறம் இருக்கும் அந்த மரத்தில் ஆழச் சொருகு .
இங்கிருந்த குட்டிச்சாத்தான்கள் விலகிவிட்டபடியாலும் , உன்னிடமிருக்கும்
தகடுகளாலும் அவனால் உள் வந்து தடுக்க எந்த தொந்தரவும் செய்ய முடியாது .
விரைந்து நிலவறைக்குச் செல் . நிலவறை வழி உனக்குத்தான் தெரியும் .
இந்த தகட்டை கையில் எடுத்துச் செல் .
சூலாயுதமின்றி நீ மாளிகையைவிட்டு

வெளிச் செல்ல முடியாது .
மாயவன் உனை அழித்து அந்தத் தகட்டை
பறித்து விடுவான் .
இவ்வளவு காலமாக அந்த தகட்டை
அவனால் எடுக்கமுடியாதபடி நம் குலதெய்வமே இங்கு
காத்துக் கொண்டிருந்தது .
அந்த தெய்வமும் வெளி வரமுடியாதபடி
அவன் கட்டு கட்டி வைத்ததனால் தான்
அவன் இந்த மாளிகையை வசப்படுத்த முடிந்தது .
விரைந்துச் சென்று சூலாயுதத்துடன் வா '
என்றதும்

தனது தந்தை ஓவியம் இருக்கும் இரகசிய அறைக்குச்
சென்றவன் அந்த சுவற்றில்
கைவைத்து தேட
அங்கு குமிழ் போல் திருகு ஓவியத்தில் மறைந்திருக்க
அதை திருக முயன்றவன்
முடியாததால் கீழே இருந்த கல்லைக் கொண்டு தட்டி
தட்டி சிறிது சிறிதாக
அதை சுழலச் செய்தான் .

கிரீச் என சத்தத்துடன் அந்த குமிழ் திறக்க
மெல்ல அந்த சுவர் இரண்டாகப் பிரிந்தது .

உள்ளே இருட்டாக தெரிய தன் செல்போனை எடுத்து
வெளிச்சத்தைக் கொடுக்க வழி நன்றாக தெரிந்தது .
கொஞ்சம் தூரம் சென்றதும் மீண்டும் ஒரு
சிறிய கதவு தெரிய அதை இழுக்க அது
சிதிலமடைந்து இருந்ததால் கையோடு
வந்துவிட்டது .

குனிந்து உள்ளே நுழைய படிக்கட்டுகள்
காணப்பட மெல்ல அடிமேல் அடி எடுத்து
இறங்கினான் .
கடைசி படியில் கால் வைக்கும் முன்
திடுக்கிட்டு கால்களைத் தூக்கினான் .

அங்கே நிறைய பாம்புகள் மலைபோல்
குவிந்திருந்த பொக்கிசங்களின் மேல்
ஊர்ந்துக் கொண்டிருந்தன .

அவைகள் நிறம் மங்கி ஒளியிழந்துக் காணப்பட்டாலும் அவற்றின் தன்மையினால் பளபளப்பு தெரிந்தது .

' இந்த பாம்புப் படையில் எங்கிருந்து சூலாயுதத்தைத் தேடுவது ' என்று
நினைத்தவன் ஏதோ ஒரு யோசனையில்
அந்தத் தகடுகளை கடைசிப் படிக்கட்டில்
வைத்தான் .

சிறிது நேரந்தான் . அந்தப் பாம்புகள் பக்கவாட்டுச் சுவர்களில் இருந்த ஓட்டைகள்
வழியாக வெளியேறிக் கொண்டிருந்தன .

# அத்தியாயம் 25

நிர்மலேஷ்வரன் சேனாதிபதியையும் திவானையும் மூலிகை மருந்தினால் மயக்கம் தெளியவைக்க ,

சிறிது நேரத்தில் இருவரும் மயக்கம் தெளிந்து எழுந்தவர்கள் அவர்களின் எதிரே ஜமீன் நின்றிருப்பதைப் பார்த்து மெல்ல எழுந்தனர் .

மெல்லிய குரலில் " வந்தனம் பிரபு !" எனக் கூறியவர்கள் " தாங்கள் எப்பொழுது வந்தீர்கள் . நேராக இங்குதான் வருகிறீர்களா ... அரண்மனைக்குப் போய்விட்டு வந்தீர்களா ...?" என்று கேட்க ,

" நேராக இப்போதுதான் வந்துக் கொண்டிருக்கிறேன் . ஏன் எல்லோரும் மயக்கமாகிக் கிடக்கிறீர்கள் . வீரர்கள் அங்கங்கே மயங்கிக் கிடக்கிறார்கள் . என்ன நடந்தது ...? யார் இதையெல்லாம் செய்தார்கள் ...? "

" பிரபு .. இதை யார் செய்கிறார்கள் ... ஏன் செய்கிறார்கள் என்பது எங்களுக்கும் புரியவில்லை . ஆனால் ஒன்று மட்டும் உறுதியாகத் தெரிகிறது . இது மனிதன் செய்யக்கூடிய வேலையாகத் தெரியவில்லை . ஏதோ மந்திரம் சம்மந்தப்பட்டதாகத் தெரிகிறது . அரண்மனையிலும் சேடிகளும் தாதிகளும் காவலுக்கிருந்த வீரர்கள் என அனைவருமே மயக்கத்தில் இருக்கிறார்களா ... மரணமடைந்துவிட்டார்களா என்று தெரியவில்லை . துணை சேனாதிபதி பாலவராயன் கூட காணவில்லை . என்ன நடந்திருக்கு என்றே எங்களுக்குப் புரியவில்லை ."

அதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த நிர்மல் கோபமாக " என்ன திவான் ... உங்களை எல்லோரும் நம்பித்தானே நான் இங்கிருந்துச் சென்றேன் ."

" பிரபு ... சீர்மாறன் படையெடுப்பை எப்படி முறியடிக்கிறது என்று சேனாதிபதியிடம் கலந்துரையாட சென்றேன் .

அதற்கு முன் ஐந்தடுக்குப் பாதுகாப்பை
அரண்மனைக்கே பலப்படுத்திவிட்டு தான்
சென்றேன் .
மீண்டும் சென்று பார்க்கையில் எல்லாமே
மாறியிருந்தது .
நடந்தவற்றை எல்லாம் ஒன்றுவிடாமல் கூறியவர் ,
" பிரபு ... தாங்கள் உடனே மாளிகை விரைந்திடுங்கள் .
ராணி , இளையதேவி
இருவருக்கும் ஏதும் ஆபத்து வந்துவிடுமோ என்று
பயமாக இருக்கிறது . " என்று கூற

" சீர்மாறன் வேறு முன்னேறிக் கொண்டிருக்கிறான் .
அவனை தடுத்து நிறுத்த வேண்டும் .
தலைமை அனைவரும் இப்படி இருக்கிறீர்கள் . நான்
எதை முதலில் செய்வது என்றேப் புரியவில்லை ."

" தாங்கள் முதலில் மாளிகைக்குச் செல்லுங்கள் .
முதலில் காப்பாற்றப்படவேண்டியவர் மகாராணியும்
இளையதேவியும் தான் . விரைவாக செல்லுங்கள் .
எங்களுக்கு சரியாகிவிடும் .
நாங்கள் இப்பொழுதே கோட்டைக்குச் செல்கிறோம் ."

" இல்லை ... இல்லை . தங்களுக்கு வைத்தியர்
வைத்தியம் செய்தபிறகுதான்
நீங்கள் செல்ல வேண்டும் . சிறிது நாழிகை
பொறுத்துக் கொள்ளுங்கள் . பிறகு செல்லலாம் " என்று
கூறிவிட்டு
தன் குதிரையில் ஏறினான் .

தன் குதிரையில் பாய்ந்து ஏறியவன்
ஒரே தாவில் பறக்கத் தொடங்கினான் .

மாளிகையில் தன் அறையிலிருந்த மாதங்கி நிர்மல்
குரலில் அலறுவது போல
' மாதங்கி ... கீ ....! என அலறல் சத்தம் கேட்க ,

நடுங்கிப் போனவள் எல்லோரையும் போல
தன் பதியும் ஆபத்தில் சிக்கிக் கொண்டாரோ .... என்று
பயந்தவள் சட்டென்று தன் அறைக்கதவைத் திறக்கப்
போனவள் ஏதோ நினைத்தவள் ' இல்லை ...
இது ஏதோ மாயவேலை போல் தெரிகிறது .
திவான் தான் கூறியிருக்கிறாரே ... எக்காரணம்

கொண்டும் கதவைத் திறக்காதீர்கள் என்று .
வேண்டாம் ... சிறிது நாழிகைப் பார்த்துவிட்டு திறக்கலாம் ' என்று
கதவுப் பக்கம் வந்தவள் மீண்டும் திரும்ப ,

மறுபடியும் அபயக்குரல் மீண்டும் ஒலிக்க ஏதோ தீர்மானம் வந்தவளாய் தனது குழந்தையை முதுகில் வைத்துக் கட்டியவள் சுவற்றில் வைக்கப்பட்டிருந்த வாள் ஒன்றை எடுத்து தன் இடுப்புத் துணியில் சொருகிக் கொண்டாள் .

நன்றாக மூச்சை இழுத்து விட்டவள் மீண்டும் சமநிலைக்கு வந்தவள் தன் குழந்தையை தன் இடது கையைத் திருப்பி அணைத்துக் கொண்டாள் .

பிறகு வேகமாக வந்து கதவைத் திறந்தவள் மாளிகையின் நடு மையத்தில் வந்து நின்றாள் .

அங்கே மயங்கிக் கிடந்தவர்களைத் தவிர தன் பதி காணாததால் சுற்றி பார்த்தவள்
' நிர்மலா .. எங்கே இருக்கிறாய் ? வந்து விடு .
நிர்மல் .... நிர்மல் ' என்று கத்த

பயங்கய சிரிப்பொலி ஒன்று எழுந்ததுஅங்கு .

அந்த சிரிப்பைக் கேட்வள் " யார் ... யார் நீ ...?
உள்ளத்தில் உரமிருந்தால் நேரடியாக வந்துப் பார் .
இப்படி பேடியைப் போல் ஒளிந்து நின்று உன் வீரத்தைக் காட்டாதே ...?
வா ... இதோ மங்களாபுரியின் ராணி மாதங்கி நிமிர்ந்த நடையோடு உனை எதிர்க் கொள்ள வந்திருக்கிறேன் .
வா ... வா ...!" என்று ஆவேசமாக குரலிட்டாள் .

அப்போது உள்ளிருந்து குள்ளமான உருவம் உடைய தலைமுடி செம்பட்டை நிறத்துடன் , நீண்ட தாடியுடனும் , பூனைக் கண்களுடன் , நீண்ட அங்கி அணிந்தவன் மெல்ல நடந்துவர

அவனைப் பார்த்தவள் ' இவனா இத்தனைக்கும் காரணமானவன் . இந்த சிறு பூனையைக் கண்டா இத்தனை நடுக்கம் கொண்டேன் . சிறு எறும்புக்கு யானை தேவையா ...? இவனை  ஒரு நொடியில்

அழித்துவிட மாட்டேனா ...?' தப்பான கணக்குப் போட்டவள் தைரியமாக அவனை ஏறெடுத்துப் பார்த்தாள் .

" என்ன அம்மணி ... ஒரு வழியாக வெளி வந்து விட்டாயோ ... உடையவன் குரல் கேட்டதால் ஓடோடி வந்து விட்டீர்களோ ...?"

" ஓ .... அப்போ நீதான் அந்தக் குரலுக்குரியவனோ ... நான் இதை நம்பி வெளிவந்ததாக உனக்கு நினைப்போ ...?
மடையா .... என் பதியின் குரல் நான் அறியாததா ...? அதுவல்ல காரணம் . யார் இந்தக் கயவன் என்று பார்க்கவே வெளி வந்தேன் ."

" கண்டுவிட்டாயா ... என் நண்பன் விஸ்வேஸ்வரனின் கொடூரக் கொலைக்காகவே பழி தீர்க்க வந்த மாயவன் ...!" என்று கூற ,

" ஓ ... அவன் நீதானா ...? ஒரு வம்சமே அழிந்துப் போக காரணமானவனின் தண்டனைக்காக பழி தீர்க்க வந்தவனோ ...?
மாய சித்து வேலை புரிந்துதான் பழி தீர்க்க வந்தாயோ ... அதுவும் என் பதி இல்லாத நேரம் பார்த்து . பலே .... நீ சரியான வீரன்தான் . பாராட்டுகிறேன் உன் வீரத்தை ...!" கிண்டலுடன் மாதங்கி கூறிய வார்த்தைகளில் சினம் கொண்ட மாயவன் ,

" நிறுத்து உன் அதிவேக வார்த்தையை . இதோ மண்ணில் புரளும் இந்த ஜீவன்களைப் பார்த்தாயா ...? உனக்கும் அந்த நிலமை கூடிய விரைவில் வரப் போகிறது .
அதற்கு முன் உன்னிடம் ஒன்று கேட்கணும் .
உன் பதி உன்னிடம் கொடுத்துவிட்டுப் போன அந்த தகடு எங்கே உள்ளது . அதை என்னிடம் கொடுத்துவிட்டால் உன்னை ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுகிறேன் .",

" தகடா ... என்ன தகடு ? என் பதி என்னிடம் எதுவும் தரவில்லை .."

" விளையாடாதே ... நான் மிகுந்த ஆத்திரக்காரன் . எனக்கு கிடைக்காததை
யாருக்கும் கிடைக்க விடமாட்டான்
இந்த மாயவன் ."

" சும்மா நேரத்தைக் கடத்த உளறிக் கொண்டிருக்காதே ... எனக்கு தகடு என்பது என்ன என்பது கூட தெரியாது மரியாதையாக வெளியே சென்றுவிடு . வீணாக என் வாளுக்கு இரையாகிவிடாதே ...?"

" என்ன ... உன் வாளுக்கு நான் இரையாகப் போகிறேனா ...? ஹஹ்ஹா ....! பாவம் சிறு குழந்தைக்காரியாயிற்றே ... விட்டுவிடலாம் என்று நினைத்தேன் . ஆனால் உன் கர்மா உனை வாவென்று அழைக்கிறது . என்ன செய்வது ...?" என்று கூறியவாறு தன் கண்களால் அவளை வசியப்படுத்த முயன்றான் .

ஏதோ ஒரு உள்ளுணர்வால் சட்டென அவன் பார்வையைத் தவிர்த்தவள்
" அடேய் மாயவா ... வீணாக வார்த்தை ஜாலம் வேண்டாம் . என் வாள் உன்னை முத்தமிடத் துடிக்கிறது . வா ... வெளியே வா ..." என்று கூறியவாறு குதித்து தாவி

ஓடினாள் . .

" என்ன ... உள்ளே பயமா . வெளியே ஓடுகிறாய் ...? உன் காதலன் வந்துவிடுவான் என்று நம்பிக்கையா ... ஓடு . எங்கு சென்றாலும் உனை விடமாட்டேன் ." என்று கூறியவாறே பின் தொடர்ந்தான் .

வெளியே வீரமாகாளியைப் போல் ஆவேசமாக வாளை சுழற்றியபடி நின்றவளைக் கண்டவன்

" வீணாக ஆவேசத்தைக் காட்டாதே . உன் வாள் மட்டுமல்ல ... எவராலுமே எனைக் கொல்லமுடியாது . நான் சகல வித்தைக்காரன் . என் மாயை உனை அடக்கிவிடும் "

" நான்தான் முன்பே கூறினேனே வீணாக வார்த்தை ஜாலம் வேண்டாமென்று . ம் ... வா

வந்து என் வாளுக்கு பதில் சொல் " என மீண்டும் வாளை சுழற்றியபடி அவள் நிற்க ,

சட்டென்று அவள் வாளை தன் குறுவாளால் தட்டிவிட முயன்றான் .

அந்தக் குறுவாள் ஆகாயத்தில் பறந்து  கீழே விழ அதை ஓடி எடுத்தவனை இகழ்ச்சியாகப் பார்த்துச் சிரித்தாள் மாதங்கி .

" ஓ ... வாள் சுழற்றுவதில் நீ கெட்டிக்காரிதான் . ஆனால் அணையப்போகும் விளக்கு பிரகாசமாகத்தான் எரியும் . உன் வீரத்தை நான் மதிக்கிறேன் . நீ மட்டும் சம்மதித்தால்
எனது பத்தினியாக இருப்பதற்கு நான் உத்தரவிடுகிறேன் . அந்த வாளை கீழே போட்டுவிட்டு என்னோடு கலந்து விடு .
அந்தத் தகட்டுடன் நாம் இந்த உலகத்தில் ஏகச் சக்கரவர்த்தியாக திழலாம் ."

அவனின் கூற்றைக் கேட்டவள் அருவருப்பு அடைந்து
" சீ மூடா ...! எனை யாரென்று நினைத்தாய் .
என் பதி இந்த உலகாளும் உத்தமன் .
உன் கீழ்த்தரமான வார்த்தைக்கே உன் நாவை வெட்டவேண்டும் .
இந்த உலகில் வாழவே தகுதி இல்லாதவன் நீ . போ ... செத்துப்போ . இந்த உலகம் உனக்குத் தேவையில்லை .
", எனக் கூறியவள் வாளை அவன் நெஞ்சுக்கு நேராகப் பிடிக்க ,

சட்டென்று அவன் அவளை வளைத்துப் பிடித்தவன் அவள் முதுகில் இருந்த குழந்தையை கையிலெடுத்து தன் தலை மேல் வைத்துக் கொண்டான் .

ஒரு கணத்தில் நிகழ்ந்த இந்நிகழ்வில் அதிர்ச்சியடைந்தவள் தன் குழந்தை அவன் கையிலிருப்பதை அறிந்து ' ஆ ' வென அலறினாள் .

" பாதகா ... என் மகவை என்னிடம் கொடுத்துவிடு . இல்லையேல் நீ கழுகுக்கு இரையாக நேரிடும் ." என்று ஆவேசமாக கதறியவாறு வாளை கையில் சுழற்றி அவன் கைகளைத் தட்டிவிட

அவன் தோள்பட்டையில் ஆழமாக பதிந்த வாளை லாவகமாக எடுத்து வீசியெறிந்தவன் தலைமேல் வைத்திருந்த குழந்தையை வீசி எறிய ,

குழந்தை வீல் என அலறியபடி தரையில் தலை சிதறிப் போனது .

இதை அதிர்ச்சியுடன் பார்த்த மாதங்கி அலறியபடி குழந்தை விழுந்த இடத்திற்கு ஓட ,

அவளை வளைத்துப் பிடித்தவன் தன் குறுவாளால் அவள் வயிற்றில் சதக் எனக் குத்த

" மாபாதகா ... நீ என் பதியிடமிருந்து தப்பமுடியாது . உனக்கு அந்தத் தகடு கிடைத்தாலும் அது உனக்கு பயன்படாமல் போகட்டும் ."
என்று கூறியவாறே தரையில் சரிய
மீண்டும் ஒருமுறை அவள் வயிற்றில் குத்துவாளால் குத்த ,

" நிர்மலா ... நீ ... நீ .. இவனை ... பழி .. பழி " எனக் கூறியவாறே கீழே சுருண்டு விழ ,

அதே நேரம் மாளிகையின் வெளிவாசல் பெருங்கதவை குதிரையிலிருந்தபடியேவேகமாகத் திறந்து வந்த நிர்மலேஷ்வரன் தன் முன்னால் தலை சிதறி விழுந்து கிடந்த தன் சிசுவையும் ,
இரத்தவெள்ளத்தில் விழுந்துகிடந்த தன் காதல்மனைவியையும் கண்டு உடல் துடித்து மனம் பதறியவன் ஒரே வேகத்தில் குதிரையிலிருந்து குதித்து " மாதங்கீ ....!"
எனப் பெருங்குரலெடுத்து ஓடிவந்தான் .

கீழே தலை சாய்ந்துக் கிடந்தவளை தன் மடிமீது போட்டுக் கொண்டவன் " ஐயோ ... மாதங்கி ... என் செல்வங்களே ... என் உயிரே ... என் பிறவிப்பயன்களே .. !
நீங்கள் இருவரும் எனை விட்டே நீங்கி விட்டீர்களா ...?
ஏன் ... ஏன் இந்த நிலை உங்களுக்கு . நான் செய்த வினைப்பயனோ உங்களை என்னிடமிருந்து பிரித்தது .
என் தெய்வமே ...!
ஏன் என் உயிர்களை என்னிடமிருந்து பிரித்துவிட்டாய்

..." என்று கதறியவன் ஒரு
நொடி தலைத் தூக்கிப் பார்த்தவன் கண்ணெதிரே
தலைவிரி கோலமாக
குள்ளமான ஒருவன் இரத்தக்கறையுடன்
சிரித்தபடி நின்றிருப்பதைப் பார்த்து
கண்கள் சிவந்தவனாய்
சட்டென்று எழுந்தவன் ஒரே எட்டில் கொத்தாக அவன்
தலைமயிரைப் பிடித்தவன்

" ஏ ... கருநாகப்பாம்பே ... என் குலக்கோடிகளை
வேறோடு வெட்டிச் சாய்த்தவனே ... ஏனடா ... ஏன்
இந்தப் பாதகச் செயலைச் செய்தாய் .? யார் உனை
அனுப்பியது . உன்னோடு அவனையும் ஒன்றாக
பாதாளலோகம் அனுப்பி விடுகிறேன் ."

அவன் கழுத்தை வளைத்து கத்தியை அங்கு வைத்து
அழுத்தியவன் " சொல் ... யார் நீ . எதற்காக இந்த
கொடுஞ் செயலைச் செய்தாய் .? சொல் "
எனக் கர்ண கடூரமாக ஆவேசம் வந்தவனைப் போல்
கத்த

அவனிடமிருந்து தப்பிக்கத் திமிறிய மாயவனின்
கழுத்தில் பளீரென்று ஒரு கையால் தட்ட வர்மக்கலை
வேலை செய்தது .

' ஆ ' வென்று அலறியவன் தலையைத் தூக்க
முடியாமல் கதறினான் .
" எனை விடு ... எனை விடு என்று அவன் கத்த ,

" இப்போது சொல்லப் போகிறாயா இல்லையா ... ?
ரௌத்திரமானான் நிர்மலேஷ்வரன் .

' இப்போது தகட்டைப் பற்றிக் கேட்டாலும் அது
கிடைக்காது . இவன் இல்லாத நேரத்தில்
அரண்மனைக்குள் நுழைந்து தேடிப் பார்த்து
விடவேண்டவேண்டியதுதான் . இப்போது எதையாவது
சொல்லி இவனிடமிருந்து
தப்பித்தால் போதும் . இவனிடம் என் மந்திரசக்தி
பயன்படாது . இவன் சித்தரின் சீடனாக வரம்
பெற்றவன் '
என நினைத்தவன் உடனடியாக

." நிர்மலேஷ்வரா ...! என்னை யாரும் தூண்டி விடவில்லை . என் நண்பன் விஸ்வேஸ்வரனின் மரணத்திற்கு பழி வாங்கவே இத்தனை காரியம் நிகழ்த்தி விட்டேன் . என்னை மன்னித்துவிடு !" அவன் கூறிய விசயங்களை உள்வாங்கிய நிர்மல்

" ஓ ... நீ மாயவனா ... உன்னைத்தானே நான் தேடிக் கொண்டிருந்தேன் . பாதகா ... எந்த களங்கமும் இல்லாதிருந்த என் தம்பியின் மனதில் விழ விதையைத் தூவி அவனை இந்த உலகத்தைவிட்டே போகவைத்ததுமில்லாமல் , அவன் உன்னை சந்திக்க வந்ததினால்தானே கர்ப்பிணிப் பெண்ணின் சாபத்தைப் பெற்று இந்த ஜமீனுக்கு வாரிசுகளே இல்லாமல் செய்து விட்டாய் .
உனை இனி விட்டு வைத்தால் இந்த மங்களாபுரி புல் பூண்டுகூட முளைக்காம போய்விடும் . நீ இப்பொழுதே மரணித்துவிடு !" எனக் கூறியவாறு வாளை எடுக்க தன் இடையில் தேடியவன் அது அங்கு இல்லாததைக் கண்டு சுற்றுமுற்றும் பார்க்க ,
அது தன் மனைவி கிடந்த இடத்தில் விழுந்திருப்பதைப் பார்த்தான் .

இதுதான் தக்க சமயமென்று அவனிடமிருந்து திமிறி தப்பி ஓடினான் மாயவன் .

ஒரே எட்டில் தன் வாளை எடுத்தவன் தன் வாளைச் சுழற்றி ஓடுபவன் மேல் எறிய
அது சரியாக அவன் காலை வெட்டி விட சரியாக வெளிக் கதவு இருக்கும் இடத்தில்
துடித்து கீழே விழுந்தான் மாயவன் .

அவன் அருகில் வந்த நிர்மல் கொத்தாக அவன் முடியைப் பிடித்து தூக்கி ,

" எங்கே சென்று விடுவாய் ...? இனி இந்த உலகத்தில் நீ இருந்தால் எத்தனை உயிர்களின் இரத்தத்தை குடிப்பாயோ ?
வேண்டாம் உனக்கு இந்த உலகம் . உன் நண்பனைத் தேடிச் சென்று விடு ." என்று கூறியவாறே தன் வாளால் அவன் தலையை வெட்டி தூக்கி எறிந்தான் .

உடல் துடிக்க சிறிது தூரத்தில் இருந்த தலை வாயசைத்து " நிர்மலா ...!, எனை இவ்வுலகத்திலிருந்து விலக்கி விட்டதாக மமதைக் கொள்ளாதே ! என் உடல் மண்ணில் அழுகினாலும் என் ஆத்மா அடங்காது .
இந்த மாளிகையில் இனி யாரையும் வசிக்கவிடுகிறேனா பார் .
அடே ... நயவஞ்சகா ... ! இனி எத்தனை ஜென்மம் நீ எடுத்தாலும் உன் உயிர் என் வசமே . இச்ஜென்மம் அந்த சித்தனால் காப்பாற்றப்பட்டது உனக்கு .
இங்கே இனி கோட்டான்களும் பாம்புகள் வசிக்கும் கூடாரமாகத் திகழட்டும் . "
அவன் பேசுவதைக் கேட்ட நிர்மலேஷ்வரன் தனது காலால் பந்தை உதைப்பதுப் போல் அவன் தலையை உதைக்க அது நெடுந்தொலைவுச் சென்று விழுந்தது .

மீண்டும் தன் உறவுகள் கிடக்கும் இடத்திற்கு வந்தவன் கதறிகதறி அழத் தொடங்கினான் .

தன் உறவுகளையெல்லாம் இழந்தவன் அந்த வேகத்திலேயே கோபமாகச் சென்று ,
போரிட வந்த சீர்மாறனை வென்று அந்த ஆற்றிலேயே அவனைக் கொன்று மணலில் புதைத்தான் .

அதன் பிறகு அந்த மாளிகை வாசத்தை விட்டு வெளியே வந்து வேறோரு சிறிய மாளிகையில் இருந்து ஆட்சி செய்தவன் இரண்டு வருடங்களுக்குமேல் அவனால் நிம்மதியாக இருக்க முடியாது போகவே ஜமீனை தனது கப்பம் கட்டும் அரசர் வசம் ஒப்படைத்து விட்டு பர்வதமலை சித்தரை தேடிச் சென்று அவரின் சீடனாக சில வருடங்களை கழித்தவன் அங்கேயே சமாதியடைந்தான் .

பிரபு தன் கையிலிருந்த இரு தகடுகளையும் கடைசிப் படிக்கட்டில் ஏதோ யோசித்தவாறே வைத்துவிட
பொக்கிசங்களின் மேல் ஊர்ந்துக் கொண்டிருந்த பாம்புகள் சுவற்றில் இருந்த துவாரங்கள் வழியே வெளியேறிக் கொண்டிருப்பதை எதேச்சையாகப் பார்த்தவன் அதிர்ச்சியில் சந்தோசமடைந்தான் .

சிறிது நேரத்தில் எல்லாப் பாம்புகளும் விலகிவிட இப்போது பொக்கிசங்கள் நன்றாகவே தெரிந்தது .

மெல்ல அதன் அருகில் சென்றவன் அந்த பொக்கிசத்தினை கையால் அலைந்தான் .

அதன் நடுவில் அழகிய வேலைப்பாடுடன் கூடிய தங்கத்தினால் செய்யப்பட்ட சூலாயுதம் இருப்பதைப் பார்த்தவன் அதை மெல்ல எடுத்தான் .

மீண்டும் அதை எடுத்துக் கொண்டு மேலேறி வந்தான் .

மாளிகையின் வாசலில் வந்தவனை முகத்தை
வருடுவது போல காற்று வருட
கண்மூடி அந்த இன்பத்தை ரசித்தான் .

**' நிர்மலா ... நல்லது செய்தாய் . விரைந்து அதோ முதலில் இருக்கும் மரத்தில் இந்த சூலாயுதத்தை சொருகிவிட்டு அதன் மேல் இரண்டு தகடுகளையும் வைத்துப் பிடித்துக் கொள் . மாயவன் அதிக உக்கிரத்துடன் காணப்படுகிறான் .**
**உன் கையில் சூலாயுதம் இருக்கின்ற நிலையில் உன்னை அவனால் ஒன்றும் செய்யமுடியாது . நேரமில்லை . சூரிய உதயம் முடிவதற்குள் நீ இதைச் செய்யவில்லையெனில் அவன் நிலாக்காலத்தில் வீரிய சக்திப் பெற்று விடுவான் .**
**செல் ... துணிந்து மரத்தில் பாய்ச்சு வேலை** !'

பிரபு வேகமாக மரத்தின் அருகில் செல்லும் வேளை காற்று சுழன்றடித்து அங்கிருந்த சருகுகளெள்ளாம் மேலே சுழன்று சுழன்று சுற்றியது .

மரங்களெல்லாம் ஊழ்வினைக்காற்று வந்ததுபோல் காற்றில் திசைமாறி அலைக்கழிக்க ,

நரிகளும் நாய்களும் ஊளையிட ,
பறவைகள் தன் சிறகுகளை பயத்தினால் படபடவென்று அடித்தபடி பறக்க ,

வௌவால்களும் கூகைகளும் தங்கள் சிறகை பட்பட்டென்று சத்தத்துடன் மாளிகையிலும் வெளிப்புறத் தோட்டத்திலும் கிறீச் என்ற ஓசையுடன் அங்குமிங்கும் அலைக்கழிய

பெருத்த ஊழிக்காற்று வந்ததுபோல் மாளிகை சுவர்களெல்லாம் சடசடவென்று இடிந்துவிழ ஆரம்பித்தது .

பிரபு எதைப் பற்றிய சிந்தனை எதுவும் சிறிதும் இல்லாது அம்மரத்தை நெருங்கினான் .

# அத்தியாயம் 26

பிரபு நிலவறையிலிருந்து சூலாயுதத்தை கொண்டு வர,

மாதங்கியின் குரலோ அவசரப்படுத்தியது.

**' நிர்மலா கதிரவன் மறைந்து சந்திரன் வந்துவிட்டால் மாயவன் சித்தி வேலை செய்ய ஆரம்பித்து விடும் . நீ விரைந்து அந்த சூலாயுதத்தை முன்னால் இருக்கும் மரத்தில் குத்திவிடு .**
**அதன் மேல் அந்த இரு தகடுகளையும் வைத்து விட்டு நகர்ந்து விடு .**

மாதங்கியின் குரல் கேட்டு பிரபு வேகமாக வேங்கை மரத்திற்கு அருகில் சென்றான்.

திடீரென்று அங்கிருந்த மரங்களெல்லாம் துளி அசைவின்றி நிற்க,

எந்த ஒரு பறவையின் ஒலியும் இன்றி நிசப்த சூழல் அங்கே நிலவியது.

பிரபு மரத்தை நெருங்கி கையிலிருந்த சூலாயுதத்தை கண்ணை மூடி ஒரு நிமிடம் தியானித்து கை ஓங்க,

அந்த மரத்தின் கிளைகளெல்லாம் சடசடவென்று ஒருபுறம் ஒடிந்து விழுந்தது.

நல்ல வேளையாக கிளை தன் மேல் விழும் முன் சுதாரித்து விலகிய பிரபு

கண்களில் திடீர் ஆவேசம் வந்தவன் போல் வெறித்துப் பார்த்தபடி பற்களை கடித்தபடி சூலாயுதத்தை ஓங்கி மரத்தில் குத்த,

பறவைகளும், கூகைகளும், கோட்டான்களும், வௌவாள்களும் படபடவென்று சிறகை விரித்து அடித்தபடி அந்த மரத்திலிருந்து பறக்கத் தொடங்கின.

எங்கிருந்தோ நரிகளின் ஊளையிடும் ஒலியும் சேர்ந்து பயங்கர நிலையை ஏற்படுத்தியது.

பயந்த சுபாவம் உள்ளவர் அங்கு இருந்திருந்தால் அவ்விடத்திலேயே மயக்கம் போட்டு விழுந்திருப்பார்.

உடனே கிளைகளிலிருந்து இலைகளும் கொட்டத் தொடங்கின.

பிரபு தன் கையிலிருந்த அந்த இரு தகடுகளையும் சூலாயுதத்தின் முனைகள் இரண்டின் மீது வைக்க

அவை எந்த பிடிமானம் இல்லாதிருந்த போதும் மரத்தில் பதிந்தார் போல நின்றது.

அவ்வளவுதான் *திடீர்* நெருப்பு மரத்தில் பற்ற ஆரம்பித்தது.

அது எரிவதைப் பார்த்த பிரபு புன்னகை புரிந்தவனாய் இரு கைகளையும் பலமாக தட்டத் தொடங்கினான்.

மரத்திலிருந்து 'ஹீம்...ஹீம்' என ஒலி கேட்கத் தொடங்கியது.

சிறிது நேரந்தான் மரம் முழுவதுமாக பற்றி எரியத் தொடங்கியது.

உடனே பங்களாவைச் சுற்றியுள்ள மரம் செடிகள் எல்லாம் தலைவிரித்து ஊழிக்காற்றில் ஆடுவது போல் ஆடத்தொடங்கியது.

அவைகள் எரிவதை வைத்தக் கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் பிரபு.

எல்லாமே சிறிது நேரந்தான். ஆடி அசைந்த காற்றின் வேகமும், தீச்சுடரும் மெல்ல மெல்ல குறைய ஆரம்பித்தது.

பிரபு தன் தோளை யாரோ தொடுவது போன்ற உணர்வு தோன்ற திரும்பிப் பார்த்தவன் **கண்களில** இரு உருவங்கள் நிழல் போல் நிழலாடியது.

பின்பு சிறிது நேர மௌனம்.
விம்மி விம்மி அழுவது போல் குரல் கேட்க

பிரபுவின் கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் வழிய ஆரம்பித்தது.

அவனை அணைத்து ஆலாபனை செய்வது போல் தோன்றியது.

**'நிர்மலா...! இந்த நிகழ்வுக்காகத்தானே பல நூறு *ஆண்டுகளாக* நாங்கள் தவித்துக் கொண்டிருந்தோம்.**

**நீ சித்தரின் சீடனாக இருந்து மடிந்தமையால் பல பிறவியிலிருந்து**
**தப்பித்து உலகில் ஜனனம் செய்யாமலிருந்தாய்.**
**நானும் நம் அம்மங்காவும் துஷ்யன் மாயவனால் சித்தின் சூழ்ச்சியால் உடலிலிருந்து உயிர் நீங்கினாலும் இறைவன் பாதத்தை அடைய முடியாமல்**
**இங்கேயே சுழல வேண்டி இருந்ததாகிவிட்டது.**

**பாதகன் நாம் வசித்த இல்லத்தை கோவில் போலிருந்த மாளிகையை நாங்கள் நெருங்காவண்ணம் கட்டி விட்டு அராத்மாவாக இருந்த விஸ்வேஸ்வரனை**
**மாளிகையின் காவலனாக நிற்க வைத்து விட்டான் .**
**அதனால் இம்மாளிகை யாரும் பயன்படுத்தா நிலமை உண்டானது .**
**இந்த நிலமையிலிருந்து எல்லாம் நீங்க வேண்டுமானால் நீ இப்பூவுலகில் மீண்டும் ஜனித்து நீ இல்லற வாழ்வை துவங்குவதற்கு முன் இப்பாதகர்களை அழிக்க வேண்டும் .**

நீ இப்பூவுலகில் எங்கு , எப்பொழுது ஜனிப்பாய் என்று இவ்வுலகம் எங்கும் சுற்றி சுற்றி வந்தேன் .
ஆனால் நீண் ட காலங்களுக்குப் பிறகே நீ அருகிலேயே ஜனித்திருக்கிறாய் என்பதை நீ ஒரு முறை உன் நண்பர்களுடன் இங்கு அருகிலிருக்கும் மலைக்கு உல்லாச பயணம் வந்திருந்த பொழுது , என் நிர்மலாவின் நறுமணத்தை என்னால் நுகர முடிந்தது .
என் நிர்மலா வந்துவிட்டான் என்று அகமகிழ்ந்து உனைக் காண ஓடி வந்தேன் .
நீ உனது தாயின் அருமை குழந்தையாக வளர்ந்து வரும் அழகை கண்ணால் ரசித்து மகிழ்ந்து வந்தேன் .
எனை மீட்கும் வேளை நெருங்கும் சமயம் நீ காதல் வயப்பட ,
நான் துடித்துப் போனேன் .
ஒரு உண்மையைச் சொல்லவா நிர்மலா ...
இப்பொழுதும் நீ எனக்குரியவன்தான் என எண்ணியிருந்தேன் .
என் காதல் கண்ணாலன் மற்றொரு நங்கையின் ஸ்பரிசத்தை உணர்வதை என்னால் பொறுக்க இயலவில்லை .
அதன் காரணந்தான் மலைமேல் நீங்கள் செல்லும் பயணத்தை தடுத்து நிறுத்த
மாயவன் உனைத் தொடர்கிறான் என கூறி நீ அங்கு போகாமல் தடுக்கப் பார்த்தேன் .
தங்கியிருந்த விருந்தினர் விடுதியிலிருந்து உனது காதலியை உனது உருவத்தில் அழைத்துச் சென்று மலையிலிருந்து தள்ளிவிட முயற்சி செய்தேன் .
நீ அவளைக் காணாது கதறி அழுது ஓடி வந்த நிலையைக் கண்டு மனம் கலங்கிவிட்டேன் .
இதுபோலத்தானே நாங்கள் நீங்கினகாலம்

நீ கதறி கதறி அழுதாய் .
அந்தப் பிறவியில் தான் நீ உனது காதலியை குழந்தையை கயவர்களால் பிரிந்தாய் என்றால் இப்பிறவியிலும் நீ பிரிவதற்கு நானே காரணமாகக் கூடாது என பரிதவித்தேன் .
அதன் காரணமாக அவளை ஒன்றும் செய்யாது நீங்கி அருகில் இருந்து கவனித்துக் கொண்டேன் .

நான் நீண்ட காலமாக மாளிகையில் இல்லாதது மாயவனுக்கு சந்தேகத்தை
ஏற்படுத்த
எனை பின் தொடர ஆரம்பித்தான் .

நீ நிலையான வாழ்வு வாழ்ந்தால் அவனை அழிக்க வந்துவிடுவாய் என நினைத்து
உனை அழிப்பதற்காகவே அந்த மலையிலிருந்து கீழே தள்ளிவிடப் பாரத்தான் .

ஆனால் நான் அங்கு இருந்தாலேயே உனக்கு எந்தவித அபாயமும் ஏற்படாமல்
காப்பாற்றினேன் .

உனக்கு தொழில் நிமித்த பகைவர்களால் ஆபத்து வந்தபோதெல்லாம் தடுத்து உனைக் காப்பாற்றி வந்தேன் .

நீ எந்த *வகையிலாவது* இந்த இடத்திற்கு வர வேண்டும் என்ற காரணத்தால் நீ வகிக்கும் நீதிமான் பதவி எனக்கு உதவியாய் இருந்தது .
நீ அன்று எப்படி வீரனாக வலம் வந்தாயோ அப்படித்தான் இப்பிறப்பிலும் நீதியை நிலைநாட்டுபவனாகவும் ,
வீரமுள்ள மனிதனாகவும் வலம் வருகிறாய் .

நிர்மலா ... உன்னால் நாங்கள் இன்று
புனிதனானோம் . இனி இப்பூவுலகை விட்டு நீங்கும்

**சமயம் வந்து விட்டது .**
**நீ *உன்* மனதுக்கேற்ற மணாளினை மணம் புரிந்து நன்மக்கள் பெற்று உனது காலம் முடியும்வரை மகிழ்வுடன் வாழ்ந்து வளம் பெறுவாய் . உன் பதவியில் நீதிக்கு மட்டுமே சத்தியத்துடன் நிலைபுரிவாய் .**
**உனது காலம் முடிந்தால் உனக்காக நான் காத்துக் கொண்டிருக்கிறேன் . அங்கு நம் காதல் வாழ்க்கையை வாழும் பறவைகளாய் வலம் வருவோம் .'**

நீண்ட உரையாடலை முடித்தவள் அவனை தழுவுவது போல அவன் சிரசில் கைவைத்து ஆசிர்வாதம் புரிந்தாள் . கன்னத்தில் மூச்சுக்காற்று பட்டு அகன்றது .

பின் கண்களில் நீர் வழிய கையில் சிறு குழந்தையைப் பிடித்தபடி அவனைப் பார்த்தவாறே மெல்ல மெல்ல மறைந்துப் போனாள் .

அவள் செல்வதையே கண்களில் நீர் வழிய பார்த்துக் கொண்டே இருந்தவன் மயங்கிய நிலைக்குச் சென்று கீழே சரிந்தான் .

சிறிது நேரத்தில்மாளிகையின் மாடங்கள் , தூண்கள் , சுவர்கள் எல்லாம் மடமடவென இடிந்து விழத் தொடங்கியது .

சிறிது நேரத்தில் அம்மாளிகை குவியல் மண்ணாக தரை மட்டமாகி மாளிகை இருந்த சுவடே இல்லாத நிலையில் காட்சியளித்தது .

சுற்றிலும் மண்ணின் தூசி படர்ந்து புகை மண்டலத்தை ஏற்படுத்தியது .

தூசினால் தும்மலும் இருமலும் ஏற்பட மெல்ல கண்விழித்தான் பிரபு .

ஒருகணம் அவனுக்கு தான் எங்கிருக்கிறோம் என்பதே புரியவில்லை .

கை கால்கள் சிராய்ப்பு ஏற்பட்டு ரத்தக்கசிவு ஏற்பட்டிருப்பதைக் கண்டவன் ,

மெல்ல எழுந்து தன் உடைகளிலிருந்த மண்ணைத் தட்டி விட்டவாறே சுற்றிலும் கண்களைச் சுழற்றிப் பார்த்தான் .

கை எரிச்சல் ஏற்பட தன் கர்சிப்பை எடுத்து மெல்ல துடைத்தவன்

' என்ன இது ... ஏன் நாம் இங்கு மயக்கமாகிக் கிடந்தோம் . எப்படி எப்போது இங்கு வந்தோம் . அதுவும் தனியாக வேறு வந்திருக்கிறோம் . ஜானி வந்தியத்தேவன் இருவரும் காணோமே ...? அய்யோ ... அவர்களுக்கு ஏதாவது தீங்கு ஏற்பட்டிருக்குமா ...?',

உடனே வேகமாக நடக்கத் தொடங்கியவன் ஜானி வந்தியா என அழைத்துக் கொண்டே செல்லத் தொடங்கினான் .

தன் செல் பாக்கெட்டில் இருக்கிறதா என்று பார்த்தவன் அது பத்திரமாக இருக்கவும் அதை எடுத்து ஆன் செய்தான் .

மணியைப் பார்க்க மாலை ஐந்து என்று காட்டியது .

தான் காலையிலிருந்து என்ன செய்தோம் என நினைத்துப் பார்த்தும் எதுவும் நினைவில் வரவில்லை .

பசி மெல்ல எடுக்க ஆரம்பித்தது . தான் எப்போது சாப்பிட்டோம் என்பதும் நினைவிலில்லை .

ஏனோ எல்லாமே சூனியமாகத் தோன்றியது பிரபுவுக்கு
.

செல்லில் வேறு சார்ஜ் சிறிதளவு தான் இருந்தது .

ஜானிக்கு போன் போடலாம் என நினைத்தவனை
யாரோ பேசும் குரல்
கேட்கவே அவர்களை நோக்கி செல்லலானான் .

மாளிகை குவியலுக்கு மறுபுறம் இருவர் பேசும் குரல்
கேட்க முன்புறத்தில் இருந்தவன் ஏதோ ஒரு முன்
எச்சரிக்கை உணர்வு தோன்றவே அவர்களை நோக்கிச்
செல்லாமல் மலை போல் கிடந்த குவியலில் ஓரமாக
மறைந்தான் .

" டேய் முருகா ...! ஏதோ மடமடனு சத்தம் கேட்டுச்சே ...
பாருடா பங்களா இடிஞ்சி கிடக்கு ."

" ஆமா தேவா ...! எப்படிடா அப்படியே சரிஞ்சி
விழுஞ்சிடுச்சி . "

" அதுதான் எப்ப எப்பன்னு விழுறதுக்கு
இருந்தமாதிரியே இருந்துச்சில்ல ..."

" கடோசி வரைக்கும் இந்த பங்களாக்குள்ள போயி
பாக்காமலே போயிடுச்சே ... ச்சோ !"

" ஏண்டா முருகா ... என்னமோ எல்லாரும் நுலஞ்சி
பாத்த மாதிரியும் நீ மட்டுமே பாக்காத மாதிரி பீலிங்
உடறே ...?
எனக்கு தெரிஞ்சவரை ஒரு மனுச ஜென்மம் கூட
இதுக்குள்ளேப் போயி பாத்துருக்காது ",

" அதான் மச்சி எனக்கு பயங்கர டவுட்டா இருக்கு . இப்ப
நாம இங்க வரைக்கும் வந்துருக்கோமே ... ஆனா
எப்பிமே ரெண்டு பர்லாங் டிஸ்டென்ச

மெயிண்ட்டெயினு பண்ணிக்கிட்டு தானே இருப்போம் ?

" டேய் தேவா ... மெல்லமா பேசுடா . இது சாதாரண மேட்டரு கிடையாது . நம்ம பாஸ்ஸே என்ன சொல்லிருக்காரு .
டே பசங்களா ... நம்ம இடத்தைத் தாண்டி அப்பாலே கால கீல வச்சிடாதீங்க .
அப்புடி வச்சிட்டீங்கன்னா திரும்ப பொணமாத்தான் வருவீங்க . அந்த பங்களா பேய் பங்களா .
அதப் பாக்கணும்னு ஆசைப்பட்டு அங்கே போனீங்கன்னா மறுநாளு உங்களுக்கு பாலு தாண்டி னு சொல்லியிருக்காரு இல்லை . "

", ஆமாண்டா முருகா ... ! ஆனா ஏதோ அதிசியம் நடந்துருக்கு . அது மட்டும் நா அடிச்சி சொல்லுவேன் . மதியம் நீ கவனிச்சியா ... ஏதோ சத்தம் இந்த பக்கமிருந்து வந்துகிட்டே இருந்துச்சில்ல ..."

" மச்சி ... மொதல்ல இங்கின இருந்து கிளம்பிலாம்டா . எனக்கு பயமா இருக்கு .
காத்து கறுப்பு நம்பளை கவுத்துடப் போகுது .

" பயப்படாதடா . நாம இங்க இருந்து கிளம்பிட வேண்டியதுதான் . முருகா அந்தப் பக்கம் பாருடா ... மரம் தீப்பிடிச்சி எரிஞ்சிக்கினு இருக்கு . எப்படிடா மரம் தானா எரியும் .?"

" மச்சி ... நெசமாலுமே எனக்கு குல நடுங்குதுடா . மின்னலு இடி எதுவுமே இல்லாம எரியுதுன்னா கண்டிப்பா துஷ்ட தேவதை இங்க இருக்குதுடா .
வேணா வா ... சீக்கிரம் இடத்த காலி பண்ணுவோம் ."
என்று கூறியவர்கள் ஓட்டமும் நடையுமாக அங்கிருந்து சென்றனர் .

இதையெல்லாம் மண் மேட்டின் பக்கமிருந்து கவனித்த பிரபு

' இவர்கள் யாராயிருக்கும் . கண்டிப்பாக இல்லீகல் ப்ராசஸ் ஏதோ இங்க நடக்குது .
இன்னும் கொஞ்ச தூரம் போய் பார்ப்போம் .'
என நினைத்தவனாய் அவர்கள் சென்ற திசையிலேயே சென்றான் .

சுமார்இரண்டு கிலோ மீட்டர் தூரம் காட்டில் நடந்தவன் தூரத்தில் ஒரு ஷெட் போட்டு கட்டிடம் ஒன்று தெரியவே அதை நோக்கி நடந்தான் .

பக்கம் நெருங்கும் வேளை மனித நடமாட்டம் தெரியவே மெல்ல நடந்து மறைவாக நடந்து ஒரு மரத்தின் பின்னே ஒளிந்து நின்றான் .

தான் பார்த்த இருவர் வேறு புறமிருந்து வேக வேகமாக வர அவர்களைக் கண்ட இன்னொருவன் அவர்களிடம்

" என்ன முருகா ... சத்தம் கேட்டதே ... என்னன்னு தெரிஞ்சுதா ... ?"

" கோட்டி ...! அதை ஏண்டா கேக்கிறே ...?
அந்த பங்களா பக்கம் போக முடியாதுன்னு தானே நினைச்சிருந்தோம் .
ஆனா எங்களுக்கு எதுவும் நடக்கலைடா .
அந்த பங்களா அப்படியே தரைமட்டமா கிடக்குது .
பக்கத்துல மரம் ஒன்னு எரியுது .
என்ன நடந்துதுன்னேப் புரியலை ."

" என்னங்கடா சொல்றீங்க ....? நா எத்தனை முறை அந்தப் பக்கம் போக முயற்சி பண்ணியிருக்கேன் .
ஆனா பங்களா நெருங்க நெருங்க பாம்பு கூட்டமா இல்லை இருக்கும் . பக்கம் இல்லை தூரத்தில இருந்து

கூட அங்க போகமுடியாதே . அப்ப பாம்புங்க அங்க இல்லியா ...?"

" நாங்க ஒரு பாம்பைக் கூட பாக்கலையே .?"..

" அங்க பூமி அதிர்ச்சி ஏதும் வந்துருக்குமா ...
ரொம்ப சத்தம் வேற கேட்டேதுல்ல .?"

" தெரியலை . ஆனா ஏதோ ஒன்னு அங்க
நடந்ததாலதானே பங்களா சரிஞ்சி விழுந்துருக்கு . சரி
பாஸ் வந்துட்டாரா ...
வெளிநாட்டு கேங் ஒன்னு வருதுன்னு சொன்னாரே ...?"

", அவங்களை பிக்கப் பண்ணத்தான் போயிருக்காரு . "

" இந்த வாட்டி செம மால் அள்ளிடலாம்னு பாஸ்
சொன்னாருல்ல . பார்ட்டி பெருசா ...?"

" பெருசா ... நீ வேற . அவங்கதான் வேர்ல்டு லெவல்
மாபியா கோஷ்டி .
பிரேசில் தெரியுமா உனக்கு ...?"

" என்ன கோட்டி .... இந்தப் பீல்டுல பத்துவருசமா
இருக்கேனே ... இது கூடவா எனக்குத் தெரியாது .
அங்கதானே சர்வதேச
போதை பொருள் கடத்தல் அதிகம் ."

" ஆமாம் . ஆனா எப்பவும் வர கோஷ்டி இல்லை . இது
பவர்புல்லான நெட்வொர்க் ."
' நார்கோ ' எனப்படும் ( சட்டத்துக்குப் புறம்பாக
போதைப் பொருளை கடத்துபவர் என்று பொருள் )
பெரிய கேங் லீடரே இங்க வரார் ."

", சரி பாஸ் வர நேரமாயிடுச்சி . அந்த செக்போஸ்ட்
மாதவன் அங்க கேர்புல்லாதானே இருக்கான் ."

" இன்னிக்கி அவனோட டூட்டிதானே .
நல்லவேளை ... பாஸ் பாங்காங் போயிட்டு
வந்து சூப்பரா பிளான் பண்ணாரு .',

", ஆமா தேவா ... எனக்கு கூட இது சரியா வருமான்னு
டவுட்டாவே இருந்தது .
ஆனா பாரேன் பத்து வருசமா வெற்றிகரமா
யாரையும் இந்தப் பக்கம் வரவிடாம
சேஸ்ரிவர்ஸ் ஹெல்ப் பண்ணுதிவ்லை . ",

" ஆமாம் . அதை இங்க வைக்க எத்தனை லட்சம் நம்ம
பாஸ் செலவு பண்ணினாரு .
எவனும் அந்த செக்போஸ்டை தாண்டி அந்த
மூணுரோடு பிரியற இடத்துக்கு வந்தாலே
மண்ணுக்கு கீழே சுமார் ஒருகிமீட்டர் தூரத்துக்கு
போட்டிருக்கிற சேஸ்ரிவர்ஸ்
அவங்களை முன்னோக்கி போக விடாம
ரிவர்ஸ்ஸிலேயே கொண்டுவந்து செக்போஸ்டுகிட்ட
கொண்டு வந்து விட்டுடுமில்லை ."

" ஏன் கோட்டி ... அது என்ன தானாவே வேலை
செஞ்சிடுதா ...?
நம்ம டீம் ஆளுங்க மாறி மாறி செக் போஸ்டுல இருந்து
பத்துமரம் தள்ளி இருக்கிற ஆலமரத்து மேல இருக்கிற
மரவீட்டுல இருந்து ரிமோட் கண்ட்ரோல் மூலம் அந்தப்
பக்கம் யார் வருவது என்று தெரிந்து ஆன் செய்து
விடுவார்கள் .

நடந்தாலும் வண்டிகள்ள வந்தாலும் பிரியிற மூணு
ரோட்ல பங்களா பக்கம் வர்ர ரோட்டுல இருக்கிற
சேஸ்ரிவர்ஸ் மீண்டும் செக்போஸ்ட்கிட்டயே
கொண்டுவந்து சேர்த்திடுது ."

" அதுக்கு நமக்கு செக்போஸ்ட் ரேஞ்சர்ஸ் ஹெல்ப் நமக்கு உதவியா இருக்கே ',

" சும்மாவா செய்யிறாங்க . மாசமானா சுளையா பச்சை நோட்டு போய் சேர்ந்திடுதில்ல ..."

" முருகா ... போன மாசம் வக்கீலு ஒருத்தன் வழி கேட்டு வந்தானே .... அப்ப அவனுங்களை பயமுறுத்தி அனுப்பியதை
நினைச்சா எனக்கு சிரிப்பா வருதுடா ...!",

" ஏன் ஏன் வராது உனக்கு சிரிப்பு ?
அந்த இன்ஸ்பெக்டரு சற்குணத்துக்கிட்ட மாட்டிக்கிட்டு முழிச்சது நாந்தானே ...!
அப்புறம் ஒருவழியா அவனுங்களை கன்ப்பியூஸ் பண்ணிட்டேனுல்ல ."

" ஆனாலும் அவன் செம ஷார்ப்புடா . உன்ன நம்பின மாதிரி நம்பிட்டு பின்னாலையே போலீஸ்காரன் ஒருத்தனை அனுப்பினான் இல்லியா ..."

", நா எப்படிப்பட்ட ஆளு . அவன் விடாகண்டன்னா நா கொடாகண்டன் . அதான் ஊரு பக்கமா போயிட்டு தண்ணிக்
காட்டினேனில்ல அவனுங்களை .",

" ஹே ... கார் வர்ர சத்தம் கேக்குது . உள்ள போய் எல்லாரையும் அலர்ட்டா இருக்கச் சொல்லுங்க . நான் இங்க இருக்கிறேன் ", தேவா கூற இருவரும் வேகமாக உள்ளே ஓடினர் .

இவர்கள் பேசியதை எல்லாம் பக்கமாக உள்ள மரத்தின் பின்புறமிருந்து ஒன்றுவிடாமல் கேட்டுக் கொண்டிருந்த பிரபு
ஜானிக்கு போன் போடலாம் என்று போனை எடுக்க

அப்போது டொயோட்டோ ஒன்று சர்ரென்று வந்து அந்தக் கட்டிடத்தின் அருகே நின்றது .

கார் கதவை ஓடி தேவா திறக்க காரிலிருந்து இறங்கியவன் உள்ளே இருப்பவனிடம் தலையை ஆட்டி பேசியபடி திரும்பி நிற்க

அவனை நன்றாகக் கவனித்தான் பிரபு .

அவனைக் கண்டதும் திடுக்கிட்டான் பிரபு .

# அத்தியாயம் 27

மாளிகையின் பின்புறமாக நடந்து வந்த பிரபு தான் பாலோ செய்ய நினைத்த அந்த இரு நபர்களும் வேறு வழியாக அங்கு வந்து
தேவா என்பவனிடம் பேசிய பேச்சுகளை கேட்டதிலிருந்து தனக்கு டவுட்டாக இருந்த பல விசயங்களை தனக்காகவே சொல்வது போல் அவர்கள் ரீவைண்ட் பண்ணிப் பேச ,

எல்லா விசயங்களும் அழகாக புரிந்துவிட்டது பிரபுவுக்கு . மேலும் அவர்கள் வேர்ல்டு லெவல் மாபியா தலைவனை வரவேற்க காத்திருப்பதாக கூறவும் பிரபுவும் இன்று ஒரே இடத்திலேயே அனைத்து போதைக் கும்பல்களின் தலைவர்களை அடையாளம் கண்டுவிடலாம் என ரொம்ப எக்ஸ்சைடாக இருந்தான் .

பிறகு போனை எடுத்து ஜானிக்கு போன் போடலாம் என நினைக்கும் வேளை கார் ஒன்று வழுக்கிக் கொண்டு வந்து அந்த ஷெட் போன்ற பெரிய கட்டிடத்தின் முன்னால் வந்து நிற்க

காரைத் திறந்து கீழே இறங்கிய மனிதன் பின்புறக் கதவை மிகவும் பணிவுடன் திறந்து குனிந்து ஏதோ அம்மனிதனிடம் தலையை ஆட்டியவாறே நிமிர்ந்து அருகில் நின்றிருந்த தேவா என்பவனிடம் பேசியவாறே திரும்ப

அந்த மனிதனைப் பார்த்தவன் மிகவும் அதிர்ச்சியின் எல்லைக்கேச் சென்று விட்டான் .

இவரா ... இவரா ... போதைக்கும்பலோடு சம்மந்தம் உடையவர் . அவனால் நம்பவே முடியவில்லை . தன் கண்களை நன்றாகத் தேய்த்துக் கொண்டவன் மெல்ல தன் கைகளை கிள்ளிப் பார்த்துக் கொண்டான் .

இல்லை .. இது கனவல்ல . நிசந்தான் . சே ... இந்த உலகத்தில் யாரை நம்புவது என்றே தெரியவில்லை .

தான் பார்த்த நபரை நினைத்து மனது வேதனையுடன் அப்படியே சிறிது நேரம் நின்று விட்டான் பிரபு .

பிறகு ஏதோ முடிவு கண்டவனாய் வேகமாக போனில் ஜானியை தொடர்புக் கொள்ள முயற்சித்தான் .

நெட்வொர்க் அங்கே கிடைக்கவில்லை .
மேலும் சார்ஜிம் கொஞ்சமாகவே இருக்க கவலையடைந்தவன்

எப்படியாகிலும் ஜானியிடம் இதைச் சொல்லிவிட்டால் போதும் . அவன் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்வான்
என நினைத்தான் .

மெல்ல அங்கிருந்து நகர முற்பட மீண்டும் இன்னொரு கார் வந்து நிற்க ,

அதிலிருந்து இறங்கியவனும் தனக்கு தெரிந்தவனாகவே இருக்க

' இது என்ன ... இன்று நமக்கு பலருடைய முகமூடியை பார்க்க முடிகிறது .' என நினைத்தவன் வேகமாக அங்கிருந்து நகன்றான் .

சிறிது தூரம் வந்தவன் சிறிய மரம் ஒன்றில் ஏறினான் .

மேலே கிளையில் அமர அங்கிருந்து தாம் பார்க்கவேண்டிய இடம் தெள்ளத் தெளிவாகத் தெரிய திருப்தியடைந்தவனாய் போன் போட்டுப் பார்த்தான் .

ரிங் செல்லவே நிம்மதியடைந்தான் .

மறுமுனையில் ஜானி பாஸ் பாஸ் என சத்தமாக அழைப்பதுக் கேட்டது .

பிரபு பேச ஆரம்பிக்க ஜானி பாஸ் பாஸ் என அழ ஆரம்பித்தான் .

அவனிடம் " ஜானி ...! என் போன்ல ஜார்ஜ் கம்மியா இருக்கு . டீடெய்லா எதுவும் உங்கிட்ட பேசமுடியாது . நான் சொல்வதை மட்டும் கேட்டுக்கோ ..." எனக் கூறியவன்
மடமடவென்று நிறைய இன்ஸ்ட்ரக்சன் கொடுக்க ,

எல்லாற்றிற்கும் சரி பாஸ் சரி என்று கூறியவனிடம் " சரி வைச்சிடறேன் . நீ நான் சொன்னமாதிரி செஞ்சிட்டு சற்குணத்தையும் பட்டாலியன் போலீசையும் உடன்

அழைத்து வா .
இரவா ... அதை எப்படியாவது நான் சமாளிச்சிக்கிறேன் .
நீ விடியற்காலையில் இங்கே இருக்கணும் . அதுக்கு தகுந்தமாதிரி வேகமா காரியங்களைச் செய்யணும் . புரிஞ்சிதா ...!"

நிறைய கட்டளைகளை அவனிடம் கூறிவிட்டு நிம்மதியாக மரத்தில் சாய்ந்தான் .

" காலை எல்லா கேள்விகளுக்கும் அவர்களிடமிருந்து பதில் கிடைத்துவிடும் .
ஆனால் இருட்ட ஆரம்பித்துவிட்டது . இந்த இருட்டில் வழி தேடி வெளியேச் செல்வது மிகவும் கடினம் . இந்த மரத்திலேயே இருந்துவிட வேண்டியதுதான் .
ஆனால் இப்பொழுது மிகவும் பசிக்கிறது . தாகம் வேறு எடுக்கிறது . என்ன செய்வது ÷"
யோசிக்கலானான் பிரபு .

' வேறு வழியில்லை . அவர்கள் இருக்கும் ஏரியா பக்கம் சென்றுதான் தண்ணீரைத் தேட வேண்டும் . தாகத்திலே உயிரே போயிடும் போல இருக்கு ' மெல்ல மரத்திலிருந்து இறங்கியவன் மரங்களின் நிழலிலேயே கீழே கிடந்த சருகுகளின் சத்தம் கூட கேக்காதவண்ணம் அடிமேல் அடி எடுத்து நகர்ந்தான் .

இருநூறு மீட்டர் தூரந்தான் . ஆனால் அரைமணி நேரமாயிற்று அவனுக்கு .

இப்பொழுது அந்த கட்டிடத்தின் பின்புறமாக வந்து சேர்ந்திருந்தான் .

அங்கே நிறைய அட்டைப் பெட்டிகள் காலி டிரம்கள் கடப்பாரை மண்வெட்டி நிறைய கத்திகள் உடைந்தும் இன்னும் பல பொருட்கள் தாழ்வாரமாக இறக்கப்பட்டிருந்த இடத்தில் போட்டு வைக்கப்பட்டிருந்தது .

இன்னும் கொஞ்சம் உற்றுப் பார்க்கும் போது தகரத்தால் ஆன இரு சிறு அறைகள் தென்பட

அவற்றின் அருகே சென்றவன் கதவு என்று சொல்லும்படி இருந்த  துருப்பிடித்து இருந்த கதவை

தாள் மெல்ல நீக்கிப் பார்த்தான் .

ஒரு அறையில் நிறைய காலி மதுப் பாட்டில்களும் அருகில் தண்ணீர் கேன்களும் பிளாஸ்டிக் தம்ளர்களும் காணப்பட ,

' அப்பாடா ' என மூச்சு விட்டான் பிரபு .

ஒரு சிறிய கேனை எடுத்துக் கொண்டவன் டம்ளரையும் எடுத்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்து பக்கத்தில் இருந்த மரத்தின் பின்னால் சென்று நின்றான் .

தாகம் தீர்ந்திடுச்சி . பசிதான் ஆரம்பிச்சிடுச்சி . என்ன செய்வது யோசனையில் சிறிது நேரம் மரத்தின் பின்னாலேயே நின்றான் .

. அப்போது கட்டிடத்தின் பின்புறக் கதவு திறக்கப்பட்டு அங்கிருந்து நான்கு பேர் வெளிவந்தனர் .

அவர்களில் மூவர் ஏற்கனவே அறிமுகமானவர்கள் தான் . அவர்களில் ஒருவனின் கையில் உணவுப் பொட்டலங்கள் காணப்பட்டது .

அவர்கள் அங்கிருந்த மேடை ஒன்றில் அதை வைத்துவிட்டு அமர்ந்தனர் .

" ஜீவா ... அந்த ரூம்ல வாட்டரும் குவாட்டரும் எடுத்துவா " என்று தேவா கூற

சரியென்று அவன் உள்ளே செல்லத் திரும்பினான் .

அப்போது உள்ளேயிருந்து ஒருவன் வந்து உங்களையெல்லாம் பாஸ் கூப்பிடுகிறார் எனக் கூற

உணவை அப்படியே வைத்துவிட்டு அனைவரும் கிளம்பினர் .

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த பிரபு சிறிது நேரம் எட்டிப் பார்த்துக் கொண்டே இருக்க யாரும் வருவதாகத் தெரியவில்லை .

சட்டென்று வேகமாக வந்தவன் பையிலிருந்த ஒரு பொட்டலத்தை எடுத்துக்
கொண்டு பின்னால் மறைந்தான் .

சிறிது தூரம் சென்று கல் ஒன்றின் மேல் உட்கார்ந்து வேகவேகமாக சாப்பிடத் துவங்கினான் .

பசியின் கொடுமையை இதுவரை அறியாதவன் முதன் முதலாக அறிய நேர்ந்ததை எண்ணி எதுவும் எப்படியும் நடக்கவேண்டியது நடந்தே தீரும் என எண்ணியவனாய் சிறிது தூரம் நடந்து படுத்து இளைப்பாற இடம் தேடினான் .

நடுஇரவில் திடீரென்று வண்டி ஒன்று வருகின்ற சத்தம் கேட்டு விழித்தவன் இந்த நடுராத்திரியில் அப்படி என்ன கொண்டு வருகிறார்கள் .

எழுந்து இருட்டில் தட்டுத் தடுமாறி அருகில் வந்து மறைந்து கவனிக்கலானான் .
பெட்டி பெட்டியாக பத்து பேருக்குமேல் அந்த லாரியில் ஏற்றிக் கொண்டிருந்தனர் .

இவையெல்லாம் எங்கு செல்லப் போகிறது .
அதில் என்ன இருக்கிறது . விடிவதற்குள் சென்று விட்டால் எப்படி இதைப் பிடிப்பது .

அப்போது தம் அடித்தபடி இருவர் சற்று ஒதுங்கினர் .

இருவரும் அங்கு நின்றபடி  பேச ஆரம்பிக்க பிரபு உற்றுக் கேட்க ஆரம்பித்தான் .

", ஏம்பா ... இந்த வாட்டி ஏன் ஸ்பாட்டை மாத்துறாங்க .?"

", யாரோ புது பார்ட்டி ஜாயிண்ட் ஆயிருக்கு .
இப்ப நாம கொண்டு போறது பெரிய இடத்ததுன்னு பேசிக்கிட்டாங்க ."

" கொள்ளை கொள்ளையா சம்பாதிக்கிறாங்க . ஆனா நமக்கு நியாயமான ஊதியம் கூட குடுக்கிறதில்லை . என்னா பொழப்பு இது போ ." சலித்துக் கொண்டான் ஒருவன் .

" மெதுவா பேசுடா . கேட்டுடப் போகுது . இருட்ல சுவத்துக்கும் காது இருக்கும் ."

", கருப்பா .. நான் ஒன்னு சொல்றேன் கேக்கிறியா ...?"

" வில்லங்கமா ஏதும் சொல்லாதவரைக்கும் ஒகே ."

" அப்படியெல்லாம் ஒன்னுமில்லை . லேசான விசயந்தான் . "

" சரி சொல்லு நேரமாகுது . கூப்பிடப் போறாங்க .

" நாம பைபாஸ் வழியாத்தானே போவோம் .
நாம போற வழியில சைடு ரோடு வர்ர இடத்துல வண்டியைத் திருப்பிடலாம் .
தார்ப் பாயை எடுத்துட்டு ஒரே ஒரு பாக்ஸை மட்டும் சுட்டுடலாம் . என்ன சொல்றே ?"

" நீ என்ன புதுசாவா வேலைக்கு வந்திருக்கே . ஏதும் தெரியாத மாதிரி பேசறே .
தார்ப்பாயை நீக்கறது கஷ்டம் . சீல் வச்சிதான் அனுப்புவாங்க . அதுமட்டுமல்ல ... எத்தனை பாக்ஸ் இருக்கோ அத்தனை பாக்ஸிக்கும் நாமதான் பொறுப்புன்னு எழுதி வாங்கிகிட்டுதான் அனுப்புவாங்க . ஒன்னு குறைஞ்சாலும் கட்டி வச்சு தோலை உரிச்சிடுவாங்க . பரவாயில்லையா ...?",

" ஏதோ முடியுமான்னு கேட்டுப் பார்த்தேன் . விடப்பா டென்சனாகாத . சரி வா . கொஞ்ச நேரம் கண்ணசைப்போம் . காலையில அஞ்சு மணிக்கெல்லாம் கிளம்பணும் .",

இதுவரை இவர்களின் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த பிரபுவுக்கு ஒன்று மட்டும் நன்றாகவே புரிந்தது . இதில் அரசியல்வாதிகளின் பங்களிப்பும் இருக்கவேண்டும்என .

காலை எப்போது விடியும் என சரியாக உறங்காமல் விழித்தபடி படுத்திருந்தான் பிரபு .

அதே நேரம் ஜானியும் வந்தியத்தேவனும் சற்குணத்தை காண்டாக்ட் செய்து விசயத்தைக் கூற ' இஸிட் நிசமாகவா !' என கேட்டவர் பட்டாலியன் போலீஸிக்காக மேலிடத்தில் பர்மிசன் கேட்டு ஆர்டரை பெற்றுக் கொண்டவர் சீரிதரிடம் விசயத்தைக் கூறி அவரையும் தன்னுடன் அழைத்துச் செல்ல பர்மிசன் வாங்கி விட்டதாகவும் தங்களின் படைகளோடு உடனே கலந்து கொள்ள உத்தரவு வந்திருப்பதாகவும் கூற

இரவு பத்துமணியளவில் அனைத்தும் அலர்ட்டாக வந்து பொன்ராயன் மங்கலத்தில் வந்து சேர்ந்தது .

விடியற்காலை மூன்று மணிக்குள் காட்டுக்குள் போலீஸ் படை நுழைய ஆரம்பித்தது .
செக்போஸ்ட் அருகில் மரத்தின் மீதிருந்த குடிலை நோக்கி இரு காவலர்கள் துப்பாக்கி முனையில் விரைய மற்றவர்கள்  கீழே வலைபோல் மரத்தைச் சுற்றி நிற்க ,

நடுஇரவு என்பதனால் அசால்ட்டாக இருந்த மரக்குடிலில் உறங்கிக் கொண்டிருந்த இருவர் தங்கள் மீது துப்பாக்கி அழுத்தப்படும் விசையினால் புரண்டு படுத்தவர்கள் திடுக்கிட்டு எழுந்திருக்க ,

போலீஸ் தங்களைச் சுற்றி நிற்பதைப் பார்த்து பதறி அடித்து எழுந்தனர் .

பிரபு தான் அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்த இடத்தில் இருந்தபடியே சரிந்து படுத்திருந்தவன் அப்படியே உறங்கிப் போனான் .

யாரோ தன்னை உலுக்குவது போல் தோன்ற சட்டென்று விழித்தவன் இருட்டில் நிற்பது யாரெனத் தெரியாமல் இருக்கவே
மெல்ல எழுந்தான் .

" பாஸ் ... பாஸ் ! என்னைத் தெரியலையா ...?

வந்திருப்பது ஜானி என்பதை அறிந்து மகிழ்ச்சியுடன் அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டான் .

" பாஸ் ... பாஸ் ! என ஜானி கண்களில் நீர் வழிய கட்டிப்பிடித்தபடி " உங்களை மறுபடி பார்ப்பேன் என்றே நினைக்கவில்லை . ஏன் ... இப்படி எங்களிடம் கூட சொல்லாமல் இங்கு வந்தீர்கள் .
காலையிலிருந்து இந்தக் காட்டைச் சுற்றி சுற்றிதான் வரமுடிந்ததே தவிர மூணுரோடைத் தாண்டி எங்களால் வர முடியவில்லை .
இங்கிருந்து திரும்பிப் போகவும் முடியாமல் நாங்கள் உங்களுக்காகவே காத்திருந்தோம் .

நேரமாக நேரமாக பயம் வந்ததால் சற்குணம் சாருக்கு போன் செய்து விவரத்தைக் கூறினோம் . அவரும் தன் சக போலீசுடன் வந்தும் எங்களால் வரவே முடியவில்லை ."

" ஆமாம் ... வந்தியன் எங்கே ... ? "

" கேப்டன் ... பின்னாலதத்தான் நிற்கிறேன் .
என்று கூறியவாறு பக்கத்தில் அவனும் வந்து நிற்க ,

அவனுடைய கையை எடுத்து தன் கை மீது வைத்துக் கொண்டான் பிரபு .

" சரி ... நான் சொன்ன ஏற்பாடுகளை செய்து விட்டாயா ...?"

" பக்கா ...! நீங்க சொன்ன விசயங்களை முடித்துதான் வந்தேன் . பாஸ் ... சாப்டீங்களா ...?"

" பட்டினியின் வலிமையை இன்னிக்கிதான் உணர்ந்தேன் ஜானி . அப்பப்பா எப்படிப்பட்ட கொடுமை தெரியுமா ...?
ஆண்டவன் புண்ணியத்துல நல்ல சாப்பாடே கிடைச்சது .
சரி சற்குணம் எங்கே ...?"

" அவர் முதல் வலையில் இருக்கிறார் .
அடுத்து பட்டாலியன் குரூப் . அதற்கடுத்து சிரிதர் குரூப் என வியூகம் வகுத்து அதற்குத் தகுந்தாற் போல் சூழ்ந்துள்ளனர் . அதுமட்டுமல்லாமல் வான் வழி கண்காணிப்பும் இருக்கு . அவர்களால் எங்கும் தப்பித்து ஓடமுடியாது .

சரி ... முதல்ல கட்டிடத்தைச் சுற்றி மரமறைவுகளில் போலீசை நிறுத்த வேண்டும் . பார்சல் அனைத்தும் இரண்டு லாரிகளில் ஏற்றப்பட்டிருக்கு .
ஐந்து மணிக்கு கிளம்புவதாகப் பேசிக் கொண்டார்கள் .
உள்ளே வேர்ல்டு லெவல் இருக்கிறான் .
கூடவே நமக்கு தெரிந்தவர்கள் இருக்கிறார்கள் .
அவர்கள் எப்போது வெளி வருவார்கள் என்றுத் தெரியவில்லை ."

" யார் பாஸ் அவங்க . நமக்குத் தெரிஞ்சவங்கன்னா தொழில் முறையிலா .... இல்லை உறவு முறையிலா ...?"

அவன் கேள்விக்கு பதில் சொல்லாத பிரபு சிரித்துக் கொண்டே , அவர்களை பத்திரமாக
அழைத்துக் கொண்டு அருகில் உள்ள கட்டிடத்தின் முன்புறமாகச் சென்று நூறு மீட்டர் இடைவெளியில் இருக்கும் சரிவுப் பகுதியில் இறங்கி பள்ளத்திற்குள் அமர்ந்துக் கொண்டனர் .

இதுவரையிலும் இந்தப் பகுதிக்குள் வேற்று மனிதர்கள் உள் நுழையாமலே வைத்திருந்ததால்
கட்டிடத்திற்கென்று பாதுகாப்பு என்பதே இல்லாமல் இருந்தது .

இது நல்ல சாதகமாக இருந்தது இவர்களுக்கு .

நேரம் நெருங்கிக் கொண்டே இருக்க ,
மூவரும் திக் திக் மனத்தோடு வாயிலையே கவனித்துக் கொண்டிருந்தனர் .

முதலில் ஒருவன் வெளிவருவது போல் தோன்றியது .

நேராக இவர்கள் இருக்கும் பள்ளப்பகுதிக்கு வர , மூச்சைப் பிடித்துக் கொண்டு மூவரும் அமர்ந்திருந்தனர் .

நல்லவேளை சிறிது தள்ளி  அவன் சிறுநீர் கழித்துவிட்டுச் செல்ல

மீண்டும் மூவரும் தலையைத் தூக்கி எட்டிப் பார்க்கத் தொடங்கினர் .

இப்பொழுது வெளிவிளக்குப் போடப்பட்டது .

ஒவ்வொரு தலையாக தெரிய ஆரம்பித்தது .

முன்பு இரவு பேசிய இரு நபர்களும் வெளிவந்து தலையில் மப்ளர் சுற்றியபடி
மூன்றாவது நபரிடம் ஏதோ கூறிவிட்டு லாரிகளை எடுத்தனர் .

லாரி மெல்ல ஊர்ந்து வேகமெடுக்கத் தொடங்கியது .

பாதி தூரம் சென்றிருக்காது . சாலையில் குறுக்கே பெரிய கல் ஒன்று கிடக்க முன்னால் லாரியில்

இருந்தவன் சலித்துக் கொண்டே கீழே குதித்தான் .
அதைத் தொடர்ந்து பின்னால் வந்தவனும் இறங்கி
என்னவென்று விசாரிக்க

அவனிடம் பேசிக் கொண்டே இருவருமாகச்
சேர்ந்து அதைத் தூக்க முயல
இருவரின் முதுகிலும் துப்பாக்கி முனை அழுத்தவே

குனிந்திருந்த நிலையிலேயே இருவரும் பயத்துடன்
பார்க்க

' உம் ... நிமிருங்கள் ' என அதட்டல் வர நிமிர்ந்தவர்கள்
தங்களின் முன்னால்
போலீஸ் கும்பலாக இருப்பதைப் பார்த்து
எச்சில் முழுங்கக்கூட மறந்தவர்களாய்
பயத்துடன் மிரள மிரள நின்றனர் .

பிரபு ஜானியிடம் ஏதோக் கேட்க " இதோ இருக்கு " என்று
தன் பாக்கெட்டிலிருந்து எடுத்து கொடுக்க அதை
வாங்கி தன் கையில் வைத்துக் கொண்டான் .

நேரமாக மடமடவென்று வேலைகள் நடக்கத்
தொடங்கின .

ஒவ்வொருவனின் கையிலும் ஏதோ ஒரு பார்சல் போல்
இருக்க நாம் எதிர்பார்த்த மாபியாத் தலைவன் கூடவே
லோக்கல் தலைவன் , இன்னொரு ஏரியா குரூப் என
அனைவரும் ஒன்றாக வெளிவந்தனர் .

பாஸ் என அனைவராலும் கூறப்பட்டவனின் கைகளை
நெடு நெடு வென்று உயரமுடன் செம்பட்டைத்
தலையுடன் ரோஸ் கலரில் உள்ள மாபியாத் தலைவன்
பிடித்துக் குலுக்கிவிட்டு சேர்த்து அணைக்க

சிரித்தபடி இருவரும் காரை நோக்கிச் செல்ல ஒரு அடி
எடுத்தனர் .

பிரபு தன் கையில் வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து
வானத்தை நோக்கிச் சுட

திடீர் வெடிச் சத்தத்தில் அரண்டு போன கும்பல்
அப்படியே நின்று ஒருவரையொருவர் பார்த்தனர் .

உடனே அவர்கள் ஆட்கள் உள்ளே ஓடி
அவரவர் கைகளில் ஏகே 47 எடுத்துக் கொண்டு ஓடிவர

பத்துப் பேர் கொண்ட கும்பல் மாபியாத்
தலைவனையும் தங்கள் தலைவனையும்
வட்டம் போட்டு மறைத்துக் கொண்டனர் .

விளக்குகள் பளீர் என்று நாலாபுறமும் எரியத்
தொடங்க அதிர்ச்சியின் உச்சத்திற்கே அந்தக் கும்பல்
சென்றது .

உள்ளே இருந்த மாபியாத் தலைவன் பாஸ்
எனப்பட்டவனிடம் காச் மூச்சென்று ஆங்கிலத்தில்
கத்த ஆரம்பிக்க

பதிலுக்கு அவனும் ஏதோ பேச அவனின் ஆட்களோ
கையிலிருந்த துப்பாக்கியை நேராக குறி பார்த்து நிற்க

விளக்குகள் மெல்ல மெல்ல முன்னேறி வர
ஆரம்பித்தது .

உடனே பின்வாங்கி கட்டிடத்திற்குள் செல்ல முயல
கட்டிடத்திற்குள்ளிருந்தும் விளக்கு வெளிச்சம் வரத்
தொடங்கியது .

நாலாபுறமும் விளக்கு வெளிச்சங்கள் தெரியத்
தொடங்கின வேளை வானத்தில் இரண்டு போர்
விமானம் போல் மேலேயிருந்து தலைக்கு மேல் அதிக
இரைச்சலுடன் சுற்றத் தொடங்கியது .

குத்துமதிப்பாக துப்பாக்கியை வெடிக்கத் தொடங்கின
கும்பல் .

எதிர்புறமிருந்து பதிலுக்கு துப்பாக்கி வெடிக்கத்
துவங்க சுற்றி வட்டம் போட்டு நின்றிருந்த
கும்பலிருந்து ஒவ்வொருவராகச் சரியத் தொடங்கினர் .

மீதம் இருக்கின்றவர்கள் தங்களின் உயிரைக்
காப்பாற்றிக் கொள்ள அங்குமிங்கும் கலைய

நடுவில் இருப்பவர்கள் என்ன செய்வது எனப்
புரியாமல் திருதிருவென நிற்க ,

பட்டாலியன் முன்னேறி அனைவரையும் வளைத்து
நின்றது .

தங்களின் மேல் துப்பாக்கி நீட்டப்பட்டிருப்பதால் தலைக்கு மேல் கைகளைத் தூக்கியபடி மூவரும் நிற்க ,

பட்டாலியனை விலக்கியபடி சற்குணம்
முன்வந்து நின்றார் .

அப்போது குழிக்குள்ளிருந்து பிரபுவும் நண்பர்களும் வெளி வந்து நின்றனர் .

சற்குணம் போன் செய்து யாரிடமோ பேசி ஆர்டர் போட்டுக் கொண்டிருந்தார் .

ஜானி பிரபுவிடம் " பாஸ் ... நாம முன்னால போயி அவங்க யாருன்னு பாக்கலாம் . நீங்க நமக்கு தெரிஞ்சவங்கன்னு சொன்னதிலிருந்து ஏகத்துக்கு ஹார்ட் லப்டப்புன்னு எகிறுகிட்டு இருக்கு . வாங்க " என்று முன்னால் வர

அந்த மூவரும் சற்குணத்திடம் விவாதம் பண்ணிக் கொண்டிருந்தனர் .

தங்கள் வசமிருந்த சரக்குகள் எல்லாம் இரண்டு லாரிகளில் சென்றுவிட்டதால்
சாட்சிக்கு எந்த ஒரு எவிடன்சும் இல்லை என்ற எண்ணத்தில் காவலர்களிடம் விவாதம் செய்ய ஆரம்பித்தனர் .

தங்களை எதற்காக இப்படி போலீஸ் வளைக்க வேண்டும் , அப்படி தாங்கள் என்ன செய்துவிட்டோம் என்று எகிற

" அதெல்லாம் நாங்கள் கோர்ட்டில் புரடியூஸ் பண்ணிக்குவோம் . நீங்கள் ஏறுங்கள் வேனில் " சற்குணம் மிரட்டல் தொணியில்
கூறி காவவர்களை விட்டு அவர்களின் கைகளில் விலங்குகளை பூட்டச் சொல்ல
கைவிலங்குடன் ஏற்றப்பட வழி விட்டு பட்டாலியன் விலக

இப்பொழுது மூவரையும் நன்றாகப் பார்த்தனர் இம்மூவரும் .

பார்த்தவுடன் ஜானி ", பாஸ் ... இவரா இந்தக் கூட்டத்திற்கு தலைவர் ! என்னால் நம்பவே

முடியவில்லை .", பிரபுவின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான் .

வந்தியனுக்கு இவர்கள் யார் என்று தொரியாததால் குழப்பமாக ஜானியைப் பார்த்து " பிரதர் ... யார் இவர்கள் இருவரும் ?"
என்று கேட்க

" ஒருவர் என் சித்தப்பா பரந்தாமன் . இன்னொருவர் நம் ஏரியா தாதா சேனா பார்த்திபன் " பிரபு கண்களில் நீருடன் கூறினான் .

# அத்தியாயம் 28

மர்ம மாளிகையைக் காரணம் காட்டி எந்த மனிதர்களும் உள்ளே வரவிடாமல் செய்திருந்த மாபியாக் கும்பல் இங்கு வந்து யாரும் நம்மைப் பிடிக்க முடியாது என்கின்ற தைரியத்தில் பாதுகாப்பில் கோட்டை விட்டதால் பிரபுவின் சாமர்த்தியத்தால் சர்வதேச கேங் லீடர் வந்த சமயத்தில் அனைவரும் கூண்டோடு பிடிபட்டனர் .

முன்னாள் படை நடத்தி சென்ற சற்குணமும் பின்னால் நிற்கின்ற சீரிதரனின் வலைவிரிப்பும் பாதுகாப்பு படையினரின் பட்டாலியனின் அதிரடி நடவடிக்கையால் போதைக் கும்பல் சுற்றி வளைக்கப்பட்டது .

ஆனால் தான் கனவிலும் நினைக்காத சித்தப்பா இந்தியாவின் நம்பர் ஒன் தலைவனாக இருக்கிறார் என்பதை அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை .

ஜானி தன் பாஸின் தோளைத் தொட்டு கண்களில் நீருடன் நின்றிருந்த பிரபுவைப் பார்த்து ஆறுதலாக அவன் கையைப் பிடித்துக் கொண்டான் .

தலையைக் குனிந்து நின்றிருந்த பரந்தாமன் முன்பு பிரபு வந்து நிற்க
சித்தப்பா என்ற குரல் கேட்டு அதிர்ச்சியுடன் தலையை நிமிர்த்தியவர்

பிரபுவைப் பார்த்ததும் அதிர்ச்சியுடன் மிரள மிரளப் பார்த்தார் .
பின் தன் நிலையை மகன் பார்த்துவிட்டானே என வெட்கித் தலை குனிய ,

" ஏன் சித்தப்பா ... எதற்காக இக்காரியத்தில் இறங்கினீர்கள் .? நமக்கு என்ன சொத்துக்களுக்கு ஏதும் குறைவா ... இல்லை உங்கள் பெண்டாட்டி பிள்ளைகள்

நான்கு தலைமுறைக்கும் சொத்து சேர்க்க வேண்டும் என்ற ஆவலா ...! கல்யாணமே வேண்டாமென்று பிரம்மச்சாரியாய் வாழும் நீங்கள் யாருக்காக வேண்டி போதை விற்பனையில் இறங்கினீர்கள் .
இதற்காகத்தான் யாத்திரை செல்கிறேன் என எங்களிடம் கூறிவிட்டு தலைமறைவு வாழ்க்கை நடத்தி வந்தீர்களா ...
அம்மா இதை எப்படி எடுத்துக் கொள்ளப் போகிறாரோ தெரியவில்லை .
உங்களை தன் மைத்துனராகவா நினைத்தார் . தன் இன்னொரு மகனாகத் தானே நினைத்துக் கொண்டிருக்கிறார் .
ஏன் சித்தப்பா ... எதற்காக சித்தப்பா ... இப்படி சர்வதேச குற்றவாளியாக மாறினீர்கள் .?" அவர் கையைப் பிடித்துக் கதறத் தொடங்கினான் .

ஏதும் கூற முடியாத நிலையில் கண்களில் நீர் வழிய பரந்தாமன் நின்றிருந்தார் .

இதைப் பார்த்துக் கொண்டிருந்த சற்குணம் திகைத்தவராய் பிரபுவின் அருகில் வந்து
" பிரபு ... இவர் உங்கள் சித்தப்பாவா ..... என்னால் நம்ப முடியவில்லையே ...?"
எனக் கேட்க

" எனக்குந்தான் சற்குணம் நம்ப முடியவில்லை . இவர் இப்படி ஒரு காரியம் செய்து எங்கள் குடும்பத்திற்கு இழுக்கு ஏற்படுத்துவார் என்று ." மீண்டும் கதறத் தொடங்கினான் .

அவனை ஆறுதல் படுத்த முடியாத சூழலில் பரந்தாமனைப் பார்த்து " நல்ல குடும்பத்தில் பிறந்தவர் நீங்கள் . ஏன் இப்படி ஈனத் தொழிலில் ஈடுபட்டீர்கள் . என்றைக்கிருந்தாலும் இது ஆபத்தான தொழில் என்பது உங்களுக்குத் தெரியாததா ...?
பிரபுவின் பெயர் இந்த சொசைட்டியில் கிரேட்

லெவலில் இருக்கிறது . அவர் புகழுக்கும் இது களங்கந்தானே ...!
ஐஅம் சாரி பிரபு !
உங்களுக்கு இப்படி ஒரு இக்கட்டான நிலை வரும்னு எதிர்பார்த்து இருந்திருக்க மாட்டீங்க . என்ன செய்வது ...? மனுசனை பணம் படுத்தும் பாடு அது .
கண்டிப்பாக இங்கே இது போல் இல்லீகல் பிராசஸ் நடக்கும் என்று ஊகித்திருந்தேன் .
ஆனால் இங்கே மிகப் பெரிய நெட்வொர்க் பிசினஸ் நடக்குமேன்று நினைக்கவேயில்லை .
அதுவும் இன்று இங்கு வந்துள்ள மிகப் பெரிய வேர்ல்டுல நம்பர் ஒன் மாபியாத் தலைவனையும் பிடிப்போம் என்று நினைக்கவேயில்லை .

பிரபு ... உங்களுக்குத்தான் மிகப் பெரிய நன்றியைக் கூறனும் . நீங்க மாளிகை பாக்கணும்னு சொன்னப்பவே ஏதோ பிளானோடத்தான் வந்திருக்கீங்க . இதப் புரிஞ்சுக்காம உங்களை நாங்க தனியா இங்க வர லெவலுக்கு விட்டுட்டோம் .
வெரி சாரி பிரபு ...!" என சற்குணம் கூற

" இட்ஸ் ஒகே சற்குணம் . எனக்கும் சில டவுட்ஸ் இருந்துகிட்டே இருந்துச்சி . ஆனா இவ்வளவு பெரிய நெட்வொர்க் இங்கே நடந்துகிட்டு இருக்கும்னு கனவிலும் நினைக்கலை . சரி சற்குணம் . நாங்க கிளம்புறோம் . நீங்க உங்க பார்மாலிட்டீஸ் முடிச்சிட்டு எனக்கு சொல்லியனுப்புங்க .
நாங்க வரோம் " என்று சொல்லிவிட்டு
தன் சித்தப்பா பக்கம் கூட திரும்பாமல் வெளியேறினார்கள் .

கொஞ்ச தூரம் வந்ததும் சிரிதரன் அங்கு நின்றிருக்க பிரபுவைப் பார்த்ததும் ஓடி வந்து கட்டிப் பிடித்துக் கொண்டார் .

" பிரபு ... நீ ஏன் இப்படி எங்கிட்ட கூட சொல்லாம இந்த ஆபத்துல வந்து மாட்டிகிட்ட . ஜானி எனக்குப் போன் போட்டுச் சொல்லவும் எனக்கு என்ன செய்யிறதுன்னே தெரியலை .
ஆனா இவனுங்க பண்ணின இந்த ரிவர்ஸ்ரிலேவை புரிஞ்சிக்காம பேய் பிசாசுன்னு நம்பி இருந்துட்டோம்னு வெறுப்பா இருக்கு எங்க மேலேயே . உன்னால எங்க டிபார்ட்மெண்ட்டுக்கு நல்ல பேர் கிடைக்கப் போகுது . கங்கிராட்ஸ் பிரபு . உன் கிரேடும் இதனால உயரப் போகுது ." என்று கூற

ஜானி குறுக்கிட்டு " சார் ... நிலமை புரியாம நீங்க பாட்டுக்கு பாராட்டிக்கிட்டேப் போகாதீங்க . விசயம் தெரிஞ்சா நீங்களே ஆடிப் போயிடுவீங்க ." என்று கூற

என்னவென்று புரியாமல் குழப்பத்துடன் சிரீதரன் " என்ன ஜானி ... புதிர் போடுறீங்க ... புரியும்படியாச் சொல்லுங்க " என்று கூற

ஜானி விவரத்தைக் கூற உண்மையிலேயே சிரீதரனும் கலங்கித்தான் போனார் .
நிசமாத்தான் சொல்றீங்களா ... சித்தப்பாதானா ... ?" ஏதோ ஒரு நப்பாசையில் இது அவர் இல்லை எனக் கூற மாட்டார்களா என ஏங்கியவர் போல் காணப்பட்டார் .

பின்பு பிரபுவின் கையைப் பிடித்து சிறிது நேரம் மௌனமாக நின்றவர் விருட்டென்று கண்களைத் துடைத்தபடி அங்கிருந்து நகன்றார் .

ஜானி தாங்கள் நிறுத்தியிருந்த கார் பக்கம் வந்தவர்கள் அங்கே நின்று காட்டை சுற்றி நோட்டமிட்டனர் .

" பாஸ் ... காலையில எழுந்து வந்தீங்களே ... எப்படி அந்த மூணுரோடு பிரியற இடத்திலிருந்து உள்ளே வந்தீங்க ...? ஏன்னா இப்பத்தானே உங்களுக்கு அங்க

இருக்கிற டெக்னிகல் சமாச்சாரம் தெரிஞ்சுது " என்று கேட்க

" காலையில கிளம்பி செக்போஸ்ட் வரைக்கும் வந்ததுதான் எனக்குத் தெரியும் .
அதுக்குப் பிறகு என்ன நடந்ததுன்னு எனக்குத் தெரியலை ." என பிரபு கூற

" கேப்டன் ... அந்த மாளிகையைப் பாத்துட்டுப் போலாமா ... ஆசையா இருக்கு
பாக்கிறதுக்கு " என்று வந்தியத்தேவன் கூற

" ஆமாம் பாஸ் ... நானும் மறந்தேப் போயிட்டேன் .
அங்க போனீங்களா ... அந்த லேடியைப் பாத்தீங்களா ...
அங்க வேற ஏதாச்சும் நடந்துதா ...?" வரிசையாக கேள்விகளை அடுக்கினான் ஜானி .

அதற்கெல்லாம் எந்தப் பதிலும் கூறாது அவர்களை " காரில் ஏறுங்கள் சொல்கிறேன் " என்று கூறிவிட்டு ஏற

அவர்களும் காரில் ஏறினர் .

பிரபு வழிகாட்ட காரை வந்தியன் ஓட்டிச் சென்றான் .
வழியில் அவன் எதுவும் பேசாமல் இருப்பதைப் பார்த்து இருவரும் அமைதியாகவே வந்தனர் .
ஓரிடத்திற்கு வந்ததும் " இங்கதான் நிறுத்துங்க " என்று பிரபு கூற

கண்ணுக்குத் தெரியும் வரை எந்த ஒரு கட்டிடமும் தெரியாததால் குழப்பத்துடனே
இருவரும் காரிலிருந்து இறங்கினர் .

அங்கே குவியலாக கிடந்த மண்மேடாகக் காட்சியளித்த மாளிகையைக் காட்டி
" இங்கதான் நான் மயங்கிக் கிடந்தேன் .
விழிப்பு வந்தப்புறம் பார்த்தால் மாளிகை இடிந்து கிடந்திருக்கு . சுற்றிலும் புழுதிக்காற்றில் புகை மண்டலம் போல் இந்த இடம் காட்சியளித்தது .

ஏன் இங்கே மயங்கிக் கிடக்கிறோம் என்று நினைத்துப் பார்த்தும் எனக்கு எதுவும் நினைவுக்கு வரவில்லை .
மெல்ல எழுந்து தட்டுத் தடுமாறி நடந்து மண்மேட்டிற்கருகில் நடந்து வந்தேன் .
அப்போது இருவர் பேசும் குரல் கேட்க
எதற்கும் இருக்கட்டும் என்று சாக்கிரதையாக ஒளிந்து நின்று அவர்கள் பேச்சைக் கேட்டேன் .
அவர்கள் பேசியதிலிருந்து இங்கு இருந்த இடிந்து போய் சிதிலமாகக் கிடக்கும் இந்த மாளிகைப் பக்கமே இதுவரையில் யாருமே வந்ததில்லையென்றும் ,
அதற்குக் காரணம் இங்கு அளவுக்கு மிஞ்சி பாம்புகள் நடமாட்டம் இருந்ததாகவும்
அது யாரையுமே இங்கு வரவிடாமல் தடுத்ததாகவும் பேசிக் கொண்டார்கள் .
அதுவுமில்லாமல் இன்று மதியத்தில் இந்த இடத்திலிருந்து ஏதோ சத்தம் கேட்டுக் கொண்டே இருந்ததாகவும் பின்பு மாளிகை சரிந்து விழும் ஓசைக் கேட்டதாகவும் கூறினார்கள் .
இந்த எல்லைக்கே வர முடியாமல் இருந்தவர்கள் இன்று சுலபமாக வர முடிந்திருக்கிறது என்றும்
ஆச்சரியத்துடன்
பேசிக் கொண்டார்கள் .
இவை எதுவும் எனக்குத் தெரியாததால் இதைப் பற்றி நான் தெரிந்துக் கொள்ள விரும்பவில்லை .
ஆனால் அவர்கள் பேச்சிலிருந்து அவர்கள் ஏதோ இல்லீகல் தொழில் செய்கிறார்கள் என்பது மட்டும் புரியவே அவர்களைப் பின்பற்ற வேண்டும் எனத் தோன்றியது .
பிறகு நடந்ததைத் தான் உங்களிடம் கூறிவிட்டேனே ..." என்று பிரபு கூறவும்

" ச்சே .. நாம வந்த நேரமா பாத்துதானா இது இடிஞ்சி விழனும் . ஆனா எனக்கு ஒரு டவுட் பாஸ் ...! நீங்க மயங்கி விழக் காரணம் என்ன ? அதுவும் இங்க எப்படி வந்தீங்கன்னும் உங்களுக்குத் தெரியலை .

இதையெல்லாம் வச்சிப் பாக்கும்போது ஏதோ ஒன்னு இங்க உங்களால நடந்திருக்கு .
அதுக்காகத்தான் எங்களை வரவிடாமல் தடுத்து உங்களை மட்டும் வர வழைச்சிருக்கு . ஏன் பாஸ் ... இப்ப உங்களுக்கு காதுல குரல் கேக்குதா ...?"

சிறிது நேரம் யோசித்தவன் " அப்படி எதுவும் தெரியலை . இன்னிக்கி இல்லை . நாளைக்கு எப்படியோ ....?"

" விட்டவரைக்கும் லாபம் . விடுங்க பாஸ் . நாம பழையபடி நம்ம வேலையில கான்சன்ட்ரேட் பண்ணுவோம் .
இந்த ஒரு மாசமா கேசுங்களை வாய்தா வாங்கியே காலத்தை தள்ளிட்டோம் "

" ஒகே ... இனிமே நம்ம வாழ்க்கையை ஆரம்பிப்போம் . நிலா எப்படி இருக்கிறாளோ இந்த ரெண்டு நாளா ... போன் கூட பண்ணலை நான் ."

" பாஸ் ... நான் பேசிட்டேன் நிலாகிட்ட . நாங்க வந்த கேசு முடிஞ்சிடுத்து . நாளைக்கு வந்துடுவோம்னு சொல்லிட்டேன் . அதனால பயமில்லாம நாம போகலாம் "

மறுநாள் பேப்பர்களில் ஊடகங்களில் எல்லாம் தலைப்புச் செய்தியே மாபியா கும்பலின் கைதும் அதற்கு காரணமான
பிரபுவின் பெயருமே அடிபட்டுக் கொண்டிருந்தது .

பிரபுவின் ஆபிசில் ஆட்கள் வருவதும் வாழ்த்து சொல்வதும் போவதுமாக இருக்க

வீட்டில் அவன் அம்மா அவனின் அப்பா படத்தின் முன் அமர்ந்து அழுதுக் கொண்டிருந்தார் .

பிரபுவினால் ஆன மட்டும் ஆறுதல் படுத்தி பார்த்தும் அவரின் சோகம் தீரவில்லை .

அதற்குள் சேதி தெரிந்து உறவினர்களின் படையெடுப்பால் பிரபு ஆபிசுக்கு வந்துவிட ,

ஆபிசில் வருகிறவர்களுக்கெல்லாம் பதில் சொல்லக்கூடிய நிலையில் ஜானியும் வந்தியனும் தடுமாறிக் கொண்டிருந்தனர் .

" ஏம்ப்பா வந்தியா ... இந்த பாஸ் எங்கதான் போனாரு . வந்தவங்களுக்கெல்லாம் பதில் சொல்லியே வாய் வலிக்குது .
எங்கதான் போயிட்டார் ...?"

" பிரதர் கவனிச்சீங்களா .... நிலாவையும் கொஞ்ச நேரமா காணலை . இதுலேயிருந்து என்ன தெரியுது ...?"

" இங்க என்ன க்விஸ் போட்டியா நடக்குது . கொஸ்டீன் கேக்குறே ...?
அவர் மட்டும் ரொமான்ஸ் பண்ண போயிட்டாரா ...?
நானுந்தான் ஒரு மாசமா எந்தப் பிகரையும் பிக்கப் பண்ணாம காஞ்சிப் போய் கிடக்கிறேன் .
நானும் கிளம்புறேன் . நீ இருந்து இங்கப் பாத்துக்க ..."

" என்னா பிரதர் ... டினா அண்ணிக்கு போன் போடவா . அவங்ககிட்ட பர்மிசன் வாங்கிகிட்டு நீங்க பஸ்ஸ்டாண்டு பஸ்ஸ்டாண்டா போங்க . யாரும் தடுக்கலை "
வந்தியத்தேவன் இவ்வாறு கூறியதும் " ச்சே ... என் மூடையே டினா பேரைச் சொல்லி ஸ்பாயில் பண்ணிட்டே . என்னோட சாபம் சும்மா விடாது உன்னை .
நீயும் டினா போல பொண்டாட்டியைக் கட்டிகிட்டு அவஸ்தைப்படு ." என்று கூறி முடிக்கையில்

" என்ன ... என் பெயர் ஸ்லோகம் போல வரது . என் மேல அவ்வளவு பாசமா உங்களுக்கு ...?" என்று கேட்டுக் கொண்டே ஆங்கிலோ இந்தியப் பெண்மணி போல்

கவுன் அணிந்து வந்திருந்த ஜானியின் மனைவி டினா உள்ளே வர

அவளைப் பார்த்ததும் திடுக்கிட்ட ஜானி
" நீயா ... இங்க ... ஏன் ... எப்படி ?" வாய் குளறி பேச

அதைப் பார்த்த வந்தியன் அவனைப் பார்த்து " சொல்லட்டா பிரதர் ...!" என்று கூற

" ஏய் ... என்ன ... ?" என்று கண்களால் வேண்டாமென்று ஜாடைக் காட்ட

" என்ன வந்தியா ... என்ன வேண்டாம்னு உங்க பிரதர் சொல்றார் ", என்று ஆங்கிலம் கலந்த தமிழில் வினவ

" அது ஒன்னுமில்லை அண்ணி ...! பிரதர் இந்த ஒரு மாசமா உங்களைச் சரியாவே கவனிக்கலையாம் . வருத்தப்பட்டு நான் இன்னிக்கி சீக்கிரமா வீட்டுக்குப் போயி உங்களை வெளியில அழைச்சிக்கிட்டுப் போகணும்னு சொல்லிக்கிட்டு இருந்தாரு .
அப்ப பாத்து கரெக்டா நீங்க என்ட்ராவுரீங்க . என்ன ஒரு டைமிங் . சூப்பர் காம்பினேசன் நீங்க . "
வந்தியன் சொல்லி முடிக்க

அப்பாடா என மூச்சை விட்டு நன்றியோடுப் பார்த்தான் வந்தியனை ஜானி .

" ஓ ... மை ஸ்வீட் டார்லிங் ...!, இவ்வளவு லவ்வா என் மேல உங்களுக்கு . ஓ ... ஐ ஈம் சாரி ...! ஆக்சுவலா நான் உங்க மேல ரொம்ப ஆங்ரியாத்தான் வந்தேன் .
பட் நீங்க என்னை சர்ப்ரைஸ் பண்ணிட்டீங்க . ஐ அம் சோ கிளாட் ." என்று கூறியவாறு அவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள் .

பரிதாபமாக வந்தியனை ஜானிப் பார்க்க
வாயில் கர்சீப்பை வைத்து மூடியபடி சிரித்துக் கொண்டே வெளியேச் சென்று விட்டான் வந்தியத்தேவன் .

காபி ஷாப் ஒன்றில் எதிரெதிர் இருக்கையில் அமர்ந்திருந்த பிரபுவும் நிலாவும் காபி ஆறியபடி இருக்க ஒருவரை ஒருவர் பார்த்தபடியே அமர்ந்திருக்க

மெல்ல நிலா பேச ஆரம்பித்தாள் .

" பிரபு ... நிசமாலுமே அங்க ஏன்ன நடந்துதுன்னு உங்களுக்குத் தெரியலையா ...? அப்ப இனிமே நீங்க பிரச்சினையிலிருந்து விடுபட்டு விட்டீங்களா ...?",

அவன் கையோடு தன் கையை இணைத்து வைத்திருந்தவள் மெல்ல அழுத்தம் கொடுக்க

" இனிமே நமக்கு நல்ல காலந்தான் நிலா . எதுவும் நடக்காதுங்கிற நம்பிக்கை இருக்கு .
சரி சொல்லு ... நாம நம்ம வீட்டுங்கள்ள பேசி சீக்கிரமா கல்யாணம் பண்ணிக்கலாமா ...
இல்லை ... கொஞ்ச நாள் காதலிச்சிட்டு கல்யாணம் பண்ணிக்கலாமா ...? என்ன செய்யலாம் சொல்லு ...?"
என்று கேட்க ,

" ம் ... எனக்கு எதுவும் சொல்லத் தெரியலை . நீங்க என்ன சொல்றீங்களோ அப்படியே செய்யலாம் . ஆனா லவ் பண்றதுக்கு நீங்க யோசிக்க கூடாது ... புரியுதா ...!"

" என் செல்லத்தை லவ் பண்ண எனக்கு கசக்குமா என்ன . நீ கவலைப்படாதே கண்ணம்மா . நான் என் உயிர் உள்ள வரையில் உன்னை லவ் பண்ணிக்கிட்டே இருப்பேன் .",.
பிரபு கூறிக் கொண்டிருக்கும் போதே

" நீங்க லவ் பண்ணுவீங்க . ஆனா இதை யாரு பாத்துக்கிட்டு இருக்கிறது . எங்களுக்கு வேற வேலையே இல்லியா ", என்று
கிராஸ்டாக் போல பேச்சுக் கேட்க நிமிர்ந்து பார்த்தவர்கள் அங்கே ஜானி , வந்தியத்தேவன் நின்றிருப்பதைப் பார்த்து

" ஹேய் ... நீங்க எங்க இங்க . சிவ பூஜையில கரடிபோல . கொஞ்ச நேரம் தனியா விடமாட்டீங்களே ...?"
அலுத்துக் கொள்வது போல் நடித்த பிரபுவைப் பார்த்து

" பாஸ் ... நீங்க எவ்வளவு நேரமானாலும் ரொமான்ஸ் பண்ணிக்குங்க . சற்குணம்
இன்னும் கொஞ்ச நேரத்துல ஆபிசுக்கு வரதாச் சொல்லியிருக்கார் . அதைச் சொல்றதுக்குத்தான் வந்தோம் . மத்தபடி உங்களை நாங்க ஏன் டிஸ்டர்ப் பண்ணப்போறோம் .
எங்களுக்கும் ஆள் இருக்கு . நாங்களும் ரொமான்ஸ் பண்ணுவோம்ல ...", ஜானியின் பேச்சைக் கேட்டு சிரித்தவர்கள்

" ஏய் ... நீ பாட்டுக்கு நாங்க நாங்கன்னு வாய்க்கு வாய் சொல்றியே ...?
பாவம் சின்னப்பையன் கூட இருக்கிறான் .
அவனையும் சேர்த்துப் பேசறே ...?"

பிரபுவின் கிண்டலுக்கு ஜானி

" பாஸ் ... அவனும் சிங்கிளா இருக்கக் கூடாதுன்னுதான் நம்ம ஆபிசுக்கு இன்னுமொரு ஜூனியர் தேவைன்னு நம்ம வெப்சைட்ல விளம்பரம் குடுத்திட்டு வந்திருக்கேன் . உங்களுக்கு ஒன்னும் அப்ஜெக்ஷன் இல்லியே ...?",
என்று கூறவும்

" அடப்பாவி ...!" என பிரபுவும் நிலாவும் அலற

அங்கிருந்து சிரித்துக் கொண்டே அகன்றனர் இருவரும் .

எதிர்புறமாக கண்ணீருடன் இவர்களையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள் மாதங்கி .

முற்றும் .